அக்டோபர் 2002






தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
புரட்டாசி – ஐப்பசி
அக்டோபர் 2002
மலர் : 34 இதழ் : 7 & 8
விலை ரூ.10


**இந்த இதழில்...**


★ காவிரி நதிநீர் பிரச்சினை அனைத்துக்கட்சியினர் பிரதமருடன் சந்திப்பு ........ 2
★ இணையதளம் வழியாக சிறுதொழில் பதிவு ........ 12
★ நாள்தோறும் திட்டமிட்டு நலத்திட்டங்கள் – ஆக்கப்பணிகள் நிறைவேற்றி வருகின்றோம் ........ 14
★ இந்தியாவில் முதன்முதலாக பத்திரப் பதிவுத்துறையில் இன்டர்நெட் வசதி ........ 21
★ அண்ணாவால் பெருமை பெற்ற தமிழ் ........ 23
★ காந்தியடிகள் : காலத்தின் சின்னம் எழுச்சியின் அடையாளம் ........ 25
★ சர்வதேச விருதுபெற்ற காவல்துறை அதிகாரிக்கு பாராட்டு ........ 27
★ புதுமைப்பித்தன் படைப்புகள் நாட்டுடைமை ........ 28
★ கு.ப.சேது அம்மாள் படைப்புகள் நாட்டுடைமை ........ 29
★ சமாதான் திட்டம் ........ 30
★ பருத்தி ரக துணிகளுக்கு சிறப்புத் தள்ளுபடி ........ 31
★ ஆசிரியர் தினச் செய்தி ........ 33
★ மஹிந்திரா தொழில் நகரம் ........ 34
★ இணையற்ற சேவைக்காக முதலமைச்சருக்கு 'துருவா' விருது ........ 37
★ புதிதாக வடிவமைக்கப்பட்ட கைத்தறி வேட்டி சேலைகள் ........ 39
★ தமிழக வறட்சி நிலையை பார்வையிட்ட மத்தியக் குழு ........ 41
★ அல்சர் – ஆபத்தான நோயா ? ........ 45
★ ஈரோடு மாவட்டத்தில் மத்தியக் குழு ஆய்வு ........ 49
★ தூத்துக்குடி மாவட்டத்தில் நண்டு வளர்ப்புப் பயிற்சி ........ 52
★ தேனி மாவட்டம் – சாலை அமைப்புப் பணிகள் ........ 54
★ பேசும் கலப்பை (சிறு கதை) ........ 57
★ நிதிநிலை – அரிசி விலை : ஒரு நிலை விளக்கம் ........ 65
★ காவலர்களுக்கு கணினிப் பயிற்சி ........ 72
★ கோயிற் கட்டிடக் கலை ........ 73


முதல் பக்க அட்டையில்...

**பேரறிஞர் அண்ணா** பிறந்த நாளான 15–9–2002 அன்று அண்ணா சாலையில் உள்ள அண்ணா சிலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் மாலை அணிவித்தார்.

இரண்டாம் பக்க அட்டையில்...

**மகாத்மா காந்தியடிகள்**

# காவிரி நதிநீர் பிரச்சினை

## அனைத்துக் கட்சியினர் பிரதமருடன் சந்திப்பு

224073



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 20.9.2002 அன்று தலைமைச் செயலகத்தில் காவிரி நதி நீர் பிரச்சினையில் தமிழகத்தின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக தமிழக மக்களின் ஒருமித்த கருத்தை வலியுறுத்தும் வகையில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற்றது. அதில் தி.மு.க–வைத் தவிர தமிழகத்தைச் சேர்ந்த 38 அரசியல் கட்சிகள் மற்றும் விவசாய அமைப்புகள் பங்கு பெற்றன.

காவிரி டெல்டா மாவட்டங்களில் வாழ்கின்ற விவசாயிகளின் நலனைப் பாதுகாக்க தமிழ்நாட்டிற்கு, கர்நாடக மாநிலம் தினசரி 1.25 டி.எம்.சி. அடி தண்ணீர் கிடைக்கும்படி கர்நாடக அணைகளிலிருந்து தண்ணீரை திறந்து விட வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அவமதித்தும், இதனையடுத்து கர்நாடக மாநிலம் 9,000 Cusecs தண்ணீரை தமிழ்நாட்டிற்கு விட வேண்டும் என்ற எடுக்கப்பட்ட காவிரி நதி ஆணையத்தின் முடிவினை புறக்கணித்தும் , சட்டம் ஒழுங்கு பிரச்சினையை காரணம் காட்டியும், தமிழ்நாட்டிற்கு காவிரியில் தண்ணீர் திறந்து விடுவதை கர்நாடக மாநிலம் 19.9.2002 முழுமையாக நிறுத்தி விட்டது.

இந்த நிலையில், காவிரி பிரச்சினையில் தமிழக மக்களின் ஒருமித்த கருத்தையும் ஒட்டுமொத்த ஆதரவையும் பிரதிலிக்கும் வகையில் 20.9.2002 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது. அதில் தமிழகத்தைச் சேர்ந்த 38 அரசியல் கட்சிகள் மற்றும் விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கு பெற்றனர்.



தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடக்க உரையாற்றினார்.

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முதல்வர் உரை

"அமைச்சர் பெருமக்களே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்களே, அரசு அலுவலர்களே, பல்வேறு கட்சிகளின் தலைவர்களே, விவசாயிகள் சங்கத்தின் பிரதிநிதிகளே, தலைவர்களே அனைவருக்கும் முதற்கண் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிகவும் குறைந்த கால அவகாசத்தில் கூட்டப்பட்ட இந்த அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு விடுவிக்கப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொண்டு இந்தக் கூட்டத்தில் பங்கேற்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடந்த ஆண்டு 2001ல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்றது முதல் இன்று வரை காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினையில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதையெல்லாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொதுமக்களுக்கு தெரிவித்து இருக்கிறோம். சட்டமன்றத்திலும் தெரிவித்து இருக்கிறோம். அறிக்கைகள் மூலமாகவும் தெரிவித்து இருக்கிறோம். சுருக்கமாக கடந்த ஓராண்டு காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

கடந்த ஆண்டு 14.5.2001 அன்று இந்த அரசு பொறுப்பேற்றது. அதன்பிறகு வழக்கம்போல காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகஅரசு மேட்டூருக்கு தண்ணீர் திறந்துவிடவில்லை என்பதால், காவிரி நதி ஆணையத்தைக் கூட்ட வேண்டும். அதற்கு முன்னதாக கண்காணிப்புக் குழுக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று 23.8.2001 அன்று நான் பிரதமர் அவர்களுக்கு ஒரு கடிதம் அனுப்பினேன். அன்றைய தினம் மானிடரிங் கமிட்டி கூட்டத்தைக் கூட்ட வேண்டும் என்று 23.8.2001 அன்று கடிதம் அனுப்பினேன். உடனடியாக கூட்டம் கூட்டப்படவில்லை. அதன்பிறகு, கடந்த ஆண்டு 8.9.2001 அன்று அனைத்துக் கட்சி கூட்டத்தை இதே அரங்கத்தில் நான் கூட்டினேன். அதனையடுத்து, தமிழக அமைச்சர்கள் தம்பிதுரை, தளவாய்சுந்தரம் ஆகியோர் தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழு, அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று டில்லிக்கு சென்று பிரதமர் அவர்களை 10.9.2001 அன்று சந்தித்து, காவிரி நடுவர் மன்ற இடைக்காலத் தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடும்படி பிரதமர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒரு மனு பிரதமரிடம் கொடுக்கப்பட்டது.

அதனையடுத்து, 11.9.2001 அன்று அதே குழுவினர் ஜனாதிபதி அவர்களையும் சந்தித்து, அவரிடமும் ஒரு மனுவினைக் கொடுத்தனர். அதற்குப் பிறகு மீண்டும் 14.9.2001 அன்று காவிரி நதிநீர் ஆணையத்தினுடைய கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று நான் மீண்டும் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் அனுப்பினேன். ஆனால் 10.10.2001 அன்று தான் காவிரி நதி ஆணையத்தின் மூன்றாவது கூட்டம் கூட்டப்பட்டது. அன்றைய தினம் திரு. ஓ. பன்னீர்செல்வம் முதலமைச்சராக இருந்தார். அவர் தமிழ்நாட்டின் சார்பில் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அந்தக் கூட்டத்தில் எந்தவொரு முடிவும் ஏற்படவில்லை.

அதனையடுத்து, மீண்டும் 28.12.2001 அன்று அன்றைய முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் மீண்டும் காவிரி நதி ஆணையத்தின் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று பிரதமர் அவர்களுக்கு கடிதம் அனுப்பினார். ஆனால் கூட்டம் கூட்டப்படவில்லை. அதன்பிறகு மீண்டும் இங்கே அரசியல் ரீதியாக மாற்றங்கள் ஏற்பட்டன. மீண்டும் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றேன். 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம், மீண்டும் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பிறகு, 1.6.2002 மற்றும் 11.6.2002 அன்று பிரதமர் அவர்களுக்குக் கடிதங்கள் அனுப்பி காவிரி நதி ஆணையத்தின் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். ஆனால் கூட்டம் கூட்டப்படவில்லை.

### நேரில் கோரிக்கை

12.6.2002 அன்று நான் புதுடில்லியிலேயே பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து அவரிடம் காவிரி நதி ஆணையத்தின் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று ஒரு மனுவினை அவர் கையில் கொடுத்து, அதோடு நேரிலும் ஒரு கோரிக்கையை விடுத்தேன். அன்றைய தினம் ஏறக்குறைய முக்கால் மணி நேரம் நான் பிரதமரோடு பேச்சுவார்த்தை நடத்தியபோது, கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் காவிரி நதி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையைப் பற்றித்தான் நான் பிரதமர் அவர்களிடம் விவாதித்தேன். அப்போது நான் பிரதமர் அவர்களிடம் ஒரு கோரிக்கையை வைத்தேன். தற்போதுள்ள காவிரி நதி ஆணையத்தின் விதிமுறைகளின்படி நடுவர்மன்றத்தின் இடைக்கால உத்தரவை



அமல்படுத்துவதற்கான அதிகாரங்கள் இல்லையென்பதால், அந்த விதிமுறைகளை திருத்தியமைக்க வேண்டும், மாற்றியமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பிரதமரிடம் வைத்தேன். அப்போது பிரதமர் அவர்களை, கர்நாடகம் இதனை ஏற்றுக் கொண்டால்தான் இந்த மாற்றங்களைச் செய்ய முடியும், இல்லாவிட்டால் செய்ய முடியாது என்று தெரிவித்தார்.

**தமிழக அரசின் முடிவு**

அப்போது, தற்போது இருக்கின்ற அமைப்பின்படி இந்த காவிரி நதி ஆணையத்தின் மூலம் தமிழகத்திற்கு நீதி கிடைக்காது, காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்த முடியாது என்று தமிழக அரசுக்கு ஓர் எண்ணம் ஏற்பட்டதால், ஆழமான அத்தகைய ஓர் எண்ணம் ஏற்பட்டதால், 21.6.2002 அன்று தமிழக அமைச்சரவை கூடி, இனிமேல் காவிரி நதி ஆணையத்தை நம்பிப் பயன் இல்லை. ஆகவே இனிமேல் காவிரி நதி ஆணையக் கூட்டங்களில் தமிழக அரசு பங்கேற்காது, கண்காணிப்புக்குக் குழு கூட்டங்களிலும் தமிழக அரசு அதிகாரிகள் பங்கேற்க மாட்டார்கள் என்று முடிவெடுக்கப்பட்டது.

மீண்டும், உச்சநீதிமன்றத்தில் புதிய வழக்கு ஒன்று தொடருவது என்றும் அன்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 10.7.2002 அன்று உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் புதிய வழக்கு ஒன்று தொடரப்பட்டது. அதனையடுத்து 16.7.2002 அன்று தமிழ்நாடு நீர்ப்பாசன, விளைபொருட்கள், விவசாயிகள் நல உரிமைப் பாதுகாப்புச் சங்கம், உச்சநீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தொடர்ந்தது. இந்த வழக்குகளை விசாரித்த பிறகு, 29.7.2002 அன்று உச்சநீதிமன்றம் இரண்டு வார காலத்திற்குள் கண்காணிப்புக்குழு கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்றும் அதனையடுத்து காவிரி நதி ஆணையக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்றும் உத்தரவிட்டது.



**கண்காணிப்புக் குழுவின் அவசரக் கூட்டம்**

அதனைத் தொடர்ந்து, 9.8.2002 அன்று, 'மானிட்டரிங் கமிட்டி'–யின் 13வது அவசரக் கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில், எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. அதனைத் தொடர்ந்து, 27.8.2002 அன்று, காவிரி நதி ஆணையத்தின், நான்காவது கூட்டம் கூட்டப்பட்டது. அந்தக் கூட்டத்தில், தமிழக அரசின் சார்பில், நான் கலந்துக் கொண்டேன்.

ஏற்கெனவே, 'மானிட்டரிங் கமிட்டி' கூட்டத்தில் 'டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா' பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. 2002, ஏப்ரல் மாதமே இதற்கான ஒரு வரைவுத் திட்டத்தை – டிஸ்ட்ரெஸ்ஷேரிங் ஃபார்முலா–வை, மத்திய அரசு வகுத்து, அதனைச் சம்பந்தப்பட்ட மாநில அரசுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த டிஸ்ட்ரெஸ்ஷேரிங் ஃபார்முலா, 13வது 'மானிடரிங் கமிட்டி கூட்டத்தில் விவாதிக்கப்பட்டபோது தமிழக அரசு அதனை ஏற்றுக்கொண்டது. ஆனால் கர்நாடக அரசு அதை ஏற்க மறுத்தது.

கிட்டத்தட்ட 3 மணி நேரம் அந்த விவாதம் நடைபெற்ற பிறகுகூட, கர்நாடகம், அதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. மிகவும் எளிதாகப் புரிந்துக்கொள்ளக்கூடிய ஓர் அடிப்படையில்தான் அந்த ஃபார்முலா வகுக்கப்பட்டிருந்தது. நடுவர்மன்றத்தில், கர்நாடகத்தின் நீர்த் தேக்கங்களில் சராசரியாக எவ்வளவு தண்ணீர் வந்துள்ளது என்ற அளவைப் பார்ப்பதற்கு, ஆறு ஆண்டுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டார்கள். அதே 6 ஆண்டுகளின் அடிப்படையில்தான், அந்த 6 ஆண்டுகளின் போது, கர்நாடக நீர்த் தேக்கங்களில் எவ்வளவு தண்ணீர் வந்தது; எவ்வளவு வரத்து இருந்தது என்பதைப் பார்த்து, ஒரு 'டிஸ்ட்ரெஸ் ஷேரிங்' என்று சொல்லக்கூடிய பற்றாக்குறை ஆண்டில், இவ்வளவு தண்ணீர் வந்திருக்கிறது என்பதைப் பார்த்து, அந்த அளவோடு ஒப்பிட்டு, அந்த 6 ஆண்டுகளில் வந்தது 100 சதவிகிதம் என்றால், தற்போது வந்துள்ளது எவ்வளவு என்று அதிலுள்ள சதவிகிதத்தைப் பார்த்து, அதே அளவில், தமிழகத்திற்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும் என்பதுதான் அந்த புரோ–ரேட்டா டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், அந்த 6 ஆண்டுகளின் போது, எவ்வளவு தண்ணீர் வந்ததோ, அதில் இந்த ஆண்டு 2002 கர்நாடக நீர்த்தேக்கங்களில் 69 சதவிகிதம் நீரும் வந்துள்ளது. ஆகவே, நமக்குக் கொடுக்க வேண்டிய பங்கிலும், அவர்கள் 69 சதவிகிதத்தைத் தரவேண்டும். ஆனால், மாறாக, நமக்கு 27 சதவிகிதம்தான் கொடுத்திருக்கிறார்கள். இது எல்லோரும் எளிதாகப் புரிந்துக் கொள்ளக் கூடிய ஒரு ஃபார்முலாதான். ஆனால் கர்நாடகம் இதை ஏற்க மறுத்தது.

**கர்நாடகம் மறுப்பு**

இந்த ஃபார்முலா பற்றி சிந்திப்பதற்கும் விவாதிப்பதற்கும் இன்னும் கால அவகாசம் வேண்டுமென்று 'மானிடரிங் கமிட்டி' கூட்டத்தில் கர்நாடக அரசு வேண்டுகோள் விடுத்தது. அப்போது மத்திய அரசின் சென்ட்ரல் வாட்டர் கமிஷனின் சேர்மன் அவர்கள், இதற்கு மேலும் விவாதிக்க கால அவகாசம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை; இந்த ஃபார்முலா மிகவும் தெளிவாக இருக்கிறது; இதை இப்போதே முடிவு செய்யலாம் என்று சொன்னார். ஆனால், கர்நாடகம் அதை ஏற்க மறுத்ததால், கூட்டத்தில் எந்த முடிவும் ஏற்படவில்லை. அதற்குப் பின்னரும் 27.8.2002 அன்று காவிரி நதிநீர் ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டது.

அன்றைய தினம், இந்த புரோ–ரேட்டா டிஸ்ட்ரெஸ் ஃபார்முலா குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் என்ற எதிர்பார்ப்பில்தான் நான் அந்தக் கூட்டத்தில் கலந்துக்கொண்டேன். உங்களுக்கு எல்லாம் தெரியும். ஏற்கெனவே, காவிரி நதி ஆணையத்தின் உத்தரவுகளை கர்நாடக அரசு மதிக்கவில்லை; ஏற்கவில்லை. ஆகவே, நடுவர் மன்றத்தின் தீர்ப்பை செயல்படுத்தும் அதிகாரம் காவிரி ஆணையத்திற்கு இல்லாததால், விதிகளை மாற்றியமைக்கும் அந்த காவிரி நதி ஆணையத்தின் தலைவராக இருக்கிற பிரதமர் அவர்களே ஒப்புக்கொள்ளாததால், காவிரி ஆணையத்தின் கூட்டங்களில் கலந்துக் கொள்வதில்லை என்று முடிவு எடுத்திருந்தோம். இருந்தாலும், உச்சநீதி மன்றம் குறிப்பிட்ட தேதிக்குள் இந்தக் கூட்டம் கூட்டப்பட வேண்டுமென்றும் உறுப்பினர்களாக இருக்கின்ற மாநில அரசுகள், அவசியம் அதில் கலந்துக் கொண்டாக வேண்டுமென்றும் உத்தரவிட்டதால்தான், இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். அந்த புரோ–ரேட்டா டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா பற்றி விவாதிக்கப்படும் என்று எதிர்பார்த்தேன். அன்றைய தினம் மத்திய நீர் வளத்துறை அமைச்சர், இந்தக் கேள்வியை கர்நாடக முதலமைச்சரிடம் கேட்டார். ஏற்கெனவே ஒரு 'டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா' வகுத்து வைத்திருக்கிறோமே அதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா என்று கேட்டார். திரும்பத் திரும்ப இந்தக் கேள்வி கேட்கப்பட்டபோது கர்நாடக முதலமைச்சர் அவர்கள் இதைப் பற்றி பேசமுடியாது; இதைப் பற்றி சிந்திப்பதற்கும், விவாதிப்பதற்கும் இன்னும் கால அவகாசம் தேவை, இப்போது தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடுவது பற்றியே பேசமுடியாது. செப்டம்பர் மாத இறுதிக்குப் பிறகு பிரதமர் மீண்டும் ஒரு கூட்டத்தைக் கூட்டினால் அப்போது அதைப் பற்றி பேசலாம் என்று சொன்னார். திரும்பவும் மத்திய அமைச்சர், 'நீங்கள் இதை ஒப்புக் கொள்கிறீர்களா ?' என்று கேட்டதற்கு, கர்நாடக முதலமைச்சர் அப்படியே தட்டிக்

கழித்து பதில் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போதுதான், குறுக்கிட்டு சொன்னேன். எங்களுக்கு இங்கே நெருக்கடி நிலைமை, விவசாயிகள் பெரும் துயரத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்; குறுவைப் பயிரை இழந்து விட்டோம். சம்பா பயிரை இப்போதே துவங்க முடியவில்லை. இப்படியே கர்நாடக முதலமைச்சர் தட்டிக் கழித்துக் கொண்டிருந்தால், இங்கே விவசாயிகளுடைய துயரத்தைத் துடைக்க நாங்கள் இங்கே பதில் சொல்ல முடியாது. செப்டம்பர் மாதம் மீண்டும் பேச்சு வார்த்தை என்று சொன்னால், அதுவரை விவசாயிகள் பொறுத்திருக்க முடியாது. அதுவரை சம்பா பயிரை, துவங்காமல் இருக்க முடியாது. ஆகவே, ஏதாவது ஒரு ஃபார்முலாபடி ஓரளவுக்குத் தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டேன்.

## மீண்டும் வற்புறுத்தல்

மத்திய அரசு வகுத்து வைத்திருக்கிற 'டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா' வின் படி, அன்றைய தின பாக்கி 43 டி.எம்.சி. அடி தண்ணீர், அந்த தண்ணீர், அதையாவது திறந்து விடச் சொல்லுங்கள் என்று கேட்டதற்கு அந்த ஃபார்முலாவை ஏற்க முடியாது என்று கர்நாடக முதலமைச்சர் சொன்னார். சரி, நாம் எந்த முடிவும் இல்லாமல், எந்த ஒரு பலனும் இன்றி இந்தக் கூட்டத்திலிருந்து திரும்பக் கூடாது என்று மீண்டும் வற்புறுத்தி, குறைந்தபட்சம் 30 டி.எம்.சி. தண்ணீரையாவது திறந்து விடுங்கள் என்று கேட்டேன். அதையும் ஏற்க முடியாது என்று கர்நாடக முதலமைச்சர் சொன்னார்.

அதன்பிறகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களும், பிரதமர் அவர்களும், சரி உங்களால் எவ்வளவு திறந்துவிட முடியும் என்று கேட்டார்கள். அதற்கும், அவர் எந்த பதிலும் சொல்லவில்லை.

## பயனற்ற விவாதம்

செப்டம்பர் முடியட்டும், பிறகு பேசலாம் என்றார். அப்போது நான் மீண்டும் வற்புறுத்திக் கேட்டேன், 'எதையும் கர்நாடக முதலமைச்சர் ஏற்க முடியாது என்று சொல்கிறார், ஏதாவது ஒரு குறிப்பிட்ட அளவு தண்ணீரை இவ்வளவு தண்ணீரைத் திறந்து விடுகிறோம் என்று சொல்லச் சொல்லுங்கள்' என்று கேட்டதற்கு அவர், திரும்பத் திரும்ப தண்ணீர் விடுவதைப் பற்றி இப்போது பேச்சு வார்த்தையே நடத்த முடியாது. தண்ணீர் திறந்து விடுவதைப் பற்றி பேச கர்நாடகம் தயாராக இல்லை. மீண்டும் செப்டம்பர் இறுதிக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னபோதுதான், எந்த முடிவும் ஏற்படாதபோது, இனிமேல் இங்கே அமர்ந்திருப்பதால் எந்தப் பலனும் இல்லை என்பது வெட்ட வெளிச்சமான பிறகு, கிட்டத்தட்ட ஒண்ணே முக்கால் மணி நேரம் அந்தப் பயனற்ற விவாதம் நடைபெற்ற பிறகுதான், அதன் பின்னர் தமிழகத்திற்கு அநீதி இழைக்கப்பட்டு விட்டது என்று சொல்லி, நான் வெளிநடப்பு செய்தேன்.

அதன் பின்னர் அங்கே காவிரி நதிநீர் ஆணையத்தின் சார்பில் ஓர் அறிக்கை பத்திரிகைகளுக்கு,





தொலைக்காட்சிகளுக்கு வெளியிடப்பட்டது. அதில் என்ன சொன்னார்கள் என்று சொன்னால், 'டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா'வை செப்டம்பர் மாதம் 15ஆம் தேதிக்குள் வகுக்கலாம் என்று இங்கே பேசப்பட்டது. அதுதான் பிரதமர் அவர்களுடைய விருப்பமும். ஆனால், தமிழக முதலமைச்சர் இப்போதே, இந்த இடத்திலேயே இந்த நிமிடமே டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா பற்றி பேசச் சொல்லி, இங்கே முடிவு செய்து ஏற்கச் சொல்லுங்கள் என்று அடம் பிடித்தார். செப்டம்பர் 15 வரை கால அவகாசம் கேட்டோம். அதற்கு தமிழக முதலமைச்சர் ஒத்துக் கொள்ளவில்லை. வெளிநடப்புச் செய்துவிட்டார்கள் என்று எல்லாவற்றையும் தலைகீழே மாற்றி வெளியிட்டு விட்டார்கள்.

ஏற்கனவே ஒரு டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலாவை வகுத்து, அதை சம்பந்தப்பட்ட மாநிலங்களுக்கு அனுப்பி வைத்து, 13வது மானிடரிங் கமிட்டி மீட்டிங்கில் அதைப் பற்றிப் பேசி, விவாதித்து அதை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று மத்திய அரசு கர்நாடகத்தை வற்புறுத்தி கர்நாடகம் முடியாது என்று மறுத்து, திரும்பவும் நான் கலந்து கொண்ட காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தில் இந்த 'டிஸ்ட்ரெஸ் ஷேரிங் ஃபார்முலா'வைக் குறிப்பிட்டு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் கர்நாடக முதலமைச்சரைப் பார்த்து, இதை நீங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா, இதை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று திரும்பத் திரும்பக் கேட்டு, அவர் முடியாது என்று சொல்லி, அதன் பின்னர் நான் வெளிநடப்பு செய்த பிறகு, இன்னும் அந்த ஃபார்முலா வகுக்கப்படவில்லை என்று ஓர் அறிக்கையை விடுகிறார்கள். செப்டம்பர் 15 வரை கால அவகாசம் கொடுங்கள் என்று கேட்டதற்கு தமிழக முதலமைச்சர் ஒத்துக் கொள்ளவில்லை என்று கூறுகிறார்கள். அதன் பிறகுதான் இந்த ஆணையத்தின் மூலம் தமிழகத்திற்கு நீதி கிடைக்காது; எந்த முடிவும் ஏற்படாது என்று உறுதியாகத் தெரிந்ததால்தான், மீண்டும் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றோம். அப்போது உச்சநீதிமன்றம் நிலைமைகளை நன்றாகப் புரிந்து கொண்டு 3.9.2002 அன்று தமிழகத்திற்கு ஒவ்வொரு நாளும் மேட்டூரில் 1.25 டி.எம்.சி. அடி தண்ணீர் கிடைக்கும்படி கர்நாடகம் தினந்தோறும் தண்ணீரைத் திறந்துவிட வேண்டும். காவிரி நதிநீர் ஆணையம் மீண்டும் கூடி ஒரு முடிவு எடுக்கும் வரை இந்த ஆணை செல்லுபடி ஆகும் என்று தீர்ப்பளித்தது.

## நீதிமன்ற ஆணைப்படி நீர் திறக்கவில்லை

ஆனால் அதன் பின்னர் இதனை ஏற்றுக் கொள்கிறீர்களா என்று கேட்டதற்கு, கர்நாடக முதலமைச்சர் இதை நான் பரிசீலித்துப் பார்க்க வேண்டும், இதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று டெல்லியில் அங்கேயே அன்றைய தினமே தட்டிக் கழிப்பது போல் பதில் சொன்னார்.

அதன் பின்னர், உச்சநீதிமன்ற ஆணையின்படி உடனடியாக தண்ணீர் திறந்துவிடாமல் அவர் பெங்களூருக்குச் சென்று அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டினார். அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டினார். பல்வேறு விவாதங்கள் நடைபெற்ற பிறகு, 4ந் தேதி நள்ளிரவு ஓரளவு தண்ணீர் திறந்துவிட்டார்கள். ஆனால் உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட அந்த 1.25 டி.எம்.சி. தண்ணீர் அளவை அவர்கள் திறந்துவிடவில்லை. அதற்கும் மிகக் குறைவாகத்தான் திறந்துவிட்டார்கள்.

உங்களுக்கெல்லாம் தெரியும்; பொதுவாக அங்கே கபினியில் தண்ணீர் திறந்துவிட்டால் மேட்டூருக்கு அது வந்து சேருவதற்கு மூன்று நாட்கள் பிடிக்கும். அதன்பிறகு இங்கிருந்து கிராண்ட் அணைக்கட்டிற்கு போய் சேருவதற்கு மூன்று நாட்கள் பிடிக்கும். அதன் பிறகு திருவாரூர் கடைமடை பகுதிக்குச் செல்வதற்கு இன்னும் மூன்று நாட்கள் பிடிக்கும்.

## பிரதமர் தலைமையில் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

ஆகவே, கபினியில் திறந்துவிட்டால் தமிழகத்தின் கடைமடைப் பகுதிகளுக்கு போய்ச் சேருவதற்கு 9 நாட்கள் பிடிக்கும். மிகக் குறைந்த அளவு தண்ணீர் திறந்துவிட்டதால் தண்ணீர் மேட்டூருக்கு 8ந்தேதி வரை வந்து சேரவில்லை. அதன் பிறகு நான்கு நாட்களுக்குள் அவசர அவசரமாக மீண்டும் மானிட்டரிங் கமிட்டி கூட்டம் கூட்டப்படும் என்று அறிவித்தார்கள். 3ம் தேதிதான் உச்சநீதிமன்றம் இந்த 1.25 டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று ஆணையிட்டது. 4ந் தேதி காலையிலேயே 7ந் தேதி இந்த மானிட்டரிங் கமிட்டி கூட்டம் அவசரக் கூட்டம் நடத்தப்படும் என்று இங்கே தகவல் வந்தது. அன்றைய தினம் ஒரு முக்கியமான கேபினட் மீட்டிங் இங்கே நடத்த திட்டமிட்டிருந்தோம். அப்போது மாணவர்கள் பிரச்சினை, சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் எல்லாம் எழுந்திருந்தன. ஆகவே, தலைமைச் செயலாளர் இந்த மானிட்டரிங் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாது என்று இங்கேயிருந்து மத்திய அரசுக்கு தெரிவித்து, ஆகவே அந்தக் கூட்டத்தை சற்று ஒத்தி வைத்துக் கொள்ளலாம், வேறு ஒரு நாளில் வைத்துக் கொள்ளலாம் என்று கேட்டோம். அப்போது மத்திய அரசு மிகவும் கண்டிப்பாக திட்டவட்டமாக தலைமைச் செயலாளர் வரவில்லையென்றால் வேறு ஒரு பிரதிநிதியை அனுப்புங்கள், இந்தக் கூட்டம் நடந்தே தீரும் என்று கூறிவிட்டார்கள்.

### அமைச்சரவைக் கூட்டம் ரத்து

அதனால்தான் நாம் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லையென்றால் by default நாம் இல்லாத போது, மற்ற மூன்று தலைமைச் செயலாளர்கள் கலந்து கொண்டு கோரம் இருக்கிறது என்று சொல்லி, நமக்கு எதிராக தீர்ப்பை சொல்லிவிட்டால் என்ன செய்வது என்று கருதி இங்கே ரத்து செய்து அவசர அவசரமாக தலைமைச் செயலாளர் அங்கே சென்று அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதிலும் எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை. தொடர்ந்து கர்நாடக முதலமைச்சர் ஒரே கருத்துடன், ஒரே எண்ணத்துடன் உச்சநீதிமன்றம் 1.25 டி.எம்.சி. அடி தண்ணீர் தமிழகத்திற்கு திறந்துவிட வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது. அதை எப்படியாவது நடக்கவிடாமல் செய்ய வேண்டும், எப்படியாவது குறைக்க வேண்டும், எப்படியாவது nullify செய்துவிட வேண்டும் என்று இருந்தார்.

அப்போது பத்திரிகையாளர்களுக்கு எல்லாம் கூட பேட்டி அளித்தார். 9ந் தேதி பிரதமர் வெளிநாட்டு சுற்றுப்பயணம் செய்வதாக இருந்தது. பிரதமர் செல்வதற்குள் நான் காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்ட வைப்பேன் என்று கிருஷ்ணா சொன்னார். என்ன இப்படி சொல்கிறாரே என்று ஆச்சரியமாக இருந்தது. திரும்பத் திரும்ப இங்கிருந்து பிரதமர் அலுவலகத்தோடு தொடர்பு கொண்டோம். காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தைக் கூட்டப் போகிறீர்களா ? என்று கேட்டதற்கு அதற்கு வாய்ப்பே இல்லை என்று பதில் வந்தது. பிரதமர் அலுவலகத்தில் பணியாற்றுகிற செயலாளர் பேசினார். நிச்சயமாக எந்த ஒரு கூட்டமும் கூட்டப்படாது, அத்தகைய ஒரு எண்ணமே இல்லை. பிரதமர் 9ந் தேதி காலையிலேயே புறப்பட்டுச் செல்கிறார் என்றார்கள்.

### 24 மணி நேர அவகாசம் கூட இல்லை

7ந் தேதி கண்காணிப்புக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டுவிட்டு, தலைமைச் செயலாளரும், அவருடன் சென்ற அரசு அலுவலர்களும் அன்று மாலை டெல்லியில் விமானம் மூலம் சென்னை திரும்புவதற்கு விமான நிலையம் வந்துவிட்டார்கள். விமானத்தில் ஏறிவிட்டார்கள். விமானம் இன்னும் புறப்படவில்லை. இந்த நேரத்தில் திடீரென்று ஒரு பேக்ஸ் வருகிறது. 8ஆம் தேதி மாலை 6 மணிக்கு காவிரி நதி ஆணையக் கூட்டத்தைக் கூட்டப் போகிறோம் என்று தகவல் வந்தது பேக்ஸ் மூலமாக.

அப்போது இங்கே இருந்து சொல்லிப் பார்த்தோம். எனக்கு அன்றைக்கு உடல் நலமில்லை. 24 மணி நேரம் அவகாசம்கூட இல்லை. முதலமைச்சருக்கு உடல் நலம் இல்லை என்று தள்ளிவைத்துக் கொள்ளலாம் என்றும் கேட்டோம்.



இல்லை, நடத்தியே தீருவோம் என்றார்கள். அப்போது என்னால் செல்ல இயலவில்லை. காவிரி நதிநீர் ஆணைய கூட்டம் என்றால்கூட தலைமைச் செயலாளரும், பொதுப்பணித்துறை செயலாளரும், காவிரி டெக்னிக்கல் தலைவரும் என்னோடு கலந்து கொள்ள வேண்டும்.

அவர்கள் எல்லோரும் விமானத்தில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அவசரமாக அவர்களை விமானத்தை விட்டு இறங்கி டெல்லியில் தங்கச் சொன்னோம். அப்போது வேறு ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நம்முடைய நிதியமைச்சர் டெல்லியில் இருந்தார்.

அவரும் அதே விமானத்தில் ஏறி இருந்தார். அவரையும் இறங்கச் சொல்லி, அவரையும் அங்கேயே தங்கச் சொல்லி என்னுடைய சார்பில், தமிழக அரசின் சார்பில் நிதியமைச்சர் கலந்து கொண்டார்.

அப்படி என்ன அவசரம் என்று எங்களுக்குப் புரியவில்லை. அதற்கு முன்பு காவிரி நதி ஆணையத்தைக் கூட்டுங்கள், கூட்டுங்கள் என்று பலமுறை நான் கடிதம் எழுதினேன். திரு. ஓ. பன்னீர்செல்வம் எழுதினார். திரும்ப நான் கடிதம் எழுதினேன். 5 மாதம், 6 மாதம் ஆகியும் உச்சநீதிமன்றத்தின் ஆணை கிடைக்கும் என்றுமத்திய அரசு காவிரி நதிநீர் ஆணையத்தைக் கூட்டவில்லை. ஆனால் இப்போது கர்நாடக முதலமைச்சர் வற்புறுத்தினார் என்பதற்காக 24 மணி நேரத்தில் கூட்டம் கூட்டப்படும் என்று சொல்லி காவிரி நதிநீர் ஆணையக் கூட்டத்தை அவசரமாகக் கூட்டினார்கள்.

ஏற்கெனவே திரு.ஜே.எச். பாட்டில் கர்நாடக முதலமைச்சராக இருந்த போது இரண்டுமுறை காவிரி நதி நீர் ஆணையக் கூட்டம் கூட்டப்பட்டு, திரு.பாட்டீலுக்கு உடல் நலம் இல்லை, அவரால் கலந்துகொள்ள முடியவில்லை என்று சொன்னதால் இரண்டு முறை அந்த கூட்டம் ரத்து செய்யப்பட்டது. ஒத்தி வைக்கப்பட்டது.

ஆனால், இந்த முறை 8ந் தேதி நடந்த கூட்டத்தில் எனக்கு உடல் நலம் இல்லை என்று தெரிவித்து கொஞ்சம் இதை தள்ளி வைத்துக் கொள்ளலாம். பிரதமர் வெளிநாடு சுற்றுப்பயணம் செல்கிறார் என்று சொன்னால் அவர் திரும்பி வந்த பிறகு வைத்துக் கொள்ளலாம் என்று எவ்வளவோ கேட்டுக் கொண்ட பிறகும் அவர்கள் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. கூட்டத்தை நடத்தியே தீருவோம் என்று சொன்னார்கள். அப்படி என்ன அவசரம் என்று எங்களுக்குப் புரியவில்லை.

### நீதிமன்ற தீர்ப்புக்கு குறைவான நீர் விட முடிவு

சரி, ஒருவிதமாக தமிழக அரசின் சார்பில் நிதியமைச்சரும், அரசு அதிகாரிகளும் கலந்து கொண்டார்கள். அந்தக் கூட்டத்தில் 1.25 டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிடப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கொடுத்திருந்த உத்தரவை சிதைத்து ஒரு நாளைக்கு, 9 ஆயிரம் கன அடி திறந்து விட்டால் போதும் என்று பிரதமர் உத்தரவிட்டார். 9 ஆயிரம் கியூசெக்ஸ் என்றால் 0.8 டி.எம்.சி. அடி தண்ணீர். அதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏற்றுக் கொள்ள முடியாது என்றுதான் சொன்னோம். நிதியமைச்சரும் பலத்த எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால் அதையும் மீறி இதுதான் முடிவு, இதுதான் தீர்ப்பு என்று அறிவித்துவிட்டார்கள். இது ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவு. எல்லோரும் ஏற்றுக் கொண்ட முடிவு என்று அறிவித்தார்கள். அப்படி இல்லை என்று உடனே தெரிவித்துவிட்டோம். அங்கேயே நிதியமைச்சரும் எதிர்ப்பைத் தெரிவித்தார். அதற்குப் பின்னால் பத்திரிகைகளுக்கும், தொலைக்காட்சிகளுக்கும் இங்கிருந்து அறிக்கை விட்டோம். சரி, நம்முடைய எதிர்ப்பையும் மீறி இப்படி காவிரி நதிநீர் ஆணையம் 9 ஆயிரம் கியூசெக்ஸ் என்ற அளவைக் குறைத்து ஒரு முடிவை அறிவித்தது. அதன்படியாவது கர்நாடகம் தண்ணீர் திறந்துவிட்டதா என்றால் அதுவும் இல்லை. தினசரி எவ்வளவு தண்ணீர் அங்கே கிடைக்கப் பெற்றது என்ற விவரம் இங்கே இருக்கிறது. உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, உச்சநீதிமன்ற ஆணைப்படி 4.9.2002 முதல் 8.9.2002 வரை, அதாவது அந்த சி.ஆர்.ஏ. மீட்டிங் நடந்த நாள் வரை, 5 நாட்களுக்கு 1.25 டி.எம்.சி அடி வீதம் என்ற அளவில் கிடைக்கப் பெற்றிருந்தால், 6.250 டி.எம்.சி. அடி தண்ணீர் நமக்கு கிடைத்திருக்க வேண்டும்.

அதன் பிறகு காவிரி நதிநீர் ஆணையம், ஒவ்வொரு நாளும் 9,000 கியூசெக்ஸ் தண்ணீர் திறந்துவிட வேண்டும் என்று கொடுத்த உத்தரவின்படி 9.9.2002 முதல் 19.9.2002 வரை 11 நாட்களுக்கு, ஒவ்வொரு நாளும் 0.8 டி.எம்.சி. அடி என்ற அளவில் 8.800 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆக, ஒட்டு மொத்தமாக 16 நாட்களுக்கு 4.9.2002லேயிருந்து 19.9.2002 வரை 15.050 டி.எம்.சி. அடி தண்ணீர் தமிழகத்திற்குக் கிடைத்திருக்க வேண்டும். ஆனால், இதுவரை மேட்டூர் அணையில் கிடைக்கப் பெற்ற தண்ணீர் 4.822 டி.எம்.சி. அடி மட்டுமே.

### நதிநீர் ஆணையத் தீர்ப்பின்படியும் திறக்க மறுப்பு

உச்சநீதிமன்றம் கொடுத்த ஆணைபடியும் தண்ணீரை அவர்கள் திறந்துவிடவில்லை. காவிரி நதிநீர் ஆணையம் கொடுத்த தீர்ப்பின்படியும் அவர்கள் தண்ணீரைத் திறந்துவிடவில்லை. 5 நாட்களுக்கு 1.25 டி.எம்.சி. அடி வீதம் நமக்கு 6.250 டி.எம்.சி. அடி தண்ணீர் கிடைத்திருக்க வேண்டும். 11 நாட்களுக்கு 0.8டி.எம்.சி. என்ற அளவில் 8.800 டி.எம்.சி. கிடைத்திருக்க வேண்டும். ஆக மொத்தம், நமக்கு கிடைத்திருக்க வேண்டிய 15.050 டி.எம்.சி. அடி தண்ணீரில் நமக்கு 4.822 டி.எம்.சி. அடி மட்டுமேதான் கிடைத்திருக்கிறது. அதிலேயும் உள்ள பற்றாக்குறை. டெஃபிசிட் 10.22 டி.எம்.சி. அடி தண்ணீர். இது நேற்றுவரை நான் சொல்கிற கணக்கு. இதிலேயே பற்றாக்குறையை வைத்திருக்கிறார்கள். அதெல்லாம் போதாது என்று நேற்று அவசரமாக திடீரென்று கர்நாடக அமைச்சரவையைக் கூட்டி இனிமேல் தமிழகத்திற்கு தண்ணீரே திறந்துவிடுவதில்லை என்ற ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அறிவித்திருக்கிறார்கள்.

### கர்நாடக அரசு ஓர் ஆண்டுகூட மதிக்கவே இல்லை

1991 முதல், காவிரி நதிநீர் நடுவர் மன்றம் தனது இடைக்கால தீர்ப்பை அறிவித்த நாள் முதல், ஒரு ஆண்டுகூட கர்நாடக அரசு, அந்த நடுவர்மன்றத்தின் ஆணைப்படி முறையாகத் தண்ணீரைத் திறந்துவிட்டதே இல்லை. அந்த நடுவர் மன்றத்தின் இடைக்காலத் தீர்ப்பின் ஒரு ஷெட்டியூல் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும், ஜூன் மாதத்திலிருந்து தொடங்கி அக்டோபர் வரை ஒவ்வொரு மாதமும் இத்தனை டி.எம்.சி. அடி தண்ணீர் திறந்துவிட வேண்டும்; ஒவ்வொரு வாரமும் இவ்வளவு தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்ற ஷெட்டியூலில் கொடுத்திருக்கிறார்கள். ஆகமொத்தம் 20.5 டி.எம்.சி. மேட்டூரில் கிடைக்கப் பெற வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதில் 6 டி.எம்.சி. தண்ணீர் பாண்டிச்சேரிக்குக் கொடுக்க வேண்டும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. ஆனால், ஓர் ஆண்டுகூட இதை கர்நாடக அரசு மதிக்கவேயில்லை.

Tribunal - It has been formed according to the Act of Parliament in the State Water Disputes Act, 1956.

அதிலேயே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. டிரிபியூனலில் ஒரு தீர்ப்பு அளித்தால், அது உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு இணையானது. உச்சநீதிமன்றத் தீர்ப்பிற்கு என்ன அதிகாரங்கள் உள்ளதோ, என்ன வலிமை உள்ளதோ அந்த, அதே வலிமை டிரிபியூனல் தீர்ப்பிற்கும், அந்த அதிகாரம் டிரிபியூனல் தீர்ப்பிற்கும் உள்ளது. ஆனால், தொடர்ந்து கர்நாடக அரசு 1991 முதல் 2002 வரை காவிரி நதிநீர் ஆணையத்தின் – டிரிபியூனல் – உத்தரவையும்

②

கடைப்பிடிக்கவில்லை; நிறைவேற்றவில்லை. உச்சநீதிமன்ற ஆணையையும் அவர்கள் கடைப்பிடிக்கவில்லை. ஆகவேதான், வேறு வழியின்றி மீண்டும் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றோம்; கடந்த 11ந் தேதி மீண்டும் உச்சநீதிமன்றத்திற்குச் சென்றோம்.

### திட்டமிட்டே சதி

அப்போது உச்சநீதிமன்றத்தில் எங்களுக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களைக் கொடுத்தோம். கர்நாடகம், உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படியும் தண்ணீரைத் திறந்துவிடவில்லை; காவிரி நதிநீர் ஆணையத்தின் உத்தரவுப்படியும் தண்ணீர் திறந்துவிடவில்லை. உச்சநிதீமன்றம் கர்நாடகத்திற்கு 3ந் தேதி கொடுத்துள்ள உத்தரவின்படியும், காவிரி நதிநீர் ஆணையம் 8ந் தேதி கொடுத்துள்ள ஆணையின்படியும் ஒவ்வொரு நாளும் எவ்வளவு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது என்பதை ஒரு 'அஃபிடவிட்' மூலமாக உச்சநீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும், மீண்டும் இந்த வழக்கை 23ந் தேதி அன்று எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவித்தது. அதற்குள் அவசரப்பட்டு கர்நாடகத்தில் இப்படிப்பட்ட ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். அதற்கு அவர்கள் பல்வேறு காரணங்களைச் சொல்கிறார்கள். அங்கே சட்டம்–ஒழுங்குப் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது; விவசாயிகள் தண்ணீரில் குதித்து, ஒரு விவசாயி இறந்துவிட்டார் என்றெல்லாம் சொல்கிறார்கள். எங்களுக்குக் கிடைத்த தகவல்படி, விவசாயிகள் யாரும் நீர்த் தேக்கத்திற்குள் குதிக்கவில்லை; அவர்கள் தள்ளிவிடப்பட்டிருக்கிறார்கள்; அதில் ஒருவர் இறந்துவிட்டார் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது.

எனவே, திட்டமிட்டே இப்படி ஒரு சதி செய்திருக்கிறார்கள். இப்படி ஒரு தற்கொலை சம்பவத்தைக் காரணம் காட்டி, இதனால் சட்டம்–ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட்டுவிட்டது என்று காரணம் சொல்லி, அதனால் தமிழகத்திற்குத் தண்ணீர் திறந்துவிடுவதில்லை என்று திட்டமிட்டு, இத்தகைய ஒரு நாடகம் நடத்தப்பட்டிருக்கிறது. இனிமேல் தண்ணீர் திறந்துவிடுவதில்லை என்று ஒரு முடிவை எடுத்திருக்கிறார்கள். இப்படி, 'யூனிலேட்டிர'லாக முடிவு எடுக்கும் அதிகாரம் கர்நாடகத்திற்குக் கிடையாது. காவிரி நதி என்பது ஒரு 'இண்டர் ஸ்டேட் ரிவர்' பிற மாநிலங்களுக்கும் அதில் உரிமை இருக்கிறது. எத்தனையோ நூற்றாண்டுகளாக அந்த உரிமை கொண்டாடப்பட்டு வருகிறது. அதனை மதிக்கவேண்டியது ஒரு மாநில அரசின் கடமை.

### பொறுத்துக் கொள்ள முடியாது

மேலும், நடுவர் மன்றத்தின் தீர்ப்பையும் மீறி, உச்சநீதிமன்றத்தின் ஆணையையும் மீறி, காவிரி நதி ஆணையத்தையும் மதிக்காமல், அதனுடைய தீர்ப்பையும் மீறி, ஒரு மாநில அரசு தான்தோன்றித்தனமாக, தன்னிச்சையாக, இனிமேல் தண்ணீர் திறந்துவிடுவதில்லை என்று அறிவிக்குமேயானால், இதையும் பொறுத்துக் கொண்டு நாம் சும்மா இருக்க முடியாது என்றுதான், ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும் என்பதற்காக இன்றைய தினம் அவசரமாக இந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம்.

இவ்வாறு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றினார்கள்.

உச்ச நீதிமன்ற தீர்ப்பை மதிக்காமலும், காவிரி நதிஆணையத்தின் முடிவை ஏற்காமலும், சட்டம் ஒழுங்கு பிரச்சினையை தூண்டி விட்டு அதையே காரணமாக காட்டி காவிரி நதியில் தண்ணீர் திறந்து விட மறுத்துவிட்ட கர்நாடக மாநிலத்தைக் கண்டித்து கருத்துக்களை தெரிவித்த கட்சித் தலைவர்கள், தமிழகத்திற்கு நீதி கிடைக்க அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து ஒரே குரலில் ஒற்றுமையாக நமது நியாயமான கோரிக்கையை மத்திய அரசிடம் வலியுறுத்த வேண்டும் என்று தெரிவித்தனர்.

இதன் அடிப்படையில், தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையில் தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தை சேர்ந்த அனைத்து கட்சித் தலைவர்கள் மற்றும் காவிரி டெல்டா விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு மாண்புமிகு பாரதப் பிரதமரை நேரில் சந்தித்து காவிரி நீர் விட ஆவன செய்யுமாறு வலியுறுத்துவது என்று இந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இது குறித்து இந்த அனைத்து கட்சி கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:

"தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையின் கீழ் தமிழகத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் மற்றும் காவிரி டெல்டா விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களைச் சந்தித்து கீழ்க்கண்டவாறு வலியுறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ) காவிரி டெல்டா மாவட்டங்களில் வாழும் இலட்சக் கணக்கான விவசாயிகள் குறுவைப் பயிரினை இழந்த நிலையிலும், 12 இலட்சம் ஏக்கர் நிலப்பரப்பில் சம்பா சாகுபடியை ஆரம்பிக்க முடியாமல் போகுமோ என்ற அச்ச உணர்வு மேலோங்கிய நிலையிலும், பேரழிவு நேரக்கூடிய, மிகவும் கவலைத் தரக் கூடிய இந்தச் சூழ்நிலையில், உச்ச நீதி மன்ற ஆணையின்படியும், காவிரி நதி ஆணையத்தின் உத்தரவுகளின்படியும், தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு நிலுவையில் இருக்கும் நிலையில், மத்திய அரசு, தமிழகத்திற்கு தேவையான தண்ணீரை உடனடியாக திறந்துவிடுமாறு கர்நாடக அரசுக்கு உத்தரவிட வேண்டும்.

(ஆ) உச்ச நீதிமன்ற ஆணை, காவிரி நடுவர் மன்றம் மற்றும் காவிரி நதி ஆணையம் ஆகியவற்றின் தீர்ப்புகளின்படி தமிழகத்திற்கு தண்ணீர் திறந்து விடாமல், இந்த ஆணைகளை செயல்படுத்த வெளிப்படையாகவே மறுத்து வருகின்ற கர்நாடக அரசின் நடவடிக்கை, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

(இ) மிக உயர்ந்த நீதித்துறை அமைப்பின் உத்தரவுகளை அமல்படுத்தும் நடைமுறையை, ஏட்டிக்கு போட்டியாக செயல்படும் ஒரு மாநில அரசின் தயவில் விட்டுவிட முடியாது என்பதால், 3.9.2002 நாளிட்ட உச்சநீதிமன்ற ஆணை மற்றும் 8.9.2002 நாளிட்ட காவிரி நதி ஆணையத்தின் உத்தரவு ஆகியவற்றை அமல்படுத்துவதற்கு, கர்நாடகத்தில் உள்ள அணைகளை மத்திய அரசே பொறுப்பில் எடுத்துக் கொண்டு அவற்றில் இருந்து, தண்ணீர் திறந்து விடுமாறு, காவிரி நதி ஆணையத்தின் விதிகள், உச்சநீதிமன்றத்தில் தமிழகம் சமர்ப்பித்துள்ள இடைக்கால மனுவின் மீது பிறப்பிக்கப்படும் உத்தரவுகளைப் பாதிக்காதவகையில், திருத்தம் செய்யப்பட வேண்டும்.

இந்த தீர்மானத்தின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் 21.9.2002 அன்று காலை 11.00 மணியளவில் சென்னையிலிருந்து தமிழகத்தைச் சேர்ந்த அரசியல் கட்சித் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் விவசாய சங்கத் தலைவர்கள் அடங்கிய குழு, தனி விமானம் மூலம் புதுடெல்லிக்கு புறப்பட்டுச் சென்று, அங்கு மாலை சுமார் 5.30 மணியளவில் பாரதப் பிரதமரைச் சந்தித்து, கோரிக்கை மனுவை வழங்கியது.

❖ ❖ ❖

## தீப்பெட்டித் தொழிற்சாலை தீ விபத்தில் பாதிக்கப்பட்டோருக்கு முதலமைச்சர் உதவி

*தூத்துக்குடி மாவட்டம், முடுகுமிண்டான் பட்டி (நல்லாட்டின்புதூர் பி.எஸ்.) கிராமத்தில் உள்ள ஒரு தீப்பெட்டி தொழிற்சாலையில் 24.9.2002 அன்று ஏற்பட்ட தீ விபத்தின்போது, அந்த தொழிற் சாலையில் பணிபுரிந்து வந்த ஆறு பெண்கள் உயிரிழந்ததுடன், 48 நபர்கள் பலத்த தீக்காயம் அடைந்து சிகிச்சைக்காக கோவில்பட்டி அரசு மருத்துவமனை மற்றும் திருநெல்வேலி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.*

*இந்தத் துயர சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பம் ஒவ்வொன்றிற்கும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50,000 மற்றும் பலத்த காயமடைந்தவர்களுக்கு ரூ.15,000 வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.*

*இந்த தீ விபத்தில் அகால மரணமடைந்த வர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எனது சார்பாக தமிழக கால்நடைத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களை சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று நிவாரணப் பணியை மேற்கொள்ளவும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கும் மற்றும் இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறவும் பணித்துள்ளேன். இந்த விபத்தில் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிர்வாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் உத்தரவிட்டுள்ளேன். காயமடைந்துள்ள அனைவரும் விரைவில் குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த தீ விபத்து குறித்து மாவட்ட வருவாய் அலுவலர் மூலம் விசாரணை நடத்தி அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்க தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டுள்ளேன்.*

• • •


# இணையதளம் வழியாக சிறுதொழில் பதிவு - தற்காலிகச் சான்றிதழ்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.9.2002 அன்று தலைமைச் செயலகத்தில், இணையதளம் (Internet) http://www.tn.gov.in./ssionline வழியாக சிறுதொழில் தொடங்குவதற்கான பதிவு மற்றும் தற்காலிகச் சான்றிதழ் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறவும், தேவையான உரிமங்களை பல்வேறு அரசுத் துறைகளிடமிருந்து பெறவும், முன்னுரிமை அடிப்படையில் மின்சார வாரியத்திடமிருந்து மின் இணைப்பு பெறவும், சிறுதொழில் முனைவோர்களுக்கு தற்காலிக சிறுதொழில் பதிவுச் சான்றிதழ் தேவைப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 20,000 சிறுதொழில் முனைவோர்கள் தற்காலிக சிறுதொழில் சான்று பெற மாவட்டத் தொழில் மையங்களையும், சென்னையில் உள்ள மண்டல இணை இயக்குநர் அவர்களையும் அணுகுகிறார்கள். தற்போது உள்ள நடைமுறையில், சிறுதொழில் பதிவு செய்யும் முறைகள் குறித்த விவரங்கள் தொழில்முனைவோருக்கு உடனே கிடைப்பதில்லை. மேலும், விண்ணப்பத்தை சமர்ப்பிக்க தொழில்முனைவோர்கள் மாவட்டத் தொழில் மைய பணியாளர்களை சார்ந்திருக்க வேண்டியுள்ளது. தற்போதைய நடைமுறைகள் தொழில்முனை வோருக்கு போதுமான சேவையை முழுமையாக அளிக்கவில்லை. மாவட்டத் தொழில் மையத்தில் விண்ணப்பம் பெற்றபின் சிறுதொழில் தற்காலிக பதிவு சான்றிதழ் வழங்க ஏறத்தாழ 3 நாட்கள் ஆகின்றன. மேலும், தனது சிறுதொழிலை பதிவு செய்யும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க மாவட்டத் தொழில் மையம் வரை தொழில்முனைவோர் நேரில் செல்ல வேண்டியுள்ளது. இவை அனைத்தும் தொழில்முனைவோர்களுக்கு பல்வேறு இடர்ப்பாடுகளை ஏற்படுத்துகின்றன.



இந்த இடர்ப்பாடுகளை நீக்கி ஒளிவு மறைவற்ற, விரைவான சேவையை தொழில்முனைவோருக்கு அளிப்பதற்காக மாநிலத்தில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற இணையதள மையங்கள் மூலம் "இணையதளம் வழியாக சிறுதொழில் பதிவு மற்றும் தற்காலிகச் சான்றிதழ் வழங்கும் திட்டம்" அறிமுகப்படுத்துவதற்கான ஆணையை தமிழ்நாடு அரசு அண்மையில் வெளியிட்டது. இத்திட்டத்தின் கீழ் மாவட்ட மற்றும் வட்ட தலைநகரங்களில் 144 இணையதள மையங்கள் இதுவரை அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தற்போது இத்தகைய மையங்களில் ஏதாவது ஒன்றுக்கு தொழில் முனைவோர் சென்று, இணையதளத்தில் அளிக்கப்பட்டுள்ள விவரங்களை அறிந்து தனது சிறுதொழில் பதிவு விண்ணப்பத்தை இணையதளம் மூலம் பதிவு செய்யலாம். தனது சிறுதொழில் பதிவு செய்வதற்கான தற்காலிக சான்றிதழை தாமதமின்றி உடனே பெற்றுக் கொள்ளலாம். அங்கீகரிக்கப்பட்ட இணையதள மையங்கள் ஒவ்வொரு தற்காலிகப் பதிவுக்கும் சிறுதொழில் முனைவோரிடமிருந்து ரூ.50-க்கு மிகாமல் கட்டணம் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளார்கள்.



தமிழக முதலமைச்சர் அவர்கள் 12.9.2002 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் இந்தத் திட்டத்தை தொடங்கி வைத்தார். பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக வேதியியல் பொருட்கள் கலக்காத வகையில், கைகளினால் காகிதம் மூலம் தயாரிக்கப்படும் பைகள், காகித உறைகள் ஆகியவற்றை தயாரிக்கவுள்ள சென்னை அம்பத்தூரில் அமைந்துள்ள ஸ்ரீசத்யசாய் கிரியேஷன்ஸ் என்ற சிறுதொழில் நிறுவனத்திற்காக பதிவுச்சான்றிதழ் கோரிய திருமதி சௌமியா என்பவருக்கு Online முறையில் தற்காலிகப் பதிவுச் சான்றிதழை முதலமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்கள்.

சான்றிதழைப் பெற்றுக் கொண்ட திருமதி. சௌமியா அவர்கள் தனது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

★ ★ ★

# காவலர்களுக்கு முதலமைச்சர் பதக்கம்

**ஒ**வ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் தேதி பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளன்று தமிழ்நாட்டில் காவல் துறையில் பணியாற்றுகின்ற அலுவலர்கள் மற்றும் காவலர்களின் சிறந்த சேவையைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்கின்ற வகையில், தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கங்கள் அறிவிக்கப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றன. காவல் கண்காணிப்பாளர் முதல் காவலர் வரையில் 100 காவல் அலுவலர் மற்றும் காவலர்களுக்கும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித் துறையின் கோட்ட தீயணைப்பு அலுவலர் முதல் தீயணைப்பு வீரர் வரை 9 பேருக்கும், சிறைத் துறையில் கூடுதல் சிறை கண்காணிப்பாளர் முதல் வார்டர் வரையில் 10 பேருக்கும், ஊர்காவல் படையில் கம்பெனி கமாண்டர் முதல் ஊர் காவலர் வரை உள்ள 7 அலுவலர்களுக்கும், இந்த ஆண்டிற்கான (2002-2003) தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள், அவர்கள் தங்களது பணியில் காட்டிய மிகச் சிறந்த சேவையைப் பாராட்டும் முகத்தான் அறிவிக்கப்பட்டுள்ளன.


மேலும், காவல்துறையைச் சேர்ந்த ஒரு காவல் கூடுதல் கண்காணிப்பாளர், 2 ஆய்வாளர்கள், 3 சார்பு ஆய்வாளர்கள், 4 தலைமை காவலர்கள் மற்றும் 3 காவலர்கள் ஆகியோருக்கு அவர்கள் ஆற்றியுள்ள வீர தீரச் செயல்களை பாராட்டி இந்த ஆண்டிற்கான "தமிழ்நாடு முதலமைச்சரின் காவல்துறை பதக்கங்கள்" அறிவிக்கப்பட்டுள்ளன.

சிறந்த சேவைக்கான அண்ணா பதக்கங்களை பெறுகின்றவர்களுக்கு அதாவது துணை கண்காணிப்பாளர் நிலை முதல் காவலர் நிலை வரை உள்ளவர்களுக்கு ரூ.5,000, ரூ.3,000, மற்றும் ரூ.2,000 முறையே, அவர்களது பணி நிலையின் அடிப்படையில் ஒரு முறை வழங்கப்படும் தொகையாக அளிக்கப்படும். வீர தீரச் செயல்கள் புரிந்தமைக்காக தமிழ்நாடு முதலமைச்சரின் காவல்துறை பதக்கங்கள் பெறுபவர்கள் அனைவருக்கும் பணிநிலை வித்தியாசமின்றி மாதந்தோறும் ரூ.100 கூடுதல் படி வழங்கப்படும்.

தற்போது அறிவிக்கப்பட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சரின் அண்ணா பதக்கங்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல்துறை பதக்கங்கள் ஆகியவற்றை இதற்காக பின்னர் நடைபெற உள்ள பதக்கங்கள் வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விருது பெறுகின்ற அனைவருக்கும் வழங்கிச் சிறப்பிப்பார். ❖

# நாள்தோறும் திட்டமிட்டு நலத்திட்டங்களை – ஆக்கப்பணிகளை நிறைவேற்றி வருகிறேன்

– மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா



தேனி மாவட்டத்தின் அழகிய பகுதியான பெரியகுளத்துக்கு அருகே அமைந்துள்ள இந்த மேல்மங்கலத்தில் திரண்டிருக்கும் மேன்மைமிகு மக்களாகிய உங்களை எல்லாம் காண்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் தமிழகத்தின் முதலமைச்சராக மீண்டும் 2002 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதும் எந்தெந்த மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டும் என்னென்ன திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று பயணத் திட்டம் வகுத்த நேரத்தில் என்ன கைமாறு செய்தாலும் ஈடாகாத பாசத்தைப் பொழியும் ஆண்டிபட்டி மக்களைச் சந்திப்பதும் அவர்களுக்கு தேர்தல் நேரத்தின் போது நான் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதும் தான் என் தலையாயப் பணி எனக் கருதினேன்.

என்னை நம்பி வாக்களித்த பெரியோர்களுக்கும், தாய்மார்களுக்கும், பொதுமக்களுக்கும் நான் செலுத்தும் முதல் மரியாதை என்றே கருதி, நான் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு 15.4.2002 அன்று இங்கு முதன் முதலாக வந்தேன். அதன் பின்னர் பல மாவட்டங்களுக்கு நான் சென்று வந்தாலும், ஆண்டிபட்டிக்கு வரும் போது என் மனதில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.





இந்தியாவிலேயே தமிழகத்தை, ஒவ்வொரு துறையிலும் முதன்மை மாநிலமாக உருவாக்குவேன் என்று சூளுரைத்துத் தான், நான் செயல்பட்டுக் கொண்டிருக்கிறேன். அதைப் போலவே, இந்த ஆண்டிபட்டித் தொகுதியை தமிழகத்தில் ஒரு முன்மாதிரியான தொகுதியாக்குவேன் என்ற உறுதியை இடைத் தேர்தல் நேரத்தில் உங்களிடம் ஆதரவு கேட்க இங்கு வந்தபோது நான் அறிவித்து விட்டுச் சென்றேன்.

தேர்தல் நேரத்தில் உங்களை எல்லாம் சந்தித்து உங்களிடம் வாக்குகளை சேகரித்த போது பல்வேறு வாக்குறுதிகளை நான் உங்களிடம் தெரிவித்து, அவற்றிற்கு செயல் வடிவம் கொடுப்பேன் என்ற உறுதிமொழியையும் அளித்தேன். அந்த வகையில் சென்ற முறை இங்கு வந்தபோது வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் சென்றேன்.

அவற்றில் ஒன்று தான் ஆண்டிபட்டி–சேடப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டம். 74 கோடி ரூபாய் செலவில் வைகை ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டு வரும் இந்தத் திட்டத்திற்கு அரசாணை வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஆண்டிபட்டி நகரப் பஞ்சாயத்து மற்றும் ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள 43 குடியிருப்புகள் உட்பட 488 குடியிருப்புகளுக்கு குடிநீர் கொண்டு வந்து சேர்க்கும் வகையில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. 15.4.2002 அன்று என்னால் அடிக்கல் நாட்டப்பட்ட இந்தத் திட்டத்தின் பணிகள் விரைவாக நடந்து வருகின்றன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, இந்தப் பகுதியில் அதிக அளவில் உற்பத்தியாகும் இலவம் காய்களை அடிப்படையாகக் கொண்டு கூட்டுறவுத் துறையில், ஒரு தொழிற் கூட்டுறவு சங்கம் அமைக்க நான் உத்தர விட்டிருந்தேன். அத்துடன் இங்கு உற்பத்தியாகும் முந்திரிக்கு நல்ல விலை கிடைக்கச் செய்யும் வகையில் ஒரு தொழிற் கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டத்தையும் சென்ற முறை நான் இங்கு வந்தபோது தொடங்கி வைத்தேன்.

இன்று இலவம் பஞ்சு மற்றும் முந்திரி கூட்டுறவுச் சங்கங்கள், கடமலைக்குண்டு–மயிலாடும்பாறை ஒன்றியத்தில் உள்ள தங்கம்மாள்புரத்தில் இயங்கி வருகின்றன என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிற் கூட்டுறவு சங்க உறுப்பினர் களிடமிருந்து பங்கு மூலதனம் பெறப்பட்டு இலவம் பஞ்சு மற்றும் முந்திரி கொள்முதல் செய்யப்பட்டு நல்ல முறையில் வியாபாரம் நடந்து வருவது கண்டு நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களை இலாபகரமாக விற்பதற்கு உரிய வழிகள் ஆராயப்பட்டு வருகின்றன. இந்த தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கட்டடங்கள் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அத்தோடு தேனி மாவட்டத்திற்கு என புதிய கூட்டுறவு மேலாண்மை நிலையம் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்த மாவட்ட மக்களிடமிருந்து வந்திருந்தது. தேனி மாவட்டத்திற்கு என தனியாக கூட்டுறவு மேலாண்மை நிலையம் இல்லாததால் இந்த மாவட்டத்திலிருந்து ஏறத்தாழ 325 மாணவ மாணவியர்கள் தினந்தோறும் திண்டுக்கல் வரை சென்று பயிற்சி பெற்று வருகிறார்கள். இங்கு கூட்டுறவு மேலாண்மை நிலையம் அமைந்தால் அந்த மாணவ மாணவியருக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை உணர்ந்து, தேனி மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு கூட்டுறவு மேலாண்மை நிலையத்தை ஆண்டிபட்டியில் தொடங்க உத்தரவிட்டுள்ளேன். தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் நிதி ஆதாரங்களைக் கொண்டு இந்த மேலாண்மை நிலையம் இந்த ஆண்டே ஆண்டிபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில்

இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற முறை ஆண்டிபட்டி வட்டாட்சியர் அலுவலகத்தில் 'தமிழ் நிலம்' என்ற மென்பொருள் கொண்டு செயல்படக் கூடிய Touch Screen Computer Kiosk- அதாவது தொடுதிரை கணினியை துவக்கி வைத்து மகிழ்ந்தேன். அந்த வகையில் அதேபோல, சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திலும் தொடுதிரை கணினி வசதியை அமைக்க, நான் உத்தரவிட்டுள்ளேன். 'குறை தீர்ப்போம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த தொடுதிரை கணினியில், சட்டமன்றத் தொகுதி குறித்த அனைத்து விவரங்களும் அரசின் திட்டங்களைப் பற்றியும் வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும் விவரங்கள் இருக்கும். இந்தக் கணினியை தொடுவதன் மூலம் விவரங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர்களிடம் அளிக்கப்படும், மனுக்களைப் பற்றிய விவரங்களும் இந்தக் கணினியில் சேமித்து வைத்துக் கொள்ளலாம். தமிழ்நாட்டில் முதன் முறையாக ஆண்டிபட்டியில் 'குறை தீர்ப்போம்' என்ற தொடுதிரை கணினி, இயக்கி வைக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய நிகழ்ச்சியில் வறுமையை ஒழிப்பதற்கும் திட்டம் தொடங்கப்படுகிறது. 1.8 கோடி ருபாய் மதிப்பிலான Total Poverty Eradication Project– அதாவது – முழுமையான வறுமை ஒழிப்புத் திட்டம் என்னும் புதிய திட்டத்தை தொடங்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். பெண்கள் முன்னேற்றத்தில் இந்த அரசு, அதிக அக்கறை காட்டி வருகிறது என்பதை எடுத்துக் காட்டும் விதத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் வரும் இரண்டு ஆண்டு காலத்தில் 2,000 சுயஉதவிக் குழுக்கள் உருவாக்கப்படும். 5,000 பெண்மணிகளுக்கு Entrepreneurship Development Programme (EDP) அதாவது – தொழில் முனைவோருக்கான பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி அளிக்கப்படும்; எல்லா பெண் சுயஉதவி குழுக்களுக்கும் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சியும் கடன் வசதியும் ஏற்படுத்தித் தரப்படும். குறிப்பாக, அதிக அளவில் நெசவாளர் குடும்பங்கள் அடங்கிய சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நல்ல நிகழ்ச்சிக்குப் பிறகு ஆண்டிபட்டியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றையும் இன்று துவக்கி வைக்க உள்ளேன். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தின் மூலம் இந்தப் பகுதியில் உள்ள பெண்களுடைய குறைகள் பெருமளவில் தீர்க்கப்படும் என்பதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன்.





இன்று நான் தொடங்கி வைக்க இருக்கும் அனைத்து மகளிர் காவல் நிலையம் தமிழகத்தில் 109 வது அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகும். முதன் முதலாக பரிச்சார்த்தமாக 1992 ஆம் ஆண்டில் சென்னையில் ஒரே ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையத்தை தொடங்கி வைத்தேன். அதற்கு அமோக வரவேற்பு இருந்தது. அதன் பின்னர் எல்லாப் பகுதிகளிலும் தாய்மார்கள் இத்தகைய மகளிர் காவல் நிலையங்களை தொடங்கி வைக்க வேண்டும் என்று கோரிக்கை வத்தார்கள். ஆகவே 1996 ஆம் ஆண்டு ஆட்சி முடிவதற்குள் அப்போதே 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களை தமிழகம் முழுவதிலும் நான் தொடங்கி வைத்திருந்தேன். ஆனால், அதன் பின்னர் 1996 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த திமுக அரசு இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களை அடியோடு புறக்கணித்தது. இந்த மகளிர் காவல் நிலையங்கள் எல்லாம் கேட்பாரற்று கிடந்தன. உயர் காவல் அதிகாரிகள் அந்த ஐந்தாண்டு காலமும் அதாவது 1998 முதல் 2001 வரை திமுக ஆட்சி இருந்த ஐந்தாண்டு காலமும் இந்த மகளிர் காவல் நிலையங்களுக்கு, ஒரு Inspection–க்காகக் கூட செல்லவில்லை. அதுமட்டுமல்ல. அப்போது நான் தொடங்கி வைத்திருந்த 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கும் எல்லா உபகரணங்களையும் கொடுத்திருந்தேன், வாகனங்கள் கொடுத்திருந்தேன், தொலைபேசிகள் கொடுத்து இருந்தேன், அவர்களுக்கு வேண்டிய மேசை நாற்காலிகள் கம்யூட்டர்கள் எல்லாம் கொடுத்திருந்தேன். ஆனால் திமுக ஆட்சிக் காலத்தில் இந்த 57 மகளிர் காவல் நிலையங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த வாகனங்களை எல்லாம் அவர்களிடமிருந்து பறித்து கொண்டார்கள். அங்கேயிருந்த மேசை நாற்காலிகளை எல்லாம் கூட அவர்கள் வேறு அலுவலகங்களுக்கு கொடுத்து விட்டார்கள். இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் பணிபுரிந்த பாவப்பட்ட பெண் காவலர்கள் கட்டாந்தரையில் அமர வேண்டிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். இப்படி செயலற்று போய் கிடந்த இந்த அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கு மீண்டும் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடன் கடந்த ஆண்டு 2001 ஆம் ஆண்டு புத்துயிர் ஊட்டி மறுபடியும் அவற்றை புதுப்பித்து அதன் பிறகு தமிழகத்தில் உள்ள 188 காவல் உட்கோட்டங்களிலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் தொடங்குவது என்று திட்டம் தீட்டி இதுவரை 109 காவல் நிலையங்களை துவக்கி இருக்கிறோம். 109வது காவல் நிலையத்தை இன்றைக்கு ஆண்டிபட்டியில் தொடங்க உள்ளேன். இந்த தொகுதியில் உள்ள மகளிர் அதை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று இன்றைக்கு கேட்டுக் கொள்கிறேன்.



நான் இங்கு கொண்டு வந்து சேர்த்துள்ள திட்டங்கள் அனைத்தையும் தமிழக அரசின் கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையே உங்களுக்கு அளித்து இருக்கிறேன் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறையை பற்றி நான் அதிகம் குறிப்பிட வேண்டியதில்லை. உங்களுக்கே தெரியும். இருப்பினும், தமிழக அரசு மேற்கொண்டு வரும் நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை ஏழை எளியோரை பாதிக்காத வகையில் அமைத்து, தமிழகத்தில் மீண்டும் ஆரோக்கியமான நிதி நிலைமையை ஏற்படுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையான காவிரி நதி நீர் பங்கீட்டுப் பிரச்சினையில் கர்நாடக மாநில நீர்த்தேக்கங்களில் இருந்து நீரைக் கொண்டு வந்து சேர்க்க உங்கள் அன்புச் சகோதரி எடுத்துக் கொண்டுள்ள முயற்சிகளைப் பற்றி நீங்கள் பத்திரிக்கைகள் மற்றும் தொலைக்காட்சி மூலமாக தெரிந்திருப்பீர்கள் என்று

(3)

நம்புகிறேன். உச்ச நீதிமன்றம் தந்த தெளிவான தீர்ப்புக்குப் பின்னரும் தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய பாசன நீரைப் பெறுவதற்காக நாம் கடுமையாகப் போராட வேண்டியுள்ளது. தமிழகத்தின் நெற்களஞ்சியமாம் காவிரி டெல்டா மாவட்டங்களில் குறுவைப் பயிரை இழந்த பின்னர் சம்பா பயிரும் கேள்விக் குறியாகிவிட்ட சூழ்நிலையில் நம்முடைய தொடர்ந்த முயற்சிகளுக்கு ஓரளவு மட்டுமே பயன் கிடைத்துள்ளது.

நமது நாட்டுக்குள்ளேயே, மாநில உரிமைகளுக்காக கடுமையாகப் போராட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. என்னுடைய முயற்சிக்கு ஊக்கம் தருவது உங்கள் அன்பு ததும்பும் முகங்களே. என்னை நம்பி வாக்களித்த பெருமக்களுக்கு வாழ்வுரிமை வேண்டிய தமிழகத்தின் நலன் காக்க போராடிக் கொண்டிருக்கிறேன்.

ஏற்றமிகு இந்த விழாவில் 15.4.2002–க்கு பிறகு தேனி மாவட்டத்தில் 22.08 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்ட 166 பணிகளை இன்று திறந்து வைத்துள்ளேன். இவற்றில், குடிநீர் திட்டப் பணிகள், சத்துணவுக் கூடங்கள், சமுதாயக் கூடங்கள், குழந்தைகள் நல மையம், பள்ளிக் கட்டிடங்கள், துப்புரவு வளாகங்கள், கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்கள், தொகுப்பு வீடுகள் என பல்வேறு பணிகள் அடங்கும்.

அதே போன்று, 69.34 கோடி ரூபாய் மதிப்பிலான 1,196 பணிகளுக்கு, இன்று அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. குடிநீர்த் திட்டப் பணிகள், இருவழிச் சாலையாக சாலைகளை மேம்படுத்தும் பணி, பெரியகுளம் அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில், குளிர்சாதன வசதியுடன் கூடிய, அறுவைச் சிகிச்சை அரங்கு, பள்ளிக் கட்டிடங்கள், கிராம நிர்வாக அலுவலர் கட்டிடம், சுருளி அருவியில் மின்விளக்கு அமைத்தல், தொகுப்பு வீடுகள், சாலை மேம்பாட்டுப் பணிகள், ஒருங்கிணைந்த பெண்கள் கழிப்பறை, சமுதாயக் கூடம், வடிகால் தடுப்புச் சுவர், சிமெண்ட் சாலைப் பணிகள் ஆகியவையும் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ள பணிகளில் அடங்கும்.

மேலும், மத்திய நீர்வடிப் பகுதித் திட்டங்கள் உட்பட 1.01 கோடி ரூபாய் மதிப்புடைய 525 திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. அதோடு, மாவட்டம் முழுவதிலும் உள்ள 3,747 பயனாளிகளுக்கு, பல்வேறு அரசு நலத் திட்டங்களின் வாயிலாக 1.89 கோடி ரூபாய் மதிப்பிலான உதவிகள் வழங்கப்படுகின்றன. இதில் குறிப்பாக 954 ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

இனி, ஆண்டிபட்டி தொகுதிக்கு வருவோம்.

இந்த விழாவில், சென்ற முறை 15.4.2002 அன்று இங்கு நான் வந்ததற்குப் பிறகு ஆண்டிபட்டி தொகுதியில் மட்டும் நிறைவேற்றப்பட்ட 4.38 கோடி ரூபாய் மதிப்பிலான 71 கட்டிடங்களை திறந்து வைத்துள்ளேன். இதில் துணை சுகாதார மைய கட்டிடம், நகர நலவாழ்வு மையக் கட்டிடம், மாவட்ட மைய நூலகக் கட்டிடங்கள் ஆகியவை அடங்கும். 34.97 கோடி ரூபாய் மதிப்பிலான 594 பணிகளுக்கு இன்று என்னால் அடிக்கற்கள் நாட்டப்பட்டுள்ளன. அரசு துவக்கப் பள்ளிகளுக்கு குடிநீர் வசதி மற்றும் மின் இணைப்பு வசதி



ஏற்படுத்துதல், ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகள் அமைத்தல், கண்டமனூரில் துணை மின் நிலையம் அமைத்தல் போன்ற பணிகள் இதில் அடங்கும். மேலும், இதில் 300 படுக்கைகள் கொண்ட தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் அடங்கும்.

26 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 80 பணிகள் இன்று தொடங்கி வைக்கப்படுகின்றன. மேலும், 52.98 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த 1,035 பயனாளிகளுக்கு வழங்க உள்ளேன்.



நான் ஆண்டிபட்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு முன்னரே எங்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் அரவணைப்பில் இந்தத் தொகுதி இருந்து வந்தது என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். நாடாளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி இந்தச் சட்டமன்றத் தொகுதிக்கு கணிசமாக ஒதுக்கப்பட்டு பல்வேறு பணிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

கடமலைக்குண்டு – வெள்ளிமலைப் பாலம், வருஷநாடு சாலை மேம்பாடு, கண்டமனூர் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி, வடுகப்பட்டி – காமாட்சிபுரம் உயர்நிலைப் பாலம், ஆண்டிபட்டி அரசு மருத்துவமனைக் கட்டிடங்களுக்கு சிறப்பு மராமத்துப் பணி, மகளிர் துப்புரவு வளாகங்கள் எனப்



பலவற்றை சொல்லிக் கொண்டே போகலாம். சென்றமுறை நான் இங்கு வந்த போது தொடங்கி வைத்த பல பணிகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன என்ற செய்தி என் மனதிற்கு திருப்தி அளிக்கிறது.

இடைத்தேர்தலுக்குப் பிறகு இரண்டாம் முறையாக இங்கு வந்திருக்கும் நான் இப்போது மேலும் சில வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன்.

பின்தங்கிய மாவட்டங்களின் வளர்ச்சியை முடுக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசிடம் நிறையவே உள்ளது. அதன் வெளிப்பாடே தேனி மாவட்டத்திற்கு ஓர் அரசு மருத்துவக் கல்லூரி அமையும் விதத்தில், முன்னோடி நடவடிக்கையாக, 300 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைக்கு இந்த விழாவில் அடிக்கல் நாட்டியுள்ளேன். அந்த மருத்துவமனை, அரசு மருத்துவக் கல்லூரி அமையும் வளாகத்திலேயே அமைவது தான் பொருத்தமாக இருக்கும் என்பதால் 12 கோடி ரூபாய் செலவில் ஆண்டிபட்டியில், தேனி–மதுரை தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி அமையவுள்ள அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்திற்குள் இந்த மருத்துவமனை கட்டப்படும். இதற்கான நிலம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது. பணிகள் விரைவில் தொடங்கி ஓராண்டு காலத்திற்குள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை இயங்கும். 2003–2004 கல்வி ஆண்டில், 100 மாணவர்கள் இந்த மருத்துவக் கல்லூரியில் பயிலுவார்கள் என்பதை பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த மருத்துவக் கல்லூரி வளாகத்திலேயே Nursing College – செவிலியர் கல்லூரி ஒன்றும் தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரும்பாலான மக்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் ஆண்டிபட்டியில் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்துவேன் என்று ஆண்டிபட்டி இடைத்தேர்தலின் போது நான் தெரிவித்து இருந்தேன். ஆண்டிபட்டி மக்களின் கனவு இன்று நனவாகி உள்ளது. இதோ, இன்று முதல் ஆண்டிபட்டியில் மதுரை காமராஜர் பல்கலைக்கழகக் கல்லூரி செயல்படத் துவங்கியுள்ளது.

ஆண்டிபட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமப்புற இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும், தரமான உயர் கல்வி வழங்குவதன் மூலம் பின்தங்கிய இந்தப் பகுதியை முன்னேறிய பகுதியாக மாற்றும் நோக்கத்தை இந்தக் கல்லூரி நிறைவு செய்யும். இந்தக் கல்லூரியில் இருபாலருக்கும் அனுமதி உண்டு. இங்கு பயிலும் கிராமப்புற இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோரின் மனித வள மேம்பாட்டுக்கு துணை புரிந்து வாழ்க்கையில் உயர்வடையச் செய்து அவர்களை இந்த தேசத்தின் கட்டுமானப் பணியில் பங்கெடுக்கச் செய்வதற்கு இந்தக் கல்லூரி உதவி புரியும் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.

B.Sc. Electronics and Communication
B.Sc. Mathematics

B.Com. with Computer Applications
B.B.E. Bachelor of Business Economics

என்ற பாடப் பிரிவுகளை நடத்த இருக்கும் இந்தக் கல்லூரி தற்சமயம், ஆண்டிபட்டி விசைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் இயங்கும். இந்தக் கல்லூரியில் 400 மாணவ மாணவியர்கள், சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அரசுக் கல்லூரிகளில் நடைமுறையில் இருக்கும் கல்விக் கட்டணமே இங்கும் வசூலிக்கப்படும். இந்த ஆண்டு, இந்தக் கல்லூரியில் சேர்ந்து பயில இருக்கும் மாணவ மாணவியருக்கு, என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவர்களுக்குக் கிடைத்த இந்த வசதியை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தேனி மாவட்டம் முழுவதும் 94 கோடி ரூபாய் அளவிற்கு கட்டடங்கள், பணிகள், திட்டங்கள் மற்றும் உதவிகள் தேனி மாவட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்றன. அதில் ஏறத்தாழ 40 கோடி ரூபாய் அளவிலான திட்டங்களும் உதவிகளும் ஆண்டிபட்டி தொகுதி மக்களுக்கு அளிக்கப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அத்தனை பயனாளிகளுக்கும் நானே உதவிகளை வழங்க வேண்டும் என்ற விருப்பம் இருந்தாலும் கால அவகாசம் கருதி, ஒரு சிலருக்கு மட்டும் உதவிகளை மேடையில் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகளுக்கு நான் மேடையில் உதவிகளை வழங்கிய பின்பு விழா பந்தலிலேயே அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்குவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாள்தோறும் திட்டமிட்டு ஆக்கப் பணிகளை நலத் திட்டங்களை நான் நிறைவேற்றி வருகிறேன்.

ஒவ்வொரு துறையிலும் அந்தத் துறையில் இருப்பவர்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து அவற்றைப் போக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை உடனுக்குடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு எடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள்.

அப்படி நான் எதைச் செய்தாலும் அதிலே குறை காண துடிக்கிறவர்கள்.

இதையெல்லாம் நான் சொல்வது இந்த குழப்பவாதிகளுக்கு பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக அல்ல.

உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எப்படிப்பட்ட சூழலில் ஆக்கப் பணிகளில் முழுக்க ஈடுபட்டு வருகிறேன் என்பதை அறிவார்ந்த தமிழக மக்களாகிய நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான் இதை சுட்டிக் காட்டுகிறேன்.

*"அச்சம் என்பது மடமையடா,*
*அஞ்சாமை திராவிடர் உடமையடா"*

– என்று முழங்கினார் நமது இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள். அவர் கற்றுக் கொடுத்த பாடம் தான், எனது அனைத்து முயற்சிகளிலும், எனக்குத் துணை நிற்கிறது.

*'My Strength is as the strength of Ten*
*Because my heart is pure'*

– என்று கூறினார் ஆங்கிலக் கவிஞன் Lord Tennyson. எனது இதயம் தூய்மையானதாய் இருப்பதால், என் வலியை பத்து பேர் வலிமைக்குச் சமமானது என்பது அந்தக் கவிஞனின் கருத்து.

என்னுடைய உள்ளம் தூய்மையானது மட்டுமின்றி என் வலிமை பத்து பேர் வலிமைக்குச் சமம் என்று சொல்ல மாட்டேன், ஆறரைக் கோடித் தமிழர்களின் வலிமையும் என் வலிமை என்று தான் நான் சொல்வேன்.

உங்கள் அன்பும் ஆதரவும் எப்போதும் உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கு இருப்பதால், உங்கள் அனைவருடைய வலிமையும் எனது வலிமை என்று தானே பொருள் ?

அப்படிப்பட்ட அன்பை ஆதரவை, ஊக்கத்தை உறுதியை வழங்கி, உறுதுணையாக இருக்கும் உங்கள் அனைவருக்கும் என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து பொங்கி வரும் அன்பை நன்றியை காணிக்கையாக்கி உங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

***16.9.2002 அன்று தேனி மாவட்டம் மேல் மங்கலத்தில், தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கான அடிக்கல்லை நாட்டியும், ஆண்டிபட்டி மதுரை காமராஜர் பல்கலைக்கழகக் கல்லூரியைத் துவக்கி வைத்தும், மாவட்ட அளவிலான வளர்ச்சித் திட்டப் பணிகளைத் துவக்கி வைத்தும், புதிய திட்டப் பணிகளுக்கு கால்கோள் நாட்டியும், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கியும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.***



# முதன்முதலில் இந்தியாவிலேயே - பத்திரப்பதிவுத்துறையில் இன்டர்நெட் வசதி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 13.9.2002 அன்று தலைமைச் செயலகத்தில், பதிவுத் துறையின் சார்பில் சென்னை மாநகரில் அமைந்துள்ள 20 சார்பதிவாளர் அலுவலகங்களை இன்டர்நெட் மூலம் இணைக்கின்ற ரெஜிநெட் (REGINET) என்ற இணைப்பகத்தையும் மற்றும் மாநிலத்தின் பிற பகுதிகளில் உள்ள 225 சார்பதிவாளர் அலுவலகங்களை கணினிமயமாக்கும் திட்டத்தையும் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அனைத்து துறைகளிலும் விஞ்ஞான வளர்ச்சிப் புதுமையைப் புகுத்தி, தமிழகத்தினை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்றும் வகையில், தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இதன் ஓர் அங்கமாக, பத்திரப்பதிவுத் துறையின் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் தமிழகத்திலுள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் அனைத்தையும் கணினிமயமாக்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி, 13.9.2002 தலைமைச் செயலகத்தில், தமிழக பதிவுத்துறையில், இந்தியாவிலேயே முதன்முறையாக `REGINET' என்ற இன்டர்நெட் வசதியுடன் கூடிய கணினி இணைப்பகத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மேலும், மாநிலத்தின் பிறபகுதிகளில் இயங்கும் 225 சார்பதிவாளர் அலுவலகங்களை கணினிமயமாக்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த 225 சார்பதிவாளர் அலுவலகங்களையும் சேர்த்து கணினி மயமாக்கும் திட்டத்தின்கீழ் தமிழகத்தில் உள்ள மொத்தம் 350 அலுவலகங்கள் கணினி வசதியை பெற்று விட்டன. இதில், இந்த ஆண்டு (2002)ல் மட்டும் கணினிமயமாக்கப்பட்ட சார்பதிவாளர்களின் எண்ணிக்கை 325 ஆகும். மீதமுள்ள சார்பதிவாளர் அலுவலகங்கள் படிப்படியாக கணினிமயமாக்கப்படும்.

சென்னை மாநகரில் அமைந்துள்ள 20 சார்பதிவாளர் அலுவலகங்களையும் இணைக்கின்ற அமைப்பாக உள்ள இந்த `REGINET' என்ற இணையதள இணைப்பகம் இந்தியாவிலேயே முதன்முதலாக தமிழகத்தின் தலைநகரான சென்னை மாநகரத்தில் செயல்படும் வண்ணம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்



13.9.2002 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய இணைப்பகம் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. இதன் மூலம் சென்னை மாநகரில் அமைந்துள்ள எந்த சொத்திற்கும் இந்த இணையதளத்தின் மூலம் வில்லங்க சான்று பெறமுடியும். இதற்காக சென்னை மாநகரில் உள்ள எந்த சார்பதிவாளர் அலுவலகத்திலும், சென்னை பதிவுத்துறை துணைத்தலைவர் அலுவலகத்தில் உள்ள சேவை மையத்திலும் இந்த வில்லங்க சான்றுகளை பெறலாம். பதிவு அலுவலகங்கள் கணினிமயமாக்கப்படுவதால் ஆவணங்களை விரைவாகப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்றுகள் திருமணச் சான்றுகள் மற்றும் சான்றிட்ட நகல்களை ஒருசில நிமிடங்களிலேயே வழங்கிட வாய்ப்பு உள்ளது.

மேலும், பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய விரும்பும் பொதுமக்கள் தங்களுடைய ஆவணங்களை தாங்களே தயாரித்து கொள்வதற்கு வசதியாக மாதிரி வரைவு ஆவணங்களும், சங்கங்கள், கூட்டுவணிக நிறுவனங்கள் மற்றும் சீட்டுக்கள் பதிவு தொடர்பான மாதிரிப் படிவங்களும் சென்னையில் உள்ள சொத்தின் மதிப்பு மற்றும் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வை ஆகியவையும் இந்த இணைய தளத்தில் இடம் பெற்றுள்ளன. பதிவுத் துறையின் இணையதளத்தில் தமிழ்நாடு முழுமைக்குமான வழிகாட்டி மதிப்புகளை அறியலாம். மேலும் கணினிமயமாக்கப்பட்ட பதிவு அலுவலகத்தில் பதிவு செய்ய உள்ள ஆவணங்களை வெள்ளைத் தாளில் எழுதி அதற்குரிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை கேட்பு வரைவோலை, செலுத்து சீட்டு அல்லது ரொக்கத் தொகை போன்ற பல வழிகளிலும் செலுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ரெஜிநெட் இன்டர்நெட் இணைப்பக வசதியை தொடங்கி வைத்து சென்னை மயிலாப்பூரைச் சேர்ந்த திருமதி. ஆர். பிரபா அவர்களுக்கு சென்னையில் உள்ள அவரது சொத்திற்கான வில்லங்கச் சான்றிதழை வழங்கினார்கள். இந்த வில்லங்கச் சான்றிதழ் பெறுவதற்கான கால அவகாசம் ஒரு நிமிடத்திற்கும் குறைவாக இருப்பதைக் கண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். எவ்வித தாமதமும் இன்றி ரெஜிநெட் மூலம் உடனடியாக வில்லங்கச் சான்றிதழ் கிடைக்கப் பெற்ற திருமதி. ஆர். பிரபா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்த பதிவுத் துறையின் ரெஜிநெட் இணைப்பகத்தின் வலை தள முகவரிகள் http://tnregistration.org, http://igregn.tn.nic.in, ஆகும். இதன் மின் அஞ்சல் முகவரி e-Mail:igregntn.nic.in ஆகும்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு. தளவாய் சுந்தரம், வணிகவரித்துறை செயலாளர், திரு. சக்திகாந்த தாஸ் மற்றும் பதிவுத்துறைத் தலைவர் திரு. பிரதீப் யாதவ் ஆகியோர் கலந்துகொண்டார்கள்.



# அண்ணாவால் பெருமை பெற்ற தமிழை அலுவலகங்களில் ஆட்சி மொழி ஆக்குவோம்!

**– சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து**

சேலம் மாவட்டத்தில் தமிழ் ஆட்சி மொழிக் கருத்தரங்கம் மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் தம்பித்துரை தலைமையில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் செப்டம்பர் 29ஆம் தேதியன்று நடந்தது. இக்கூட்டத்தைத் தொடங்கி வைத்து மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து சிறப்புரையாற்றினார். அவர் ஆற்றிய உரை பின்வருமாறு:

"நம் முதலமைச்சர் எண்ணம் ஈடேறும் வகையில் இக்கூட்டம் நடக்கிறது. 1956ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழி ஆணை வந்தது. ஏறத்தாழ 50 ஆண்டுகளுக்குப் பிறகும் இது முழுமைபெற முடியாத நிலையில் இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றிக் காட்ட வேண்டும் என்பதுதான் தமிழக முதல்வர் புரட்சித் தலைவியின் எண்ணம்.

முதலமைச்சரைப் பொறுத்தவரையில் அவர் தமிழால் பிழைப்பவர் அல்ல! தமிழைப் பிழைக்க வைப்பவர்! தமிழ் பிழைக்க வேண்டும் என்று நினைக்கக் கூடியவர். ஆகவே அந்த அக்கறை – ஆர்வத்தின் விளைவாக – இதுபோன்ற தமிழ் ஆட்சி மொழிக் கருத்தரங்கங்கள் நடத்த வேண்டும் என்று கருதி நடத்திக் கொண்டிருக்கிறோம்.

ஒரு மொழி உயர்ந்தால்தான் அம்மொழி பேசக்கூடிய இனம் உயர முடியும்! மொழி உயர – 'திரு' உயரும்! 'திரு' உயர நாடு உயரும்! என்று விபுலானந்த அடிகள் கூறியுள்ளார். வரப்பு உயர நீர் உயரும்! நீர் உயர நெல் உயரும்! நெல் உயர குடி உயரும்! குடி உயர கோன் உயரும்! அதுபோல தமிழ் உயர்ந்தால்தான் தமிழ் இனம் உயரும்!

உலகில் தமிழர்கள் எப்போது புகழ் பெற்றிருந்தார்கள் என்பதை அறிய தமிழர்களின் வரலாற்றை நாம் புரட்டிப் பார்த்தால் – தமிழர்களின் வீரம் உலகின் புருவத்தை உயர்த்த வைக்கும் அளவுக்கு உயர்ந்தது. இமயமலை என்பது தமிழர்களின் வீர விளையாட்டுக்கு கூழாங்கல்லாக எப்போது இருந்தது என்பதை எண்ணிப் பார்த்தால் இமயமலையில் கொடி நாட்டுவதை – இளம்பெண் தலையிலே இளைஞன் ஒருவன் பூ வைப்பது போன்றதாக ஆகும். இது, தமிழ் மொழி உயர்ந்திருந்த காலத்தில்தான் நடந்திருக்க வேண்டும்.

தமிழர்கள் உயர்ந்திருந்த காலத்தில்தான் தமிழர்களின் கப்பல்கள் உலகின் 7 கடல் களையும் உழுதது.

கிரேக்க நாட்டோடும் – ரோம் நாட்டோடும் தமிழர் வணிகம் செய்த காலத்தில் தான் இது நடந்தது.

தமிழ்மொழி வீழ்ந்த காலத்தில்தான் தமிழ் இனம் வீழ்ந்தது. தமிழ்மொழி, உலகின் மூத்த மொழி – முதல் மொழி! அது நாம் ஏற்றிருக்கும் 'தாய்மொழி' என்பது தமிழர்களாகிய நமக்குப் பெருமை. உலகில் எந்த மொழியியல் அறிஞர்களைக் கேட்டாலும், தமிழ் மூத்தமொழி என்று கூறுவார்கள்!

உலகிலே உயர்ந்த நீர் வீழ்ச்சியான நயாகரா நீர்வீழ்ச்சியில் 'தமிழ்மொழி' எழுதி வைக்கப்பட்டுள்ளது. அந்த அளவுக்கு தமிழின் புகழ் உயர்ந்துள்ளது.

இந்திய துணைக் கண்டத்திலுள்ள கல்வெட்டுகளில் 60 விழுக்காடு கல்வெட்டுகள் தமிழ்மொழிக் கல்வெட்டுகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டு உள்ளார்கள்.

தேவநேயப் பாவாணர் தமிழ்மொழிக்கு 16 வகை சிறப்புக்கள் உண்டு என்று ஆராய்ச்சி பூர்வமாக நிரூபித்து எழுதி வைத்துச் சென்றுள்ளார். அப்படிப்பட்ட தமிழை நாம் தாய் மொழியாகப் பெற்றுள்ளோம்!

ஒரு மாமரம், அதில் ஓர் வவ்வால் தலைகீழாகத் தொங்கிக் கொண்டு இருக்கிறது. அந்த வவ்வாலுக்குப் பக்கத்தில் ஒரு பழுத்த 'மாங்கனி' தொங்கிக் கொண்டிருக்கிறது. அந்த வவ்வாலுக்கு ஒரு கவலை. என்ன கவலை என்றால் ஒரு புளியம் பழத்தைச் சுவைக்க வேண்டும் என்ற ஆசைதான் அக்கவலை ஆகும். எப்படி வவ்வால் மாம்பழத்தை அருகில் வைத்துக் கொண்டு, புளியம் பழத்துக்குக் கவலைப்பட்டு கனவு கண்டு கொண்டு இருந்ததோ – அதைப்போல தமிழன் தாய்மொழி தமிழை வைத்துக் கொண்டு – வேற்றுமொழிகளுக்கு ஏங்கிக் கொண்டிருக்கிறான்.

இராஜாஜி அவர்கள், 'ஆங்கிலம் என்பது ஒரு மொழி! அது ஒரு கருத்தைக் கூறுவதற்கு வழி! ஆங்கில மொழியே அறிவு ஆகாது' – என்று கூறியுள்ளார். ஆங்கிலத்தில் பேசினால்தான் அறிவாளி என்று நினைத்தால், தமிழில் டாக்டர் பட்டம் வாங்கியவரைவிட ஆங்கிலத்தில் பேசும் ஆங்கிலக் கூலியை – விவசாயியை – டாக்டர் பட்டம் வாங்கியவராய் ஏற்க முடியுமா? ஆங்கிலம் தெரிந்த பிச்சைக்காரனை அறிஞராக ஏற்கமுடியுமா? எதற்கும் ஏற்றமொழி தமிழ்! கணினிக்கும் ஏற்ற மொழி தமிழ் மொழிதான்!

இந்த நாட்டைத் 'தமிழ்நாடு' என்றுதான் சொல்கிறோம். நம் பேசும் மொழியை 'தமிழ்மொழி' என்று கூறுகிறோம். அதாவது, தமிழ்மொழியை நாடிடு – தமிழை நாடிடு – என்று கட்டளை இடுவது போல், 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டியுள்ளோம். தமிழில் ஒரு கருத்தை மொழிந்திடு என்னும் வகையில் தமிழில் மொழிந்திடு என்பதே 'தமிழ்', 'மொழி' என்று வழங்கப்படுகிறது.

நாம் வாழும் நாட்டுக்குத் 'தமிழ்நாடு' என்றாலும் நாம் பேசும் மொழிக்கு 'தமிழ்–மொழி' என்று சொன்னாலும் தமிழை நாடுக! தமிழில் மொழிக! என்றே அர்த்தம் ஆகும்!

தமிழ் மொழியை தமிழ் இன மக்களுக்கு உணர்த்தியவர்கள் கால்டுவெல் – ஜி.யூ. போப் – வீரமாமுனிவர் – போன்ற ஐரோப்பிய கிறித்துவப் பாதிரியார்கள்தான்!

தமிழில் கால்டுவெல் 'திராவிட ஒப்பிலக்கணம்' எழுதினார். வடமொழியான சமஸ்கிருதத்தின் துணை இல்லாமல் இயங்கக் கூடியது தமிழ்மொழி என்று கால்டுவெல் என்ற வெளிநாட்டுக்காரன் ஆராய்ச்சி செய்து சொன்னான். திராவிட ஒப்பிலக்கணம் என்ற நூல் வந்தபொழுது சங்க இலக்கியங்கள் நூல் வடிவில் வெளிவராத காலகட்டமாகும். தொல்காப்பியம் கூட நூலாக வெளிவராத காலம். இவையெல்லாம் நூலாக வெளிவந்து, கால்டுவெல் என்பவர் கையில் கிடைத்திருந்தால் தமிழ்மொழி பற்றி எவ்வளவோ உயர்ந்த கருத்துக்களை வெளியிட்டிருப்பார்!

ஜி.யூ. போப் என்பவரும் – வீரமாமுனிவர் என்பவரும் தமிழ்மொழி போல் உயர்மொழி வேறில்லை என்றார்கள்.

கிறித்துவ மதத்தைப் பரப்புவதற்காக அவர்கள் தமிழைக் கற்றார்கள். தமிழைக் கற்று தமிழின் உயர்வை உணர்ந்து – வேறொரு இந்திய மொழி எதுவும் தமிழுக்கு இணையாக இல்லை என்று ஆராய்ச்சி செய்து கூறினார்கள். கிறித்துவத் தொண்டோடு – தமிழ்மொழிக்கும் தொண்டு செய்தனர்.

ஒரு காலத்திலே கருத்து தமிழாக இல்லாமல் – தமிழ்மொழி வடிவிலே மட்டும் இருக்கும்! எழுத்து வரி வடிவம் தமிழில் இருக்கும். கருத்து வேற்று மொழியில் இருக்கும். தமிழர் ஏமாந்திருந்த காலத்திலே – தமிழ் மொழிக்குள் பிறமொழி சொற்களை – குறிப்பாக வடமொழிச் சொற்களைப் புகுத்தித் தமிழை அடிமைப்படுத்தி வைத்தார்கள் – தமிழர்களையும் அடிமைப்படுத்தி வைத்தார்கள்.

வேட்டி என்பது நீண்ட நெசவிலிருந்து வெட்டி எடுக்கப்படுவதால் 'வேட்டி' ஆனது. இந்த வேட்டி என்ற சொல்லை சமஸ்கிருத ஆதரவாளர்கள் 'வேஷ்டி' என்று மாற்றினார்கள். ஆட்டுக் குட்டியை ஆட்டுக் குஷ்டி என்று எழுதி வைக்காமல் போய்விட்டார்கள்! தமிழ் இன மக்கள் ஏமாந்திருந்த காலக் கட்டத்தில்தான் 'திருமறைக் காடு' வேதாரண்யம் ஆனது! 'மயிலாடுதுறை' – மாயவரம் ஆக்கினர்! 'மாமல்லபுரம்' – மகாபலிபுரம் என்றனர். தமிழின மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றதால்தான் மாயவரத்தை மயிலாடுதுறை என்று ஆக்கினார்கள். தமிழ் உணர்வு மேலோங்கி இருந்த காலத்திலே தமிழ் இன மக்களும் மேலோங்கி இருந்தனர்.

தேவநேயப் பாவாணர் ஆராய்ச்சியில் கண்ட உண்மை 'உலகின் முதல் மொழி தமிழ்மொழி' – என்பதாகும்!

தமிழ்ச் சொற்கள் ஆங்கில மொழியில் நிறைய உள்ளன. கறை என்பது அழுக்கு. அதை 'க்ரைம்' என்று ஆங்கிலத்தில் மாற்றி இருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே சம்பளத்துக்கு 'உப்பு – தானியம்' முதலியவை பண்டமாற்றாக பணம் கண்டுபிடித்து பயன்படுத்தாத காலத்தில் வழங்கப்பட்டது. உப்பளம் என்பதில் அளம் என்பது உப்பைக் குறிக்கும். அது சம்பளம் என்று மாறிவிட்டது. உப்புக்கு ஆங்கிலத்தில் 'சால்ட்' என்பார்கள்.

ஆங்கிலத்தில் சம்பளத்துக்கு 'சால்ட்' என்பதிலிருந்து தோன்றிய 'சேலரி' எனும் சொல் உருவாகி இருக்கிறது. 'சேலரி' என்னும் சம்பளத்துக்குரிய சொல், தமிழ் மொழியிலிருந்துதான் ஆங்கில மொழிக்குச் சென்றுள்ளது.

கூலி எனும் சொல் சம்பளத்தை அதாவது சேலரியைக் குறிக்கும் சொல் ஆகும். கூலம் என்பது தானியம் என்பது ஆகும். சம்பளத்துக்குப் பணமாகத் தராமல் தானியம் தரப்பட்டது. தானியம் கூலம் என்பதாகும். எனவே சம்பளம் என்றது சேலரி ஆனதுபோல் கூலம் (தானியம்) என்பது கூலி ஆகிவிட்டது. இப்படி தமிழ்மொழி ஆங்கில மொழிக்கு நிறைய சொற்களை வழங்கியுள்ளது.

ஒரு கவிஞன் எழுதினான். 'அம்மா' என்று மாடு கத்துகிறது. ஆனால் அம்மாவை மம்மி என்று ஆங்கிலத்தில் கூறுகிறோம். மாட்டுக்கு இருக்கும் அறிவு, மனிதனுக்கு இல்லையே என்று கூறினான். அந்த அளவுக்கு தமிழ் மாறியுள்ளது. இந்நிலைக்கு என்ன காரணம்? இந்நிலைமையை நாம் மாற்றிக் காட்ட வேண்டும்.

முன்பு நாம் 'ஸ்ரீ' – 'ஸ்ரீமதி' என்று எழுதினோம். அதை 'திரு'– 'திருமதி' என்று மாற்றிக் காட்டினோம். அந்த மிகப் பெரிய மாற்றத்தை – புரட்சியைச் செய்தவர் நம் மூத்த தலைவர் அண்ணா ஆவார். அண்ணா இல்லாவிட்டால் தமிழ் மொழிக்கு இருந்த அடிமைத்தனத்தை நீக்கி இருக்க முடியாது. எத்தனையோ புலவர்கள் – அறிஞர்கள் எதைஎதையோ சொன்னார்கள். எவனும் அசையவில்லை. பேரறிஞர் அண்ணா சொன்ன பிறகுதான், தமிழன், புறநானூறு என்னும் நூலைப் புரட்டினான்! அகநானூறு நூலை அறிந்தான்! தொல்காப்பியம் எனும் நூலைத் தொட்டுப் பார்த்தான்! இளங்கோ அடிகளை ஏற்றுக் கொண்டான். திருக்குறளைத் தெரிந்து கொண்டான். தமிழால் அண்ணா உயர்வு பெறவில்லை. அண்ணா அவர்களால் தமிழ் உயர்வு பெற்றது. அண்ணாதான் நாம் பிறந்த மண்ணுக்கு 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டினார். அதற்கு முன்பு சென்னை இராஜதானி என்றும் சென்னை மாகாணம் என்றும் சென்னை இராஜ்யம் என்றுதான் இருந்தது. பிள்ளைக்கு தாய் பெயர் சூட்டுவாள். ஆனால் அண்ணா தாய் நாட்டுக்கே பெயர் சூட்டினார்.


அண்ணா அவர்கள்தான் கனம் காமராஜ் – கனம் கக்கன் என்பதை மாண்புமிகு காமராஜ் என்றும் மாண்புமிகு கக்கன் என்றும் மாற்றிக் காட்டினார். மராமத்து மந்திரி என்பதை பொதுப்பணி அமைச்சர் என்று ஆக்கினார்.

தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழக முதலமைச்சரும், கல்வி அமைச்சரும் – தமிழ் மொழி ஆட்சி மொழி ஆவதை விரைவுபடுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். தமிழ் இன மக்கள் அரசின் இந்த முயற்சிக்கு முழு ஒத்துழைப்புத் தரவேண்டும். தமிழக அரசு அலுவலர்களும் ஒத்துழைப்பைத் தரவேண்டும்.

தமிழ் ஆட்சி மொழிக் கருத்தரங்கிலே அலுவலர் களுடனும் அறிஞர்களுடனும் பொதுமக்களுடனும் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவதற்கு வாய்ப்புப் பெற்றதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். நன்றி கூறுகின்றேன்.''

• • •





# காந்தியடிகள் – காலத்தின் சின்னம் எழுச்சியின் அடையாளம்

□ பேரறிஞர் அண்ணா

*உலக உத்தமர் காந்தியடிகளின் பிறந்த நாள், நாடெங்கும் நன்னாளாகக் கொண்டாடப் படுகிறது.*

*அவர் ஓர் தூயவர். நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான் - என்பாரும்,*

*அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும்,*

*அவர் ஓர் சமதர்மவாதி, ஏழைப் பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழிவகுத்தவர் என்பாரும்,*

*அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவோர் பல்வேறு வகையினர் உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தியடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியர் அல்லர். அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்.*

*அவர் எல்லாத்துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர், எல்லாத் துறையினரும், எமக்காகவே காந்தியடிகள் வாழ்ந்தார், எமக்காகவே பணிபுரிந்தார் என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும், தொண்டும் அமைந்திருந்தன.*

*இன்று, அவருடைய பிறந்தநாள், இது எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல, எல்லாத் துறைகளுக்கும் ஒரு*

(4)

திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத்துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்கவேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடையாது. ஒரு நூற்றாண்டுக்கு ஒருமுறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந்நாட்டுக்குக் காந்தியடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான் காந்தியடிகளின் பிறந்தநாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்தநாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த பொற்காலம், என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

அந்த அரை ஆடை மனிதர் கோடானுகோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத்தந்ததை விட "அற்புதம்'' வேறு என்ன இருக்கமுடியும்?

இன்று நடந்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிற நாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். அதற்கே இந்நாள்! அவர் புகழ் பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல - அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவை யாக்கிட! மாலையின் மாண்பு மணத்தில்! விளக்கின் பயன் ஒளியில் ! விழாக்களின் பலன் நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது!

***(2.10.1967–இல் வானொலியில் ஆற்றிய உரையிலிருந்து)***

❖ ❖ ❖

## மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மணிமண்டபம் அமைக்க அரசு நிலம் ஒதுக்கீடு

**- முதலமைச்சர் ஆணை**

**மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் நினைவினைப் போற்றிடும் வகையில் மணிமண்டபம் அமைத்திட உரிய இடத்தினை வழங்குமாறு தென்னிந்திய நடிகர் சங்கம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரியிருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இக்கோரிக்கையினை பரிசீலித்து சென்னை மாநகர், மயிலாப்பூர் – திருவல்லிக்கேணி வட்டம், அடையாறு பகுதி, சத்யா ஸ்டுடியோ எதிரில், ஆந்திர மகிள சபா மருத்துவமனை அருகில், அரசுக்குச் சொந்தமான 65 செண்ட் (ஏறத்தாழ 11.81 கிரவுண்ட்) இடத்தினை மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு மணிமண்டபம் அமைக்க தென்னிந்திய நடிகர் சங்கத்திற்கு இலவசமாக வழங்கவும், முன் நுழைவு அனுமதி வழங்கியும் உத்தரவிட்டுள்ளார்.**





## சர்வதேச விருது பெற்ற காவல்துறை அதிகாரிக்கு முதல்வர் பாராட்டு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, **25.9.2002** அன்று தலைமைச் செயலகத்தில், அண்மையில் சர்வதேச அமைப்பான காமன்வெல்த் பொது நிர்வாகம் மற்றும் மேலாண்மை நிறுவனம் (The Commonwealth Association for Public Administration and Management - CAPAM) வழங்குகின்ற சர்வதேச பரிசுக்கு "திருச்சி சமுதாய காவல் பணி – ஒரு புதுமை அனுபவம்'' என்னும் தலைப்பிலான தனது திட்டத்தை சமர்ப்பித்து தங்கப்பதக்கம் பரிசு பெற்ற தமிழக காவல் துறையின் சென்னை மாநகர (தெற்கு) இணை ஆணையர் திரு. ஜே.கே. திரிபாதி அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

கனடா நாட்டில் டொரண்டோ நகரை தலைமையகமாக கொண்டுள்ள காமன்வெல்த் நாடுகள் பொது நிர்வாகம் மற்றும் நிர்வகித்தல் சபை, பொது நிர்வாகம் மற்றும் நிர்வகித்தலில் புதுமையான அணுகுமுறையைப் புகுத்தி வெற்றி கொள்வதைப் பாராட்டி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை சர்வதேச அளவிலான பரிசினை வழங்குகிறது.

இந்தப் பரிசினை பெறுவதற்கு சென்னை மாநகர தென் மண்டல காவல் இணை ஆணையர் திரு. ஜே.கே. திரிபாதி அவர்கள் "திருச்சி சமுதாய காவல் பணி – ஒரு புதுமையான அனுபவம்'' எனும் தலைப்பில் தன்னுடைய படைப்பை சமர்ப்பித்தார். இந்த திட்டத்தில் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்த **150** படைப்புகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் திரு. ஜே.கே. திரிபாதி அவர்கள் சமர்ப்பித்த படைப்பு முதல் பரிசான தங்கப் பதக்கத்தை வென்றது. இந்த திட்டத்தில் பங்கேற்று முதல் பரிசான தங்கப்பதக்கத்தை வென்ற முதல் இந்திய காவல்துறை அதிகாரி என்ற பெருமையை பெற்றுள்ள திரு. ஜே.கே. திரிபாதி அவர்கள் கடந்த **11.9.2002** அன்று கிளாஸ்கொவ் ஸ்காட்லாந்து நகரில் நடைபெற்ற விழாவில் இந்த பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

இதனையொட்டி, முதலமைச்சர் அவர்களை, திரு. ஜே.கே. திரிபாதி அவர்கள் **25.9.2002** அன்று சந்தித்து வாழ்த்துப் பெற்றார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சர்வதேச அளவிலான உயர் பரிசினை பெற்ற முதல் இந்திய காவல்துறை அதிகாரி என்ற வகையில் தமிழகத்திற்கு பெருமை தேடி தந்தமைக்காக திரு. ஜே.கே. திரிபாதி அவர்களைப் பாராட்டி, வாழ்த்துக் கடிதம் வழங்கி வாழ்த்தினார். •

# புதுமைப்பித்தனின்
## படைப்புகள் நாட்டுடைமை

தமிழில் 100 சிறுகதைகளுக்கு மேல் எழுதி புகழ் பெற்ற இலக்கிய மேதையான புதுமைப்பித்தன் பழமையும், புதுமையும் இணைந்த வண்ணம் நம் நாட்டு மரபுகளையும், மேல்நாட்டு மரபுகளையும் இணைத்து கதைகள் தந்தவர். உலகத்தின் சிறந்த சிறுகதைகளை தமிழ் மக்கள் அறியும் வண்ணம் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர். மேலும் இவர், நாடகங்கள், கட்டுரைகள், மதிப்புரைகள், குறுநாவல்கள் என்று பல்வேறு இலக்கியப் படைப்புகளை உருவாக்கியதோடு மொழி பெயர்ப்புத் துறையிலும் சிறந்து விளங்கினார்.

இவரது இலக்கியப் படைப்புகளை நாட்டுடைமையாக்க வேண்டி, தமிழறிஞர்களும், இலக்கிய ஆர்வலர்களும் அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர். இதனை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் எழுத்தாளர் புதுமைப்பித்தனின் இலக்கியப் படைப்புகள் அனைத்தும் பொதுமக்களை எளிதில் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் அவற்றை நாட்டுடைமையாக்கி, எழுத்தாளர் புதுமைப்பித்தனின் வாரிசுதாரருக்கு ரூ.5 இலட்சம் பரிவுத் தொகையை வழங்க உத்தரவிட்டிருந்தார்.



இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.9.2002 அன்று எழுத்தாளர் புதுமைப்பித்தனின் வாரிசுதாரர் திருமதி. தினகரி சொக்கலிங்கம் என்பவருக்கு இந்தப் பரிவுத் தொகை ரூ.5 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.


பரிவுத் தொகையை பெற்று கொண்ட எழுத்தாளர் புதுமைப்பித்தனின் வாரிசுதாரர் தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டார்.





# திருமதி. கு. ப. சேது அம்மாள்
## படைப்புகள் நாட்டுடைமை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 25.9.2002 அன்று தலைமைச் செயலகத்தில், இலக்கிய எழுத்தாளர் திருமதி. கு.ப. சேது அம்மாள் அவர்களின் படைப்புகளை நாட்டு டைமையாக்கி திருமதி. கு.ப.சேது அம்மாள் அவர்களுக்கு ரூ.3 இலட்சமும், இந்த ஆண்டு அமரர் கு.ப.ரா. அவர்களின் நூற்றாண்டு என்பதை கருத்தில் கொண்டு அவரது மகன் திரு. பட்டாபிராமன் அவர்களுக்கு ரூ.2 இலட்சமும் ஆக மொத்தம் ரூ.5 இலட்சத்துக்கான காசோலைகளை வழங்கினார்.



சென்னையில் தனது மகனுடன் வசித்து வரும் 94 வயதான தமிழ் இலக்கிய எழுத்தாளர் திருமதி. கு.ப.சேது அம்மாள் அவர்கள் தற்போது தமிழக அரசின் மூலம் அகவை முதிர்ந்த தமிழ் அறிஞர் நிதி உதவித் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் ரூ.500 பெற்று வருகின்றபோதிலும், தான் வறுமையில் வாடுவதால், தனது படைப்புகளான 8 நாவல்கள், 119 சிறுகதைகள், 4 சிறுகதை தொகுதிகள், 2 சமய நூல்கள், வானொலியில் 10 தலைப்புகளில் ஆற்றிய உரைத் தொகுப்புகள் ஆகிய இலக்கியப் படைப்புகளை நாட்டுடைமையாக்கி நிதி உதவி வழங்குமாறு கோரியிருந்தார்.

இந்த கோரிக்கையை பரிவுடன் பரிசீலித்த முதலமைச்சர் அவர்கள், அதனை ஏற்று, திருமதி கு.ப. சேது அம்மாள் அவர்களின் படைப்புகளை நாட்டுடைமை யாக்கியும், பரிவுத் தொகை ரூ.3 இலட்சத்தை வழங்கிடவும், இந்த ஆண்டு அமரர் கு.ப. ராஜகோபாலன் அவர்களின் நூற்றாண்டு என்பதால் அதனைக் கருத்தில் கொண்டு அவரது மகன் திரு. பட்டாபிராமன் அவர்களுக்கு ரூ.2 இலட்சம் வழங்கிடவும் ஆணையிட்டார். இந்த ஆணையின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25.9.2002 அன்று எழுத்தாளர் திருமதி. கு.ப.சேது அம்மாள் அவர்களிடம் ரூ.3 இலட்சத்திற்கான காசோலையையும், எழுத்தாளர் அமரர் திரு. கு.ப.ரா. அவர்களின் மகன் திரு. பட்டாபிராமன் அவர்களிடம் ரூ.2 இலட்சத்திற்கான காசோலையையும் வழங்கினார்.

தனது கோரிக்கையை ஏற்று, நூல்களை நாட்டுடைமையாக்கி பரிவுத் தொகை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு, திருமதி. கு.ப.சேது அம்மாள் அவர்களும், நிதியுதவியைப் பெற்று கொண்ட திரு. பட்டாபிராமன் அவர்களும் தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர். □

# சமாதான் திட்டம்

சட்டமன்றப் பேரவையில், 19.4.2002 அன்று, மானியக் கோரிக்கை எண் 11 – முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு குறித்த விவாதத்தின்போது அரசு செய்த அறிவிப்பிற்கு ஏற்ப, 26.9.2002 நாளிட்ட வணிகவரித்துறை அரசாணை (நிலை) எண்.117–ல் பதிவுத்துறையில் ஒரு புதிய சமாதான் திட்டத்தை 1.10.2002 முதல் 60 நாட்களுக்கு அறிமுகப்படுத்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

பொதுவாக விற்பனை, பரிவர்த்தனை, கொடை போன்ற ஆவணங்களின் மீது சொத்தின் சந்தை மதிப்பிற்கு ஏற்ப முத்திரைத் தீர்வை வசூலிக்கப்படுகிறது. ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் மதிப்பு சந்தை மதிப்பை விட குறைவாக இருப்பதாக பதிவு அலுவலர் கருதும்போது அவர் அத்தகைய ஆவணங்களை சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதற்காகவும், குறைவு முத்திரைத் தீர்வை வசூல் செய்வதற்காகவும் முத்திரைத் தனித்துணை ஆட்சியருக்கு அனுப்புவார். முத்திரைத் தனித்துணை ஆட்சியருக்கு அனுப்பப்படுகின்ற ஆவணங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து அதிகரிப்பதாக அரசுக்கு தெரிவிக்கப்பட்டது. எனினும், தனித்துணை ஆட்சியரால் பெறப்படும் அத்தகைய ஆவணங்களின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் அளவிற்கு அவரால் ஆவணங்களைத் தீர்வு செய்ய முடிவதில்லை. அதனால் அரசுக்கு வரவேண்டிய வருவாய் வரவில் தடை ஏற்பட்டு கோடிக்கணக்கான ரூபாய் முடங்கிப்போயுள்ளது. பொதுமக்களும் மூல ஆவணங்களைப் பெற முடியாமல் சிரமத்திற்கு ஆளாகிறார்கள்.

மேற்கண்ட இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக புதிய சமாதான் திட்டத்தை செயல்படுத்தலாமென அரசு முடிவு செய்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய அம்சங்கள் கீழ்வருமாறு:–

1. பதிவாளர் உத்தேசிக்கும் சொத்து மதிப்பின் (நிலம், கட்டடம் மற்றும் முத்திரைத் தீர்வை விதிக்கத்தக்க சொத்துக்கள் உட்பட) அடிப்படையில் செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வைக்கும், ஏற்கெனவே செலுத்திய முத்திரைத் தீர்வைக்கும் இடையேயான வித்தியாச முத்திரைத் தீர்வையில் 40 விழுக்காடு தள்ளுபடி செய்யப்படுகிறது.

2. சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக முத்திரைத் தனித்துணை ஆட்சியரிடம் 18.4.2002 அன்று நிலுவையில் உள்ள ஆவணங்களும், சந்தை மதிப்பு நிர்ணயம் செய்வதற்காக முத்திரைத் தனித்துணை ஆட்சியருக்கு அனுப்பும் பொருட்டு மேற்கண்ட நாளில் பதிவு அலுவலரிடம் நிலுவையில் உள்ள ஆவணங்களும் இத்திட்டத்தின் கீழ் சலுகை பெற ஏற்புடைய ஆவணங்களாகும்.

3. மேற்கண்ட சலுகை 1.10.2002 முதல் 29.11.2002 வரை 60 நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

சமாதான் திட்டம் நடைமுறையில் இருக்கும் காலத்தில் பொதுமக்கள் இத்திட்டத்தின் மூலமாகப் பயன்பெறலாம்.

• • •




## பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியுள்ள பருத்தி இரகத் துணிகளை விற்பனை செய்ய 30 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலும் பெருமளவு கைத்தறி பருத்தித் துணி தேக்கமடைந்துள்ளதால் ஏற்பட்டுள்ள சிரமங்களைக் களைந்து சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்க ஏதுவாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான 15.9.2002 முதல் 31.1.2003 முடிய ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் 20 விழுக்காடு அரசு தள்ளுபடி மானியத்துடன் கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி மானியம் வழங்கி, மொத்தம் 30 விழுக்காடு அரசு தள்ளுபடி மானியம் வழங்கி விற்பனை மேற்கொள்ள ஆணை பிறப்பித்துள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் நெசவாளர்களின் நலனில் மிகுந்த அக்கறைக் கொண்டு பல்வேறு சீரிய திட்டங்களை நெசவாளர்களின் துயர் துடைக்க செயல்படுத்தி வருகிறார். தாயுள்ளம் கொண்ட தமிழக முதலமைச்சர் அவர்கள் நெசவாளர்கள் தங்கு தடையின்றி தொழில் பெறவும், போதிய வருவாய் ஈட்டவும், 1998ஆம் ஆண்டிலிருந்து கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படாமலிருந்த வட்டி மானியத் தொகை ரூ.27.50 கோடி வழங்க ஆணை வழங்கி அதனை முழுமையாக சங்கங்களுக்கு வழங்க ஆவன செய்துள்ளார்.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் 350 பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில்





உற்பத்தி செய்யப்பட்டு தேங்கியிருந்த 18 இலட்சம் சேலைகளையும் 9 இலட்சம் வேட்டிகளையும் கொள்முதல் செய்யவும், தொடர்ந்து நெசவாளர்களுக்கு தொழில் வழங்கவும் முதலமைச்சர் அவர்கள் ரூ.25 கோடி வழங்கி நெசவாளர்களின் குறைகளை போக்கியுள்ளார்.

இலவச வேட்டி சேலை திட்டத்தில் இதுவரையில் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சுமார் 25,000 கைத்தறி நெசவாளர்களுக்கு மாற்று வேலை வழங்கும் திட்டமாக 'மலிவு விலை சேலை திட்டம்' தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்கள் எந்த பாதிப்புமின்றி தொடர்ந்து வேலை வாய்ப்பு பெற்று போதிய வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இலவச வேட்டி சேலை உற்பத்தியில் ஈடுபட்டு வந்த சுமார் 25,000 கைத்தறி நெசவாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு குடும்பம் ஒன்றிற்கு 20 கிலோ அரிசி வீதம் இலவசமாக வழங்க தமிழக முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, 29.7.2002 அன்று முதற்கட்டமாகவும், ஆகஸ்ட் மாதம் 21ந் தேதி அன்று இரண்டாம் கட்டமாகவும் வழங்கப்பட்டது. மூன்றாம் கட்டமாக செப்டம்பர் 15ந் தேதி வழங்கப்பட்டது.

நெசவாளர்களின் மேம்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் ரூ.2.50 கோடி வழங்க ஆணையிட்டு இத்தொகை முழுமையாக தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியுள்ள ஓராண்டு மற்றும் இரண்டாண்டிற்கு மேற்பட்ட பட்டு மற்றும் பருத்தி துணிகளை விற்பனை செய்ய சிறப்பு கழிவு வழங்க முதலமைச்சர் அவர்களால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஓராண்டு மற்றும் இரண்டாண்டிற்கு மேற்பட்ட பட்டு ரகங்களுக்கு முறையே 45 விழுக்காடு மற்றும் 55 விழுக்காடு சிறப்பு கழிவும், ஓராண்டு மற்றும் இரண்டாண்டிற்கு மேற்பட்ட பருத்தி இரகங்களுக்கு முறையே 30 விழுக்காடு மற்றும் 45 விழுக்காடு சிறப்புக் கழிவு வழங்கி விற்பனை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, கைத்தறி நெசவாளர்களின் நலனை மேம்படுத்தவும், அரசு நடைமுறைப்படுத்த எண்ணியுள்ள திட்டங்களை ஒருங்கிணைக்கவும், அவற்றைக் கண்காணிக்கவும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் "அமைச்சரவை துணைக் குழு" அமைக்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் பல்வேறு சீரிய நடவடிக்கைகளினால் கைத்தறி நெசவாளர்கள் தொடர்ந்து வேலைவாய்ப்பு பெற்று வருவதுடன், கணிசமான வருவாய் ஈட்டி வருகிறார்கள். நெசவாளர்களின் நலனைப் பேணிக் காக்க பல்வேறு நலத்திட்டங்கள் முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



# ஆசிரியர் தினம்

## முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி



இந்தியத் திருநாட்டின் ஒருமித்த பாராட்டுக்கும், நம் அனைவரின் போற்றுதலுக்கும் உரியவரான டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் அவர்கள் ஆசிரியராக தமது பணியை தொடங்கி, இந்திய குடியரசு தலைவர் என்ற நமது நாட்டின் மிக உயர்ந்த பதவி வரை தாம் ஏற்ற பொறுப்புக்களை திறம்பட வகித்து, இந்திய ஆசிரியர் சமுதாயத்திற்கு பெரும் சிறப்பினை சேர்த்தவர். உலக புகழ் பெற்ற தத்துவ மேதையாகவும் விளங்கிய டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களை ஆண்டுதோறும் நினைவு கூர்ந்து அவரை சிறப்பிக்கின்ற வகையில்தான் அவரது பிறந்த நாளான செப்டம்பர் 5ஆம் நாள் ஆண்டுதோறும் 'ஆசிரியர் தினம்' என உற்சாகத்தோடு கொண்டாடப் படுகின்றது. இந்நன்னாளில் தமிழகத்தில் உள்ள அனைத்து ஆசிரியர் சமுதாய பெருமக்களுக்கும் எனது அன்பு கலந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு நாடு சீரிய முன்னேற்றம் அடைய வேண்டும் என்றால், அந்த நாடு தரமான கல்வியை பெற வேண்டும் என்பதில் இரு வேறு கருத்துகளுக்கு இடம் இல்லை. இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்வியை இளம் தலைமுறையினருக்கு வழங்குகின்ற ஆசிரியர் பெருமக்கள், இந்தச் சமுதாயத்திற்கு மாபெரும் தொண்டினை ஆற்றி வருகின்றார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

*"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்ற யவை"*

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற்கேற்ப, கல்விப் பணி ஆற்றி வருகின்ற ஆசிரியர்களுக்கு அவர்தம் பணி மன நிறைவை அளிக்க வேண்டும் என்பதற்காக எனது தலைமையிலான தமிழக அரசு ஆசிரியர்களுக்குப் பல்வேறு சிறப்புப் பயிற்சிகளைக் கொடுத்து ஊக்குவிப்பதோடு ஆசிரியர் பணியிட மாறுதலில் "வெளிப்படையான கலந்தாய்வு முறை" (Counselling System) என்ற புதிய முறையை இந்தியாவிலேயே முதன்முதலாக அறிமுகப்படுத்தி, ஆசிரியர் பெருமக்கள் அனைவரின் ஒருமித்த பாராட்டுக்களை இந்த அரசு பெற்று வருகிறது. உலகத் தரம் வாய்ந்த கல்வியை வளரும் மாணவ சமுதாயத்திற்கு வழங்க உறுதி பூண்டு இந்த அரசு தொய்வின்றி செயல்பட்டு வருகின்றது. "அனைவருக்கும் கல்வி" என்ற குறிக்கோளின் அடிப்படையில் 14 வயது வரை உள்ள சிறார்கள் அனைவரும் எவ்வித விடுபடுதலும் இன்றி கல்வி கற்கின்ற வகையில் சீரிய நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ற இந்த அரசு, ஆசிரியர் நலனிலும் முழு அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றது. தமிழ்நாட்டை கல்வித் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் நாட்டிலேயே முதன்மை மாநிலமாக்கி, குறிப்பாக கல்வியற்றவர் எவரும் தமிழ்நாட்டில் இல்லை என்ற உன்னத நிலையை பத்தாண்டு காலத்தில் உருவாக்க எனது தலைமையிலான அரசு உறுதி பூண்டிருக்கிறது என்பதை இந்நாளில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

"டாக்டர் இராதாகிருஷ்ணன் விருது" பெறுகின்ற அனைத்து ஆசிரியர் சமுதாய சகோதர, சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை இந்நன்னாளில் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். உலகே போற்றும் நல்லாசிரியராக திகழ்ந்த டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் அவர்களின் கனவை நனவாக்குகின்ற வகையில், அவர் காட்டிய உயரிய வழியில் உற்சாகத்தோடு கல்விப் பணியை தொடர்ந்து ஆற்ற வேண்டும் என்ற உறுதியை இந்நன்னாளில் தமிழக ஆசிரியர் சமுதாய பெருமக்கள் அனைவரும் ஏற்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து நிலைகளில் பணி ஆற்றுகின்ற ஆசிரியர் ஆசிரியைகளுக்கு எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

# ரூ.7,500 கோடியில்
# 1450 ஏக்கரில் மஹிந்திரா தொழில் நகரம்

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் 20–9–2002 அன்று சென்னையை அடுத்துள்ள மறைமலை நகர் அருகில் அமைக்கப்பட்டுள்ள மஹிந்திரா தொழில் நகரத்தை துவக்கிவைத்து ஆற்றிய உரை.

இந்த தொழிற் துறையின் தலைவர்கள் முன்னிலையில் சர்வதேச தரத்தில் மஹிந்திரா தொழில் நகரத்தை செங்கல்பட்டு மாவட்டத்தில் துவக்கி வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

மஹிந்திரா தொழிற்பூங்காவின் சார்பில் துவங்கப்பட்டுள்ள இந்த திட்டம் 1996ல் எனது அரசால் முடிவு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசின் டிட்கோ நிறுவனமுடன் மஹிந்திரா ரியாலிட்டி அண்டு இன்ப்ராஸ்ட்ரக்சர் டெவலப்பர்ஸ் லிமிடெட் நிறுவனமும் சேர்ந்து 1996 பிப்ரவரி 2ந் தேதி எனது முன்னிலையில் ஒப்பந்தம் செய்து கொண்டன. சென்னை மாநகர் அருகில் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் ஒரு தொழிற் பூங்காவை தனியார் துறை துணையுடன் துவக்க வேண்டும் என்று எனது அரசு முயற்சி செய்ததை தொடர்ந்து அப்போது ஏற்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்த தொழில் நகரம் இப்போது துவக்கி வைக்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழிற்துறையில் எப்போதும் முன்னிலை வகித்து வந்தது உங்களுக்குத் தெரிந்த விஷயம்தான். இதற்கான தொழிற்துறை மற்றும் ஆராய்ச்சி தளத்தையும் தமிழகம் உருவாக்கி வந்துள்ளது. தகவல் தொழில்நுட்பம், பேப்பர், பெட்ரோலிய பொருட்கள், துணி, தோல், வாகன உதிரிப் பாகங்கள் உட்பட பொருட்கள் உற்பத்தியிலும், அதனை சார்ந்த கல்வி மைய அளவிலான ஆராய்ச்சி மையங்கள், நிதி, மருத்துவம், சட்டம், தகவல் தொடர்பு உட்பட உள்




கட்ட அமைப்புகளிலும் தமிழகம் முன்னிலையில் உள்ளது.

நாடு தழுவிய அளவில் 1991ஆம் ஆண்டு தாராளமயமாக்கல் கொள்கை அமல்படுத்தப்பட்ட போது



தமிழகம் அப்போதே அந்த திட்டத்தை அமல்படுத்த துவங்கி விட்டது. நாடு தழுவிய அளவில் ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி தமிழ்நாட்டிலும் ஏற்பட்டது. அப்போதே எனது அரசு புதிய தொழிற் கொள்கையை அறிவித்தது. அதன் மூலம் மிகப்பெரிய அளவில் நேரடி உள்நாட்டு முதலீட்டையும் வெளிநாட்டு முதலீட்டையும் அப்போதே தமிழகம் ஈர்த்தது. இது 1995-96 வரை தமிழகம் தொழிற்துறையில் முன்னிலையில் இருக்க உதவி செய்தது. தற்போது தமிழகத்தின் தொழில் வளர்ச்சியின் சின்னங்களாக இருக்கும் 'சென்னை போர்டு' நிறுவனமும் 'ஹூண்டாய்' நிறுவனமும் உண்மையில் அப்போது எனது ஆட்சியின் தொழிற்கொள்கையினால் ஈர்க்கப்பட்டு வந்ததுதான்.

இன்று தமிழ்நாடு மீண்டும் வளர்ச்சிக்கான மாற்றத்தை எதிர்கொள்ள தயாராகி விட்டது. தற்போது உலக மயமாக்கல் காரணமாக எழுந்துள்ள புதிய சவால்களை ஆதார தொழிற்சாலை உட்பட தொழிற்துறையின் அனைத்து பகுதியும் எதிர்கொண்டு வருகிறது. வர்த்தக ரீதியில் உற்பத்தி பொருட்களும் சேவைத்துறையும் நாடுகளின் எல்லைகளை கடக்கும் பிரச்சினைகள் எளிமையாக்கப்பட்டதால் உள்நாட்டு தொழில்துறைக்கு மிகப்பெரிய சவால் எழுந்துள்ளது. மேலும் இதன் மூலம் சாதாரண நுகர்வோரின் சிறந்த பொருளுக்கான விழிப்புணர்வும் அதிகரித்து விட்டது. எனினும் இந்த சவால்களை நல்ல வாய்ப்பாக மாற்றிக் கொள்வதன் மூலம்தான் நிலைமையை எதிர் கொள்ள முடியும் என்பது என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கையாகும்.

அப்படி சவால்களை சிறந்த வாய்ப்புகளாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் தமிழகத்தை தீவிரமாக தொழில் மையமாக மாற்ற வேண்டும். இந்த திசையில் மிகப் பெரிய முன் முயற்சியாக மஹிந்திரா நிறுவனம் எடுத்துள்ள இந்த தொழில் நகரத்தை துவக்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் முதலீட்டாளரின் முதல் தளமாக தமிழகத்தை மாற்ற வேண்டும் என்ற தமிழக அரசின் உறுதியை மீண்டும் நினைவு படுத்துகிறேன். இப்பொழுது இந்தியாவின் முதன்மை தொழில் நகரமாக மட்டுமல்லாமல் தென்கிழக்கு ஆசியாவின் டெட்ராய்டு நகரமாக சென்னை விளங்கி வருகிறது. தென் சென்னை தகவல் தொழில்நுட்பத்தின் வரவேற்பறையாக வளர்ந்துள்ள நிலையில் நாட்டின் சிலிகான்





பள்ளத்தாக்காகவும், மென் பொருளாகவும் முதல் மையமாகவும் சென்னை திகழ்கிறது. இந்த நிலையில் சென்னையை தகவல் தொழில் நுட்பத்தில் , மேலும் முன்னேற்ற, அரசு உறுதி பூண்டுள்ளது. சென்னை நகரை உலகத்தோடு இணைக்கும் இரண்டு "121 ஆழ்கடல் கேபிள்கள்" அமைக்கும் திட்டம் விரைவில் துவங்க உள்ளது. மேலும் இந்த கேபிள்களுடன் வினாடிக்கு 13 டெட்ரா பைட் ஒளி கடத்தும் சக்தி கொண்ட ஒளி கேபிள்களை சென்னை நகரம் முழுவதும் அமைக்கும் திட்டமும் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னை நகரம் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களுக்கான தரம் வாய்ந்த சிறந்த நகரமாக திகழும்.

மாநிலத்தில் கடுமையான நிதி பற்றாக்குறை உள்ள போதிலும் எனது அரசு மின்சாரம், மேம்படுத்தப்பட்ட துறைமுக வளர்ச்சி விரைவான போக்குவரத்து மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்ற அடிப்படை கட்டமைப்பு தேவைகளை நிறைவு செய்துள்ளது.

தற்போதுள்ள போட்டியை எதிர்கொண்டு சவால்களை சமாளிக்க இந்த வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தனியார் துறைகளின் பங்கேற்புடன் உயர்தரமான அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக எனது அரசு உதவுவதுடன் அதற்கான முயற்சிகளையும் எடுத்துள்ளது.

மஹிந்திரா தொழில் நகரம், டிட்கோ மற்றும் ஐ.எல்.எப்.எஸ். நிறுவனங்கள் பங்களிப்போடு மிகப் பெரிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது எனக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தியுள்ளது. இந்த பூங்காவின் முதல் பகுதி மொத்தம் 1,434 ஏக்கர் நிலத்தில் 815 ஏக்கர் நிலத்தில் அமைக்கப்படுவதாக அறிகிறேன்.

தமிழ்நாடு எப்போதும் மறக்க முடியாத இடம் என்ற பெயரை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது. கிரேக்கர்களும், ரோமானியர்களும் தமிழ்நாட்டில் இருந்து நறுமண பொருட்களை பரிவர்த்தனை செய்துள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள கடல் வாயில் தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கு வணிகம் செய்ய வரவேற்பு அளித்து வருகிறது. வரலாற்றின்படி தமிழ்நாடு எப்போதுமே வெளிநாட்டவரின் பங்கேற்பு மற்றும் சமூக அடிப்படையிலான உறவை ஏற்றுக் கொண்டுள்ளது.

உலக மயமாக்கல் தமிழ்நாட்டிற்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். இது தமிழகம் முழுவதும் நல்ல போட்டியையும், வளர்ச்சியையும் கொண்டுள்ளது.

மஹிந்திரா தொழில்நுட்ப நகர முதலீட்டாளர்களுக்கு இந்த நூற்றாண்டு நல்ல உத்வேகத்தை அளித்துள்ளது.

இந்த நிகழ்ச்சியில் மஹிந்திரா தொழில்நுட்ப நகரம் வெற்றிகரமாக அமைய வாழ்த்துகிறேன். மேலும், ஆர்வமுள்ள முதலீட்டாளர்கள் இங்கு உருவாக்கப்பட்டுள்ள வசதிகளை பயன்படுத்தி மஹிந்திரா நகரை உலக தரமுள்ளதாக அமைத்து வெற்றிப் பெற்றால் அது இந்த தொழில் நகரத்துக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கு பெருமை தேடி தரும்.

இந்த மஹிந்திரா நகரின் தலைவர் மற்றும் அலுவலர்கள் என்னை இந்த விழாவுக்கு அழைத்ததற்கு நன்றி கூறி இந்த திட்டம் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.





# இணையற்ற சேவைக்காக முதலமைச்சருக்கு 'துருவா' விருது

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 4.9.2002 அன்று தலைமைச் செயலகத்தில், கர்நாடக மாநிலம் ஸ்ரீ ஸ்ரீபாதராஜா மடத்தின் பிரதிநிதி திரு. எச்.வி.ராவ் அவர்கள் நேரில் சந்தித்து ஸ்ரீ கிருஷ்ணதேவராயரின் ராஜகுரு ஸ்ரீ ஸ்ரீபாதராஜா அவர்களின் 600வது பிறந்த நாளையொட்டி திருமடத்தின் சார்பில் அளிக்கப்பட்ட "துருவா" விருதினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கினார்.

விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரின் ராஜகுருவாக விளங்கிய ஸ்ரீ ஸ்ரீபாதராஜா அவர்களின் திருமடம் கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டத்தில் முலபாகிலு என்னும் இடத்தில் அமைந்துள்ளது. ராஜகுரு ஸ்ரீ ஸ்ரீபாதராஜா அவர்களின் 600வது பிறந்த நாள் விழா ஓராண்டு முழுவதும் கொண்டாடப்பட்டு அதன் நிறைவு விழா கடந்த ஜூன் மாதம் (23, 24, 25.6.2002 ஆகிய மூன்று நாட்கள்) நடைபெற்றது. இந்த நிறைவு விழாவின், சிறப்பு நிகழ்ச்சியான ஸ்ரீ ஸ்ரீபாதராஜா ஆராதனை விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, திருக்கோயில்களின் மேம்பாட்டுக்கு ஆற்றி வரும் பணிகளுக்காகவும், திருக்கோயில்களுக்கு வருகை தரும் பக்தர்களுக்கு மதிய உணவு அளிக்கும் அன்னதானத் திட்டம் செயல்படுத்துவதற்காகவும், இதற்கெல்லாம் மேலாக, பெண் குலத்தின் மிகச் சிறந்த பிரதிநிதியாக இருந்து மகளிர் நலம் மேம்பட இணையற்ற வகையில் சேவை செய்து வருவதையும் பாராட்டி, சிறப்பு செய்யும் வகையில், ஸ்ரீ ஸ்ரீபாதராஜா மடத்தின் சார்பில், "துருவா விருது" வழங்கப்பட்டது.

4.9.2002 அன்று தலைமைச்செயலகத்தில், ராஜகுரு ஸ்ரீ ஸ்ரீபாதராஜா திருமடத்தின் பிரதிநிதி திரு. எச்.வி. ராவ் அவர்கள் இந்த "துருவா விருது", சான்று பத்திரம் மற்றும் திருமடத்தின் தலைவர் ஸ்ரீ ஸ்ரீ விக்ஞானநிதி தீர்த்த சுவாமிகள் வழங்கிய புத்தகங்கள் மற்றும் குறுந்தகடு (CD) ஆகியவற்றை மடத்தின் சார்பில் வழங்கினார்.

இந்த விருதுக்காக தம்மை தேர்வு செய்து, சிறப்பு செய்தமைக்காக தனது உளமார்ந்த மகிழ்ச்சியைத் தெரிவித்து கொண்ட முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில் மேம்பாட்டுக்கான புதிய திட்டங்களையும், பெண்கள் மேம்பாட்டுக்கான சிறந்த திட்டங்களையும், சீரிய பணிகளையும் தனது அரசு தொடர்ந்து மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொண்டார்.

★ ★ ★

# ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த திட்டக் குழுக்கள் - உலக வங்கி அதிகாரிகள்

## முதலமைச்சருடன் சந்திப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 25.9.2002 அன்று தலைமைச் செயலகத்தில், கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளான உகாண்டா, எத்தியோப்பியா, கென்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த திட்டக் குழுக்கள் மற்றும் அமெரிக்க நாட்டின் வாஷிங்டன் நகரிலிருந்து இந்தக் குழுக்களுடன் இணைந்து வந்துள்ள உலக வங்கி அதிகாரிகள் ஆகியோர் சந்தித்துப் பேசினர்.



தெற்கு ஆசியா மற்றும் கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளுக்கான அறிவாற்றலைப் பகிர்ந்து கொள்ளும் திட்டத்தின் கீழ், உகாண்டா, எத்தியோப்பியா மற்றும் கென்யா ஆகிய கிழக்கு ஆப்பிரிக்க நாடுகளைச் சேர்ந்த திட்டக் குழுக்கள் இந்தியாவுக்கு வருகை தந்துள்ளன. இவர்களது இந்த பயணத்தின் ஓர் அங்கமாக சென்னை மாநகருக்கு வருகை தந்துள்ளனர்.

நமது நாட்டின் பாரம்பரியமான அறிவாற்றல் மகளிர் மூலமாக அடுத்தடுத்த சந்ததிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது என்கின்ற காரணத்தால் மகளிர் மேம்பாடு குறித்து இந்த ஆப்பிரிக்க நாடுகளின் திட்டக் குழுக்கள் அதிக ஆர்வம் காட்டி விசாரித்து அறிந்தனர். தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறை அதிகாரிகள், மகளிர் மேம்பாட்டு திட்ட அதிகாரிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியோருடன் கலந்துரையாடி மகளிர் மேம்பாட்டுக்கு என தமிழ்நாடு அரசு ஆற்றுகின்ற திட்டங்கள் குறித்தும் மகளிர் சுய உதவி குழுக்கள் பற்றியும் இந்தக் குழுக்கள் மூலம் மேற்கொள்ளப்படும் மகளிர் மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக அறிந்தனர்.

இதனைத் தொடர்ந்து, உகாண்டா நாட்டைச் சேர்ந்த ஆரம்ப சுகாதாரத்துறை அமைச்சர் திருமதி. பெட்ரைஸ் முகாயே வாபுதேயா, நாடாளுமன்ற உறுப்பினர் டோரதி சமாலி ஹஹெறா உள்ளிட்ட இந்தக் குழுவினர் 25.9.2002ல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது, உகாண்டா, எத்தியோப்பியா மற்றும் கென்யா ஆகிய நாடுகளைச் சேர்ந்த திட்டக் குழுவினரும், உடன் வந்துள்ள உலக வங்கி அதிகாரிகளும், தமிழகத்தில் மகளிர் மேம்பாட்டுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு ஆற்றி வருகின்ற திட்டங்கள் குறித்தும் வெகுவாகப் பாராட்டு தெரிவித்துக் கொண்டனர். உகாண்டா நாட்டின் அமைச்சர் திருமதி. பெட்ரைஸ் முகாயே வாபுதேயா அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை தங்களது உகாண்டா நாட்டிற்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இக்குழுவினரிடம் தமிழ் நாட்டில் அமல்படுத்தப்பட்டுள்ள சத்துணவுத் திட்டத்தை எடுத்துக் கூறி, 72 இலட்சம் குழந்தைகள் இதனால் பயன் அடைகிறார்கள் என்றும், இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் தமிழ்நாடு முன்னோடியாக விளங்குகிறது என்றும், இப்போது அனைத்து மாநிலங்களுக்கும் தமிழகம் முன்னுதாரணமாக விளங்கி, இத்திட்டத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்றுவதாகவும் தெரிவித்தார். மேலும், தமிழகத்தில் மகளிர் மற்றும் குழந்தைகளுக்காக மேற்கொள்ளப்படும் ஒட்டுமொத்த சுகாதாரத் திட்டத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் இக்குழுவினரிடம் எடுத்துரைத்தார்.

தமிழகத்தில் செயல்படுத்தப்படும் மகளிர் மேம்பாடு திட்டங்கள் குறித்து விரிவாக அறிந்து பாராட்டு தெரிவித்த ஆப்பிரிக்க நாடுகளின் திட்டக் குழுவினருக்கும், உகாண்டாவின் அமைச்சருக்கும் முதலமைச்சர் அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள். ★



# புதிதாக வடிவமைக்கப்பட்ட கைத்தறி சேலை வேட்டிகள்

## முதலமைச்சர் பார்வையிட்டார்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.9.2002 அன்று தலைமைச் செயலகத்தில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பில் குறைந்த விலையில் கண்ணைக் கவரும் வகையில் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள கைத்தறி சேலை வேட்டிகளின் மாதிரி வடிவமைப்புகளைப் பார்வையிட்டார்.

அறிவுரைக்கேற்ப சென்னையில் உள்ள தேசிய ஆடை அலங்கார தொழில்நுட்ப நிறுவனம் (National Institute of Fashion Technology), நெசவாளர்கள் சேவை மையம் (Weavers' Service Centre) மற்றும் கோ–ஆப்டெக்ஸ் ஆகியவற்றின் உதவியுடன் குறைந்த விலையில் நிறைந்த தரத்துடன் கூடிய 100 வகையான புதிய வகை சேலைகள் மற்றும் வேட்டிகள் காண்போர் கவரும் வகையில் வடிவமைத்துள்ளது. சராசரியாக



தமிழ்நாடு அரசின் கூட்டுறவு கைத்தறி நிறுவனமான கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், அரசின்

பருத்தி இழை 60 சதவீதம், பாலியஸ்டர் 40 சதவீதம் என்ற விகிதத்தில் தயாரிக்கப்பட்ட இந்த பாலிகாட்



புடவைகள் மற்றும் வேட்டிகளை, நெசவாளர்கள் தற்போது பயன்படுத்தி வருகின்ற தறிகளிலேயே எவ்வித மாற்றமோ, கூடுதல் செலவோ இன்றி நெய்வதற்கு இயலும். பருத்தி இழைகள் மற்றும் பாலியஸ்டர் இழைகளால் உயர்வான தரத்தில் நெய்வதால் நெசவாளர்களுக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்பட வழியில்லை. மேலும் அதிக அளவில் விற்பனை வாய்ப்புகளும் பொதுமக்களின் வரவேற்பையும் பெறும் வகையில் இந்த வடிவமைப்புகள் உள்ளன.

நெசவாளர்களின் துயர் துடைப்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் தமிழக அரசின் நடவடிக்கைகளால் 90 இலட்சம் அலகுகளின் இருப்புகளிலிருந்து 40 இலட்சம் புடவைகள் மற்றும் வேட்டிகள் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாயவிலைக் கடைகளிலும், கோ–ஆப்டெக்ஸ் ஷோ ரூம்களிலும் விற்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இதில் 4 கோடி ரூபாய் மதிப்பில் 12 இலட்சம் புடவைகள் மற்றும் வேட்டிகள் 7.9.2002 வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஆர்வத்துடன் வருவதால் பண்டிகை காலங்களான தீபாவளி மற்றும் பொங்கல் திருநாளின்போது மேலும் அதிகளவில் விற்பனையாகும் வாய்ப்பு உள்ளது.

புதிய வடிவமைப்புகளுடன் மக்கள் எதிர்பார்ப்புக்கேற்ற வகையில் சேலைகள் மற்றும் வேட்டிகள் கொண்ட மாதிரி கைத்தறி ஆடைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டுப் பாராட்டியதோடு, மேலும் மக்கள் விரும்பும் வகையில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கி விற்பனையைப் பெருக்கவும், நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார்.

அப்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் திரு.வி. சோமசுந்தரம், தமிழக அரசின் கைத்தறித் துறை செயலாளர் திரு. ஏ. இளங்கோவன், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. விஸ்வநாத் செகாங்கர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் திரு. டி.என். ராமநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

• • •





# தமிழக வறட்சி நிலையை பார்வையிட்ட மத்தியக் குழு

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நிலவி வரும் வறட்சி நிலைமை குறித்தும், இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களை சரி செய்திட மேற்கொள்ள வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் கடந்த 30.7.2002 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர்களின் சிறப்பு மாநாடு ஒன்றைக் கூட்டி, ஆய்வு மேற்கொண்டார். அம் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் தமிழ்நாட்டில் வறட்சி நிலை குறித்த ஒரு விரிவான அறிக்கை தயாரிக்கப்பட்டு 5.8.2002 அன்று மத்திய அரசின் பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்த அறிக்கையின் மூலம், தமிழகத்தின் வறட்சி நிவாரணப் பணிகளுக்கென்று ரூ.720 கோடி நிதியுதவியும், 2 இலட்சம் டன் உணவு தானியங்களும் வழங்கப்பட வேண்டும் என்று தமிழ்நாடு அரசின் சார்பாக மத்திய அரசிடம் கோரப்பட்டது.

மேலும், இது தொடர்பாக 20.8.2002 அன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த அ.இ.அ.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு, மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து தமிழக அரசு கோரிய வறட்சி நிவாரண நிதியினையும், உணவு தானியங்களையும் உடனடியாக வழங்கிட உத்தரவிடுமாறு கோரிக்கை விடுத்தது. இதைத் தொடர்ந்து தமிழகத்தின் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு உரிய அறிக்கை சமர்ப்பிக்கும் வகையில், மத்திய அரசின் வேளாண்மைத்துறை இணைச் செயலாளர் திரு. ஜோகிந்தர்சிங் அவர்களைத் தலைவராகவும், மத்திய அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 7 உயர் அலுவலர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்றினை மத்திய அரசு அமைத்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 23.9.2002 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில், தமிழகத்தில் நிலவி வரும் வறட்சி நிலை குறித்து பார்வையிட வருகை தந்துள்ள மத்திய அரசின் எட்டுப் பேர் அடங்கிய வறட்சி நிவாரணத்திற்கான மத்தியக் குழு (Central Drought Team) சந்தித்து ஆலோசனை நடத்தியது.

இக்கூட்டத்தின் போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி

தொடர்பான விவரங்களை வறட்சி நிவாரணத்திற்கான மத்தியக் குழுவிடம் விரிவாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்ததோடு, தமிழகத்தில் கடந்த 2000ஆம் ஆண்டில் மட்டுமே தென்மேற்குப் பருவமழை இயல்பானதாக இருந்தது என்றும், அதற்குப் பின்னர் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் பருவமழை பற்றாக் குறையாகவே இருந்துள்ளது என்றும், 2001ஆம் ஆண்டில் 16 மாவட்டங்களும், நடப்பு ஆண்டில், அதாவது 2002இல் 19 மாவட்டங்களும் சொற்பமான மழையைப் பெற்று வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், தமிழ்நாட்டில் உள்ள நீர்ப்பாசன அணைக்கட்டுகளில் 5இல் ஒரு பாகமே நிறைந்து உள்ளது என்றும், வழக்கமான ஆண்டுகளைப் போல குறிப்பிட்ட நாளான ஜூன் 12ஆம் நாள் மேட்டூர் அணையில் தண்ணீர் திறந்து விட இயலாததால் காவிரி பாசன பகுதிகளில் குறுவை சாகுபடி செய்ய இயலவில்லை என்றும் எடுத்துக் கூறினார். மேலும் அணைக்கட்டுகளில் குறைவான தண்ணீரே இருக்கின்ற காரணத்தினால், வழக்கமான 4,500 மில்லியன் யூனிட்டுகளுக்கு பதிலாக 2,000 மில்லியன் யூனிட்டுகள் மட்டுமே மின்சாரம் தயாரிக்க முடிந்தது என்றும், இதனால் மட்டும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூ.750 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இதைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள ஏரிகள் மற்றும் குளங்களில் 95 விழுக்காடு நீர் வற்றிப்போய் உள்ளன என்றும், இதன் காரணமாக வழக்கமாக மத்தியக் குழுவிடம் விளக்கிக் கூறினார். அதுமட்டுமின்றி, முன் எப்போதைக்கும் இல்லாத அளவுக்கு 11 இலட்சம் தென்னை மரங்கள் காய்ந்து விட்டதோடு; மேலும் 28 இலட்சம் தென்னை மரங்கள் காய்ந்து விடும் நிலையில் உள்ளன என்றும், இதனால் தென்னை விவசாயிகளுக்கு தேங்காய் உற்பத்தி பாதிப்பால் மட்டும் 180 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்ததுடன், தமிழகம் முழுவதும் எல்லா விவசாயிகளுக்கும் சேர்த்து ரூ.3,200 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், 21.84 கோடி மனித உழைப்பு நாட்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அனேகமாக எல்லா மாவட்டங்களிலும் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்றும், வறட்சியின் காரணமாக தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள கடும் பாதிப்பினை தமிழக முதலமைச்சர் அவர்கள் இக்குழுவிற்கு விரிவாக எடுத்துக் கூறினார்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள இந்த வறட்சி நிலையைச் சமாளிக்க தமிழக அரசு இதுவரை எடுத்துள்ள பல்வேறு உடனடி நடவடிக்கைகள் மற்றும் பல்வேறு முயற்சிகளைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் குழுவினரிடம் எடுத்துரைத்தார். குறிப்பாக, முதலமைச்சர் அவர்களே 24.6.2002 அன்று நேரடியாக காவிரி டெல்டா பகுதியான தஞ்சாவூருக்குச் சென்று நிலைமைகளைக் கண்டறிந்து உடனடியாக ரூ.164.18 கோடி அளவிற்கு நிவாரணப் பணிகளை



பயிரிடப்படும் பரப்பளவில் 50 விழுக்காட்டிற்கும் குறைவாகவே இவ்வாண்டு பயிரிடப்பட்டுள்ளது என்றும், சாகுபடி செய்யப்பட்ட பயிர்களும் வறண்டு போகும் நிலையில் உள்ளன என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் அறிவித்ததுடன், பாசன ஆதாரங்கள் தூர்வாருதல், புதிய பாசன குளங்களை அமைத்தல், புதிய கதிர் அடிக்கும் களங்களை அமைத்தல், சாலைகள் அமைத்தல் போன்ற பல்வேறு பணிகளை இந்த டெல்டா பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருவது பற்றியும், கூட்டுறவு



கடன்களை வசூலிப்பது ஒத்திவைக்கப் பட்டுள்ளது என்றும், துயர் துடைப்பு நிதியில் (Calamity Relief Fund) இருந்து ரூ.67.90 கோடி விடுவிக்கப்பட்டு 13,676 குடிநீர் தொடர்பான பணிகள் அதாவது, ஆழ்குழாய் கிணறுகள் மற்றும், கைபம்புகள் அமைத்தல், சிறு மின்சார பம்புகள் அமைத்தல், தூர்ந்த கிணறுகளை ஆழமாக தோண்டுதல், பைப் லைன்களை விரிவுப்படுத்துதல், ஏற்கெனவே உள்ள பைப் லைன்களை மாற்றி புதிதாக அமைத்தல், மற்றும் கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்டம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் பாராளுமன்றம் உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், 11வது நிதிக்குழு மானியம், உள்ளாட்சி மன்றங்கள் நிதி மற்றும் சிறுசேமிப்பு ஊக்குவிப்பு தொகை போன்ற பல்வேறு திட்டங்களின் மூலம் 383.76 கோடி மதிப்பீட்டில் 60,110 பணிகள் நடந்து வருகின்றன என்று தெரிவித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து 15 இலட்சம் ரூபாய் வரை குடிநீர் வழங்கும் பணிகளுக்காக செலவிடலாம் என்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், முதலமைச்சர் அவர்கள்





எடுத்துரைத்தார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கூட்டுக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் தற்காலிகமாக கைப் பம்புகள் மற்றும் மின்சார பம்புகள் ஆகியவைகளை அமைத்து உடனடியாக குடிநீர் வழங்கி வருவது, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நகரப் பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள

இடங்களைக் கண்டறிந்து நகர்பகுதிகளில் நிலவி வரும் குடிநீர் பற்றாக்குறையை சமாளிக்க மாற்றுத் திட்டங்கள் (Contingency Plan) தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாடு அறையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்களில் கண்காணிப்பு அறைகளும் செயல்பட்டு வருவது – ஆகியவை குறித்து விரிவாக எடுத்துரைத்த முதலமைச்சர் அவர்கள், பருவ மழை பொய்த்ததால் வறட்சியைச் சமாளிக்க வேளாண்மைத்துறை உரிய மாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தொடர்ந்து தென்மேற்கு பருவமழை முழுவதுமாக பொய்த்துள்ளதால் நிலைமை மேலும் சீர்கேடு அடைந்துள்ளது என்பதை சுட்டிக் காட்டியதுடன், வறட்சி நிவாரணப் பணிக்குத் தேவைப்படும் நிதியும், உணவு தானியங்களும் அதிகரித்து உள்ளன என்றும் மத்திய வறட்சிக் குழுவினரிடம் தெரிவித்தார். பல்வேறு தலைப்புகளின் கீழ் தமிழகத்தின் தேவைகளைப் பட்டியலிட்டு, மத்திய துயர் துடைப்பு நிதியில் இருந்து ரூ.1,434 கோடி நிதியுதவியும், 5.5 இலட்சம் டன் உணவு தானியமும் தேவைப்படுகின்றது என்று எடுத்துரைத்த முதலமைச்சர் அவர்கள், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களை சுற்றிப்பார்த்து உண்மை நிலையை அறிந்து தமிழ்நாடு அரசு கோரியுள்ள நிதியையும், உணவு தானியங்களையும் வழங்க மத்திய அரசுக்கு பரிந்துரை செய்ய வேண்டும் என்று மத்திய அரசு குழுவினரைக் கேட்டுக் கொண்டார். இதனையடுத்து, தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்புக்களை நேரில் பார்வையிட தற்போது வருகை தந்துள்ள இந்தக் குழு 24.9.2002 மற்றும் 25.9.2002 ஆகிய இருநாட்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து மாவட்டங்களையும் நேரில் சென்று பார்வையிடப்பட்டது.

தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தில் நிலவும் வறட்சி குறித்தும், வறட்சியை சமாளிக்க அரசினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைத்ததை கேட்டறிந்த மத்திய வறட்சிக் குழுவின் தலைவரும், மத்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையின் இணைச் செயலாளருமான திரு. ஜோகிந்தர் சிங், தமிழகத்தில் நிலவும் வறட்சி நிலைமையினை கண்டறிந்து, அது குறித்தான அறிக்கையினை தாங்கள் மாண்புமிகு துணைப் பிரதமரின் தலைமையிலான குழுவிற்கு உடனடியாக சமர்ப்பிக்க உள்ளதாகவும் உறுதியளித்தார்.

தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற மத்திய அரசின் வறட்சி நிவாரணத்திற்கான மத்தியக் குழுவுடன் நடைபெற்ற இக்கூட்டத்தில், தமிழக அரசின் சார்பாக பொதுப்பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர், நிதித் துறை அமைச்சர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர், வருவாய்த் துறை அமைச்சர், வேளாண்மைத் துறை அமைச்சர், உள்ளாட்சி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் மற்றும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர், நிதித் துறை செயலாளர், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், ஊரக வளர்ச்சித் துறை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர், வேளாண்மைத் துறை செயலாளர், வருவாய்த் துறை செயலாளர், பொதுப் பணித் துறை செயலாளர் மற்றும் எரிசக்தித் துறை செயலாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

தமிழக முதலமைச்சர் அவர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து ஆலோசனை நடத்திய இக்கூட்டத்தில் வறட்சி குறித்த மத்திய அரசு குழுவின் தலைவர் மற்றும் மத்திய அரசின் வேளாண்மை மற்றும் கூட்டுறவுத் துறையின் இணைச் செயலாளருமான திரு. ஜோகிந்தர் சிங், மற்றும் உறுப்பினர்கள் பருத்தி மேம்பாட்டு இயக்குநரகத்தின் இணை இயக்குநர், திரு. ஆர்.பி. சிங், நிதி மற்றும் கம்பெனி விவகார அமைச்சரகத்தின் உதவி இயக்குநர், செல்வி நளினி பதக், மீனளம், கால்நடை பராமரிப்புத் துறையின் துணை ஆணையர், திரு. சந்தர்பால், திட்டக் குழுவின் இயக்குநர், திரு. பி.சி. முண்டா, ஹட்கோ நிறுவனத்தின் சென்னை மண்டலத் தலைவர், திரு. வி. அருள்குமார், ஊரக வளர்ச்சி அமைச்சரகத்தின் உதவி இயக்குநர் (SGRY), ஜே.ஆர். மீனா, ஊரக வளர்ச்சி அமைச்சரகத்தின் குடிநீர் வழங்கல் துறை, கூடுதல் ஆலோசகர், திரு. பி.கே. சக்ரவர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.

வறட்சி நிவாரணம் குறித்த மத்தியக் குழுவின் தலைவர் திரு. ஜோகிந்தர் சிங், தான் உள்ளிட்ட இக்குழுவின் 8 உறுப்பினர்களும், இரண்டு பேர்கள் கொண்ட நான்கு பிரிவாகப் பிரிந்து வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் 24.9.2002 மற்றும் 25.9.2002 ஆகிய இரு நாட்களிலும் சென்று முழுமையாகப் பார்வையிட்டு டெல்லி திரும்பிய ஒரு வாரத்திற்குள் துணைப் பிரதமரின் தலைமையிலான குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிப்போம் என்றும், காலதாமதம் இன்றி தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் வறட்சி நிவாரணப் பணிகளுக்கு உதவுகின்ற வகையில் கூடுதல் நிதி உதவியும், உணவு தானியங்களும் விரைந்து கிடைக்க ஏற்பாடு செய்யப்படும் என்று முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக் கொண்டார்.

★ ★ ★



# அல்சர் ஆபத்தான நோயா?

டாக்டர் சு. பர்னபாஸ் துரைராஜ்

சிலர் வயிற்று வலியால் துடிப்பார்கள்; இதற்குப் பலவகைக் காரணங்கள் இருக்கலாம். வலியோ, எரிச்சலோ அப்படி ஒருநாள், இரண்டு நாள் இருந்தால் சரி; எப்போதும் தொடருமானால், வயிற்றைப் பிடித்துக் கொண்டு சுருட்டிப் படுத்தால் மட்டுமே சரியாகிவிடாது; டாக்டரிடம் போய்ப் பரிசோதித்துக் கொள்ளுங்கள்; அத்தகைய அவதிக்குக் காரணம் 'அல்சரா'கத்தான் இருக்கும்.

'அல்சர்' (ULCER) என்றால் புண் என்று பொருள் கொள்ளலாம்; குடல் புண்ணையும் கூறலாம்.

**இருவகை அல்சர்**

இத்தகைய ரணம் குறிப்பாக இரைப்பையில் வரும் அல்லது சிறுகுடலும் இரைப்பையும் சந்திக்கும் இடத்தில் ஏற்படும். இரைப்பையில் ஏற்படும் அல்சர் 'காஸ்ட்ரிக் அல்சர்' (GASTRIC ULCER) என்று குறிப்பிடப்படும்.

சில சமயம் உணவுக் குழாயிலும் இந்த வகைப் புண் உண்டாகக் கூடும்.

சிறுகுடல் இரைப்பை சந்திப்பில் வருவது 'டியோடெனால் அல்சர்' (Duodenal Ulcer) எனப்படும்.

பொதுவாக வயிற்றில் ஏற்படுகிற அல்சர் 'பெப்டிக் அல்சர்' (Peptic Ulcer) ஆகும்; 'பெப்சின்' சுரப்பால் இது ஏற்படும்.

'அல்சர்' என்கிற சொல்லே முக்கியமாகக் குடல் புண் எனப்படுவதால், உடலின் உட்புறத்தில் ஏற்படுகிற நோயே இது என்று கொள்ளலாம்; சிலருக்கு உடலின் மேற்புறத்திலும் அவ்வகைப் புண் ஏற்படுவதும் உண்டு.

புண் என்பதே சதையில் அல்லது குடலில் உண்டாகும் கீறலோ விரிசலோ தானே.

மூன்று பகுதிகளில்........

Gastric Ulcer, குறிப்பாக 3 பகுதிகளில் உண்டாகும். அவை.

1. மேல் பாகம் (FUNDUS)
2. நடுப் பாகம் (BODY)
3. அடிப் பாகம் (ANTRUM)

குறிப்பிட்டுச் சொல்லுவதானால் அல்சர் உண்டாக முக்கியக் காரணமே Helico Bactor Pylori என்கிற கிருமியும், ஹைட்ரோ குளோரிக் அமிலம் அதிகமாகச் சுரப்பதுமேயாகும்.

நாம் உண்ணும் உணவு, உணவுக் குழல் வழியாக இரைப்பையை அடைகிறது. இரைப்பையில் சுரக்கின்ற ஹைட்ரோ குளோரிக் அமிலமும், பெப்சின் என்கிற நொதியும் அந்த உணவுப் பொருளைச் செறிக்கச் செய்கின்றன. இவ்விரண்டும் அதிகமாகச் சுரந்தால் பெரும்பாலும் சிறு குடலின் முன் பகுதியிலும், இரைப்பை சுவரிலும் சளி போல் படர்ந்து, பாதுகாப்பளிக்கின்ற சிலேட்டுமப் படலம் நீர்த்துப் போய் விடும்; இதனால் அந்த அமிலம் படுமிடமெல்லாம் புண்ணாகி விடும். இதுதான் 'அல்சர்'.


இரைப்பையில் உணவுப் பொருளே இல்லாமல் அந்த அமிலம் சுரந்தாலும் செறிமானத்திற்கு ஏதுமில்லாத

நிலையில் இரைப்பைச் சுவரை அரித்து விடும்; 'நேரத்தோடு சாப்பிட்டால் அல்சர் வராது' என்பதற்கு இதுதான் காரணம்.

**ஏதனால் வருகிறது?**

புகை பிடிப்பது, புகையிலை போடுவது, மது அருந்துவது ஆகிய பழக்கத்திற்கு ஆளானோருக்கு நிச்சயம் 'அல்சர்' வரும் வாய்ப்பு உண்டு; அப்படி வந்திருப்பதை மருத்துவர் மூலம் அறிந்த பிறகாவது, அந்தப் பழக்கங்களை அவர்கள் கைவிட வேண்டும்.

இந்த ஆலோசனைகளை அலட்சியப்படுத்தினால், என்ன மருந்து சாப்பிட்டாலும் அது சரியானபடி செல்லுபடி ஆகாது என்பது நிச்சயம்!



**மோரும், பாலும்**

''மோர் சாப்பிட்டால் நல்லதா... பால் சாப்பிட்டால் நல்லதா...'' என்றெல்லாம் பெரும்பாலான அல்சர் நோயாளிகள் கேட்கின்றனர்.

மோரில் அதற்கான சத்து எதுவும் இல்லை; பல சத்துகள் உள்ள பரிபூரண உணவு பால் என்றாலும், அதில் உள்ள 'கால்சியம்' அல்சர் புண்ணுக்கு நல்லதல்ல.

ஆகையால், பாலைக் குடிப்பது தப்பில்லை; அதையே மருந்துபோல் எண்ணி அடிக்கடி குடிக்கத் தேவையில்லை. இந்த வகையில் மருந்து போலவும் அது பயன் தராது.

**என்ன சாப்பாடு?**

அல்சர் நோயாளிக்கு உணவுக் கட்டுப்பாடு என்று ஒன்றும் கிடையாது.

என்ன சாப்பிட்டால் குடலில் எரிச்சல் அல்லது வயிற்று வலி வருகிறது என்று அவர்கள் உணருகிறார்களோ அதைச் சாப்பிடாமல் விட்டுவிடலாம்; எத்தகைய உணவு எந்தத் தொந்தரவும் தராமல் இருக்கிறதோ– அதையே தமது அன்றாட உணவாக எடுத்துக் கொள்ளலாம்.

தமக்கு அல்சர் நோய் ஏற்பட்டுள்ளது என்று அறிந்து கொண்ட ஒருவர், எந்த வலி நிவாரண மாத்திரைகளும் சாப்பிடக் கூடாது. 'NSAID' (Non Streidol Inflamatory Drug) என்று குறிப்பிடப்படும் அந்த வகை மாத்திரைகளால், அல்சர் புண் அதிகம் ஆகும்; அல்லது பக்க விளைவுகள் ஏற்படும்.

ஆகையால், அல்சருக்காக மருந்து சாப்பிட்டு வருகிறவர்கள், டாக்டரைக் கேட்காமல் வேறெந்த மருந்து மாத்திரையையும் உட்கொள்ளக் கூடாது.



**கண்டறியும் முறை**

வந்திருப்பது அல்சர் தான் என்று உணரப்பட்டால், நுனியில் மிகச் சிறிதான– அதே நேரத்தில் அதிக ஒளியுடன் கூடிய பல்புடன் உள்ள மெல்லிய ஒயர் போன்ற அமைப்புள்ள 'என்டாஸ்கோப்பி' (Endoscopy) என்ற உள்நோக்கிக் கருவியை வாய்வழியாக உள்ளே செலுத்தி, புண் எந்த இடத்தில் இருக்கிறது. எந்த அளவுக்கு இருக்கிறது என்பதைக் கண்டறியலாம்.

சில நோயாளிகள் இவ்வகைச் சிகிச்சை முறைச் சோதனைக்கே பயப்படுவார்கள்; அது தேவையில்லாத பயம். இந்த வகைச் சோதனையில் நோயாளிக்கு எந்த ஒரு சிறு துன்பமும் ஏற்படாது. இதுவரை நானே இரண்டு இலட்சம் பேருக்கு மேல் இவ்வகை சோதனை செய்திருக்கிறேன்.

'வீடியோ என்டாஸ்கோப்பி' என்கிற நவீன கருவியெல்லாம்கூட இப்போது வந்துள்ளது. உடம்பினுள் உள்ள புண்ணை டாக்டர் மட்டுமன்றி, அருகே உள்ள சிறிய திரையில் (screen) நோயாளியே இதன்மூலம் பார்க்க முடியும்!

**அறுவை சிகிச்சை அவசியமா?**

அல்சர் புண்ணுக்காகச் சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்கிற அவசியமே இல்லை; எப்படிப்பட்ட புண் ஆனாலும், உடலுக்குள் அது எந்தப் பகுதியில் ஏற்பட்டிருந்தாலும் மருந்து மாத்திரைகள் மூலமே குணமாக்கி விட முடியும்.

ஒரு தடவை ஒரு இடத்தில் புண் வந்து ஆற்றி விட்டால், நோயாளி டாக்டர்கள் ஆலோசனைபடி நடக்க வேண்டும்; இல்லையேல் அதே இடத்தில் மறுபடியும் புண்வரும் சாத்தியக் கூறு உள்ளது.

இன்ன வயதுக்கு மேல் தான் அல்சர் வரும் என்ற கணக்கெல்லாம் இல்லை; சிறுவர்களுக்கும் வரும்; பெரியவர்களுக்கும் வரும்.

**அதிகக் காரம் கூடாதா?**

சைவர்களைவிட அசைவப் பிரியர்களுக்கு அதிகம் வரும் என்று சிலர் கருதுகிறார்கள்; அது தவறு; இந்நோய்க்கு அப்படிப்பட்ட பேதமெல்லாம் இல்லை. எல்லோருக்கும் வரும்.

உணவில் அதிகக் காரம் சேர்ப்பவர்களுக்கு அல்சர் வரும் வாய்ப்பு இருப்பதாக எண்ணுவதும் தவறு; ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பட்டை மிளகாய் சம்பந்தப்படாத உணவு அவ்வளவாகப் பிடிக்காது என்பது நமக்குத் தெரியும்.

ஆனால், மாநில அளவில் கணக்குப் பார்த்தால் ஆந்திர மாநிலத்தில்தான் அல்சர் நோயாளிகள் குறைவு! அங்குள்ள சீதோஷ்ண நிலையும், அப்படிப்பட்ட உரைப்பும் அவர்கள் உடம்புக்கு ஒத்துக்கொள்கிறது, நமக்கு ஒத்துக் கொள்ளுவதில்லை – அவ்வளவுதான்!

**இதுவே புற்றுநோயாக மாறுமா?**

'குடல் புண்' எனப்படும் அல்சரே புற்றுநோயாக மாறிவிடும் என்று சொல்லமுடியாது; அல்சரே புற்றுநோய் போலத் தோற்றம் தரும்.

அப்படியொரு சந்தேகம் டாக்டருக்கே வருகிறதென்றால், அந்தப் புண்ணிலிருந்து சிறிது தசையை எடுத்து, மைக்ராஸ்கோப் மூலம் பரிசோதித்துத் தீர்மானிப்பார். நூற்றில் ஒருவர் இருவருக்கு அவ்வாறு புற்றுநோயாக இருப்பதே அபூர்வம்!

ஆணைவிடப் பெண்ணையே அல்சர் அதிகம் பாதிக்கும் என்பதெல்லாம் சரியல்ல; வெளித் தோற்றம்தான் இருவருக்கும் வெவ்வேறு தவிர, உள்ளே உணவுக் குழல், இரைப்பை, குடல் அமைப்பெல்லாம் ஒன்றுதானே!

**வாரிசுக்கும் வரலாம்**

அல்சர் என்பது தொத்து நோயல்ல; ஆனால், பரம்பரை நோய் என்று கருதலாம். அதிலும் குறிப்பாக 'ஓ – பாசிடிவ் குரூப்' இரத்தம் உள்ளவர்களானால்; வாரிசுக்கும் வரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

இதனால் அதிகம் பாதிக்கப்படுவோர் கிராமவாசிகளா நகரவாசிகளா என்றெல்லாம் கேட்கிறார்கள். அப்படிப்பட்ட வித்தியாசமெல்லாம் அல்சருக்கு இல்லை; இருசாராருக்கும் வரும். சுற்றுப்புறச் சுகாதாரம் இல்லாத இடத்தில் வசிக்கிறவர்களுக்கு இவ்வகைப் பாதிப்பு அதிக அளவில் ஏற்படக் கூடும்.

இது ஆயுட்கால வியாதியும் அல்ல; உயிருக்கு ஆபத்தை உண்டாக்கும் வியாதியும் அல்ல.

நோயின் தொடக்கத்திலேயே டாக்டரிடம் போய்க் காட்டிக் கொண்டால் மிக எளிதில் நிவாரணம் பெறலாம்.

**நோயின் அறிகுறிகள்**

அடிக்கடி வயிற்றுவலி வருகிறது, அல்லது மலம் கறுப்பு நிறமாகப் போகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள்; வயிற்றினுள்ளே குடல் பகுதியில் எங்கோ இரத்தக் கசிவு (Melena) ஏற்பட்டிருப்பதாக உணரவேண்டும், உடனே டாக்டரிடம் போய் பரிசோதித்துக் கொண்டால் குணம் பெற்று விடலாம்.

சிலருக்கு உணவுக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு, வாந்தி எடுக்கக் கூடும்; சில சமயம் அந்த வாந்தியில் சிறிதளவாவது இரத்தம் கலப்பதும் உண்டு; இதுவும் அல்சர் நோயின் விளைவுதான்.

ஒருவேளை, உள்ளே குடலில் எங்காவது ஓட்டை விழுந்திருந்தாலும் மேலே சொன்னது போன்ற அறிகுறிகள் உண்டாகக் கூடும். அவ்வாறிருந்தால், அறுவை சிகிச்சை பண்ண வேண்டியதிருக்கும்.

**மாத்திரைகளே போதும்**

அல்சரால்தான் அவ்வாறான அறிகுறிகள் வருகின்றன என்று பரிசோதனைக்குப் பின் அறியப்பட்டால், என்டாஸ்கோப்பி மூலமே தகுந்த ஊசி மருந்தை உள்ளே செலுத்தி, அதற்குக் காரணமான குடல் புண்ணை ஆற்றிவிடலாம்.

அல்சருக்கு இப்போது நிறைய மாத்திரை மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் 'இது ஒரு தீராத வியாதியோ' என்று யாரும் அஞ்சவோ கவலைப்படவோ தேவையில்லை. இதற்கான மருந்து மாத்திரைகள் பக்க விளைவையும் ஏற்படுத்தாது.

இதற்கான மருந்து சாப்பிடும் காலத்தில் வலிக்கான (Asprin ) மாத்திரைகளை உட்கொள்ளாமல் இருந்தாலே போதும்; வேறு பத்தியமெல்லாம் கிடையாது.

'என்டாஸ்கோப்பி' சோதனை முறைக்கு அஞ்சுவோர், அதற்காகச் சிகிச்சை பெறுவதைத் தவிர்க்கத் தேவையில்லை. அல்சர் உண்டாகக் காரணமான Helico Bactor Pylori கிருமியை அவர்களுடைய இரத்தம் அல்லது சுவாசத்தைப் பரிசோதித்தே கூட கண்டறிய முடியும்.

**பழக்கங்களை மாற்றுக**

அல்சருக்கு ஆளானவர்கள் தொடர்ந்து மது அருந்துபவர்களாகவோ புகை பிடிப்பவர்களாகவோ இருந்தால் – டாக்டரிடம் காட்டிக் குணம் பெற்ற பிறகு அந்தப் பழக்கங்களை அடியோடு கைவிட்டே ஆகவேண்டும்.

'கடைசி மூச்சு உள்ளவரை அல்சரை ஆற்ற முடியாது' என்றோர் காலம் இருந்தது உண்மைதான்; அந்தக் காலம் மலையேறிவிட்டது;இப்போது முக்கலவை மருந்துகள் (Triple Drug Theropy) காலம்; அல்சரால் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருந்தாலும் சரி ஏழே நாட்களில் குணப்படுத்திவிட முடியும்.

☐ *கேட்டெழுதியவர்:* ***பி.எல்.ஆர்.***



செருப்புக்குள்ளே கல்லும்,
காதுக்குள்ளே ஈயும்,
கண்ணுக்குள்ளே தூசியும், காலில்
முள்ளும், வீட்டினுள் கலகமும்
எவ்வளவு சிறியதாயினும்
துன்பத்தைத் தரும்.

**- கவி வேமன்னா**



முயற்சி உடையவன் செல்வத்தை அடைகிறான்;
நல்ல பழக்கம் உள்ளவன் புகழ், செல்வம்,
ஒழுக்கம் இவற்றை அடைகிறான்.

**- ஹிதோபதேசம்**



# ஈரோடு மாவட்டத்தில்
# மத்திய வேளாண்மைக்குழு ஆய்வு

ஈரோடு மாவட்டம் என்றாலே மஞ்சள் பயிர் ஞாபகத்திற்கு வரும். மஞ்சள் விளையும் பூமியிலே மழை பொழியாத காரணத்தால் வளம் மிகுந்த மண் வறட்சியாக காட்சி அளிக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள குண்டடம், தாராபுரம், மூலனூர், வெள்ளகோயில், காங்கயம், பெருந்துறை, ஊத்துக்குளி போன்ற 7 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் விளை நிலங்கள் தண்ணீர் பற்றாக்குறையால் வறண்ட நிலமாக மாறி வருகிறது. இயற்கை பொய்த்துவிட்ட காரணத்தால் நீர் ஆதாரம் மிகவும் ஆழமாக சென்று 400 அடியில் கிடைத்த நீருற்று வற்றி 800 அடிக்கு சென்றுவிட்டது. இதனால் இந்த பகுதிகளில் பயிரிட்ட கரும்பு, தென்னை, வாழை, வெங்காயம், கொய்யா, நிலக்கடலை போன்ற பயிர்கள் கருகி விவசாயிகளுக்கு பொருளாதார இழப்பை ஏற்படுத்தியுள்ளது. மேலும் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது.

தமிழக அரசின் பெரும் முயற்சியால் வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட்டு விவசாயிகளின் துயர் துடைக்கவும், மத்திய வேளாண்மைக்குழு மற்றும் கூட்டுறவுத் துறை இணைச் செயலர் திரு. ஜோகிந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் திரு. ஆர்.பி. சிங், இ.ஆ.ப., அவர்களும் ஈரோடு மாவட்டத்திற்கு 24.9.2002 அன்று வருகை புரிந்தனர். இந்தக் குழுவினருடன் தமிழக அரசின் முதன்மை



வருவாய் நிர்வாக ஆணையர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., அவர்களும் குண்டடம் ஊராட்சி ஒன்றியத்தில் பொன்னாபுரம், கெத்தல்ரேவ், ரங்கம்பாளையம், அழகியகவுண்டன்பாளையம், செல்லாம்பாளையம், அமராவதி ஆறு ஆகிய இடங்களில் பாதிக்கப்பட்டுள்ள தென்னை மரங்களையும், கொய்யாத் தோப்புகளையும், கரும்புத் தோட்டங்களையும் பார்வையிட்டனர். இறுதியாக தண்ணீரின்றி வறண்டு கிடக்கும் அமராவதி ஆற்றையும் பார்வையிட்டனர். அதன்பின்னர் இம்மாவட்டத்தில் பொன்னாபுரம் கிராமத்தில் காய்ந்துபோன தென்னந்தோப்புகளையும், கொய்யாத் தோப்புகளையும் ஆய்வு செய்தனர். ஆய்வின் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளையும், நீர் ஆதாரங்களைப் பற்றியும், விளை நிலங்கள் பற்றியும், பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதை பற்றியும் கேட்டறிந்தனர்.



உப்பாறு அணையை சுற்றிப்பார்த்த பின்னர் உப்பாறு அணையின் மூலம் இந்தப் பகுதியில் பாசனப் பரப்பளவு குறித்தும், நீர்மட்டம் குறித்தும் பொதுப்பணித் துறை அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர். உப்பாறு அணையின் மாவட்ட வறட்சி நிலைமைகள் குறித்து விளக்கக் கூடிய புகைப்படக் கண்காட்சி அமைத்து அதன்மூலம் மாவட்டத்தின் வறட்சியை மாவட்ட ஆட்சியர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அப்போது இம்மாவட்டத்தில் 28 இலட்சம் தென்னை மரங்கள் உள்ளன. இதில் 2,74,226 தென்னை மரங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் 1,63,907 தென்னை மரங்கள் முழுவதும் பாதிக்கப்பட்டு உள்ளது. 1,10,119 தென்னைமரங்கள் பாதியளவு பாதிக்கப்பட்டுள்ளது. இன்னும் தொடர்ந்து தென்னை மரங்கள் காய்ந்து வருகின்றது.

இம்மாவட்டத்தில் அதிக அளவு கரும்புப் பயிர் செய்யப்பட்டு வருகிறது. இதில் 3930 எக்டர் பரப்பில் பயிர் செய்யப்பட்டுள்ள கரும்புப் பயிர்கள் முழுவதும் காய்ந்து விட்டது. 3222 எக்டர் பரப்பில் பயிர் செய்யப்பட்ட கரும்புப் பயிர்கள் பாதியளவு பாதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இம்மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியால் ரூ.50.65 கோடி மதிப்புள்ள விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்டு, பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கெத்தல்ரேவ் கிராமத்தில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின் கீழ் ரூ.42 ஆயிரம் மதிப்பில் குளம் தூர்வாரும் பணியையும் பார்வையிட்டனர். இதன் மூலம் 466 விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ரங்கம்பாளையத்தில் ரூ.1.20 இலட்சம் மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள சிறு மின்விசை பம்பை ஆய்வு செய்தனர். இதன் மூலம் 350 குடும்பத்தைச் சார்ந்த பொதுமக்கள் பயன் பெறுகின்றனர். அதே பகுதியில் ரூ.90 ஆயிரம் மதிப்பில் குளம் தூர்வாரும் பணியும் பார்வையிடப்பட்டது. அழகியகவுண்டன்பாளையத்தில் 2.97 எக்டர் பரப்பில் பயிரிடப்பட்டுள்ள காய்ந்துபோன தென்னந்தோப்புக்களையும் பார்வையிட்டனர். பின்னர் செல்லாம்பாளையத்தில் காய்ந்துபோன கரும்பு பயிர்களையும் பார்வையிட்டு விவசாயிகளிடம் குறைகளைக் கேட்டறிந்தனர். இறுதியாக





வறண்டு கிடந்த அமராவதி ஆற்றை பார்வையிட்டனர்.

மழை பெய்யாத காரணத்தால் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் கீழிறங்கி கிணறுகள், ஆழ்துளை கிணறுகள், குளம், குட்டை, ஏரிகள் போன்றவையும் வறண்டு போய் காட்சி அளிக்கின்றன. இதன் எதிரொலியாக கடுமையான குடிநீர் பஞ்சமும் தோன்றி இம்மாவட்ட மக்கள் மிகவும் குடிநீருக்கு கஷ்டப்பட்டு வருகிறார்கள்.

ஈரோடு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சியின் காரணமாக குடிநீர் பஞ்சத்தைப் போக்க அரசிடமிருந்து ரூ.17.31 கோடி நிதி கோரப்பட்டது. இதில் ரூ.8 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, 993 ஆழ்குழாய் கிணறுகள் அமைத்தும், 127 குடிநீர் நீட்டிப்புப் பணிகளும் செய்யப்பட்டுள்ளது. மேலும் இம்மாவட்டத்திற்கு குடிநீர் தட்டுப்பாட்டை போக்க ஏற்கெனவே அரசிடம் கோரப்பட்ட நிதியை ஒதுக்கீடு



செய்தால் குடிநீர் பஞ்சம் தீர்க்கப்பட்டு விடும். வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பை சரிசெய்ய ரூ.54 கோடி கேட்டு மத்திய குழுவினரும் பல்வேறு மக்கள் பிரதிநிதிகளும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., அவர்களும் நிதி கேட்டு அறிக்கை சமர்ப்பித்தனர்.

பல்வேறு இடங்களை சுற்றிப் பார்த்த பின் மத்திய குழுவினர் வறட்சியால் பாதிக்கப்பட்ட இம்மாவட்ட மக்களின் பல்வேறு கோரிக்கைகளுக்கு செவிமடுத்து விவசாயிகளிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும், விவரங்கள் கேட்டறிந்து வறட்சி நிலைமைகளையும் அவர்கள் துயரங்களையும் நன்கு அறிந்து கொண்டார்கள். மத்திய வறட்சி நிவாரண குழுவினர் வருகை விவசாயப்பயிரை இழந்த விவசாயிகளுக்கும், குடிநீரின்றி வாழும் மக்களுக்கும் மழைத்துளி விழுந்தது போல் இருந்தது.


*செய்தி—மக்கள் தொடர்பு அலுவலர், ஈரோடு மாவட்டம்.*

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224073
சென்னை-600 008

# மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நண்டு வளர்ப்புப் பயிற்சி

தமிழகத்தில் தூத்துக்குடி மாவட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நண்டு வளர்க்கும் பயிற்சி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மகளிர் திட்ட சுயஉதவிக் குழுக்களுக்கு ஊக்குநர் பிற நிதி பயிற்சி, உறுப்பினர் பயிற்சி, தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, வாழ்க்கை தொழில் திறன் பயிற்சி போன்ற பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. மகளிர் சுய உதவிக் குழுவினர் ஒருங்கிணைந்து செயல்படவும், அவர்களிடையே தன்னம்பிக்கையை வளர்க்கவும், பிறரை சாராமல் சம்பாதித்து அவர்கள் குடும்பத்தை காப்பாற்றவும், இதுபோன்ற பயிற்சிகள் உதவுகின்றன. மேலும், தையல் பயிற்சி, சொட்டு நீலம், சோப்பு, ஆயத்த ஆடைகள் தயாரித்தல், பனை ஓலைப் பொருட்கள் தயாரித்தல், கற்கண்டு, சாம்பிராணி தயாரித்தல் போன்ற தொழில்களில் மகளிர் சுய உதவிக் குழுவினர் ஈடுபடுகின்றனர். மேலே கண்ட தொழில்களைத் தவிர்த்து தூத்துக்குடி மாவட்டத்தில் புதுமையாக மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு பொன்விழா கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் களி நண்டு வளர்க்கும் பயிற்சி திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியத்தில் கீழ அரசடி பஞ்சாயத்தில் உள்ள வெள்ளப்பட்டி கிராமத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் பொன்விழா கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் 5 இலட்சம் செலவில் நண்டு வளர்ப்பு கூடம் கட்டப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியர் திரு. இரா. தியாகராஜன், இ.ஆ.ப. அவர்கள் நண்டு வளர்ப்பு கூடத்தை 12.7.2002 அன்று திறந்து வைத்தார். இக்கூடத்தில் நண்டு வளர்ப்பதற்கு தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளது. இத்தொட்டிக்கு கடலில் இருந்து தண்ணீர் கொண்டுவருவதற்கு 140 அடி நீளம் பி.வி.சி. பைப் பூமிக்கடியில் போடப்பட்டுள்ளது. அவ்வப்போது தண்ணீர் மாற்றுவதற்கு வசதியாக மின் மோட்டாரும் இக்கூடத்தில் உள்ளது.



மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் நண்டு வளர்ப்பதற்கு வெள்ளப்பட்டி கிராமத்தில் 5 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அரசு மானியமாக 5,43,670 ரூபாயும், பாண்டியன் கிராம வங்கி மூலம் 5,43,670 ரூபாயும், ஆக ரூ.10,87,340 நண்டு வளர்ப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது. 5 மகளிர் சுயஉதவிக் குழுவில் 79 பேர் உறுப்பினர்களாக உள்ளனர்.

மாவட்ட ஆட்சியர் திரு. இரா. தியாகராஜன், இ.ஆ.ப., அவர்கள் நண்டு வளர்ப்பு கூடத்தை திறந்து வைத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களிடையே பேசுகையில், நண்டு வளர்ப்பில் ஈடுபடும் மகளிர் சுயஉதவிக் குழுவினர் நண்டு வளர்ப்பு குறித்து அனைத்து தொழில் நுட்பங்களையும் தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக நீங்கள் சரியான எடையுள்ள நண்டை



தேர்ந்தெடுப்பது, தொட்டிகளில் அவ்வப்போது தண்ணீர் மாற்றுவது, நண்டுகளுக்கு அளவான உணவு வழங்குவது, போன்றவற்றை தெரிந்து கொள்ள வேண்டும். ஐந்து மகளிர் சுயஉதவிக் குழுக்களில் 79 பெண்கள் இருக்கின்றீர்கள். நீங்கள் அனைவரும் ஒரே நேரத்தில் இத்தொழிலில் ஈடுபட முடியாது. நாட்களை பகிர்ந்து கொண்டு முறை அடிப்படையில் இத்தொழிலில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் களி நண்டுக்கு நல்ல வரவேற்பு உள்ளது என்றும் தெரிவித்தார். இத்திட்டம் வெற்றி பெற்றால் மாவட்டத்தில் அனைத்து கடற்கரையோர கிராம மக்களுக்கு நண்டு வளர்ப்புத் திட்டம் விரிவுபடுத்தப்படும் என்றார்.

மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமை மூலம் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்திற்கு ரூ.1 கோடியே 14 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இம்மாவட்டத்தில் உள்ள 918 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தொழில் தொடங்க மானியமாகவும், வங்கி கடனாக ரூ.8 கோடியே 41 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 15,029 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளது. நண்டு வளர்ப்பில் ஈடுபடும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ஒட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம் மூலம் தகுந்த பயிற்சியும், சுகந்தி தேவதாசன் கடல் ஆராய்ச்சி நிலையம் மூலம் தேவையான அனைத்துப் பயிற்சி வழங்கப்படுகிறது என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.



நண்டு வளர்ப்பில் ஈடுபடும் மகளிர் சுயஉதவிக் குழுவினர், நண்டு வளர்ப்பதற்கு முறையான பயிற்சியை நாங்கள் முழுமையாக பெற்றுள்ளோம். மாவட்ட ஆட்சியர் எங்களுக்கு முழு ஒத்துழைப்பு தருகிறார். நாங்கள் வளர்க்கும் நண்டு 2 கிலோ, 3 கிலோ எடையுள்ளதாக இருந்தால் ரூ.300 முதல் ரூ.400 வரை கிடைக்கும் என்றார்கள். நண்டு வளர்ப்பில் நாங்கள் முழுமையாக ஈடுபட்டு இத்திட்டம் வெற்றிகரமாக அமைய உழைப்போம் என்று தெரிவித்தனர்.

*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், தூத்துக்குடி.* •

## தேனி மாவட்டம் –

# சாலை அமைப்புப் பணிகள்

தேனி மாவட்டம் பெரியகுளம் தாலுகா முழுமையான விவசாயம் சார்ந்த பகுதி ஆகும். இப்பகுதியிலுள்ள பல்லாயிரக் கணக்கான விவசாய நிலங்களுக்கு செல்லும் பாதைகள் ஆக்கிரமிப்பு செய்தும், சரியான சாலை வசதிகள் இல்லாமல் மேடு பள்ளங்களாகவும், குறுகிய ஒத்தையடிப் பாதைகளாகவும், விளை நிலங்களிலிருந்து எடுக்கப்படும் மகசூல் மற்றும் மாந்தோப்புகளிலிருந்து எடுக்கப்படும் மாங்கனிகளை விற்பனைக்கு வாகனங்கள் மூலம் கொண்டு செல்ல முடியாத அளவிற்கு மிக மோசமானதாக இருந்தது. இதனால் விவசாயிகள் பல ஆண்டுகளாக பெரும் சிரமத்தை அனுபவித்து வந்தனர்.

இப்பகுதியை சார்ந்த ஆயிரக்கணக்கான விவசாயிகள் பெரியகுளம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சருமான திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களிடம் விவசாயப் பகுதி விளை நிலங்களுக்கு எளிதாக சென்று வருவதற்கு சாலை வசதி செய்து தரக் கோரி கோரிக்கை வைத்தனர்.

இந்தப் பகுதி விவசாயிகளின் துயரங்களை உணர்ந்த மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று அதை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் பரிந்துரை செய்தார்.







இந்த பரிந்துரையினை ஏற்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கிராமச் சாலைகள் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், ரூ.1.70 கோடி செலவில் சாலை வசதி செய்துதர அனுமதி வழங்கினார். அதனைத் தொடர்ந்து வேலைக்கான பணிகள் டெண்டர் விடப்பட்டு பணிகள் துவங்கியுள்ளன.

அதன்படி பெரியகுளத்திலிருந்து கும்பக்கரை சாலை கட்டப்பாலம் பிரிவில் இருந்து செலும்பு வரை 2.40 கிலோ மீட்டர் சாலை ரூ.24.50 இலட்சம் மதிப்பீட்டிலும், வடகரை மணக்காட்டுக்குளம் 5 கிலோ மீட்டர் சாலை ரூ.51.70 இலட்சம் செலவிலும், சாத்தாகோயில்பட்டி சாலை, காமாட்சி அம்மன் கோயில் வழியாக காமக்காபட்டி சாலை 2.60 கிலோ மீட்டர் சாலை ரூ.30 இலட்சத்திலும், சாத்தா கோயில்பட்டி காமக்காபட்டி ரோட்டில் ரூ.64 இலட்சத்தில் பாலம் கட்டவும் அரசு நிதி அனுமதி வழங்கியுள்ளது.

மேலும் இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதால் பல ஆண்டுகளாக சாலைகளில் செய்யப்பட்டிருந்த ஆக்கிரமிப்பு, தற்போது அகற்றப்பட்டு வருகிறது. குறிப்பாக பெரியகுளம் அருகே மணல் காட்டுக்குளம் சாலை அமைக்கும் பணி மும்முரமாக நடந்து வருவதால் சாலையின் இருபுறத்திலும் உள்ள ஆக்கிரமிப்புகள் இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு வருகிறது.

இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயிகளின் விளை நிலப் பகுதியில் விளையும் பொருட்களை சிரமம் இன்றி எளிதாக எடுத்து செல்வதுடன் நிலங்களின் மதிப்பு உயரும் வாய்ப்புகள் பெருகியுள்ளன என விவசாயிகள் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தவண்ணம் உள்ளனர்.

மேலும் தேனி மாவட்டத்தில் 2002–03ஆம் ஆண்டிற்கு மதுரை நெடுஞ்சாலைத் துறை கிராமச் சாலைகள் கோட்டத்தின் மூலமாக மாவட்டத்திலுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்துவதற்காக நபார்டு ஆர்.ஐ.டி.எல். திட்டம் VII, XIII–ல் 630 கிலோ மீட்டருக்கு ரூ.672.56 இலட்சத்திலும், 3 பாலங்கள் கட்டுவதற்கு ரூ.158.90 இலட்சத்தில் சாலைப் பணிகளுக்கான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டு வேலைகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்தப் பணிகள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியில் ஊராட்சி ஒன்றியம் வாரியாகவும் சாலை மற்றும் பால வேலைகள் நடைபெறுகிறது.

### சாலைப் பணிகள்

ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி, ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சாலைப் பணிகள் மொத்தம் 23 கிலோ மீட்டர் ரூ.266.44 இலட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகிறது.

கடமலைக்குண்டுமயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில் சாலைப் பணிகள் மொத்தம் 15 கிலோ மீட்டர் ரூ.156.77 இலட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகிறது. ஆண்டிபட்டி தொகுதியினை பொருத்தவரையில் மொத்தத்தில் 38 கிலோ மீட்டர் ரூ.423.21 இலட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகிறது.

பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி, பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் சாலைப் பணிகள் 10 கிலோ மீட்டர் ரூ.105.95 இலட்சம் செலவில் நடைபெற்று வருகிறது.

தேனி சட்டமன்றத் தொகுதி, தேனி ஊராட்சி ஒன்றியத்தில் சாலைப் பணிகள் மொத்தம் 5.40 கிலோ மீட்டர் ரூ.51.80 இலட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகிறது.

கம்பம் சட்டமன்றத் தொகுதி, கம்பம் ஊராட்சி ஒன்றியத்தில் சாலைப் பணிகள் மொத்தம் 10.20 கிலோ மீட்டர் ரூ.91.60 இலட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகிறது. ஆக மொத்தத்தில் தேனி மாவட்டத்தில் நடைபெறும் சாலைப் பணிகள் மொத்தம் 63.60 கிலோ மீட்டர் ரூ.672.56 இலட்சம் செலவில் வேலைகள் நடைபெற்று வருகிறது.

**பாலப் பணிகள்**

ஆண்டிபட்டி சட்டமன்றத் தொகுதி, க.மயிலாடும்பாறை ஊராட்சி ஒன்றியத்தில்



செங்குளத்திலிருந்து மூலக்கடை சாலையில் ரூ.37 இலட்சம் செலவில் பாலம் கட்டும் பணிக்கான ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது.

பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி, பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் சாத்தாகோவில்பட்டி சாலையிலிருந்து காமக்காபட்டி செல்லும் சாலையில் ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் கட்டும் பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.



போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி, போடி ஊராட்சி ஒன்றியத்தில் கோடாங்கிபட்டியிலிருந்து வலையபட்டி சாலையில் ரூ.57.90 இலட்சம் மதிப்பீட்டு தொகையில் உயர்மட்ட பாலம் கட்டுதல் மற்றும் அணுகு சாலை உட்பட இப்பணிக்கான ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. மொத்தத்தில் 3 பாலங்களுக்கான பணிகள் ரூ.158.90 இலட்சம் செலவில் நடைபெறவுள்ளது.

மேற்கண்ட சாலை மற்றும் பாலப்பணிகள் அனைத்தும் மார்ச்–2003க்குள் முடிவடைய இருப்பதால் இம்மாவட்டத்திலுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றி சொல்லிய வண்ணம் உள்ளனர்.

*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர், தேனி மாவட்டம்.*

• • •



# பேசும் கலப்பை

● பொன்குன்னம் வர்க்கி



காளை என்று பேச்சு வந்துவிட்டால், தம்பி ஔசுப் எல்லாவற்றையும் மறந்துவிடுவான். "அவன் ஒரு காளைப் பைத்தியம்" என்றே மற்றவர்கள் சொல்லி வந்தார்கள். அவனுடைய கண்ணனைப் பற்றி வியந்து பேசாத விவசாயி அங்கே கிடையாது. கண்ணன் அவ்வாறு ஔசுப்பின் ஜீவனாக இருந்து வந்தது.

சாம்பல் நிறம், நல்ல திடமான உருவம்; குட்டையான தடித்தும் வளைந்துள்ளதுமான கொம்புகள்; அந்த உறுதியான சருமத்தின் மீது சுருண்டு கொண்டிருக்கும் அழகான வடிவங்கொண்ட திமில்; கண்கள் வெளியே துருத்தும். கண்ணனது நடைகூட ஒரு விசேட நிறைவைக் கொண்டது. உழுகிற போதும் மற்ற நேரங்களிலும் கண்ணன் ஔசுப்பின் மனம் அறிந்து நடக்கும். வயலானாலும் சரி, வீட்டுக் கொட்டடியானாலும் சரி, ஔசுப் என்ன நினைக்கிறானோ அதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் அந்த உழவு மாடு.



ஔசுப் கண்ணனிடம் சாட்டையை ஒரு போதும் பயன்படுத்த மாட்டான். கொஞ்சம் அதை உயர்த்திக் காட்டுவான். மற்றதைப் போல அது இது என்று கத்த வேண்டியும் இருக்காது. கண்ணனிடம் ஒரு நண்பனிடம் பேசுவது போலப் பேசுவான். எத்தனை மாடுகள் இருந்தாலும் கண்ணன்தான் அங்கே கூட்டத் தலைவன். ஓர் உழவு முடிந்து விட்டதெனில் அடுத்த பக்கத்திற்குப் போக கண்ணனுக்குச் சொல்ல வேண்டியதில்லை. எதையெல்லாம் எப்படி, எப்போது செய்ய வேண்டுமென அறியும். சில சமயம் அடுத்த வயலுக்குப் போக கண்ணன் எத்தனிக்கையில் ஔசுப் தான் இடைமறித்து ஓய்வு வேண்டுவான்.

''கொஞ்சம் இரு. வெற்றிலை போட்டுக் கொள்கிறேன்- ரொம்ப நேரமாகி விட்டது'' என்பான்.

இதைக் கேட்டுக் கண்ணன் நிற்கும். செல்லமான வெற்றிலை விவகாரம் முடிந்ததும் 'ம்' என்பான் ஔசுப். கண்ணன் வேலைக்கு ஆயத்தமாகும். ஒரு வயல் உழவு முடிந்து, அடுத்த பக்கம் போகையில் அந்தச் சின்ன வரப்பை எத்தனை ஜாக்கிரதையாகத் தாண்டும் தெரியுமா? அந்த வரப்புகளிலே எந்த இடத்தையும் கண்ணன் மிதித்ததில்லை. அந்த மண்ணை நாசப்படுத்த ஒரு மிதியே போதும் என்பதை அது அறியும்.

கண்ணனைக் கட்டிப் போடவும் தேவையில்லை. எதைச் சொன்னாலும் அறிந்து கொள்ளக் கூடியதால், உழவு முடிந்ததும், அது வேண்டிய மட்டும் புல்லை மேய விடுவான். அப்போதெல்லாம் ஔசுப் ஒரு சிறு எச்சரிக்கை மட்டும் தருவான்.

''போய் வேண்டியவரை மேய்ந்துகொள். அந்த வாழை மரம் மட்டும் வேண்டாம்''.

கண்ணனும் வாழையையோ சிறு தென்னங்கன்றுகளையோ தொடுவதில்லை. அவைகளைத் தொடுவதும் சரி, அவற்றை நட்டு வளர்த்த சொந்தக்காரர்களை கொம்பால் முட்டுவதும் சரி, இரண்டும் ஒன்றுதான் என்பதை அறியும். உழவெல்லாம் முடிந்ததும், அதன் உடம்பு பூராவும் சேறு நீங்க கழுவிச் சுத்தப்படுத்துவான் ஔசுப். இதில் மிகவும் கவனமாக இருந்தான்.

''வலது காலைத் தூக்கு, தலையை ஏன் ஆட்டிக் கொண்டிருக்கிறாய்? பாரேன், இந்தக் கொம்பு என்னைத் தொட்டு விட்டால் என்ன ஆகும். சும்மா இரு - அசையாதே....''

இந்த மாதிரி சாதாரண பேச்சுக்கள் எல்லாம் கண்ணனுக்கு நன்றாகப் புரியும். ஆனால் அவை சொல்லப்படும் விதம் அதற்கு ரசிக்கத் தக்கதாயில்லை. குளிப்பதையும் அது வெறுத்தது. ஔசுப்பின் பேரில் கொண்டிருந்த அன்பால் அது சம்மதிக்கும். இந்த அன்பும் நேசமும் கொண்ட பிராணிகளை அறியாத உழவர்கள் என்ன சொல்வார்கள்? ''எந்த மாட்டையும் ஔசுப்பிடம் கொண்டுவிடு. ஒரு தடவை அவன் தீனி காட்டிவிட்டால் போதும். அது புதிய மாடாகி விடும்''.

ஔசுப் மாடுகளிடம் இயல்பாகவே பேசுவான். நாள் முழுவதும் மாட்டின் தீனி பற்றிய கவனமாகவே இருப்பான். மிருகவதைத் தடுப்புப் பற்றி ஔசுப்பிடம் பேசினால் அவனுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வரும். ''விலங்குகளைக் காப்பாற்று, காப்பாற்று!'' என்று எல்லாரும் பிரசங்கம் பண்ணுவதில் குறைவில்லை. இந்த அரசு எங்கேயாவது ஒரு சிறு காணி நிலத்தையாவது தருகிறதா? மாட்டுத் தீனிக்கு நம்ம தாடியே போதுமா?'' என்பான்.

கண்ணனின் பசியடங்கிய பிற்பாடுதான் ஔசுப்பின் சாப்பாடு முடியும். வாயில்லாச் சீவன்கள் பட்டினி கிடந்தால் வீட்டிற்குச் சாபக்கேடு என்பது அவன் நம்பிக்கை. ஒரு மரவள்ளிக்கிழங்கை அவன் கண்ணனுக்குத் தருகிறான் என்று வைத்துக் கொள்வோம். அதை வெகு நேர்த்தியாக மசித்து விட்டே தருவான். அன்னாசி போன்ற வேறு ஏதாவது முள் குத்தும் இலைகளைத் தருவதாக இருந்தாலும் அப்படித்தான். அந்த முட்களையெல்லாம் சீவியெடுத்து, துண்டுத் துண்டாக அந்த இலைகளையெல்லாம் ஒழுங்காக வெட்டித்தான் கொடுப்பான்.

வயலிலெல்லாம் சுற்றிவிட்டுக் கண்ணன் வீடு திரும்பி விட்டவுடனேயே ஔசுப் 'ஏ கண்ணா' என்று குரல் கொடுப்பான். அந்தக் குரல் ஒலித்தவுடனேயே மாடு பிரியத்துடன் பதில் குரல் கொடுக்கும். ஔசுப் அதனிடம் வரும்வரையில் தலையுயர்த்திக் காத்து நிற்கும். ஒரு கைப்பிடி கீரை-வாழைப் பழத்தோல் இப்படி ஏதாவது பண்டத்துடன் அதன் பக்கம் ஔசுப் செல்வான். அதை அவன் கையிலிருந்தே கண்ணன் சாப்பிடும். தடவிக் கொடுத்தால் அவனது கைகளை நக்க ஆரம்பிக்கும். ஔசுப்பின் உலர்ந்த வியர்வையின் கரிப்பு கண்ணனுக்கு மிகவும் பிடித்தமானது.

எந்தக் கூட்டத்திலும் கண்ணன் ஔசுப்பின் குரலைக் கண்டுபிடித்துவிடும். கேட்கும்போது அப்படியே இடியோசை கேட்ட மயிலைப் போல மகிழ்ச்சியடையும். வயலிலோ ஔசுப் தான் ஏரைப் பிடிக்க வேண்டுமென அடம் பிடிக்கும். வேறு யாராவது வந்துவிட்டால் சண்டித்தனம் பண்ணும். அப்போது ஔசுப் வந்து சமாதானப்படுத்த வேண்டியிருக்கும்.

''வேண்டாம் கண்ணா பாரு, இது நம்ம குட்டப்பன்தான், உனக்குத் தெரியவில்லையா?'' இப்படிப் பேசி, ஔசுப் சமாதானத்தை ஏற்படுத்துவான். வயலிலே முழக்கும் கீதம் ஒன்று இருக்கிறது. சொற்கள்-வாக்கியங்கள் எதுவுமில்லாமல், 'ஹோ' என்று குரலை உயர்த்தி ஔசுப் பாடுவான். சில நிமிடங்கள் சங்கீதம் நிலைத்து நிற்கும். அது சிருங்காரப் பாடல்களிலும் கோஷ்டி கானங்களிலும் உள்ள இசையின் நாட்டுப்புற வடிவம் போல இருக்கும். ஒரு மாட்டுமந்தையின் பரிசுத்தப் பாடலென்றோ, மந்திரமென்றோ அதைச் சொல்லிவிடுவது பொருத்தமாயிருக்கும். ஔசுப் முழு மூச்சுடன் பாட்டில் ஈடுபடுகையில் கண்ணன் நோய், வலி, வேலை எல்லாவற்றையும் மறந்து சங்கீத ரசனையில் மூழ்கிவிடும்.

அந்தக் கழுத்துமணி - 'மண்ணில் புதைகிற கால்' - இவை தாளம் போடும்.

ஒரு நாள் ஒரு ரசமான சம்பவம் நடந்தது. துண்டத்துக் கேளனின் பையன் பாச்சன் கலப்பையைப் பிடித்திருந்தான். வாதப்பிடிப்புடன் ஔசுப் வீட்டிலே தங்கி விட்டான். அவனது காளைகள் இல்லாமல் கேளனின் வயலுழவு அன்றே முடிவு பெறாது. எனவே கண்ணனையும் வேறொரு மாட்டையும் அழைத்துக் கொண்டு போ என்று சொல்லிவிட்டான். இரண்டும் மற்ற மாடுகளுடன் வயலுக்குப் போயாயிற்று. ஓர் உழவு நடந்து முடிந்திருந்த வயல் அது. அடுத்த உழவை



ஆரம்பிக்கையில், பாச்சனுக்கும் ஏதோ பாட வேண்டும் என்ற அடக்கமுடியாத ஆவல் தோன்றிவிட்டது. ஒரு ராகத்தை ஆரம்பித்தான். சங்கீத இலட்சணங்கள் ஏதுமறியாத இந்தப் பாச்சன் ஏன்தான் பாட விரும்பினான்? அவன் விருப்பம் அது. காரணம் வேறு எதுவுமில்லை. அற்பமான அந்த இசை கிளம்பிய உடனேயே கண்ணன் வெறுப்புற்றது. கொம்புகளை இங்குமங்குமாகப் பலமாக அசைத்துத் தனது எதிர்ப்பைத் தெரிவித்தது. தன்னுடைய இசை மழையில் மூழ்கியிருந்த பாச்சனுக்கு இது தெரியாது.

சங்கீத விஷயத்தில் அது ஒரு சங்கடம். பாடுபவர்கள் தங்கள் இசையின் தராதரம் பற்றி ஒருபோதும் உணர்வதில்லை. கொஞ்சநேரம் கண்ணன் வெளிப்படையாகத் தனது வெறுப்பைக் காட்டியது. ஆனால் பாச்சன் விட்டபாடில்லை. பாச்சனின் நண்பர்களைப் பொறுத்தவரை உலகின் எந்த ராகமும் ஒரே ராகம்தான். அவர்களிடமிருந்து கண்ணன் எந்த ஆதரவையும் பெற முடியாது. பாச்சன் சங்கீதத்தைக் கேவலப்படுத்தினான். அவனது வலக்காலில் கண்ணன் ஒரு சரியான உதை கொடுக்க, அந்தப் பாடகன் மூன்று நாட்கள் வீட்டிலேயே தங்கி ஒத்தடம் பெற வேண்டி வந்தது!

எந்தவித ஓய்வும் இல்லாமல் பன்னிரண்டு ஆண்டுகள் கண்ணன் ஔசுப்பிற்காக உழைத்தது. அவ்வாண்டுகளில் எல்லாம் இரு போகமும் அமோகம். மரஞ்செடி, கொடிகள், குளிர், பனிக் காலங்களைக் கண்டன.

வீறாப்புடன் மக்களிடையே விறைத்து நின்ற பல மகுடங்களும் செங்கோல்களும் கீழே விழுந்து நொறுங்கின. நம்ப முடியாத மாற்றங்கள் நிகழ்ந்தன. சுரண்டல் - மனிதன் அடுத்தவனைச் சுரண்டக் கூடாது என்பதும் இதுபோன்ற மற்ற மகிழ்ச்சி தரும் சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டு ஒரு புதுவகை அரசு ஏற்பாடாயிற்று. ஆனால் ஔசுப் தனது அருமை மாடுகளை விற்கவேண்டிய கட்டாயத்தில் இருந்தான். அவன் ஏற்கெனவே தனக்கிருந்த சொத்தான நிலத்தை விருப்பமின்றி அடைமானம் வைத்தாயிற்று. வேறு வழியில்லை. கல்யாண வயதைத் தாண்டி நிற்கும் பெண்ணைப் பெற்ற தந்தை அவன். மாப்பிள்ளை வீட்டார் ஏழை தான் என்றாலும் அவர்கள் கேட்ட மூவாயிர ரூபாய் வரதட்சிணைப் பணம் ஔசுப்பிற்குப் பெரிய் விஷயம். வயலை ஆயிரத்தைந்நூறு ரூபாய்க்கு அடைமானம் வைத்தான். கொடுப்பதற்கு அது போதும். ஆனால் கல்யாணச் செலவுக்குப் பணம் வேண்டியிருந்தது. வேறு வழியில்லை; தன்னுடைய மாடுகளை, அருமையான மாடுகளை விற்கத்தான் வேண்டும்.

இருபது ஆண்டுகளாகப் பகல் இரவு பாராமல் உழைத்திருக்கிறான் அந்த நல்ல விவசாயி. என்ன பலன்? தலை நரைத்தாயிற்று. பார்வை தடுமாறிற்று.



உடல் சுருங்கிவிட்டது. வாத நோய் வேறு. கத்தி இறங்காது அத்தனை அளவு வேலை செய்து உரம் பெற்றவை அவனது கைகள். என்ன செய்ய முடியும்? ஐயாயிரம் ஆண்டுக்காலமாகப் பயன்படுத்தும் உழவுக் கருவி, எரு எதுவும் போடப்படாது செழிப்பை இழந்து நிற்கும் பூமி. ரிக்வேத ஸ்லோகங்களைப் புகலடையும் நிலையை அடைந்தான் ஔசுப். நீரையும் மழையையும் மலையையும் காற்றையும் வேண்டினான். ஆதியும் அந்தமுமான அவனுடைய நிலத்தைப் பாதுகாக்கப் பிரார்த்தித்தான். அந்த ஆண்டுகளில் கிடைத்த சோர்வு இன்னும் விடவில்லை. ஆனால் எங்கும் வியாபாரம் பெருகி நின்றது. சுரண்டல் நிறைந்து நின்றது. அவனை ஊறு செய்யும் எல்லா விஷயங்களும் மலிந்தன.

கண்ணனை விற்ற நாளில் ஔசுப் வீட்டில் இல்லை. விற்பனைப் பத்திரத்தின் மூலம் ஒரு ரூபாய் பணம் அவனைச் சேரவேண்டும். அவன் அந்த இடத்தை விட்டுப் போய்விட்டான். விடும் கண்ணீரை எந்தப் பணமும் நிறுத்திவிடாது. கண்ணன் வீட்டைவிட்டுப் போக மனசு இல்லாமல் தலையை உயர்த்திச் சுற்றுமுற்றும் தன் எசமானர் இருக்கிறாரா என்று பார்த்துத் தன் உயிரைத் தேடிற்று. ஏதோ எங்கோ தவறிருக்கிறது என்பதுபோல ஓரிரு தடவை முனகிற்று. அந்தச் சமயத்தில் ஔசுப் தெற்குப்புறப் பலாமரத்தினடியில் கண்ணீரை மௌனமாகத் துடைத்துக் கொண்டிருந்தான்.

நேசம் என்பதற்குச் சொற்களோ, வேறு எந்த வெளிப்பாடோ தேவைப்படுவதில்லை. சோகமுணர்ந்த மனங்களின் நெருக்கம் தான் நேசம் என்றால், ஔசுப்பையும் கண்ணனையும்விட நெருக்கமுற்றவர் யாரும் இல்லை. அவர்கள் தங்கள் துன்பங்களை வெளியே சொல்வதில்லை. அது அந்த உள்ளங்களை மேலும் வேதனையடையச் செய்யும்.

சொந்த இடத்திலே அவமானப்பட்டும், உதவியற்றும் இருக்கும் இராணுவ வீரன், சிலசமயம் எதிரி நாட்டை நாடலாம். இந்தக் கிராமத்திலும் உதவியற்றுப் போய்ச் சீரழியும் சில விவசாயிகள் வயநாடு (மலபார் மாவட்டத்தில் உள்ள பகுதி. நிலத்தின் மதிப்பு இங்கே குறைவு) செல்லத் தீர்மானிக்கிறார்கள்.

“கண்காணாத இடம். தெரிந்தவரோ, உறவுக்காரரோ வந்து போக முடியாது. அங்கே மலேரியா வாசம். எப்படி ஔசுப், இதெல்லாம் தெரிந்தும் உன்னை அங்கே போகவிட முடியும்?”

கிட்டு சார்- ஔசுப்பின் பக்கத்து வீட்டுக்காரர் கேட்டார். மலபார் சமாச்சாரங்கள் குறித்து ஔசுப் விசாரித்துக் கொண்டிருந்தான்.

“வேறு என்ன செய்யமுடியும் கிட்டு சார்? கொஞ்சம் நிலம் ஏதாவது தாருங்களேன். நிலத்தின் பணம் கிடைக்காவிட்டால் என் மனம் ஆடிப்போய்விடும்” என்றான் ஔசுப்.

வேதனையே வாழ்வாக ஒரு போக்குக் காட்டுகிற காற்றுப் போல ஔசுப்பின் வாழ்வு ஆகிவிட்டது. மலபார் பிரயாணம் ஒவ்வொரு நாளும் தள்ளிப் போடப்பட்டு வந்தது. அது மட்டுமல்ல - இப்போது இருந்துவரும் ஏழு சென்ட் நிலத்தையும் ஒரு விலைக்கு விற்க முன் வந்தான். வேறொரு பிரச்சினை. இப்போது அவனது மகள் உண்டாகியிருக்கிறாள். முதல் பேரப்பிள்ளையின் பிஞ்சு முகத்தைப் பார்க்கவும் அவன் மனத்துக்குள் ஆவல்.

ஈஸ்டர் வந்தது. கிறிஸ்துவ நோன்பின் கடைசிப் பருவம். அவர்களுக்கு இது ஒரு மகிழ்ச்சி யூட்டும் நாள். ஏழை வீட்டில் கூட. ஒவ்வொரு சமையலறையிலிருந்தும் அருமையான இறைச்சி மணம் வீசும் நாள். அப்பங்கள் சுடப்படும் ஓசையும் மணமும் வேறு ஆவலைக் கிளப்பிவிடும். சூடான மாமிசத் துண்டங்கள் மசாலாக் கீரையோடு தேங்காய்த் துருவல் பணியாரங்கள் இரண்டு தட்டு இருந்துவிட்டால், ஆகா, இது சொர்க்கம்!

இது மாதிரி நல்ல நாளில் இவையில்லாமல் இருக்கும் வீடு அரிது. ஆனால் ஔசுப் உட்கார்ந்து ஏதோ எண்ணிக் கொண்டிருந்தான். பக்கத்து வயலில் யாரோ உழுது கொண்டிருக்கிறார்கள். இன்ப கரமான உழவு எழுப்பும் ஓசையை அவனால் கேட்க முடிந்தது. அது மனத்தை வாட்டி எடுத்தது. அது ஒரு விவசாயின் மனம். ஒட்டடை படர்ந்து தொழுவத்தில் வைக்கப்பட்டுள்ள தனது கலப்பையைப் பார்க்கையில் பெருமூச்சுகள் எழுந்தன. இனி என்றாவது கண்ணனைப் போன்ற ஒரு ஜோடி மாடு கொண்டு நாலைந்து ஏக்கர் நிலத்தை இந்தக் கலப் பையால் உழுவானா? அம்மாதிரி ஓர் அதிர்ஷ்ட நாளைப் பார்க்கத்தான் முடியுமா? என்று அவன் ஏங்கினான்.

"எத்தனை நேரம்தான் இப்படி இருப்பது? என்ன வந்து விட்டது இப்போது - கோட்டயம் போக வேண்டாமா? பெண்ணைக் கொண்டுவிட வேண்டாமா? பெற்றவர் செய்ய வேண்டியதில்லையா?" பேச்சடங்கியிருந்த அவனை அவன் மனைவி மரியா இடித்துரைத்தாள்.

மகளை மாப்பிள்ளை வீட்டில் அடுத்த நாளே கொண்டு விட்டு வர வேண்டும். அவளுக்கு எடுத்துக் கொடுக்க வேண்டிய துணியை இன்னமும் கொடுக்கவில்லை. போக வேண்டாம் என்றில்லை. பணம் குறைகிறது. மாமியார் வீட்டில் எல்லாரும் குறை சொல்ல ஆரம்பித்தாயிற்று. இதெல்லாம் மகள் கத்ரிகுட்டி அம்மாவிடம்தான் சொல்லியிருந்தாள். எப்பாடுபட்டாவது அவளுக்குத் தர வேண்டிய மூன்று துண்டுத் துணியைத் தந்துவிட வேண்டும். மீதியைப் பார்த்துக்கொள்ளலாம். இதை மட்டும் செய்தாக வேண்டும். பணத்திற்காக மறுகிக்கொண்டிருக்கையில் நல்ல வேளை மரியா கட்டி வந்த சீட்டு இருபது ரூபாய்க்கு வழி வகுத்தது. வயிற்றைக் கட்டி அவர்கள் சேர்த்த சீட்டு, மரியா அவனை இடித்துரைக்கும்போது அவள் தன் கையில் பணத்தை வைத்திருந்தாள்.

அவனால் முடிந்திருக்காது. ஆனால் அவள் சாதித்திருக்கிறாள். ஔசுப் கடைக்குப் போக எழுந்தான். "அப்பா துணி கொஞ்சம் கெட்டியாக இருக்குமாறு பார்த்துக்கொள்" என்று எச்சரிக்கை செய்தாள் கத்ரிகுட்டி.

"இன்னும் நிலவரி கட்டவில்லை. அதையும் கொடுத்து விடலாம்" என்றாள் மரியா.

"நீ வைத்திருப்பதைக் கொண்டு ஊரையே வாங்கிவிடலாமே".

"என்ன செய்யலாமோ தெரியாது. எனக்கும் ஒரு துணி வேண்டும். நான் கட்டிக் கொண்டிருப்பது ஒரே கிழிசல்!"

"அப்படியானால் நீயே போ. நான் சமையலறையில் இருக்கிறேன்".

"உன் தாடி இருக்கிறதே, அதையும் தந்துவிடு" என்றாள் மரியா. கத்ரிகுட்டி கையால் வாயை மூடி, சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"ஆமாம். எனக்குத் தாடி உண்டு. சரிதான். தாடியெல்லாம் இரவல் வாங்க மாட்டேன்". ஔசுப் கத்தினான். தொடர்ந்து, "உனக்கு மட்டும் தாடியிருந்தால் இந்தப் பகுதியிலேயே ஒரு மனிதனைக்கூட விட்டிருக்கமாட்டாய்" என்றான்.



குடையை கைகளில் இடுக்கிக் கொண்டான் - ஒரு துண்டைத் தோளில் போட்டுக் கொஞ்சம் வெற்றிலைப் பாக்கை பையில் அடக்கிக் கொண்டு ஔசுப் புறப்பட்டான்.

ஈஸ்டர் கொண்டாட்ட ஆரவாரத்திற்கும் கிளர்ச்சிக்கும் கோட்டயத்தில் குறைவில்லை. கிறிஸ்தவர்களின் எந்தக் கடையும் திறந்திருக்கவில்லை. ஆனாலும் துணிக்கடைகள் இருந்தன. ஓரிரு கடைக்குச் சென்று துணி வகைகளையும் விலையையும் விசாரித்தான்.

"அடேயப்பா! என்ன விலை?" துணியின் எக்கச்சக்கமான விலை பற்றிய ஒரு வயதான மனிதனின் அபிப்ராயம் இது.

"இன்னும் இரண்டு மூன்று கடைகளில் கேட்டுப் பார்க்கலாம். ஓரணா குறைவாக எங்கே கிடைக்கும். யாருக்கும் தெரியாது?"



முனிசிபல் கட்டடம் வரை நடந்துவிட்டான். அங்கே சுவர்ப்பக்கம் கூட்டமாக மாடுகள் நிறுத்திவைக்கப் பட்டிருந்தன: ஒவ்வொரு மாட்டின் எலும்பையும் எண்ணிவிடலாம். அதெல்லாம் எலும்பும் தோலுந்தான். கிழட்டு மாடுகள் தங்கள் வாழ்நாளை முடித்துக் கொள்ள அங்கே வந்திருந்தன. சில வால் அறுந்தவை. சில கழுத்துப் பக்கம் வருடக்கணக்கான வண்டித் தழும்புகளுடன், சில குட்டையாக்கப்பட்ட கொம்புகளோடு, மனிதனின் இரக்க குணம் ஜீவராசிகளிடம் குறைந்து விட்டது என்பதைக் காட்டி நிற்கும் சில.

இப்படிப் பலவற்றை அந்த மாட்டிடையே பார்க்க முடியும். ஒவ்வொரு மாட்டின் மீதும் முனிசிபாலிடி முத்திரை பதித்திருந்தது. சாவு முத்திரை. இன்னும் மீதியிருக்கிற அந்த மாடுகளின் உடல் ஈஸ்டர் கொண்டாட்டத்தின் விருந்தாகப் போகிறது. அம்மாதிரி முத்திரை போடப்படாத மாட்டை இறைச்சிக்காகக் கொல்லும் கடைக்காரர் மீது முனிசிபாலிடி பொதுமக்களின் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டி இவ்விஷயத்தில் எந்தச் சலுகையும் காட்டவில்லை.

இந்தக் கட்டுப்பாடு மட்டும் இல்லையெனில் இந்தக் கடைக்காரர்கள் மனித ஆரோக்கியம் பற்றிக் கவலையே இல்லாமல் எந்த மோசமான மாட்டையும் கொல்வார்கள். இவ்விஷயத்தில் ஔசுப் முனிசிபாலிடிக்கு ஆதரவு தருபவன். நின்றுகொண்டிருந்த பல மாடுகளுக்குச் சாவு ஒரு நிம்மதியாக இருக்கும். ஏதோ ஒரு சுமையிலிருந்து கிடைக்கும் விடுதலை. முடிந்தவரை உழைத்துக் கொடுத்தாயிற்று. தள்ளாமையில் கொடுமைக்கும் இகழ்ச்சிக்கும் முன்னே இந்தச் சாவு எவ்வளவோ நிம்மதி.

ஔசுப் சிறிது நேரம் அங்கு நின்று பார்த்துக் கொண்டிருந்தான். அந்தக் காட்சி அவன் இளகிய நெஞ்சத்தைத் தொட்டது. மொத்தம் நாற்பது மாடுகள் இருக்கும். வேறு பல முத்திரை குத்தப்படுவதற்காக விவசாயிகள் கொண்டு வந்தவை. தன் நண்பர்கள் மரண தண்டனையடைந்து, கொண்டு செல்லப்படுவதைப்போலப் பார்த்து விட்டு நகர்ந்தான்.

திடீரென அவன் துணுக்குற்றான். நம்பமுடியாமல் இருந்தது. எலும்பும் தோலுமாக இருந்த அந்த மிருகத்தைப் பார்த்ததும் தன் கண் ஏமாற்றுகிறதோ என்று எண்ணினான். அவன் இதயம் அங்கே நொறுங்கியது. எல்லாமே இருண்டது. அவனுக்கு உதறல் எடுத்தது. ஆமாம். அது கண்ணன்.

கண்ணா என்று உள்ளமெல்லாம் துடிக்கக் கூவினான், அவன். சுகத்தையும் நம்பிக்கையையும் அந்த மிருகத்திற்கு அளித்திருந்த குரல் அது. செயலற்றும் போயிற்று. அந்த அழகான கட்டடத்தின் முன்னர் கண்ணன் தலையைத் தாழ்த்தி நின்று கொண்டிருந்தது. ஒரு தடவை ஜீவனுள்ள அந்தக் குரல் அதன் காதுகளில் எதிரொலித்தது. தலையை உயர்த்திச் சுற்றுமுற்றும் பார்த்தது.

"என்னைத் தெரியலையா? மகனே? இந்த நிலையிலா உன்னைப் பார்க்க வேண்டும்".

அவன் நெஞ்சோடு அந்த மாட்டைக் கட்டிக்கொண்டு ஆதரவாக அதன் நெற்றியைத் தடவிக் கொடுத்தான். அந்தக் கைகளின் ஸ்பரிசம் பட்டு அது வாலை உயர்த்திற்று. உடனே அழுதது. வாயால் அல்ல, நெஞ்சால். ஔசுப் கண்ணன் உடம்பு மீது முத்திரையிடப் பட்டுள்ளதா என்று பார்த்தான். ஆமாம். முன்னங் காலில் தெளிவாகத் தெரிந்தது. அதை அழித்து விட முயன்றான். ஆனால் முனிசிபாலிடியின் கறுப்பு முத்திரை அவ்வளவு எளிதில் அழித்துவிடக் கூடியதல்ல.

வயிற்றின் கீழ் கண்ணனுக்கு நீர்வடியும் புண் இருந்தது. ஈக்கள் அதை அரித்துக் கொண்டிருந்தன.

"இந்த மாடு உன்னிடம் இருந்ததா?" கசாப்புக் கடைக்காரனில் ஒருவன் ஔசுப்பிடம் கேட்டான்.

"நீயா இதை இங்கே கொண்டு வந்தது?" ஔசுப் அவனிடம் கேட்டுப் பார்த்தான்.

"ஆமாம்" என்றான் கசாப்புக்காரன்.

கண்ணன் தன் அருமையான எஜமானரின் வியர்வை படர்ந்த உடம்பை நாவால் நக்க ஆரம்பித்து விட்டது. அந்த வியர்வையைத் துடைக்க தனது வாழ்வின் பெரும்பகுதியைத் தந்திருக்கிறது. தனது வாழ்வின் கடைசிப் பகுதியிலும் கூட அது அவ்வியர்வையை ஏற்றுக்கொள்ளும். தனக்கு ருசியாகவும் வாழ்வின் பகுதியாகவும் உள்ளதுமான வியர்வை அது. அந்த விவசாயியின் சூடான கண்ணீர் கண்ணனின் முகத்தில் வீழ்ந்தது.

''போகலாம். நேரமாகி விட்டது. பகலுக்குள் இறைச்சியைக் கடைக்குக் கொடுக்க வேண்டும்'' என்று கடைக்காரன் மற்ற இருவரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான். ஒரு வியாபாரி இரண்டு மூன்று மாடுகளுடன் புறப்பட்டு, கண்ணனை அழைத்துச் செல்லத் தயாரானார். ஆமாம். இன்னும் ஒன்றிரண்டு மணி நேரத்தில் கண்ணன் ஈஸ்டர் கொண்டாட்டத்தில் விருந்தாகி விடும். இருட்டி விட்டது.

"இந்த இடத்தை விளக்கை ஏற்றுவதற்கு முன்பு பெருக்கி விடு'' என்று மகளிடம் சொன்னாள் மரியா, ஔசுப்பை எதிர்பார்த்துக் கொண்டே.

"இன்னும் ஏன் அப்பா வரவில்லை?'' கத்ரிகுட்டி கேட்டாள்.

"விஷயமாகத் தானே போயிருக்கார். வரட்டும்'' என்று மரியா சமாதானம் சொன்னாள்.

''கோட்டயத்திற்குப் போயிருந்தால் இதற்குள் வந்திருக்க வேண்டுமே!'' துணிக்காகக் காத்திருந்த கத்ரி பொறுமையிழந்திருந்தாள். சாலையையே பார்த்துக் கொண்டிருந்தாள். மரியாவும் அங்கேதான் பார்த்துக் கொண்டிருந்தாள். ஔசுப் தென்படவில்லை. அவர்கள் விளக்கை ஏற்றினார்கள்.

தொலைவில் வெள்ளையாக உருவமொன்றைப் பார்த்தாள் "இதோ! அப்பா. ஆமாம். அவர்தான்''. கத்ரி குட்டி மகிழ்ச்சியோடு கூறினாள். முதல் முதலில் தானே கண்டதால் அவளுக்குச் சந்தோஷம். அம்மாவும் மகளும் பார்த்துக் கொண்டு அங்கே நின்றார்கள், ஒரே நினைவோடு.

''ஔசுப் தானே?'' பக்கத்து வீட்டு மாத்யூ கேட்டார். தையல்காரர் அவர். மூன்று ரவிக்கைகள் அன்றிரவு தைத்தாக வேண்டும். கத்ரி மறுநாள் காலை புறப்பட வேண்டும். தயாராக இருக்கும்படி மாத்யூஸைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். எல்லாவற்றையும் திட்டமிட்டபடி முடிக்க.

துணிகளைப் பார்க்கத் துடித்த அந்த இளங்கண்களின் முன்பு ஔசுப் கண்ணனோடு வந்து சேர்ந்தான்.

''ஐயோ! இது கண்ணன்'' என்று கத்ரி ஆச்சரியத்தோடு கூறினாள்.

"துணி எங்கே? இது தானா நீ வாங்கி வந்தது?'' என்றாள் மரியா. கண்ணன் பழைய தொழுவத்திற்குள் நுழைந்து சந்தோஷமாக தன்னைச் சாய்த்துக் கொண்டது.

அங்கே அவள் ஆயிரம் கேள்விகளால் கூச்சலிட்டு ஔசுப்பைத் துளைத்துக் கொண்டிருந் தார்கள்.

ஔசுப் மௌனமாக உட்கார்ந்திருந்தான். கைகளால் முகத்தைத் தாங்கியவாறு. மரியா நம்பிக்கையிழந்து ஆட்டங் கண்டாள். கத்ரி துயரம் பொறுக்காமல் அழுதாள். ஔசுப் ஒரு வார்த்தையும் பேசவில்லை. அவனது உடம்பு வியர்வையில் நனைந்திருந்தது.

''அப்பா, நீ இப்படிச் செய்வாயென்று நினைக்கவேயில்லை'' கண்ணீருடன் கத்ரி சொன்னாள்.

கம்மிய குரலில் அப்பா சொன்னார்: "மகளே, நீ எனக்கு எப்படியோ அப்படித்தான் கண்ணனும். அந்தக் கசாப்புக்காரன்....'' கண்ணீரைத் துண்டால் துடைத்தான். அதை முழுவதுமாகச் சொல்ல முடியவில்லை. அந்த இரவு ஒரு கொடுமையான இரவு. ஒரு பொட்டுத் தூக்கமில்லாமல் அந்த இரவைக் கழித்தார்கள்.

விடிந்தது. ஔசுப் ஒரு களிம்பு தயாரித்துக் கண்ணனின் புண்ணிற்குப் போடத் தொழுவத்திற்குச் சென்றான். அது ஓர் அருமையான களிம்பு. மாடுகளின் நோய்க்குச் சில அரிய குறிப்பிட்ட நிவாரணத்தை ஔசுப் அறிவான். விடிவதற்குள் அப்படி ஒன்றைக் கலந்து, மருந்துடன் தொழுவத்திற்குள் நுழைந்தான்.

"காலை நீட்டு..., தலையை உயர்த்து''.

கண்ணன் படுத்திருந்தது.

''கண்ணன்'' என்று கூவினான். ஔசுப்பின் நெஞ்சு உருகிற்று. கண்ணன் இனிமேல் விழிக்கமாட்டான். ஔசுப்பை, அவன் குடும்பம் குதறியடிப்பதைக் கண்டு பொறுக்காது இந்த உலகத்தை விட்டே போய் விட்டது போலும்.

கண்ணனின் பிரேதம், ஔசுப்பின் உடைந்த இதயம், இவற்றுக்கு உயரே ஒட்டடையோடிய கலப்பை. அதன் மீது சோகமாகச் சத்தமிட்டபடி ஒரு பல்லி.

*– 'தற்கால இந்தியச் சிறுகதைகள்'*
*நூலிலிருந்து மலையாளச் சிறுகதை*
*வெளியீடு : சாகித்திய அகாடமி*

• • •





# நிதி நிலை - அரிசி விலை ஒரு நிலை விளக்கம்!

"தமிழக மக்களின் அமோக ஆதரவோடு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்போதுமே ஏழை எளியவர்களின் நலனில் அக்கறையும், சமுதாயத்தின் அடித்தளத்து மக்களின் பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் தீவிர ஈடுபாடும் காட்டி வருவதை எனது அன்புக்குரிய தமிழக மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள்.

ஆயினும், தமிழக அரசின் தற்போதைய நிதி நிலைமை, கடந்த கால தி.மு.க. ஆட்சியாளர்கள் 1996 முதல் 2001 வரை செய்த பல்வேறு குளறுபடிகளால், கடுமையான நெருக்கடியில் சிக்கி உள்ளது என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மை.

·ஆண்டுத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி ஏழை எளிய மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய முடியாத நிலை; பொதுமக்களின் வசதிக்காக அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு புதிய பேருந்துகள் வாங்குவதில் சிரமம்; அரசின் பல்வேறு துறைகள் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளுக்கு பணம் பட்டுவாடா செய்ய முடியாத சிக்கல்; அரசு ஊழியர்களுக்கு அகவிலைப்படி உட்பட பல்வேறு சலுகைகளை வழங்க முடியாத சிரமம் – இப்படி பல்வேறு நெருக்கடிகளுக்கிடையே தமிழக அரசின் நிதி நிலைமை, இதுவரை தமிழ்நாடு தனது வரலாற்றில் சந்திக்காத இக்கட்டான சூழ்நிலையில் உள்ளது என்ற கசப்பான உண்மையை நான் அனைவருடனும் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் நிலவும் இந்தக் கடுமையான நிதி நெருக்கடிக்கு 1996 முதல் 2001 வரை தமிழகத்தை 5 ஆண்டு காலத்திற்கு ஆண்ட தி.மு.க. ஆட்சியும், அப்போதைய முதலமைச்சர் திரு. கருணாநிதியும் தான் காரணம் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

எனது முந்தைய ஆட்சிக் காலமான 1991 முதல் 1996–ஆம் ஆண்டு வரை, தமிழக அரசின் நிதி நிலைமை மிக ஆரோக்கியமாக இருந்தது. 1996–ஆம் ஆண்டு மே மாதம் நான் ஆட்சியை விட்டு விலகும்போது, தமிழக அரசிடம் ரூ.1,184 கோடி உபரி நிதி கையிருப்பில் வைத்து விட்டுத் தான் நான் சென்றேன். ஆனால், 1996–ஆம் ஆண்டு முதல் 2001–ஆம் ஆண்டு வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்த திரு கருணாநிதி உருப்படியான திட்டங்களில் கவனம் செலுத்தாமல், தேவையான பொருளாதார நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், திட்டமில்லா செலவுகளை பல மடங்கு அதிகரித்து, தமிழக அரசை திவாலாக்கி விட்டுச் சென்றுவிட்டார். தி.மு.க. அரசு 2001–ஆம் ஆண்டு மே மாதம் விட்டுச் சென்ற நிதிப் பற்றாக்குறை மட்டும் ரூ.1,696/– கோடி ஆகும். காலியான கஜானாவை விட்டுச் சென்றதைத் தவிர, வேறெந்த நலனையும் அவர்கள் தமிழகத்துக்கு கொடுக்கவில்லை.

2001–ஆம் ஆண்டு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்ற உடன், பொருளாதார மற்றும் நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்தது. இடையே ஏற்பட்ட அரசியல் மாற்றங்களில் அந்த நடவடிக்கைகளில் சற்று தொய்வு ஏற்பட்டது. இன்றைய சூழ்நிலையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிதி

நெருக்கடியை சமாளிக்க ஒரு Special Package Scheme – ஆக ரூ.3,000 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு வழங்க முன்வருமாறு மத்திய அரசை கடிதம் மூலமும், நேரிலும் வலியுறுத்தினோம். இருப்பினும் மத்திய அரசு தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டது. மேலும், 2001–2002–ஆம் ஆண்டில் மத்திய அரசின் வரி தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு வழங்கக் கூடிய பங்கீட்டில் கடுமையான குறைவு ஏற்பட்டுள்ளது. தமிழ் நாட்டிற்கு 2001–2002–ஆம் ஆண்டில் ரூ.540 கோடி இவ்வாறு குறைக்கப்பட்டது. இதனால், ஆண்டுக்கு ஆண்டு அதிகமாகிக் கொண்டே போகும் பற்றாக்குறை பட்ஜெட், அரசு வேலைகளுக்கு பணம் தர முடியாத நிலை ஆகிய தொய்வு நிலை தொடர்ந்து ஏற்படுகிறது.

> **“இன்றைய சூழ்நிலையில் தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியை சமாளிக்க ஒரு Special Package Scheme – ஆக ரூ.3,000 கோடி சிறப்பு நிதி ஒதுக்கீடு வழங்க முன்வருமாறு மத்திய அரசைக் கடிதம் மூலமும், நேரிலும் வலியுறுத்தினோம். இருப்பினும் மத்திய அரசு தமிழக அரசின் கோரிக்கையை ஏற்க மறுத்து விட்டது. மேலும், 2001–2002–ஆம் ஆண்டில் மத்திய அரசின் வரி தொகுப்பிலிருந்து மாநிலங்களுக்கு வழங்கக் கூடிய பங்கீட்டில் கடுமையான குறைவு ஏற்பட்டுள்ளது.”**

மத்திய அரசுதான் உதவவில்லையே என்று, உலக வங்கி (World Bank) மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) ஆகியவற்றிடம் நிதி உதவி கோரி போனபோது, தமிழ்நாட்டில் பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வரும் மானியச்சுமை மிக அதிகமாக உள்ளது; அதனால் கடன் ஏதும் தர இயலாது என கையை விரித்து விட்டனர். அதாவது, பொருளாதார மற்றும் நிதிச் சீர்திருத்தங்களை அமல்படுத்தினால் தான் ஏதாவது கடன் உதவி செய்ய முடியும் என்று தெளிவாகக் கூறி விட்டனர். மேலும், இந்த பொருளாதார சீர்திருத்தங்களை விரைந்து அமல்படுத்த தவறினால், உலக வங்கியும், ஆசிய வளர்ச்சி வங்கியும் தமிழ்நாட்டை கருப்புப் பட்டியலில் (Black list) சேர்த்து விடும். அவ்வாறு கருப்புப் பட்டியலில் தமிழ்நாடு சேர்க்கப்பட்டு விட்டால், இனிமேல் உலக வங்கியும், ஆசிய வளர்ச்சி வங்கியும் தமிழ்நாட்டிற்கு கடன் கொடுக்கவே மாட்டார்கள். மாநில அரசோடு பேச்சு வார்த்தை கூட நடத்த மாட்டார்கள். மத்திய அரசும் உதவாத நிலையில், தமிழ்நாடு என்ன செய்ய முடியும் ? எங்கே போக முடியும் ? எனவே, தமிழக அரசு நிதி சீர்திருத்த நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டுள்ளது. சுருக்கமாகச் சொன்னால், தற்போது தமிழக அரசு திவாலாகிப் போகும் நிலையில் தான் உள்ளது. அத்தகைய நிலையிலிருந்து தப்பித்து, ஆரோக்கியமான நிதி நிலைமைக்கு மீண்டு வர ஒரு சில உறுதியான நடவடிக்கைகளை எடுப்பது அவசியம் என்ற மறைக்க முடியாத உண்மையை நான் தமிழக மக்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இந்நிலையில், திடீரென்று இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India) மற்றும் பாரத ஸ்டேட் வங்கி (State Bank of India), தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு, உடனடியாக 650 கோடி ரூபாய் நிலுவையிலுள்ள உணவு மானியத்தை செலுத்த வேண்டும் என்று தமிழக அரசை பணித்துள்ளன. இப்போது தமிழக அரசு சந்தித்து வரும் ரொக்கப் பற்றாக்குறை சூழ்நிலையிலும், தமிழக அரசின் நிதி நிலைமை உள்ள இக்கட்டான நிலையிலும், இவ்வளவு பெரிய தொகையை உடன் வழங்க முடியவில்லை. இந்தத் தொகையை வழங்காவிட்டால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ரிசர்வ் வங்கியிடமிருந்தும், பாரத ஸ்டேட் வங்கியிலிருந்தும் புதிதாக கடன் பெற முடியாது. கடன் பெற முடியவில்லை என்றால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் 2002– ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 1–ஆம் தேதி முதல் தொடங்கும் குறுவைப் பருவத்தில் நெல் கொள்முதல் செய்யமுடியாது. இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு தான் தமிழக அமைச்சரவை 24.9.2002 அன்று கூடி, நெல் கொள்முதல் முறையில் மாற்றம் மற்றும் ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் விலையில் மாற்றம் போன்ற யதார்த்தமான, தவிர்க்க முடியாத சில முடிவுகளை துணிவுடன் மேற்கொண்டது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக, தமிழ்நாட்டின் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்று அகில இந்திய அளவில் மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் மிகக் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டு வந்ததை தமிழக அரசு அரும்பாடுபட்டு இதுவரையில் தொடர்ந்து வந்தது.



அண்மையில் நடைபெற்ற ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலின் போதும், அதனை அடுத்து நடைபெற்ற சைதாப்பேட்டை, வாணியம்பாடி மற்றும் அச்சரப்பாக்கம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்களின் போதும், நான் வெளிப்படையாகவே தமிழகத்தின் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை, அதாவது – தற்போது வழங்கப்பட்டு வருகின்ற கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலை உயர்த்தப்படமாட்டாது என்று பொதுவான உறுதியை அளித்திருந்தேன்.

ஏழை எளியவர்களின் நலன் காக்கும் எனது இந்த நிலைப்பாட்டிலிருந்து நான் இப்போதும் மாறவில்லை என்பதை நான் வலியுறுத்தி கூற விரும்புகிறேன். தற்போது தமிழகத்தின் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையில் தமிழக அரசு அறிவித்துள்ள மாற்றங்கள் எத்தகைய நியாயமான, தவிர்க்க முடியாத காரணங்களுக்காக செய்யப்பட்டு இருக்கின்றன என்பதை எனது அன்புக்குரிய தமிழகத்து பெரு மக்களுக்கு விளக்கிக் கூறுவதை எனது கடமையாக கருதுகின்றேன்.

தமிழ்நாட்டில் மொத்தம் ஏறத்தாழ 1 கோடியே 60 இலட்சம் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் 1 கோடியே 36 இலட்சம் குடும்ப அட்டைகள் அரிசி வாங்கும் அட்டைகள் ஆகும். அரிசி வாங்குவதில் உள்ள முறைகேடுகளை களைய கூப்பன் முறையைக் கொண்டு வந்தோம். இதன் வாயிலாக தற்போது 1 கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு கூப்பன் முறை கொண்டு வரப்பட்டு பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் அரிசி பெறுவதற்கு தகுதி உள்ளவையாக இருக்கின்றன.

இந்த 1 கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் மாதந்தோறும் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலையில் அரிசி வாங்கி வருகிறார்கள். இது போன்று, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த விலையில், கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கு மாதந்தோறும் 1.20 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ வரை அரிசி சலுகை விலையில் வழங்கப்படுவதால், தமிழக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 1,600 கோடி ரூபாய் நிதிச் சுமை ஏற்படுகிறது.

இது மட்டுமன்றி, தமிழகத்தில் இதுவரை நேரடி நெல் கொள்முதல் (Direct Paddy Procurement) முறையின் வாயிலாகத்தான், பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு தேவைப்படுகின்ற அரிசி வாங்கி வழங்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், அதிகமாக நெல் விளையும் மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா, ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள், இத்தகைய நேரடி கொள்முதல் முறையைப் பின்பற்றாமல், மத்திய அரசு தொகுப்பிற்கு வேண்டிய நெல்லை இந்திய உணவுக் கழக (Food Corporation of India) நிறுவனத்திற்காக நெல் கொள்முதல் செய்யும் முகவர்களாக செயல்பட்டு வருகின்றன. மேலும், மேற்குவங்காளம், உத்திரபிரதேசம் மற்றும் சத்தீஸ்கர் போன்ற மாநிலங்கள் மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் முறையைப் (Decentralised procurement) பின்பற்றி மத்திய அரசின் சார்பாக நெல் கொள்முதல் செய்கின்றன. ஆகவே, தமிழ்நாட்டிலும் நேரடி கொள்முதல் முறையை நிறுத்தி விட்டு, அதற்குப் பதிலாக மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் செய்யும் புதிய முறையை செயல்படுத்துவதற்காக, தமிழக அரசு, மத்திய அரசுடன் ஓர் ஒப்பந்தத்தை (Memorandum of Understanding) செய்துகொண்டு, வருகின்ற 1.10.2002 முதல் அதனை அமல்படுத்த முடிவு செய்துள்ளது. இதனால் தமிழ்நாட்டிற்கு சில நன்மைகள் ஏற்படும். அதாவது, இதன்படி உணவு தானியம் கொள்முதல் செலவு, உணவு தானியம் தயாரித்தலுக்கான செலவு மற்றும் விநியோகச் செலவு ஆகியவற்றை மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. எல்லா மாநிலங்களும் பொதுவிநியோகத் திட்டத்திற்குத் தேவைப்படும் உணவு தானியங்கள் முழுவதையும் மத்திய தொகுப்பிலிருந்தே எடுத்துக் கொள்கின்றன. இப்படி செய்வதின் மூலம் அரிசியின்

**பிற மாநிலங்களில் அரிசி விலை – ஓர் ஒப்பீடு**

| மாநிலங்கள் | வறுமைக் கோட்டிற்கு கீழே | வறுமைக் கோட்டிற்கு மேலே |
|---|---|---|
| ஆந்திரா | ரூ. 5.25 | ரூ.9.00 |
| மேற்கு வங்காளம் | ரூ.6.15 | ரூ.9.00 |
| கேரளா | ரூ.6.20 | ரூ.8.90 |
| மகாராஷ்டிரா | ரூ.6.00 | ரூ.9.00 |
| கர்நாடகா | ரூ.6.15 | ரூ.9.00 |

விலை குறைவதுடன் மானியச் சுமையும் வெகுவாகக் குறைகிறது.

இதனால் தமிழ்நாட்டிற்கு என்னென்ன நன்மைகள் என்பதை சற்று விளக்கமாக கூற விரும்புகிறேன்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நேரடி கொள்முதல் செய்யப்படும் போது ஒரு கிலோ அரிசிக்கு 12 ரூபாய் செலவாகிறது. கிலோ ஒன்றிற்கு 12 ரூபாய் செலவு செய்து, அந்த அரிசி பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகள் மூலம் விநியோகத்திற்கு கிலோ ஒன்றிற்கு ரூ. 3.50 என்ற விலைக்கு வழங்கப்படுகிறது. இதனால் தமிழக அரசுக்கு கிலோ ஒன்றிற்கு ரூ. 8.50 நஷ்டம் ஏற்படுகிறது.

தமிழகத்தில் பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றிற்கு 2 இலட்சம் டன் அளவிற்கு அரிசி வழங்கப்படுகிறது. இதில் ஒரு இலட்சம் டன் அரிசி தமிழக அரசால் கிலோ ஒன்றுக்கு ரூ.12 என்ற விலைக்கு நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கு விற்கப்படுகிறது. மத்திய தொகுப்பிலிருந்தும் சுமார் ஒரு இலட்சம் டன் அரிசியை தமிழக அரசு வாங்கி நியாய விலைக் கடைகளில் வழங்குகிறது. இதில் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் குடும்பங்களுக்காக ( Below Poverty Line Families) மத்திய அரசு நிர்ணயித்துள்ள கிலோ ஒன்றுக்கு ரூ.5.65 என்ற விலைக்கு அரிசியை வாங்கி அதை தமிழக அரசு கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கு நியாய விலை கடைகளில் வழங்குகிறது. 1.20 கோடி குடும்ப அட்டைகளில் 48 இலட்சம் அட்டைகளை மட்டுமே மத்திய அரசு வறுமை கோட்டிற்கு கீழே உள்ள BPL குடும்பங்களாக அங்கீகரிக்கிறது. ஆகவே மீதமுள்ள 72 இலட்சம் குடும்ப அட்டைகளுக்கு வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள APL குடும்பங்களுக்காக மத்திய அரசு நிர்ணயித்துள்ள கிலோ ஒன்றுக்கு ரூ.8.30 என்ற விலைக்கு தமிழக அரசு கட்டாயமாக அரிசி வாங்க வேண்டியுள்ளது.

ஆனால் அவ்வாறு கிலோ ஒன்றுக்கு ரூ.8.30 என்ற விலைக்கு தமிழக அரசு வாங்கும் அரிசியும் தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைகளில் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற மிகக் குறைந்த விலைக்கே விற்கப்படுகிறது. இதன் வாயிலாக பெருத்த அளவில், அதாவது, ஒவ்வொரு ஆண்டும் ரூ.1,506 கோடி அளவுக்கு தமிழக அரசுக்கு மானியச் சுமை ஏற்படுகிறது.

இன்றைய சூழ்நிலையில் நேரடியாக கொள்முதல் செய்வதன் மூலமும், மத்திய தொகுப்பிலிருந்து அரிசியை வாங்கி வழங்குவதிலும் வருடம் ஒன்றிற்கு ரூ.1,506 கோடி அளவிற்கு மானியச் சுமை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் தமிழக அரசு உள்ளது. இது மட்டுமல்லாமல் பொது விநியோகத் திட்டத்தில் அரிசி வழங்கும் போது, போக்கு வரத்துச் செலவிற்கும், விநியோக செலவிற்கும் வருடம் ஒன்றிற்கு ரூ.100 கோடி செலவும் சேர்த்து, மொத்தமாக இதற்கு ஏறத்தாழ ரூ.1,600 கோடி செலவு செய்யப்படுகிறது. தமிழக அரசு இனி தொடர்ந்து இவ்வளவு பெரிய மானியச் சுமையை தாங்க முடியாத இக்கட்டான சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இவ்வளவு சுமையை தமிழக அரசு தாங்க முடியாத காரணத்தால் தான், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வழங்க வேண்டிய மானியத் தொகை ரூ.650 கோடியை வழங்க முடியாத நெருக்கடியான சூழ்நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாகத் தான், நேரடியாக நெல் கொள்முதல் செய்யும் முறையில் மாற்றத்தையும், நியாய விலைக் கடைகளில் வழங்கும் அரிசியின் விலையில் மாற்றத்தையும் தமிழக அரசு தவிர்க்க முடியாமல் அறிவித்துள்ளது என்பதை கனத்த இதயத்தோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**தமிழ்நாட்டின் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் அரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்று அகில இந்திய அளவில் மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் மிகக் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டு வந்ததை, தமிழக அரசு அரும்பாடுபட்டு இதுவரையில் தொடர்ந்து வந்தது.**

தமிழகத்தின் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசியின் விலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மாற்றங்கள் சமுதாயத்தின் அடித்தளத்து மக்களான ஏழை எளியவர்களை எந்த விதத்திலும் பாதிக்கக் கூடாது என்பதற்காகத் தான், அரிசி பெறுகின்ற குடும்ப அட்டைதாரர் ஒவ்வொருவருக்கும் தற்போதுள்ள 20 கிலோ வரை வழங்கும் அரிசியில், முதல் 10 கிலோ அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விகிதத்திலும், எஞ்சிய 10 கிலோ வரை அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.6 என்ற விகிதத்திலும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் வாயிலாக ஏழை எளியவர்களின் நலன் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதை எனது தலையாய கடமையாகக் கருதித்தான் இத்தகைய மிகக் குறைந்த அளவிலான அரிசி விலை மாற்றத்தை அறிவித்திருக்கிறேன் என்பதை தெளிவுப்படுத்த விரும்புகிறேன்.



தற்போது அறிவிக்கப்பட்டுள்ள அரிசி விலை மாற்றத்திற்குப் பின்னரும் கூட, தமிழ்நாட்டில் தான் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் விட இந்தியாவிலேயே மிகக் குறைந்த அளவுக்கு உள்ளது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக, ஆந்திரபிரதேச மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.5.25–க்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.9.00–க்கும்; மேற்கு வங்காள மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.6.15–க்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.9.00–க்கும்; கேரள மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.6.20–க்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.8.90–க்கும்; மகாராஷ்டிரா மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.6.00–க்கும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ள குடும்பங்களுக்கு ஒரு கிலோ அரிசி ரூ.9.00–க்கும்; கர்நாடக மாநிலத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.6.15–க்கும் வறுமை கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.9.00 என்ற விலைக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இதை வைத்துப் பார்க்கும் போது, தற்போது தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ள அரிசி விலை மாற்றத்திற்கு பிறகும் கூட, தமிழ்நாட்டில் தான் நியாய விலைக் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற அரிசியின் விலை மிக மிகக் குறைவாக உள்ளது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மற்ற மாநிலங்களில் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் விலை தமிழகத்தை விட அதிகம் என்பது ஒரு புறம் இருக்க, இதில் கவனிக்கப்பட வேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால், இந்த மாநிலங்கள் எல்லாம் மத்திய அரசிடமிருந்து வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களுக்கான அரிசியை கிலோ ஒன்றுக்கு ரூ.5.65–க்கு வாங்கி ரூ.6.15–க்கும்; ரூ.6.20–க்கும்; வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர்களுக்கான அரிசியை ரூ.8.30–க்கு வாங்கி ரூ.9.00–க்கும் விற்பனை செய்கின்றன என்பது தான். இதன் வாயிலாக, மற்ற மாநிலங்களில் அந்தந்த மாநில அரசுகளுக்கு நிதிச் சுமை கூடுவதற்கு மாறாக, விநியோக செலவு போக சற்று வருவாய் ஈட்டக் கூடிய சூழ்நிலை தான் நிலவி வருகிறது. ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக, தமிழ்நாட்டில் மட்டும் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளோர் (மத்திய அரசு கணக்குப்படி 48 இலட்சம்) மற்றும் வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளோர் என்ற இரு பிரிவினரும் அடங்கிய ஏறத்தாழ 1.20 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு, நேரடி கொள்முதல் வாயிலாக கிலோ ஒன்றுக்கு ரூ.12.00 ஆகவும், மத்தியத் தொகுப்பில் இருந்து வறுமைக் கோட்டின் கீழே உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.5.65 என்ற விலையிலும், வறுமைக் கோட்டிற்கு மேல் உள்ளவர்களுக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.8.30 என்ற விலையிலும் வாங்கப்பட்டு, அனைத்து 1.20 கோடி குடும்ப

**1 கோடியே 20 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைகளில் மாதந்தோறும் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலையில் அரிசி வாங்கி வருகிறார்கள். இது போன்று, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த விலையில், கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கு மாதந்தோறும் 1.20 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு 20 கிலோ வரை அரிசி சலுகை விலையில் வழங்கப்படுவதால், தமிழக அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 1,600 கோடி ரூபாய் நிதிச் சுமை ஏற்படுகிறது.**

அட்டைதாரர்களுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற மிகக் குறைந்த விலைக்கே தொடர்ந்து இது வரை அரிசி வழங்கப்பட்டுள்ளது. இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், அரிசியை கிலோ ஒன்றுக்கு ரூ.12, ரூ.5.65, ரூ.8.30 ஆகிய மூன்று விதமான விலைகளுக்கு வாங்கி, எல்லா குடும்ப அட்டைதாரர்களுக்கும், அதாவது 1.20 கோடி குடும்ப அட்டைகளுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்ற விலைக்கே தமிழக அரசு வழங்கி வந்துள்ளது.

ஏழை எளியவர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்ற காரணத்தினால் தான், இவ்வாறு இந்தியாவிலேயே மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் மட்டும் தான் நியாய விலைக் கடைகளில் வழங்கப்படும் அரிசியின் விலை, மானியச் சலுகை வழங்கப்பட்டு மிகவும் குறைவாக வைக்கப்பட்டிருந்த காரணத்தால் தான், ஆண்டுதோறும் தமிழக அரசுக்கு ரூ.1,600 கோடி அளவுக்கு மானியச் சுமை ஏற்பட்டு வந்துள்ளது. தற்போது, மாதந்தோறும் வழங்கப்படுகின்ற 20 கிலோ அரிசியின் விலை, 10 கிலோவிற்கு, கிலோ ஒன்றுக்கு ரூ.3.50 என்றும், மீதமுள்ள அரிசி 10 கிலோ வரை கிலோ ஒன்றுக்கு ரூ. 6 என்றும் மாற்றப்பட்டாலும் கூட, இதன் வாயிலாக தமிழக அரசிற்கு ஆண்டுதோறும் ஏற்படக் கூடிய நிதிச் சுமை ரூ.1,600 கோடியிலிருந்து, சற்று குறைந்து ரூ.774 கோடியாக இருக்குமே தவிர, முற்றிலுமாக நீங்காது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்போதும் இந்தியாவிலேயே ரேஷன் கடைகளில் வழங்கப்படும் அரிசிக்காக ஏற்படும் அதிக மானியச் சுமை தமிழக அரசுக்குத்தான் இருக்கும்.

**இன்றைய சூழ்நிலையில் நேரடியாக கொள்முதல் செய்வதன் மூலமும், மத்திய தொகுப்பிலிருந்து அரிசியை வாங்கி வழங்குவதிலும் வருடம் ஒன்றிற்கு ரூ.1,506 கோடி அளவிற்கு மானியச் சுமை ஏற்க வேண்டிய கட்டாயத்தில் தமிழக அரசு உள்ளது. இது மட்டுமல்லாமல் பொது விநியோகத் திட்டத்தில் அரிசி வழங்கும் போது, போக்குவரத்துச் செலவிற்கும், விநியோகச் செலவிற்கும் வருடம் ஒன்றிற்கு ரூ.100 கோடி செலவும் சேர்த்து, மொத்தமாக இதற்கு ஏறத்தாழ ரூ.1,600 கோடி செலவு செய்யப்படுகிறது.**

பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டின் நியாய விலைக் கடைகளில் மாதந்தோறும் விநியோகம் செய்யப்படுகின்ற மொத்த அரிசியில் கிட்டத்தட்ட 33 சதவீதம் அளவிற்கு நியாய விலைக் கடைகளிலிருந்து கள்ளத்தனமாக கடத்தப்பட்டு வெளிச்சந்தையில் அதிக விலைக்கு வியாபாரிகளால் விற்கப்படுகின்ற அவல நிலை நிலவுகிறது என்று மத்திய அரசினால் நியமிக்கப்பட்ட T.E.C.S. நிறுவனம் 1997–ல் நடத்திய ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும், இதே கருத்தை Comptroller and Auditor General of India (CAG) அவர்களும் தன்னுடைய மார்ச் 1999–ஆம் ஆண்டு வரையிலான தமிழக அரசுக்குரிய ஆய்வு அறிக்கை 2000–த்தில் குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், தமிழக அரசு இத்தனை ஆண்டுக் காலமாக இவ்வளவு பெரிய மானியச் சுமையை ஏற்றுக் கொண்டு வந்த போதிலும், அதில் மூன்றில் ஒரு பங்கு அரிசி ஏழை எளிய மக்களுக்குப் போய் சேராமல் திருடப்பட்டு கொள்ளை இலாபத்திற்குக் கள்ளச் சந்தையில் விற்கப்பட்டு வந்துள்ளது. இதை வைத்து பார்க்கும் போது, தற்போது தமிழக அரசு அறிவித்துள்ள அரிசி விலை மாற்றம், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற அரிசி கள்ளத்தனமாக வெளிச் சந்தைக்கு முறை கேடாக இவ்வாறு கடத்தப்படுவதை பெரிதும் கட்டுப்படுத்தும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தற்போது, தமிழக அரசு அறிவித்துள்ள இந்த அரிசி விலை மாற்றம் ஏழை எளியவர்களை பாதிக்காத வண்ணம் அமைய வேண்டும் என்பதற்காகத் தான், மாதந்தோறும் ஒரு குடும்ப அட்டைதாரருக்கு வழங்கப்படுகின்ற 20 கிலோ வரையிலான அரிசியில், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 10 கிலோ வரை அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு மிகக் குறைந்த விலையான ரூ.3.50 என்ற விலையிலும், மீதமுள்ள 10 கிலோ அரிசிக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.6 என்ற குறைந்த விலையிலும், அரிசி விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆந்திரப்பிரதேசத்தில் கூட, அன்றைய முதலமைச்சர் திரு.என்.டி.ராமாராவ் அவர்கள் 1994–ல் ஆட்சிக்கு வந்தவுடன் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் என்ற விலைக்கு அரிசி வழங்கப்படும் என்று அறிவித்தார். ஆனால், காலப்போக்கில் ஆந்திராவில் கூட இந்த விலைக்கு அரிசி வழங்க இயலவில்லை. அங்கு நிலவும் மானியச் சுமையை சமாளிக்க முடியாமல் 1995–லிருந்தே படிப்படியாக அரிசியின் விலை உயர்த்தப்பட்டு தற்போது கிலோ ஒன்றுக்கு ரூ.5.25 என்ற விலைக்கு குடும்ப அட்டைதாரர்களுக்கு அரிசி வழங்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு ஆந்திரபிரதேசமும் தள்ளப்பட்டு விட்டது என்பதை இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். அதுவும் BPL அட்டைதாரர்களுக்கு மட்டும் தான். APL அட்டைதாரர்களுக்கு ஆந்திரப் பிரதேசத்தில் கிலோ ஒன்றுக்கு ரூ.9 என்ற விலையில் அரிசி விற்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, தமிழக அரசு தொடர்ந்து எடுத்து வருகின்ற பொருளாதார சீர்த்திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகத் தான் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள அரிசி விலை மாற்றமும் அமைந்துள்ளது என்பதை நான் தெளிவுப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். இத்தகைய நிதி மற்றும் பொருளாதார சீர்த்திருத்த நடவடிக்கைகளை முந்தைய தி.மு.க. அரசு உரிய நேரத்தில் மேற்கொள்ளாத காரணத்தினால் தான் தமிழகத்தில் தற்போது வரலாறு காணாத அளவிற்கு கடுமையான நிதி நெருக்கடி நிலவி வருகின்றது. ஆகவே, முந்தைய தி.மு.க. ஆட்சியினர் நடத்திய அலங்கோல ஆட்சியின் காரணமாக, நோய் நீங்குவதற்காக கசப்பான மருந்தினை உட்கொள்ளுவது போல அமைந்துள்ள இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்கு, இன்றைய தமிழக அரசு தள்ளப்பட்டு விட்டது என்பதையும் இங்கே நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

என்வே, இதுபோன்ற நிதி மற்றும் பொருளாதார சீர்த்திருத்த நடவடிக்கைகள் தற்போது தமிழ்நாட்டில் நிலவி வருகின்ற கடுமையான நிதி நெருக்கடியை சரி செய்வதுடன், தமிழக அரசின் நிதிச் சுமையைக் குறைத்து, வருவாயை பெருக்குகின்ற நிலையை விரைவில் உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதை எனது அன்புக்குரிய தமிழக பெருமக்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நான் எடுக்கின்ற ஒவ்வொரு நடவடிக்கையையும், அனைத்துத் தரப்பு தமிழக மக்களின், குறிப்பாக ஏழை எளியோரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காகத் தான் மேற்கொண்டு வருகிறேன். கடந்த தி.மு.க ஆட்சியாளர்களின் நிர்வாக சீர்கேட்டால் தடம் புரண்டிருக்கின்ற தமிழகத்தின் நிதி நிலைமையை சீர்படுத்தும் எனது அனைத்து முயற்சிகளும், ஆரம்பத்தில் எதிர்கட்சியினரின் விமர்சனத்திற்கு உள்ளானாலும், சிறிது காலத்திற்குப் பின்னர் அவை நல்ல விளைவுகளை ஏற்படுத்தி வருகின்ற காரணத்தினால், தமிழக மக்கள் என்னுடைய முயற்சிகள் அனைத்திற்கும் தமது உள்ளார்ந்த ஒத்துழைப்பை தொடர்ந்து நல்கி வருகிறார்கள் என்பதே உண்மை ! இதுவே என்னை மென் மேலும் உற்சாகத்தோடு மக்கள் பணியாற்ற தொடர்ந்து ஊக்கம் தரும் உந்துதலாக அமைந்துள்ளது என்பதை இங்கு தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

**தற்போது அறிவிக்கப்பட்டுள்ள அரிசி விலை மாற்றத்திற்குப் பின்னரும் கூட, தமிழ்நாட்டில் தான் நியாய விலைக் கடைகளில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை மற்ற மாநிலங்கள் எல்லாவற்றையும்' விட இந்தியாவிலேயே மிகக் குறைந்த அளவுக்கு உள்ளது.**

நான் தற்போது எடுத்து வருகின்ற நிதி மற்றும் பொருளாதாரச் சீர்த்திருத்தங்களும் விரைவில் பெரும் வெற்றி அடைந்து, தமிழகத்தின் நிதி நிலைமை முற்றிலும் சீர் அடையும் என்பதில் எனக்கு சிறிதளவும் ஐயமில்லை.

எனது அன்புக்குரிய தமிழகத்துப் பெருமக்கள் நான் எடுத்துவருகின்ற நிதி மற்றும் பொருளாதாரச் சீர்த்திருத்த நடவடிக்கைகளுக்கு தமது ஒத்துழைப்பை தொடர்ந்து நல்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 25.9.2002

# தமிழ்நாடு காவல்துறை அலுவலர்களுக்கு கணினிப் பயிற்சி


**'இ'- லேர்னிங் பயிற்சியின் முதல்கட்ட நடவடிக்கை:**

காவல் பயிற்சிக் கல்லூரி, சென்னை மற்றும் அண்ணா பல்கலைக்கழகமும் இணைந்து 20,000 மாவட்ட காவல்துறை அலுவலர்களுக்கு (லோக்கல் மற்றும் ஆயுதப்படை) ஒரு வாரத்திற்கான கணினி விழிப்புணர்ச்சி பயிற்சியளிக்கப்படுகிறது.

இதன்காரணமாக, காவல்துறை இயக்குநர் (பயிற்சி) மற்றும் காவல் பயிற்சிக் கல்லூரி அதிகாரிகள், அண்ணா பல்கலைக்கழகத் துணைவேந்தர் திரு. பாலகுருசாமி, அண்ணா பல்கலைக்கழக இயக்குநர், சி.பி.டி.இ. மற்றும் பேராசிரியர் உதயகுமார், தமிழ்நாடு அரசு உள்துறை மற்றும் கல்வித்துறை அதிகாரிகளுடன் ஆழ்ந்து சிந்தித்து, தொடர்ந்து கலந்துரையாடல்கள் நடந்தேறியது. அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆலோசனைப்படி 200 பொறியியல் கல்லூரிகளின் கீழ் காவல்துறை அலுவலர்களுக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

அண்ணா பல்கலைக்கழகம் தமிழில் இப்பயிற்சிக்கான பாடத்திட்டத்தையும், பயிற்சித் தொடர்களையும் வகுத்துள்ளது. காவல்துறை அலுவலர்களின் கணினி அறிவை இந்த ஒரு வாரப் பயிற்சியின் மூலம் செய்முறைப்படுத்தியும், செயல்முறைப்படுத்தியும் நடத்த உத்தேசித்துள்ளது. இதன்மூலம் காவல் நிலையத்திலிருந்து ஒரு ஆயுதப்படை காவலர் உள்பட 5 காவலர்கள் கணினிப் பயிற்சி பெறுவர். இப்பயிற்சி ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் காவல்துறை அமைச்சுப் பணியாளர்களுக்கும் அளிக்கப்படும். சம்பந்தப்பட்ட மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மாவட்டத்திலுள்ள பொறியியல் கல்லூரியுடன் கலந்து ஆலோசித்து இப்பயிற்சினை திறம்பட அளிக்க ஏற்பாடு செய்வார். எல்லா தனியார் பொறியியல் கல்லூரிகளும் இப்பயிற்சியினை எந்த செலவுமில்லாமல் காவல்துறை அலுவலர்களுக்கு அளிக்க மிகவும் ஆர்வத்துடன் முன் வந்துள்ளனர். ஒரே சமயத்தில் இப்பயிற்சி தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களிலும் 19.8.2002 அன்று துவக்கப்பட்டது.

திரு. எஸ். கணபதி, இ.கா.ப. காவல்துறை இயக்குநர் (பயிற்சி), இந்த கணினி விழிப்புணர்ச்சிப் பயிற்சியினை சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகத்தில், அண்ணா பல்கலைக்கழகத்தின் பதிவாளர் திரு. கணபதி அவர்கள் முன்னிலையில் துவக்கி வைத்து, காவல்துறைக்கு கணினி அறிவு மிகவும் அவசியம் என்பதையும் வலியுறுத்தினார், மற்றும் இப்பயிற்சி சம்பந்தமாக "காவல்துறை அலுவலர்களுக்கான கணினி பயிற்சி கையேடு" என்ற புத்தகத்தை வெளியிட்டார். இதை சென்னை மாநகர காவல்துறை இணை ஆணையாளர் (தெற்கு) திரு. ஜே. கே. திரிபாதி, இ.கா.ப. அவர்கள் பெற்றுக்கொண்டார். சென்னை மாநகர அசோக் நகர் சரக காவல்துறை துணை ஆணையாளர் திரு. சமுத்திரபாண்டி அவர்கள் வரவேற்புரை வழங்கினார். காவல் பயிற்சிக் கல்லூரி முதல்வர் திரு. மு.சி. சாரங்கன் அவர்கள் தொடக்கவுரை கொடுத்து, காவல் துறையை மேலும் வலுப்படுத்த காவல்துறைக்கு கணினிப் பயிற்சி மிகவும் அத்தியாவசியமானது என வலியுறுத்தி தமிழ்நாடு அரசு கணினிப் பயிற்சி கொடுக்க ஏற்பாடு செய்துள்ளது எனவும் குறிப்பிட்டார்.



□ □ □



தமிழகம் தெய்வநலம் நிறைந்த திருநாடாகும். தமிழகத்தில் கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ள கோயில்களே பல்லாயிரக்கணக்கில் உள்ளன. அவற்றுள், சைவ வைணவக் கோயில்களுள், பல காலத்தாலும் சமயத்தாலும் உயர் சிறப்புடையனவாகும். தேவாரத்திருப்பதிகங்களால் குறிப்பிடப்பட்ட சிவன் கோயில்களும் பழமைக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

**இறையகத் தோற்றம் ஒரு விளக்கம்**

பண்டைய காலத்தில் மரத்தாலும், செங்கற்களாலும் இடமும் தளமும் கோலிய வகையில் தோற்றங்கொண்டிருந்த தமிழகக் கோயில்களுள், அக்காலச் சோழர், பாண்டியர் ஆகிய மன்னர்களும் அவர்கள் வழித்தோன்றல்களும், பின்னர்த் தொடர்ந்த சரித்திரகாலப் பல்லவ பாண்டிய சோழர்களும் கோயில்களைப் பெரிதாக்கியும், புதுப்பித்தும், புதிய கோயில்களை எழுப்பியும் உள்ளனர்.

பழைய கோயில்களுள் சில திருச்சுற்று, மதிள் எழுநிலைமாடம் (கோபுரம்) விமானம் முதலான அங்கங்களுடன், சிறப்புப் பெயர்களைக் கொண்டனவாகவும் இருந்துள்ளதனைத் தேவாரப் பாடல்களாலும், ஆழ்வார்களின் பாசுரங்களாலும் அறியமுடிகிறது.

பல்லவர் காலம் முதலாகக் கட்டப்பெற்ற கோயில்கள், கட்டிடக் கலை வளர்ச்சியாகவும், சிற்பக் கலை வளர்ச்சியாகவும், ஒப்பனைத்திறம் பெற்ற பாகுபாட்டுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதனால், அக்கால அரசும் மக்களும் சமய நெறியில் இறையுணர்வினையும் கலையார்வத்தினையும் கோயில்களில் நிலை நாட்டியுள்ளமை புலனாகின்றது. தமிழகத்தில் வளர்ச்சி பெற்றுள்ள கருங்கற் கட்டிடக் கலைக்கமைந்த கற்றளிகள் கலைக்கருவூலமாகவும், வரலாற்றுச் சான்றாகவும் அமைந்துள்ளன.

இத்தகைய கட்டிடக்கலை வளர்ச்சிப் பணியில் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் ஆர்வங்




# கோயிற் கட்டிடக் கலை

முனைவர் கோ. தெய்வநாயகம்

காட்டியுள்ளனர். வடபுலத்தே மேலைச்சாளுக்கியர், இராட்டிரகூடர், ஒய்சளர் ஆகிய மன்னர்களும் அவர்களின் மரபினரும் கோயிற்கட்டிடக்கலை வளர்ச்சியில் மிகுந்த பற்றுடையவர்களாக இருந்துள்ளதனை, அவர்களால் எழுப்பப்பட்ட கற்றளிகள் எடுத்துக்காட்டுகின்றன.

### புதுமைத்தோற்றம்

கோயில்களின் பழமையான தோற்றம் எவ்வாறு இருந்திருக்கக் கூடுமென்று, தமிழ் இலக்கியங்கள் தரும் செய்திகளைக் கொண்டும், பழமையான கோயில் தடங்களைக் கொண்டும் ஆய்ந்து அறிகின்ற போது, கிராமங்களின் தலைப்பிடம், பக்கச்சார்பிடங்கள், குன்றின் அடிவாரம், குன்றிலமைந்த குகைகள், குன்றின் மேல்தளம்,



ஆற்றங்கரை, சோலை, காட்டகம், மேட்டிடம் ஆகிய பகுதிகளில் புதுமையும் கவர்ச்சியும் தனித் தன்மையும் பொருந்திய இயற்கைச் சூழல்களின் நடுவிடத்திலேயும், தோற்றப் பொலிவும், பயனும்பெற்ற மரங்களின் அடியிடத்திலேயும், தரைமட்டத்திலும், மேடையமைப்பிலும் கருதிய தெய்வவுருவத் தினையோ அன்றி அறிகுறியாகும் பொருளினையோ நிலைப்படுத்தி அக்கால மக்கள் வழிபட்டுள்ளமை புலனாகின்றது.

அறிகுறிச்சின்னம் 'கந்து' என்ற பெயரால் கட்டப்பெற்றுள்ளது. அதை நிறுத்திய மேடை மன்று, பொதியில் என்ற பெயர்களைப் பெற்றுள்ளது. பொதியில் பக்கச்சுவரால் கோலிய மேடையாகவும் வளர்ந்துள்ளது. அன்று அமைக்கப்பட்ட தெய்வ வழிபாட்டுக்குரிய பொதியில், கால வளர்ச்சியில் இறையகமாக உருப்பெற்றுள்ளது. அதுவே கருவறை, மூலத்தானம் என்றெல்லாம் குறிப்பிடப் பெறுவதாகும். கோயிலின் முதலிடமும் தலைமைப் பகுதியும் இதுவேயாகும்.

இப்பகுதி அக்காலத்தில் தரைமட்டத்திற்கு மேல் மண்மேடையாகவும், செங்கற்களால் கட்டப்பட்ட தளமாகவும், மரங்களை அறுத்துச் செப்பனிட்டு அளவுடன் அமைக்கப்பட்ட கோப்புத் தளமாகவும் இருந்திருக்கலாகும். இத்தகைய கட்டுமானங்கள் தட்ப வெப்பத்தாலும் காலச்சூழலாலும் எளிதில் மாற்றமும் அழிவும் பெறக்கூடியவை. எனவே, வலிமையும் கட்டுக்கோப்பும் திண்மையும் பொருந்திய



திண்ணையாக, கண்ணக்கலவையுடன் செங்கற்களால் கட்டப்பெற்ற உருமாற்றம் நிகழ்ந்துள்ளன. இவ்வுருமாற்ற வளர்ச்சியில், கட்டிடக் கலைஞர் பல முறைகளைப் பட்டறிவால் தேர்ந்து கற்பித்துக் கட்டும் திறமையில் கை தேர்ந்தவர்களாக விளங்கியுள்ளனர்.

### கட்டிட அமைவியல்

இவ்வளவில் கருவறை அளவிலான பகுதியே கோயில்களின் தோற்றக்கால வடிவமைப்பாகு மென்பது. கறிக்கப்பெற்றதாம். செங்கற் கட்டிடக் கோயில்கள் கலைஞனின் அறிவியல் வளர்ச்சிக்கேற்பப் பல அங்கங்களுடன் தேவைகளுக்கேற்பப் பெருக்கம் பெற்றன. இந்நிலையினின்றும் கருங்கற் கட்டிட வளர்ச்சியாகக் கோயில்கள் தோன்றியபோதும், உருமாற்றம் பெற்றபோதும், கலைஞன் கட்டிடக் கலைக்கென அனுபவ மாகவும் மரபுநிலையாகவும் பொருத்த மாகவும் பல பெயர்களையும் திட்டங் களையும் நிலைப்படுத்தியுள்ளனர்.

கோயில் எழுப்பத் தேர்ந்த நிலப்பரப்பிடத்தில் அளவிட்டுச் சதுரித்து அகழ்ந்த பகுதியில் நிலத்தின் தன்மைக்கேற்ப அடிப்படை யிட்டு, அதன்மேல் திண்மையும் சமன்பாடும் பொருந்திய அடுக்குக் கோப்பாக எழுப்பப்பெறும் கருங்கற் கட்டிடப்பகுதி உபானம் எனப்பட்டது. உபானத்தினை அடிப்படையின் ஒழுங்கான முகப்பென்றும் கூறலாகும்.


இதன்மேல் கட்டப்பெறும் கருவறையின் அங்கங்களை முறையே, அடிப்படை, மேல் கட்டுமானம், விமானம் என்ற முப் பெரும் பிரிவுகளாகக் கண்டுள்ளனர். கோயிலின் வடிவுப்பெருக்க அளவிற்கேற்பவும், தாங்குதளங் களாகப் பீடம், உபபீடம் ஆகியவை தேவைகட்கேற்ப அதிட்டானத்தின் கீழ்த்தாங்கல்களாக அமைக்கப் பெற்றுள்ளன. கருவறைச் சுவர்ப் பகுதிகளும், தூண், கோஷ்டம், பஞ்சரம் ஆகிய அங்கங்களை ஒப்பனைக் கோலங்களாகவே பெற்றுள்ளன. விமானமும் பலதளங்களைக் கொண்டதாக உருவாக்கம் பெற்றுள்ளது. பொதுவாக அதிட்டானத்தின் கீழ்க்காலாக அமைக்கப் பெறும் பகுதிகளில், பீடம் உபபீடம், உபாங்கபீடம் ஆகிய கட்டுமானங்கள், கட்டிட அங்கப்பெருக்கப் படைப்பிற்கேற்ப அமைக்கப் பெறுதலால், ஒருவகையில் இப்பகுதிகளை அதிட்டானத்தின் பங்காகவே காணமுடிகிறது.

### அதிட்டானம்

அதிட்டானத்தின் முதல் கணிப்பு, கருவறைச் சுவர்க்காலின் கீழும் உபானத்தின் மேலும் அமைந்த,




கட்டுமானப் பகுதியாகும். அதிட்டானத்தின் மேல்தளம் கருவறை அமைப்புக்குரியதாகும். கருவறையில் அமைக்கப்பெறும் திருமேனியின் இருக்கையிட மாகவே அதிட்டானத்தின் அமைப்புப் பொருந்தியிருப்பதால் இதனை இருக்கைத் திட்டமைப்பு என்றும் சுட்டலாகும். இது உபானத்தின் மேல் நிறுவப் பெறுவதாலும் மேல் மிகுதித் தொடர்ச்சிக் கட்டிடமாக அமைவதாலும், கருவறைக்கட்டுமான அடிப்படை நிறுவகம் என்றும் சுட்டலாகும். இப்பொருளமைதி "அதிட்டானம்" என்ற பெயர்ப் பொருளுக்கு ஒத்ததாகுமென்று கருதப்பெறுகின்றது. மற்றும் அதிட்டானம் என்பதற்கு "இருக்கைத் திட்ட அமைப்பு" என்றும் கூறலாகும். இதனை, பழமையிற் சிறந்த சித்தன்ன வாசல் மலைப்பாழியில் உள்ள கல்லிருக்கையில் பொறிக்கப் பட்டுள்ள பிராமிக்கல்வெட்டு இவ்வதிட்டானம் என்று குறிப்பிடுவதைக் கொண்டு அறியமுடிகின்றது. மற்றும் கட்டிடப் பாகுபாட்டால், அதிட்டானத்தில் கீழ்நிலைப் பகுதிகள் பல பெயர்களால் சுட்டப் பெறினும், மேல் எழுப்பப்பெறும் கருவறை விமானம் ஆகியவற்றின் கூடிய பளுவைத் தாங்கும் கட்டுக் கோப்புத் தாங்கலாகவே இவை அனைத்தும் அமைகின்றன. உபானத்தின் மேலீடாகக் கட்டப்பெறும் உயரடுக்கு களாகவும் அளவிட்ட உட்புரைத்தாங்கு தளங்க ளாகவும் இவை அமைதலின் பொது நோக்கில் பீடம் உபபீடம் என்பதினின்றும் அதிட்டானத்தின் பங்கு வேறல்ல என்பதும் பெறப்படுகிறது. நுணுகிக்காணின் அவை அதிட்டான அடிப்படை அங்கங்களே யாகுமேன்பதும் இப்பெயர்கள் கருங்கற் கோயிற்கட்டிடக் கலைஞன் தொழில் நோக்கிற்குக் கற்பித்துக் கொண்ட பாகுபாட்டறிகுறி என்பதும் பெறப்படும்.



அதிட்டானக் கட்டுமானம் வலிமையான கட்டுக்கோப்புடன் அமைக்கப் பெறுவதாகும். சிற்பியர் தமது கைத்திறனை இக்கட்டமைப்பில் களிப்புடன் கண்டுள்ளனர். அழகுக் கலையாகும் சிற்பக் கலைத்திறனைச் சிற்பியர் இக்கட்டமைப்பில் ஒழுங்கான அடுக்கமைக்காட்சியாக அமைக்கும்





கட்டுமானத்தில் வெறிநீட்சியாகவும் புடைப்பாகவும், உள்புரைக்காலாகவும், கண்டமாகவும், முகப்பாகவும், கோப்புநிலை அழகிற்கு ஆக்கமாகவும், வடிவங்களையும் கொடிக்கருக்கு வேலைப்பாடு களையும் காட்டுதலோடு, அவற்றில் பத்மம், பிரபை, வரிநிலை, இதழ்நிலை, தரும்பு, அரும்பு, வரும்பு ஆகிய ஒப்பனைக்காட்சிகளால் அழகுபடுத்தி வைப்பது கலைத்திறனாகும். இவ்வொப்பனையின் கீழ்ப் பாகத்தில், ஒரே சீரான வடிவில் முப்புறமும் சூழ்ந்து நெடிதோடிய பாங்கில் கோடி இடங்களில் கட்டுப் பிணிப்புத் தோற்றமாக அமைப்பதுவே 'பந்தம்' எனப்படும்.

இப்பந்தக் கட்டுமானம், மகரம், யாளம், நாகம் என்ற முத்திற வடிவங்களிலொன்றினைக் கொண்டதாக அமையும். இப்பந்தம், திரணை வரியாகவும் அமைதலுண்டு. இவ்வாறமையும் அடித்தானத்தை உபானம், ஜகதி, குமுதம், பத்மம், அந்தரி, வாஜனம், பட்டிகை என்ற உறுப்புகளை உடையதாகக் குறிப்பதே பெரும்பான்மை. இவ்வுறுப்புகளைத் தேவைக்கு ஏற்ப மாற்றிமாற்றி அமைப்பதால் பல்வேறுவகை அதிட்டானங்களை அமைக்கலாகும். அவ்வகையில்,

**1. பாதபந்த அதிட்டானம் (பாதக்கட்டு)**

**2. பத்மபந்த அதிட்டானம் (தாமரைக்கட்டு)**

– என்பன தமிழகக் கோயில்களில் குறிப்பிடத் தக்கவையாகும். சில நேரங்களில் மாடக்கோயில்கள் எனப்பெறும் அமைப்பில் விமான எழுச்சியை அதிகப்படுத்தும் வண்ணம் "உபபீடம்" அமைக்கப்பெறுவது இயல்பு.

அதிட்டானத்தின் மேலே சுவர் அல்லது கால் எனப்படுகின்ற உறுப்பு அமையும் இச்சுவரை அழகுபடுத்தும் ஒப்பனைக் கூறுகளாக அரைத்தூண்களும், தெய்வமாடங்களும் பஞ்சர, கும்பப்பஞ்சரங்களும், மகர தோரணங்களும் இப்பகுதியில் இடம் பெறுகின்றன. கருவறைப் பகுதியில் எவ்வெத்திசையில் எவ்வெத் தெய்வமாடங்களில் எவ்வெத் தெய்வச் சிற்பங்களை இடம்படுத்த வேண்டும் என்ற முறையில் ஒப்பனை முறையும் காணப்படுகின்றன்.

இவ்வமைப்பின் மீது பிரஸ்தரம் எனப்படும் கூரை அமையும். இவ்வமைப்பு பூதவவரி, கொடுங்கை, யாளவரி என்ற பகுதிகளையும் அதன்மேல்

தளங்களையும் பெறுவதுண்டு. சுவர்ப்பகுதிக்குமேலே அமைவுபெறும் தளம் ஒன்று முதல் 13 வரை இடம் பெறுவதுண்டு, ஒன்றன் மேலொன்றாகும் அத்தளவடுக்கு 'பிரமிடு' வடிவத்தில் அடி அகன்றும் மேல் சற்றுக் குறுகியும் அமைக்கப்பெறும் அமைவு பெறும். தள எண்ணிக்கைக்குத்தக அக்கோயில் வழங்கப்பெறும். ஒரு தளம் உள்ள விமானமுடைய கோயில் 'சிறுகோயில்' எனப்பெறும். இதுபோன்றே இருதளவிமானம், முத்தளவிமானம் என வழங்கப்பெறும்.

இம்முறையிலேயே வாயில்கள் மீது எழுப்பப்பெறும் உயர்ந்த கட்டுமானங்களாகிய கோபுர அமைப்பு 'தட்டு' அல்லது 'நிலை' என்ற அடுக்குகளையும் அம்முறையில் கட்டைக்கோபுரம், இருநிலைக்கோபுரம், மூன்று நிலைக்கோபுரம் எனவும் வழங்கப்பெறும்.

விமானத் தளங்களில் நாற்புற முகப்புகளிலும் சாலை, கூடம், மாடம், நாசி, பஞ்சரம் என்ற கட்டிட ஒப்பனைக் கூறுகள் தேவையான இடைவெளியில் அமைவதுண்டு. இக்கூரையின் மீது "கீரீவம்" எனப் பெறும் "கழுத்து" அமையும். இதன் வடிவம் தலையின் அமைப்பிற்கேற்ப மாறுபட்ட வடிவத்தில் சதுரமாகவோ, உருளையாகவோ அமையும். நான்கு திசைகளிலும் திருவாசிமாடங்களும் அவ்வவ் திக்குக்குரிய பெருந்தெய்வ வடிவங்களோடு இடம்பெறும். இம்முறையில் பெரும்பாலும் கிழக்கே இந்திரனும், தெற்கே சிவனும், மேற்கே மாலும், வடக்கே பிரமாவும் இடம்பெறுவது இயற்கை. இடைப்பட்ட கோணப் பகுதிகளில் நந்தி, பூதம், திக்குக்காவல் தெய்வங்கள் போன்ற வடிவங்கள் இடம் பெறுவதுமுண்டு.

இவ்வமைப்பின் மீது சிகரம் எனப்பெறும் தலை காணப்பெறும். இதன் அடிப்படை வடிவம் தமிழகத்தைப் பொறுத்தவரை அரை அல்லது முக்காற்கோள வடிவமேயாகும். இதன் புறத்தோற்றம் சதுரம், நீள் சதுரம் ஆகும். அது எண்பட்டை, வட்டம், அரைவட்டம், நீள்வட்டம் (தூங்கானை) ஆகிய அமைப்பில் இலங்கும். சிகரத்தின் மேல் கலசம் எனும் குடம் நிறுவப்பெறும். இது பெரும்பாலும் "செம்பொன்" உலோகத்தால் வடிவமைக்கப் பெறுதல் வழக்கு. குடம்போன்றும் மேலே குவிந்த தாமரைபோன்றும் அமைந்திடுவது இவ்வடிவாக்கத் திறமாகும். இது கல், சுதை, மரம் ஆகிய பொருட்களாலும் அமைக்கப்பெறுதல் உண்டு.

கருவறை அமைப்புக்களைக் கருத்தில் கொண்டு கோயில்கள் பெயரிடப் பெறுதலுண்டு. அம்முறையில் கருவறையும் அதன்மேல் தளங்களில் மேலும் சில கருவறைகளும் இடம்படுத்தப்பெற்ற அமைப்பு "அட்டாங்க விமானம்" எனப்பெறும். மாமல்லபுரத்து தர்மராச ரதம், காஞ்சி வைகுந்தநாதர் கோயில், உத்திரமேரூர் சுந்தரவரதர் கோயில், திருக்கோட்டியூர் பெருமாள் கோயில், மதுரை கூடல் அழகர் கோயில் முதலியன இவ்வகையில் அமைந்துள்ளன.

அடித்தளத்தில் கருவறையின்றி மேல்தளத்தில் கருவறை இடம்பெற்றால் அது மாடக்கோயில் எனப்பெறும். பின்புறம் அரைக்கோளமாகவும் முன் தோன்றும் அக்கோள வெட்டின் இருபுற நீள் சவுக்கமாயும் அமைவது "தூங்கானை மாடம்" எனப்பெறும். இவைபோன்ற விமான அமைப்பால் பெயரிடப்பெற்ற எண்வகைக் கோயில் அமைப்பினை நாவுக்கரசு நாயனார்,

பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்
    பெருங்கோயில் எழுபதினோடெட்டு மற்றும்
கரக்கோயில் கடிபொழில்சூழ் ஞாழற்கோயில்
    கருப்பறியல் பொருண்பனைய கொகுடிக்கோயில்
இருக்கோதிமறையவர்கள் வழிபட்டேத்தும்
    இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்
திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து
    தாழ்ந்திரைஞ்சத் தீவினைகள் தீருமன்றே

– எனக் குறிப்பிடுகின்றார். இத்தாண்டகப் பாவழி, கி.பி. ஆறாம் நூற்றாண்டில் தமிழகத்தில் விளங்கிய பெருங்கோயில், கரக்கோயில், ஞாழற் கோயில், கொகுடிக்கோயில், இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்றவகைத் திருக்கோயில்கள் சிவன்கோயில்களாக அமைந்திருந்தமை கருதத் தக்கது.

இவ்விமான வேறுபாடுகள் இறையகத்தின் ஒளி, ஒலி அமைவியல் திட்டத்திற்கு ஏற்ப வடிவாக்கம் பெற்றுள்ளமை கருதத்தக்கது.

இவ்வகை விமான வேறுபாடுகளை வடமொழியில் எழுதப்பெற்றுள்ள திராவிடக் கலைநூல்களும் ஆகமங்களும் காட்டுகின்றன.



ஸ்ரீவிஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிசாலம், ஸ்ரீஸ்கந்த காந்தம், ஸ்ரீகரம், ஸ்ரீஹத்தி பிருட்டம், ஸ்ரீகேசரம் என சில்ப சாத்திரங்களும் காமிகாகமும் வழங்குகின்றன.

இவ்வாறு மரத்தடி நிழல் முதல் மாபெரும் கோயில்கள் வரை கால வளர்ச்சியில் தமிழகம் கண்டுள்ள கோயிற்கட்டிடக்கலை பற்றித் தமிழிலக்கியச் சான்றுகள் சங்க இலக்கியம் முதல் பிற்கால இலக்கியம் வரை ஆயிரக்கணக்கில் உள்ளன. அவற்றுள் சிலவற்றை ஈண்டுக் காண்போம்.

கோயில் என்ற சொல்லாட்சி, கோ இல் அதாவது அரசனது இல்லம் என்ற பொருளில் வழங்கியுள்ளது. இப்பொருளிற்கேற்ப அரசன் வாழ்ந்த பெருமாளிகை அமைப்பிலே ஆண்டவனுக்கும் உறையுள் கண்டமை போதரும். அரசனைத் தெய்வமாகவும் தெய்வத்தின் மரபுளோனாயும் காண்பது பழம் பெருங்குடியியல்பு. இதுகருதியே, "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என ஆழ்வார் புகன்றனர். இக்கருத்தின் காட்சிச் சான்றென மாவலிபுரத்து தர்மராஜரதத்தின் முதல் தளத்துக் காணப்படும் மாட அமைப்புகளில் அரச மக்கள் தோற்றங்காணப் பெறுவது கருதத்தக்கதாகும்.

இவ்வாறாகக் கோயில் எனும் சொல் அரசனுக்குரியதாகப் புறநானூற்றில் (378) சோழன் கோயில் என ஆளப்பெற்றுள்ளது.

"கோயிலுள் கண்டார் நகாமை" (கலி 94)

"சிலம்பின் சிலம்புங் கோயில்" (நெடு 100)

"அண்ணல் கோயில்" (பரிதி 8–4)

"திருக்கிளர் கோயில் ஒருசிறை" (பொருந, – 90)

"உறந்தை போக்கிக் கோயிலொடு"
(பட்டினப் 285–286)

"வெண்கோயில் மாசு ஊட்டும்" (பட்டினப் 50) – என்ற இலக்கியத் தொடர்களும் இப்பொருள் சுட்டுவது நோக்கற்குரியது.

வளையப்பெற்ற நிலம், இடம் என்ற பொருளிலும் அடைப்புச் சுவர்கட்குட்பட்டது என்ற பொருளிலும் 'வளைவுடைய கட்டுமானம்' என்ற பொருளிலும் 'கோட்டம்' என்ற சொல்லாட்சி தமிழிலக்கியங்களில் தெய்வ இருப்பிடங்களைச் சுட்டுவனவாக உள்ளன.

"அணங்குடை முருகன் கோட்டத்து" (புறம் 299) – என்ற தொடர் குறிஞ்சி நிலத் தெய்வமான வேலனின் கோட்டத்தைச் சுட்டுகிறது.

கண்ணகிக் கோட்டத்தைச் சிலம்பு சுட்டும்.

கோயில்களை "அம்பலம்" என்றதொரு சொல்லும் சுட்டியுள்ளது. பொது இல் (பொதியில்) என்ற பொருளுடைய இச் சொல்.

"உண்மை அம்பலமானது"

"அம்பலத்துள் ஆடுதல்" போன்ற வழக்கு வன்மையால் "வெளிப்பட்டது", "மறைவற்றது", "யாவருங்காணக்கூடிய அமைப்புடையது" என்ற பொருளில் உள்ளது. "கோட்டம்பலம்" (கோட்டம்பலத்துத் துஞ்சிய கோதை) என்ற சங்கச் சொல் உயர்ந்த மன்றினைச் சுட்டுகிறது. இதனைச் சிலம்பு "அரமியம்" என்று குறிக்கிறது.

சிதம்பரம் எனப்படும் சித்தர் அம்பலத்தின் பொன்னம்பலம் மேடை அமைப்புடன் தொடக்கக்காலத்தில் நாற்புறமும் திறந்த "வெள்ளிடை மன்றாக" இருந்தமையாலேயே "அம்பலம்" என வழங்கப் பெற்றுள்ளது. அம்பலம் தில்லையில் உள்ளதால் தில்லைச் சிற்றம்பலம், "திருச்சிற்றம்பலம்" எனத் தேவாரக்குறிப்புகள் இனங்காட்டுகின்றன. இவ்வமைப்பு சேரநாட்டுக் கோயிலமைப்பே. இன்றும் கேரள நாட்டில் அம்பலங்களே வழிப்பாட்டில் உள்ளமை அறியத்தக்கது.

திருமந்திரத்தில் இவ்வாட்சி மிக அதிகமாகக் காணப்பெறுவதும் (652, 886, 887, 1726, 2653, 2722, 2744) ஆய்வாளர் நுணுகி ஆயத்தக்க செய்தியாகும்.

இத்திருமந்திரத்துள் ஆலயங்காண்பதும் அருமையுடையதாகும்.

"ஐந்தின் பெருமையே ஆலயமாவதும்" (960)

"ஊடனுடம்பு ஆலயம்" (1804)

என்ற தொடர்களில் சுட்டப்பெறும், ஆலயம் ஐம்பொறிகளோடு தொடர்புடையதாக விளக்கம் பெறுவதும் 'கோயில்' வேறுபட்டு உளம் சார்ந்ததாக உரைக்கப் பெறுவதும் தத்துவ அடிப்படையில் மட்டுமல்ல, கட்டுமானத் தொழில் நுட்ப அடிப்படையிலும் ஆழநோக்கவேண்டிய கருத்தே யாகும்.

கோயில் குறியீடு 'தளி' என்ற சொல்லாலும் குறிபெறுகிறது.

''ஆரூர்ப் பரவையுண் மண்தளி'' (தேவாரம்) என்பது திருவாரூரில் மண்ணால் ஆக்கம் பெற்றிருந்த இறையகமொன்றைச் சுட்டுகிறது. இதுவே சுந்தரமூர்த்தி நாயனார் பெரிதும் போற்றிய பரவையாரின் இல்லமென மொழிவாருமுளர். முதல் இராசராசன் கல்வெட்டுக்கள் உணர்த்தும் தளி கற்கோயில்களே.

மண்தளிகள் பின்னர்ச் 'சுடுமண்' ஓங்கிய நெடுநகராயினமையும் தமிழிலக்கியக் குறிப்புகளுள் காணப்பெறுகின்றன. 'சுடுமண்' ஆகிய செங்கற்களை மண் அல்லது சுண்ணக்கலவை கொண்டு அடுக்கி, எழுந்த சுவர்களைக் கொண்டு ஆக்கம் பெற்றுள்ள இச்செங்கற்களை இட்டிகை என்பது பண்டை வழங்கு, இதனை

"இட்டிகை நெடுஞ்சுவர் விட்டம் வீழ்ந்தென
மணிப்புறாத் துறந்த மரஞ்சேர் மாடக்
கெழுதணி கடவுள் போகலின்" (அகம்167)

"கல்லும் இட்டிகையும் பெய்து குற்றுச்
செய்யப்பெற்ற நிலம்"
(தொல்.சொல்.சேனாவரையம். 10)
– என்ற தொடர்கள் விளக்கும்.

செங்கற்களைக் கொண்டு விளைந்த அமைப்பில் தாமரைப் பொகுடு போலும் உயர்கோள அமைப்புடைய கட்டிடங்கள் பல அமைந்திருந்தமையினைப் பெரும்பாணாற்றுப்படையின்,

''தாமரைப் பொகுட்டில் காண்வரத்தோன்றி
சுடுமண் ஓங்கிய நெடுநகர் வரைப்பின்''
(404–405) – என்ற தொடர் குறிக்கின்றது.

இவ்வணம் தாமரைப் பொகுடுபோன்ற அமைப்பில் அறநிலையம் ஒன்றினை அருட்பெருஞ்செல்வர், திருமிகு பொள்ளாச்சிப் புரவலர் அவர்கள் கருத்துவழி சுவாமிகள் ஒருவர் அமெரிக்காவில் அண்மையில் சிமிண்ட் கான்கீரீட் அமைப்பில் கண்டுள்ளமை ஒப்பிடத்தக்கதாகும்.

மணிமேகலையும் செங்கற் சுவர்களைக்
கொண்டிருந்த தெய்வ இருப்பிடங்களைச்
''சுடுமண் ஓங்கிய நெடுநிலைக் கோட்டம்''

– எனச் சுட்டுகிறது.

இவ்வகைக் கோயில்களின் பல்வேறு உறுப்புகளைப் பற்றிப் பக்தி இலக்கியங்கள் பேசுவதைக் காணலாம்.

திருமந்திரம் கோயில் சிவலிங்கம், நந்தி, பலிபீடம் ஆகியவற்றைச் சுட்டுகிறது. நாவுக்கரசரின்


''ஆக்கையாற்பயனென் அரன் கோயில்
வலம் வந்து பூக்கையா லட்டிப் போற்றி
என்னாத....'' (4–9–8)
– என்ற பாடல் தொடர் திருச்சுற்று, கோபுரம் இவற்றைச் சுட்டுவதும் கண்கூடு.

இவ்வாறாகத் தமிழிலக்கியங்கள் தமிழகக் கோயிற் கட்டிடக் கலையியல் பற்றிய அரிய குறிப்புகளைத் தந்து நம்மனோர்க்கு ஆய்பொருள் களத்தினைத் தந்துள்ளன. ஆய்வதும், அறிவதும், உரைப்பதும், படைப்பதும், பயன்பெறுவதும் நம்கடன். மேலும் ''எளிமை பெருமை'' என்பதே பண்டைய தொழில் நுட்பம் என்பதனை இக்குறிப்புகளை நேரே நோக்குவர் காணமுடியும்.

*– 'தமிழர் கட்டிடக் கலை' நூலிலிருந்து*
*வெளியீடு : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்"* •

ஆசிரியரும் வெளியிடுபவரும் : **கே. செல்லமுத்து**, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5364906 தொலையச்சு : 5368926


# பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்



**உ**ங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, "**பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்**".

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3+4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5. | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள 20[illegible]கு ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த வசதி தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டா[illegible]ளை, குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்[illegible]தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் ப[illegible]ளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்.

**பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.**

தமிழரசு
R.N.I. NO 21446/70
Licence No. G TN/CPMG/190, WPP-13
















தமிழரசு
நவம்பர் 2002





# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2033
ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் 2002
மலர் : 34 இதழ் : 9 & 10
விலை ரூ.10

**இந்த இதழில் ...**


- இந்தியாவின் பொருளாதாரத் தலைநகராக சென்னையை மாற்றுவோம் .......... 2
- தமிழ்நாடு – கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் .......... 5
- வேளாண் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பரிசு .......... 10
- ஆண்டிபட்டி சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகத்தில் பொது மக்கள் குறைகளுக்கு விரைவான தீர்வு .......... 11
- தென்னகத்து நேதாஜி .......... 13
- 2002– 2003ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடு .......... 14
- காவல்துறையினருக்கு பாராட்டு .......... 16
- மகாத்மா காந்தி காவல்துறைப் பதக்கம் .......... 17
- கல்வி உதவி பெற்றோர் முதல்வருக்கு நன்றி .......... 18
- தேனி மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் .......... 19
- சிறுசேமிப்பு முகவரின் சிகரச் சாதனை .......... 23
- ஆசிய தடகளப் போட்டியில் பதக்கம் பெற்றவர்களுக்கு பாராட்டு .......... 26
- நெல்லுக்கு ஊக்கத் தொகை .......... 27
- புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் .......... 28
- மக்கள் தொடர்பு சாதனங்களும் ஊரக வளர்ச்சியும் .......... 29
- தமிழ்நாட்டில் போலியோ இல்லை .......... 33
- மும்பை தமிழ் மாணவர்களுக்கு இலவச பாடநூல் .......... 34
- திருக்குறள் மதுர கீர்த்தனைகள் வெளியிட நிதிஉதவி .......... 35
- அகில இந்திய சிறுதொழில் கணக்கெடுப்பு .......... 36
- காந்தி ஜெயந்தி விழா .......... 37
- முதலமைச்சர்கள் மாநாடு – தமிழக முதலமைச்சர் உரை .......... 39
- மலரும் மாலையும் .......... 49
- மழைநீர் சேகரிப்பு .......... 57
- இராமநாதபுரத்தில் மழை நீர் சேகரிப்பு .......... 59
- திருவண்ணாமலை மாவட்டத்தில் சுயவேலைவாய்ப்புத் திட்டம் .......... 62
- மிட்டாய்க்காரன் (சிறுகதை) .......... 65
- தூத்துக்குடியில் புள்ளிக்கலவா மீன்வளர்ப்பு .......... 72
- தமிழக அமைச்சரவை .......... 73
- புதுக்கோட்டை மாவட்டத்தில் சாண எரிவாயுத் திட்டம் .......... 75
- மூலிகையில் சிறந்த கரிசலாங்கண்ணி .......... 76
- நாகை மாவட்டத்தில் வேளாண் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பரிசு .......... 80


---

**முதல் பக்க அட்டையில் :** மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாளான 30.10.2002 அன்று சென்னையிலுள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்தார்.

**இரண்டாம் பக்க அட்டையில் :** பண்டித ஜவஹர்லால் நேரு

**கடைசிப் பக்க அட்டையில் :** மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுடன் சிங்கப்பூர் தேசிய வளர்ச்சித்துறையின் அமைச்சர் டாக்டர். விவியன் பாலகிருஷ்ணன் தலைமையிலான உள்கட்டுமானம் மற்றும் வர்த்தக தூதுக்குழுவினர் சந்திப்பு.




## இந்தியாவின் பொருளாதாரத் தலைநகராக

# சென்னையை மாற்றுவோம்

– மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு

தமிழ்நாட்டிற்கும் சென்னைக்கும் உங்களை எல்லாம் வரவேற்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சிங்கப்பூர், தமிழ்நாடு இரண்டுக்கும் உள்ள பந்தமும், உறவும் உண்மையில் தனிச்சிறப்பும், வரலாற்றுப் பூர்வமானதுமாகும். எங்களது மொழியாகிய தமிழ் சிங்கப்பூரின் அதிகாரப்பூர்வமான அரசு மொழிகளில் ஒன்றாகும். தமிழ்நாடு சிங்கப்பூருடன் இன, பண்பாட்டு அடிப்படையில் நல்லுறவு கொண்டுள்ளது என்பதை இது நல்ல முறையில் எடுத்துக்காட்டுகிறது.

நீங்கள் உங்கள் தாயகத்திலிருந்து வெகு தொலைவில் இருந்தாலும், இங்கேயும் நீங்கள் உங்களது தாயகத்தில் இருப்பது போன்ற உணர்வை கொள்வீர்கள் என நம்புகிறேன்.

இந்திய யூனியனில் அடங்கிய மாநிலங்களில் மிகப் பெரிய வளர்ச்சிக்குரிய ஆதாரங்களை தமிழ்நாடு கொண்டுள்ளது. தமிழகம் எப்போதும், இந்திய வளர்ச்சியை முன்னெடுத்து செல்லும் நிலையில்தான் இருந்து வந்துள்ளது. வெளிநாட்டினர் பாதுகாப்பாக தமிழ்நாட்டில் மூலதனம் செய்து தொழில் தொடங்கலாம். தொழில் தொடங்குவதற்கான மிக அருமையான சூழ்நிலை தமிழகத்தில் உள்ளது என்பதை நீங்கள் உணருவீர்கள் என்று நான் உறுதிபடக் கூறுகிறேன்.

எனது அரசு 10வது ஐந்தாண்டுத் திட்டத்தை தொடங்கியுள்ளது. இது 2002இல் துவங்கி 2007இல் முடிகிறது. ரூபாய் 40 ஆயிரம் கோடிக்கு பொதுத் துறையில் மூலதனம் செய்யப்பட உள்ளது. ஆண்டிற்கு 8 சதவீதம் வளர்ச்சியை அடையும் மிகப் பெரிய திட்டமாக இதனை செயல்படுத்த உள்ளோம். திட்டமிட்ட வளர்ச்சிக்கு, தனியாரின் மூலதனமும், அவர்களது முதலை திரட்டி வளப்படுத்தும் வகைக்கு நாங்கள் முன்னுரிமை அளிக்கிறோம். இந்த எங்களது அணுகுமுறை நாங்கள் ஏற்கெனவே கடைப்பிடித்து வந்த அணுகுமுறையில் இருந்து மாறுபட்டது. இந்த அணுகுமுறையில் அரசாங்கம், தனியார் முதலீட்டை ஊக்குவித்தும், ஒட்டுமொத்த வளர்ச்சிக்குப் பாதை அமைத்து கொடுப்பதும் தான் சிறப்புச் செய்தியாகும்.

எனது அரசு, இதனையொட்டி, வெளிநாட்டின் நேரடி முதலீட்டிற்கு முன்னுரிமை அளிக்கிறது. தொழில் முதலீட்டாளர்களையும் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்க தயாராகியுள்ளது.

தொழில் தொடங்க வருபவர்களுக்கு அதற்குரிய ஊக்கத்தையும், துல்லியமான தொழில் கட்டமைப்பையும் அவர்களுக்கு செய்து கொடுக்க எங்களால் முடிந்த எல்லாவற்றையும் செய்து கொடுப்போம். எங்கள் தலைநகரம் சென்னை, ஒரு துறைமுக நகரமாகும். எனவே நீங்கள் எளிதாக தொடர்புக் கொள்ளலாம். தூத்துக்குடி துறைமுகத்தில் சிங்கப்பூரைச் சார்ந்த ஒரு நிறுவனம்தான் சுறுசுறுப்பாக தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அதனை சரக்குகளை கையாளும் ஒரு துறைமுகமாக உருவாக்கி வருகிறது. சென்னையை அடுத்து மிக அகண்ட பிரதேசம் விரிந்து செல்கிறது. உண்மையில் தென்னிந்தியாவிற்கே இது ஒரு மையமாக உள்ளது. எண்ணூர் துறைமுகத்தையொட்டி ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலம் அமைக்கும் பணியில் நாங்கள் ஈடுபட்டு அதற்கான திட்டங்களை தீட்டி வருகிறோம். இதன் வளர்ச்சித் திட்டத்திலும் உங்கள் பங்களிப்புத் தேவை எனக் கேட்டுக் கொள்கிறேன்.

புதிய உலகப் பொருளாதாரமயமாக்கலின் உண்மை நிலைக்கு, சிங்கப்பூர் பொருளாதாரமும் தன்னை



தக்கவைத்துக் கொள்ளும் நடவடிக்கையை எடுத்து வருகிறது என்பதை நான் நன்கு அறிவேன். உங்களுடைய புதுமைப் படைக்கும் கடந்தகால அனுபவ அடிப்படையில், மீண்டும் ஒரு புதுப்பாதையை ஏற்படுத்துவீர்கள் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உண்டு.

நீங்கள் சிறப்பாகச் செயல்பட, தமிழ்நாடு உங்களுக்கு உகந்த பங்காளராக இருக்கும். தமிழ்நாட்டை நீங்கள் முற்றிலும் நம்பி வரலாம். நீங்கள் இந்த புதிய திசையில் தடம் பதிக்க, தமிழகத்தை நம்பி வரலாம்.

சிங்கப்பூரில் 'அறிவியல் பூங்கா' ஒன்றை உருவாக்கி உள்ளீர்கள். அதில் நீங்கள் காட்டியுள்ள தொலைநோக்குப் பார்வையை நான் ஆர்வமுடன் ஆராய்ந்து பார்த்திருக்கிறேன்.

சிங்கப்பூர் அரசுடன் சேர்ந்து உயிரி தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை தமிழகத்தில் நிறுவ நாங்கள் முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். இந்த மிக முக்கிய துறையில் மேலும் முன்னேறிச் செல்லும் வகையில் சிங்கப்பூர் மரபணு நிலையத்தை கலந்து பேசியுள்ளோம்.

சிங்கப்பூரில் வீடுகட்டும் துறையில் உங்களது அயராத, அற்புதமான முயற்சி கண்டு நான் மிகவும் அதிசயப்பட்டேன். குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு தரமான வீடு கிடைக்க வேண்டும் என்பதை உறுதி செய்வதில் நீங்கள் காட்டியுள்ள அக்கறையும், முன்னேற்றமும் மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இதற்கு, மிகவும் பெரிய அளவில் நிதி தேவைப்படும் என்பதில் சந்தேகமில்லை. நீங்கள் தலைமை தாங்கி வந்துள்ள தொழிற்குழுவில் மிகப் பெரும்பான்மையான உறுப்பினர்கள் குடியிருப்பு வீடு அமைத்து தரும் இத்திட்டத்தில் ஈடுபாட்டுடன் செயல்பட்ட அனுபவம் உள்ளவர்கள் என்பதை நான் அறிவேன்.

பொதுத்துறை மற்றும் தனியார் பங்கு கொள்ளும் இத்தகைய குடியிருப்பு கட்டித்தரும் துறையில் தங்களது தனித்திறனை மிகவும் வரவேற்கிறேன். சென்னையிலும் தமிழ்நாட்டின் பிற நகரங்களிலும் இப்படிப்பட்ட முயற்சி வெளிப்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் தற்போது பற்பல துறைகளில் முதலீடு செய்ய, புதிய, வெவ்வேறான வாய்ப்புகள் உள்ளன என்பதை தங்களுக்கு சுட்டிக்காட்டி அதன்பால் தங்களது கவனத்தை செலுத்த வேண்டும் என்றும் தங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலும், சென்னையிலும் உற்பத்தி சார்ந்த தொழில் முனைவுகள் ஏற்படுத்தவும் அமைக்கவும் நீங்கள் முற்றிலுமாக சிந்தித்து செயல்பட வேண்டும் என்று குறிப்பாக கேட்டுக் கொள்கிறேன். உலக வர்த்தக அமைப்பில், இது ஒரு பயன்தரத்தக்க முக்கிய இடமாக இருக்கும். சென்னையும் தமிழ்நாடும் உங்களது தொழில் உற்பத்தி கிடங்காக இருக்க வேண்டும். இங்கிருந்து உலகின் பல பகுதிகளுக்கு கப்பல் போக்குவரத்தை வகுத்துக் கொள்ளலாம். நாம் இருவரும் சேர்ந்து ஒரு சக்தி வாய்ந்த வணிகக் கூட்டாக உருவாகலாம். உருவாக்கிக் கொள்ளலாம்.

சென்னையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா அமைப்பதற்கான மிகப் பெரிய வாய்ப்பு உருவாகி உள்ளது. ஒரு புதிய தகவல் தொழில்நுட்ப பூங்காவை கட்டுவதற்கு, சிங்கப்பூர் அசென்டாஸ் கம்பெனியும், தமிழ்நாட்டு தொழில் வளர்ச்சி கழகத்துடன் மிக சமீப காலத்தில் ஒரு ஒத்த கருத்து ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. எங்களது தகவல் தொழில்நுட்ப வளாகத்தில், இன்னும் பலவிதமான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தொழிலில் கூட்டு முயற்சி மேற்கொள்வதில் நாம் சிந்தித்து செயல்படலாம்.

10வது ஐந்தாண்டு திட்டத்தில், உள்கட்டுமானம் அமைத்துக் கொடுப்பதில் பெரிய அளவில் முதலீடு செய்வது குறித்து திட்டமிட்டு வருகிறோம். இதில் குடியிருப்பு, தொழிற்பூங்கா, எரிசக்தி, துறைமுகம், நெடுஞ்சாலை, குடிநீர் வழங்கல், கழிவுநீர் அகற்றுதல், சிறப்புப் பொருளாதார மண்டலம், நகர்ப்புற வளர்ச்சி அடங்கும்.

தொடர்ந்து இது குறித்து நாம் பேச வேண்டும். அப்போதுதான் விரைவில், வளர்ச்சியை நம்மால் எட்டிப் பிடிக்க முடியும். உலகத் தரம் வாய்ந்த உள்கட்டுமான அளிப்பை செய்து தர விரும்புகிறோம். பொருளாதார வளர்ச்சிக்கான தூண்டுதல் தொய்வில்லாமல் நடைபெறும் என்று நம்புகிறோம்.

சீனாவில், ஷாங்காய் எப்படியோ, அப்படி இந்தியாவின் புதிய பொருளாதார தலைநகரமாக சென்னையை மாற்ற நாங்கள் விரும்புகிறோம். இந்த எழுச்சிமிக்க பயணத்தில் நீங்களும் பங்கு கொள்ள வாருங்கள் என்று உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்களை எல்லாம் சந்தித்ததில் எனக்குள்ள மகிழ்ச்சியை மீண்டும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். நமது உறவு, பிரிக்க முடியாததாக உள்ளது. தங்களது இந்த வருகை சென்னையையும், தமிழ்நாட்டையும், புதிய, பொருளாதார வலிமைபெறும் அமைப்பாக ஆக்கும் என என்னால் காண முடிகிறது. தங்களுக்கு எனது நல்வாழ்த்துக்கள். இதனைத் தொடர்ந்து மறுபடியும் பயனுள்ள ஒரு கூட்டத்தில் நான் மீண்டும் உங்களைச் சந்திப்பேன்.

***மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள்*
*11.10.2002 அன்று சென்னை தலைமைச் செயலகத்தில் சிங்கப்பூர் தேசிய வளர்ச்சித் துறையின் அமைச்சர் டாக்டர் விவியன் பாலகிருஷ்ணன் தலைமையிலான உள்கட்டுமானம் மற்றும் வர்த்தக தூதுக் குழுவினர் சந்திப்பின்போது ஆற்றிய அறிமுக உரை.*



# தமிழ்நாடு கட்டாய மதமாற்றத் தடைச் சட்டம்

*31.10.2002 அன்று தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடைச் சட்ட முன் வடிவு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை*

2002ஆம் ஆண்டு, தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடைச் சட்ட முன் வடிவு தற்போது சட்டப் பேரவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இத்தகைய சட்டத்தின் அவசியத்தைக் கருதி, கடந்த 5.10.2002 அன்று, தமிழக அரசு இதற்குரிய அவசரச் சட்டத்தை, அதாவது, 2002ஆம் ஆண்டு, தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடை அவசரச் சட்டத்தின் வாயிலாக கொண்டு வந்தது.

கட்டாய மத மாற்றத்தைச் சட்ட ரீதியாகத் தடை செய்வதற்குரிய அத்தியாவசியத் தேவைகள் மற்றும் அவசரச் சூழ்நிலைகள் ஆகியவற்றைத் தமிழக அரசு ஆழ்ந்த கவனத்தோடும், மிகுந்த எச்சரிக்கை உணர்வோடும், பரிசீலனை செய்த பின்னர் தான் இந்த அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது.

தமிழ்நாட்டில் ஆங்காங்கே நடைபெற்று வரும் கட்டாய மத மாற்ற ரீதியான நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு தான், இத்தகைய கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் உடனடித் தேவை என்பதன் அடிப்படையில், இச்சட்ட முன்வடிவு, சட்டப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டு, தற்போது சட்டம் ஆக்கப்பட உள்ளது.



கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் என்பது தற்போது தான் புதிதாக நமது நாட்டில் கொண்டு வரப்படுகிறது என்று எவரும் கூற முடியாது. ஏனெனில், கட்டாய மத மாற்றத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்றும், குறிப்பிட்ட ஒரு பகுதியைச் சார்ந்த மக்களில் ஒரு சாராரை ஒட்டுமொத்தமாகக் கட்டாயப்படுத்தியோ, ஆசை காட்டியோ அல்லது மோசடி செய்தோ மத மாற்றத்திற்கு உள்ளாக்கக் கூடாது என்றும், நமது நாட்டில் ஏற்கெனவே பல மாநிலங்களில் சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

குறிப்பாக, "கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்தல்" என்ற பொருள் பற்றி **1954**ஆம் ஆண்டிலேயே, மத்தியப்பிரதேச மாநிலத்தில், அன்றைய மாநில அரசால் நியோகி கமிட்டி **(Niyogi Committee)** என்னும் பெயரில் கட்டாய மத மாற்றத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டறியும் **Fact Finding Commission** ஒன்று அமைக்கப்பட்டது. இந்த நியோகி கமிட்டியின் செயல்பாடுகளைக் கூட தடுத்து நிறுத்த, நாக்பூர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தொடுக்கப்பட்டு, பின்னர் அந்த வழக்கு முறியடிக்கப்பட்டது. அதன் பின்னர், **1956**ஆம் ஆண்டு நியோகி கமிட்டியின் அறிக்கை இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டது.

பின்னர், **1968**ஆம் ஆண்டில் ஒரிசா மாநிலத்தில் **The Orissa Freedom of Religion Act - Act 2 of 1968** என்ற சட்டமும், அதே **1968**ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேச மாநிலத்தில், **"The Madhya Pradesh Dharma Swatantrya Adhiniyam Act 27 of 1968"** என்ற சட்டமும் கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்யும் பொருட்டு கொண்டு வரப்பட்டன.

மேலும், அருணாசலப் பிரதேச மாநிலத்திலும் **1978**ஆம் ஆண்டு, **The Arunachal Pradesh Freedom of Religion Act - Act 4 of 1978** என்ற கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது என்பதையும் நாம் அறிகிறோம்.

இந்நிலையில், தமிழ்நாட்டில் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் ஏன் கொண்டு வரப்பட வேண்டும் என்பதற்கு, உரிய காரணங்களை தற்போது நான் விளக்கமாக எடுத்துரைக்க விரும்புகிறேன்.

**1981**ஆம் ஆண்டில், தமிழ் நாட்டில், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள மீனாட்சிபுரத்தில், **800** ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள் ஒட்டுமொத்தமாக மதம் மாறிய நிகழ்ச்சியும், அதனையடுத்து **1982**ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகுதியில், இரு மதத்தினரிடையே ஏற்பட்ட மோதல்களின் காரணமாக, காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோக நிகழ்வுகளும், தமிழ்நாட்டின் மத நல்லிணக்க உணர்வுக்கு அப்போது பெரிதும் ஊறு விளைவித்தன.

மத ரீதியான காரணம் எதுவும், தமிழகத்தின் பொது அமைதிக்கு பங்கம் விளைவித்து விடக்கூடாது என்று கருதிய அன்றைய முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களால், மண்டைக்காடு கலவரத்தின் உண்மையான பின்னணியைக் கண்டறிவதற்கு, உயர் நீதிமன்ற நீதிபதி திரு. வேணுகோபால் அவர்கள் தலைமையில் விசாரணைக் கமிஷன் ஒன்று அமைக்கப்பட்டது.

இந்த விசாரணைக் கமிஷன் தனது அறிக்கையை **21.9.1985** அன்று அரசுக்கு அளித்தது. இந்த அறிக்கை **12.5.1986** அன்று தமிழக சட்டப் பேரவை முன் வைக்கப்பட்டது.

நீதிபதி திரு.வேணுகோபால் அவர்கள் தனது அறிக்கையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்ட பதட்ட நிலைக்கும், மோதல்களுக்கும் முக்கியமான காரணம் கட்டாய மத மாற்ற நடவடிக்கைகளே என்று மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார்.



நீதிபதி திரு. வேணுகோபால் விசாரணை கமிஷன், தனது அறிக்கையில், மத மாற்றத்தால் கலவரங்கள் மற்றும் சட்டம் ஒழுங்கு பாதிப்பு மற்றும் சமூக அமைதிக் குலைவு ஆகியவை ஏற்படாமல் தடுக்கப்பட வேண்டும் என்றால், மத்தியப் பிரதேசம், ஒரிசா மற்றும் அருணாசலப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கட்டாய மதமாற்றத்தைத் தடை செய்யக் கொண்டு வரப்பட்டுள்ள சட்டங்களைப் போலவே, "ஆசை காட்டி, மோசம் செய்து, கட்டாயப்படுத்திச் செய்யப்படும் மதமாற்றத்தினை" தடை செய்ய, தமிழ்நாட்டிலும் ஒரு சட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று பரிந்துரை செய்தது.

நீதிபதி திரு. வேணுகோபால் விசாரணைக் கமிஷனின் பரிந்துரைகள் நன்கு பரிசீலிக்கப்பட்டு, அரசு ஆணை எண்.**916**, பொதுத் துறை, நாள் **29.4.1986**–ன்படி தமிழக அரசால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

பின்பு, ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய இரு மாநிலங்களிலும், **1968**ஆம் ஆண்டு இயற்றப்பட்ட கட்டாய மத மாற்ற தடைச் சட்டங்களை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட ஸ்டானிஸ்லாஸ் **Vs.** மத்தியப் பிரதேசம் **(AIR 1977 SC 908)** என்ற வழக்கில், உச்சநீதி மன்றம் கட்டாய மதமாற்றத் தடைச் சட்டத்தின் தேவையை மிகத் தெளிவாகத் தன்னுடைய தீர்ப்பில் வலியுறுத்தியது.

குறிப்பாக, பொது அமைதிக்கு குந்தகம் ஏற்படுவதைத் தடுக்க, இந்தச் சட்டங்கள் வழிவகை செய்யும் என்பதால், இந்தச் சட்டங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு **25** மற்றும் **26** ஆகியவற்றின் அடிப்படையில் செல்லுபடியாகும் என்று உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் உறுதிப்படுத்தியுள்ளது.

மேலும், ஒரிசா மற்றும் மத்தியப் பிரதேசம் ஆகிய இந்த இரு மாநிலங்களிலும் கட்டாய மத மாற்றத்தை, கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தின் மூலம் தடுத்திருக்கா விட்டால், அங்கு பொது அமைதிக்கு பங்கமும், சட்டம் ஒழுங்கு பராமரிப்புக்குப் பாதிப்பும் ஏற்பட்டிருக்கும் என்று, உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளது என்பதையும், நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இது மட்டுமன்றி, மத்திய அரசு கூட, கட்டாய மத மாற்றத்தைத் தடுக்க தமிழக அரசு நடவடிக்கை ஏதேனும் எடுத்திருக்கின்றதா, என்ற கேள்வியை எழுப்பி, குறிப்பாக, **1997**ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில், ஒட்டுமொத்தமாக சிலர் மதம் மாறிய நிகழ்வினைச் சுட்டிக்காட்டி, இவர்கள் கட்டாயமாக மதம் மாற்றப்பட்டனரா என்பதைக் கண்டறிய வேண்டும் என்றும், அவ்வாறு கட்டாய மத மாற்றம் செய்யப்பட்டிருந்தால், எந்த சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், மத்தியப் பிரதேச மாநிலத்தில் இயற்றப்பட்டுள்ள கட்டாய மத மாற்ற தடைச் சட்டத்தைச் சுட்டிக்காட்டி, மத்திய அரசு, தமிழக அரசைக் கேட்டுக் கொண்டிருந்தது.

பொதுவாகவே, தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் தொடர்ந்து மத மாற்ற நிகழ்வுகள் மத ரீதியான காரணங்கள் அன்றி, வேறு சில காரணங்களுக்காக, கட்டாயத்தின் அடிப்படையில் நடைபெற்று வந்தது தமிழக அரசின் கவனத்தை ஈர்த்தது.

குறிப்பாக, இத்தகைய மத மாற்ற நிகழ்வுகள் விருதுநகர், இராமநாதபுரம், தேனி ஆகிய மாவட்டங்களில் சமீபத்தில் நடைபெற்றுள்ளன. மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் மத மாற்ற நிகழ்வு நடைபெறக் கூடிய சூழ்நிலை நிலவுவதாகவும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு தான், தமிழக அரசு கடந்த 5.10.2002 அன்று, தமிழ்நாடு கட்டாய மத மாற்றத் தடை அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தது.

கட்டாய மத மாற்றத்தினால், சமுதாயத்தில் பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக, ஏழ்மையையும், பிற்பட்ட நிலையையும் பயன்படுத்தி, மதத் தீவிரவாத அமைப்புகள் கட்டாய மத மாற்றத்தின் மூலம் நாட்டில் குழப்பத்தினை விளைவிக்க முயல்கின்றன.

மதம் மாறினாலும் ஜாதி உணர்வுகள் நீடிக்கின்றன. மத மாற்றம் செய்யப்பட்டவர்கள் சமுதாயத்தில் தனிமைப்படுத்தப்படுகின்றனர்.

மத மாற்றம் பல்வேறு பிரிவினரிடையே எதிர்ப்பு உணர்வை ஏற்படுத்துவதுடன், மத உணர்வைத் தூண்டி விட்டு மதக் கலவரங்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றது.

சமுதாய நல்லிணக்க உணர்வைச் சீர்குலைக்கும் இத்தகைய தீய விளைவுகள், தமிழ்நாட்டில் நிகழக்கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் தான், கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்ய, சட்ட முன் வடிவு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது. மேலும், தற்போதுள்ள சட்டத்தின் அடிப்படையில் பார்த்தாலும் கூட, இந்திய தண்டனைச் சட்டத்தில் கட்டாய மத மாற்றத்தைத் தடுக்க வழியில்லை. அதாவது, இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 153 (A), ஒரு மதத்தினர் புண்படும்படி, யாரும் அவதூறாகப் பேசுவதைத் தடுக்குமே ஒழிய, அதனால் கட்டாயமத மாற்றத்தைத் தடுக்க இயலாது.

தீவிரவாதப் போக்கு பெருகி வருகின்ற தற்போதைய சூழ்நிலையில், கட்டாய மத மாற்றத்தைத் தடை செய்ய, ஒரு சட்டம் இருப்பது தீவிர மதவாத அமைப்புகளின் மத மாற்ற முயற்சிகளைத் தடுத்து நிறுத்த, ஒரு கேடயமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

தற்போது தமிழ்நாட்டில் இயற்றப்படும் இந்தச் சட்டம் எந்த ஒரு மதத்தினருக்கும் அல்லது பிரிவினருக்கும் எதிரானது அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். கட்டாயப்படுத்தியோ, ஆசை காட்டியோ அல்லது மோசடி செய்தோ கட்டாய மத மாற்றத்தில் ஈடுபடுவோர் மீது மட்டுமே, இந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும். தாமாகவே முன் வந்து, விருப்பத்துடன் மதம் மாறுபவர்கள் மீது, இந்தச் சட்டத்தின்படி எவ்வித நடவடிக்கையும் எடுக்க இயலாது. எனவே, சிறுபான்மையினர் மீது இந்தச் சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படும் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதை உறுதிபடத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டத்தைச் சாதாரணமாக படித்துப் பார்த்தாலே சிறுபான்மை மதம் மட்டுமல்லாமல், எந்த குறிப்பிட்ட மதத்திற்கு எதிராகவும், ஒரு குறிப்பும் இதில் இல்லை என்பதை எவரும் எளிதில் உணரலாம்.

இன்று இங்கே நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்ற காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள், தமிழக அரசு கொண்டு வந்துள்ள கட்டாய மதமாற்ற தடைச் சட்டத்தை எதிர்த்து, தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். ஆனால் ஒன்றை மட்டும் அவர்கள் வசதியாக மறந்து விட்டார்கள். ஓரிசா, மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கட்டாய மத மாற்றத் தடைச் சட்டம் 1968–லிருந்தே நடைமுறையில் உள்ளது என்பதை நான் ஏற்கெனவே கூறியுள்ளேன். இந்த இரு மாநிலங்களிலும், 1968–க்குப் பின்னர், காங்கிரஸ் கட்சியினர் ஆட்சியில் இருந்துள்ளனர். தற்போதுகூட, மத்தியப்



பிரதேசத்தில், காங்கிரஸ் கட்சி தான் ஆட்சியில் உள்ளது. ஏற்கெனவே, இந்தச் சட்டம் இவர்களுக்கு முன்னரே கொண்டு வரப்பட்டிருந்தாலும், காங்கிரஸ் இந்த மாநிலங்களில் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இந்த கட்டாய மத மாற்றத் தடைச் சட்டத்தை ஏன் ரத்து செய்யவில்லை ?

மகாத்மா காந்தியடிகள், மத மாற்றம் பற்றிக் கூறியுள்ளது இங்கே என்னுடைய நினைவுக்கு வருகிறது.

"Conversions are harmful to India. If I had power and could legislate, I should certainly stop all proselytising"

அதாவது, "மத மாற்றங்கள் இந்தியாவுக்குத் தீங்கு விளைவிப்பவை. எனக்கு மட்டும் சட்டம் இயற்றும் அதிகாரம் இருக்குமேயானால், எல்லாவித மதமாற்ற முயற்சிகளையும் நான் நிச்சயமாக தடுத்து நிறுத்துவேன்" என்று தெரிவித்துள்ளார்.

மகாத்மா காந்தியடிகளின் வழியில் வந்தவர்கள் என்று சொல்லிக் கொள்கின்ற காங்கிரஸ் கட்சியினர், கட்டாய மத மாற்றத்தைப் பற்றி தேசப் பிதா மகாத்மா காந்தியடிகள் குறிப்பிட்ட கருத்தை ஏன் தற்போது ஏற்க மறுக்கிறார்கள் ? மகாத்மா காந்தி அவர்கள் தெரிவித்த கருத்தை, தற்போது சட்டமாக்கத் தமிழக அரசு முற்படும் போது, அதனை ஏன் காங்கிரஸ்காரர்கள் எதிர்க்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிடப் பாரம்பரியத் தலைவர்கள் விட்டுச் சென்ற கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு இயங்கி வரும் இயக்கமாகும். அந்த மகத்தான தலைவர்களின் கொள்கைகள், சமுதாயத்தின் கட்டமைப்புக்கு உட்பட்டே, சமூகச் சீர்திருத்தம் செய்ய விழைகின்றன. எவ்வகையிலாவது மக்களைத் தூண்டிவிட்டு, இன்னொரு மதத்துக்கு ஒட்டுமொத்தமாக மாற்றுவதை ஊக்குவிக்கவில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

பணத்திற்காக மதம் மாறுபவர்களை வரவேற்பது எந்த மதத்திற்கும் – அது சிறுபான்மையோ, பெரும்பான்மையோ – உரிய சமுதாயப் பண்பு ஆகாது என்பதில் எவ்வித மாறுபட்ட கருத்தும் இருக்க முடியாது.

நீண்ட நெடிய மதச்சார்பற்ற பாரம்பரியத்தைக் கொண்ட அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்றக் கழகம், மதம் என்பது ஒருவரின் தனிப்பட்ட நம்பிக்கை மட்டுமல்லாமல், அவருடைய தனிப்பட்ட சுன்னியத்தையும், சுதந்திரத்தையும் நிலைநாட்டுவது என்பதை, எப்போது வலியுறுத்தி வந்துள்ளது. ஒரு மதத்தை அங்காடிக்குக் கொண்டு வந்து, அதை ஒரு வணிகப் பொருளாக மாற்றுவதைத்தான், இந்தச் சட்டம் தடுக்கிறது.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆகிய திராவிடப் பாரம்பரியத் தலைவர்களின் கொள்கை வழி நின்று, ஒடுக்கப்பட்ட மக்களின் நலனைப் பாதுகாக்க எப்போதும் பாடுபட்டு வரும் இயக்கமாகும். எல்லாச் சிறுபான்மைக் குழுக்களின் அச்சத்தையும், ஐயப்பாட்டையும் போக்க நான் பெரிதும் விரும்புகிறேன். இந்தச் சட்டம் சிறுபான்மையினரின் சுதந்திரத்தை எந்த வகையிலும் பறிக்காது, பாதிக்காது. மாறாக, சுரண்டலில் இருந்து சமுதாயத்தின் நலிந்த பிரிவினரைப் பாதுகாக்கவே இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை அறுதியிட்டு உறுதியாகக் கூறிக் கொள்கிறேன்.

# வேளாண் தொழிலாளர்களுக்கு தீபாவளிப் பரிசு

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சட்டப்பேரவையில் அறிக்கை**


நாடெங்கும் தீபாவளித் திருநாள் கொண்டாடப்படும் வேளையில், குறுவை சாகுபடியை இழந்து வாடும் காவிரிப் பாசனப் பகுதி விவசாயத் தொழிலாளர்களும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடும் வகையில் தீபாவளிப் பரிசு ஒன்றை வழங்க விரும்புகிறேன்.

கர்நாடக அரசு போதுமான அளவு காவிரியில் தண்ணீர் விடாத காரணத்தினாலும், உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பினைப் பின்பற்றாத காரணத்தினாலும், காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. அதே போல், சம்பா சாகுபடியிலும் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. இதனால் காவிரி டெல்டா பகுதிகளில் நிலம் அற்ற ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளார்கள் என்பதை நாடே நன்கு அறியும். இப்பிரச்சினை தொடர்பாக, நான் 24.6.2002 அன்று தஞ்சைக்கு நேரில் சென்று அரசு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினேன். அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் இந்த அரசு விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களின் நலனுக்காக தஞ்சை, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் சிறப்பு பல்நோக்கு நிவாரணத் திட்டம் வகுத்து ரூ.164.18 கோடி செலவில் முனைப்புடன் செயல்படுத்தி உள்ளது.

இதன் தொடர்ச்சியாக, காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள நிலமற்ற ஏழை எளிய விவசாய தொழிலாளர்களுக்கு வரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு, ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ஒரு பரிசுப் பை (Gift hamper) வழங்க முடிவு செய்துள்ளேன். இந்த பரிசு, காவிரி பாசனப் பகுதிகளில், அதாவது தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களிலும், கடலூர், திருச்சி, புதுக்கோட்டை, கரூர், பெரம்பலூர் மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களின் சில வட்டங்களிலும் வாழும் ஏறத்தாழ 10 இலட்சம் ஏழை எளிய விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு, வரும் தீபாவளிப் பண்டிகையை கொண்டாடும் வகையில், தீபாவளிப் பண்டிகைக்கு முன்பு அரசின் பரிசாக வழங்கப்படும்.

இந்தப் பரிசுப் பையில் 10 கிலோ அரிசி, 1 கிலோ சர்க்கரை, இனிப்பு 250 கிராம், நெய் 100 கிராம், தேங்காய், வாழைக்காய், கத்தரிக்காய், சுரைக்காய் போன்ற காய்கறிகள், பாசிப் பருப்பு, மஞ்சள், கடுகு மற்றும் மிளகாய் வத்தல் போன்ற பொருட்களுடன், 50 ரூபாய் ரொக்கமும் சேர்த்து தமிழக அரசின் சார்பாக தீபாவளித் திருநா[illegible] அன்பளிப்பாக வழங்க முடிவு செய்துள்ளேன் என்பதை தெரிவிப்பதில் மனநிறைவு அடைகிறேன். இவற்றின் மொத் மதிப்பு 210 ரூபாய் ஆகும். ரொக்கமாக வழங்கப்படும் 5 ரூபாய்க்கு, அதற்குரிய ரசீது பெறப்படும்.

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு செயல்படுத்தப்படும் இந்தச் சிறப்புத் திட்டம், அந்தந் ஊராட்சிகளில் உள்ள பஞ்சாயத்து தலைவர்கள், கிரா நிர்வாக அலுவலர்கள் மற்றும் நியாய விலைக் கடை ஊழியர்கள் மூலம் நியாய விலைக் கடைகளின் வாயிலா மேற்கொள்ளப்படும். இந்த விநியோகம் மாவட்ட ஆட்சித் தலைவரின் மேற்பார்வையில் செயல்படுத்தப்படும் அந்தந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் மற்று ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இந்தச் சிறப்புத் திட்டத்தை கண்காணிப்பார்கள். இச்சிறப்புத் திட்டத்தினா




பயன்பெறும் விவசாயத் தொழிலாளர் குடும்பங்களின் எண்ணிக்கை 10 இலட்சம் ஆகும். இத்திட்டத்தினால் அரசுக்கு ஏற்படும் செலவு ரூபாய் 21 கோடி ஆகும்.

உச்ச நீதிமன்றத்தின் ஆணையைப் புறக்கணித்து, கர்நாடக அரசு, தமிழ் நாட்டுக்கு உரிய நீரைத் திறந்து விடாமல் செயற்கையாக ஏற்படுத்திய வறட்சியாலும், மழை பொய்த்ததால் இயற்கையாக ஏற்பட்ட வறட்சியாலும், இந்த ஆண்டு காவிரிப் பாசனப் பகுதியில் வேளாண்மைப் பணிகள் சரிவர நடைபெறாத காரணத்தால், வருவாய் பெற வழியின்றி, துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாகி நிற்கும் விவசாயத் தொழிலாளர் குடும்பங்கள், தீபாவளித் திருநாளைக் கொண்டாடுவதற்கு இந்த அன்பளிப்பு உதவு என்று நான் நம்புகிறேன்.

அடுத்த ஆண்டு, வறட்சி நீங்கி, வளம் பெருகி, முழு ம நிறைவுடன் தீபாவளியைக் கொண்டாடுவோம் என்ற என நம்பிக்கையைக் காவிரிப் பாசனப் பகுதியைச் சார்ந்த எ அன்புக்குரிய விவசாயத் தொழிலாளர் பெருமக்களுக் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.



ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில்

# பொதுமக்கள் குறைகளுக்கு விரைவான தீர்வுகள்!

தமிழ்நாட்டில் முதன்முறையாக ஆண்டிபட்டியில் 'குறை தீர்ப்போம்' என்ற தொடுதிரை கணினி இயங்கி வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 16.9.2002 அன்று துவக்கி வைக்கப்பட்டு, பொதுமக்கள் தங்கள் குறைகள், பிரச்சினைகள் பற்றி தொடுதிரை கணினியில் தெரிவித்து பயன் அடைந்து வருகிறார்கள்.

ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள தொடுதிரை கணினியில், சட்டமன்றத் தொகுதி குறித்த அனைத்து விவரங்களையும், அரசின் திட்டங்களைப் பற்றியும் வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும் விவரங்கள் விரிவாக இருக்கும். இந்தக் கணினியை தொடுவதன் மூலம் விவரங்களை எளிதில் அறிந்து கொள்ளலாம். சட்டமன்ற உறுப்பினர்களிடம் அளிக்கப்படும் மனுக்களைப் பற்றிய விவரங்களும் இந்தக் கணினியில் சேமித்து வைத்துக் கொள்ளலாம்.

படித்தவர்கள் மட்டுமின்றி எழுதப் படிக்கத் தெரியாதவர்கள் கூட தங்கள் குறைகளைப் பதிவு செய்ய ஒலிப்பதிவு, ஒலி–ஒளிப்பதிவு முறைகளும் உள்ளன. முதல் திரையில் ஒலிப்பதிவு, ஒளி–ஒலிப்பதிவு, எழுத்துப் படிவம், Written Format ஆகிய நான்கு பிரிவுகள் உள்ளன.

ஒலிப்பதிவு பகுதியைத் தொட்டபின் வரும் அடுத்த திரையில், குறைகளைப் பதிவு செய்ய விரும்புபவர், தொடுதிரையில் அமைக்கப்பட்டுள்ள கேமிரா மூலம் தன் புகைப்படத்தை முதலில் பதிவு செய்ய வேண்டும். புகைப்படம் பதிவு செய்யப்பட்டவுடன், பதிவு செய்க என்ற பொத்தானை அமுக்குவதன் மூலம் அவர்கள் வாய் மொழியாகப் பேசி குறைகளைப் பதிவு செய்யலாம். குறைகளைத் தெரிவித்த பின் பதிவை நிறுத்துக என்ற பொத்தானை அமுக்கி நிறுத்திக் கொள்ளலாம். தாங்கள் கூறிய புகார் பதிவு செய்யப்பட்டுள்ளதை மீண்டும் ஒரு முறை சரிபார்க்கவும் வசதியுள்ளது.

இதேபோல தங்கள் குறைகளைத் தெரிவிக்கும் பொதுமக்கள் தொடுதிரையின் முன் இருக்கும் கேமிராவின் மூலம் குறைகள் தெரிவிப்பதை ஒலி மற்றும் ஒளிப்பதிவு இரண்டையும் பதிவு செய்யவும் வாய்ப்புள்ளது. இவ்வாறு பதிவு செய்ததை டிவி திரையில் காண்பது போல் மீண்டும் சரிபார்க்கலாம்.

தங்கள் குறைகளை எழுத்து மூலமாகத் தெரிவிக்க விரும்புபவர்கள் எழுத்துப் படிவம் என்ற பகுதியைத் தொடுவதன் மூலம் அடுத்த திரைக்குச் செல்லலாம். அடுத்த திரையில் மனு அனுப்புதல் பகுதியை தொட்டால், அரசின் எந்தத் துறைக்குத்



தங்கள் மனுக்களை அனுப்ப விரும்புகின்றார்களோ அந்தத் துறைகளின் பெயர்கள் பட்டியலில் வரும்.

உதாரணமாக, மின்சாரத் துறை, காவல்துறை, குடிநீர் வழங்கல் துறை, பிற்பட்டோர் நலத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை போன்றவை. இதில் எந்தத் துறைக்குத் தங்கள் குறைகளை அனுப்ப விரும்புகிறார்களோ, அந்தத் துறை பெயருள்ள பகுதியை தொட்டபின்பு, அந்தத் துறை சம்பந்தப்பட்ட பொதுவாக வரும் சில குறைகள் பட்டியல் இடப்படும்.

மின்சாரத் துறைக்குக் கீழ் மின்சாரம் வரவில்லை, மின் மீட்டர் பழுது, புதிய இணைப்பு, பொதுவான புகார் போன்ற பகுதிகள் உள்ளன. எவ்விதமான குறைகள் சொல்ல வேண்டுமோ, அந்தப் பகுதியைத் தொட்டால், அடுத்து வரும் திரையில், மனுதாரர் பெயர், முகவரி மற்றும் குறைகளை பதிவு செய்ய வசதியுள்ளது.

இதே போல் ஆங்கிலத்தில் தங்கள் புகார்களைப் பதிவு செய்ய விரும்புபவர்கள், தங்கள் புகார்களை Written Format பகுதியைத் தொடுவதன் மூலமும் ஆங்கிலத்தில் தொடுதிரை மையத்தில் பதிவு செய்யலாம்.

இவ்வாறு மேற்கூறிய வண்ணம் குறைகளைப் பதிவு செய்தபின், தொடுதிரை மையத்தில் குறைகளைப் பதிவு செய்ததற்காக, அத்தாட்சியாக ஒரு எண், கம்ப்யூட்டரால் வழங்கப்படும். பொதுமக்கள் இந்த எண்ணை குறித்து வைத்துக் கொண்டு தாங்கள் ஏற்கெனவே பதிவு செய்த மனுக்களின் மீது எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது பற்றி இந்த எண்ணை பயன்படுத்தி மீண்டும் எப்போது வேண்டுமானாலும் தெரிந்து கொள்ள வசதியுள்ளது.

இந்தத் தொடுதிரை மையம் மூலம் படித்தவர்கள் மட்டுமின்றி, பாமரர்களும், கிராமப் பகுதியைச் சார்ந்தவர்களும் தங்கள் குறைகளை நேரடியாக அரசுத் துறை அலுவலர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லும் வழியில், பயன்படுத்திட எளிதாக வடிவமைக்கப்பட்டுள்ளதால், தங்களின் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு காணப்படுவதற்கு பொதுமக்கள் அமோக ஆதரவு தருவதோடு மட்டுமின்றி, ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதியில் தாங்கள் வாக்காளராக இருப்பதற்கு பெரும் புண்ணியம் செய்திருப்பதாக எண்ணி மகிழ்கின்றனர்.

*– உல. இரவீந்திரன்,*
*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,*
*தேனி மாவட்டம்.*

• • •

# அரிசிக்கான வரி இரத்து

**தமிழக சட்டமன்ற விதி 110–ன் கீழ்**
**மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்**
**திரு. செ.ம. வேலுசாமி அவர்களின்**
**அறிக்கை 28.10.2002**

இந்த ஆண்டு, 2002–2003 – நிதிநிலை அறிக்கை (Budget) கூட்டத்தொடரில், அரிசி மீது விதிக்கப்பட்ட வரி விதிப்பினை, மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை, மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இந்த மாமன்றத்தில் முன் வைத்தார்கள்.

காவிரி நடுவர் மன்றம், உச்ச நீதிமன்றம், மற்றும் காவிரி நதி ஆணையம் ஆகிய உயர் அமைப்புகளின் தீர்ப்புகளை, கர்நாடக மாநில அரசு தொடர்ந்து சட்டத்திற்கு புறம்பான வகையில் புறக்கணித்து, தமிழ்நாட்டிற்கு தண்ணீரை திறந்து விடாமல் நடந்து வந்துள்ளதால், இந்த ஆண்டு தமிழ்நாட்டின் காவிரி டெல்டா பகுதியில் குறுவை மற்றும் சம்பா நெல் உற்பத்தியில் அளவிற்கு அதிகமாக பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும், தென்மேற்கு பருவமழையும் பொய்த்துவிட்டதால், ஏற்பட்டுள்ள வறட்சியின் காரணமாக தமிழ்நாடு முழுவதும் நெல் உற்பத்தி எப்போதும் இல்லாத அளவிற்கு மிகப்பெரிய அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பொதுமக்களின் நலன் காக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலும், வெளிச் சந்தையில் அரிசியின் விலை உயராமல் தடுக்கப்படவும், உபரி உற்பத்தி பகுதிகளிலிருந்து தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் அரிசி தாராளமாக கிடைத்திடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப அரிசிக்கு விதிக்கப்பட்டிருந்த வரி (Tax) மற்றும் இணக்க வரி (Compounding Tax) ஆகியவை உடனடியாக இரத்து செய்யப்படுகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



# தென்னகத்து நேதாஜி

– மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்

“மறைந்து 31 ஆண்டுகளுக்கு மேலாகியும், இன்றும் தேவர் என்றால், அது பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களை மட்டுமே குறிக்கும்.

இளம் பருவத்திலேயே, தனது மனத்திற்குச் சரியெனப்பட்டதை, துணிந்து செய்யும் துணிவும், உறுதியும் படைத்தவராய், தேவர் பெருமகனார் இருந்துள்ளார்.

சிறு வயதிலிருந்தே, நெற்றி நிறைய திருநீறு அணியும் வழக்கத்தை, தேவர் திருமகனார் கொண்டிருந்தார். அவர் படித்த பள்ளிக்கூடத்தில், திருநீறு அணிவதற்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட போது,"பள்ளியை வேண்டுமானால் மாற்றிக் கொள்வேனே தவிர, நெற்றியில் திருநீறு அணியும் வழக்கத்தைக் கைவிட மாட்டேன்" என்று, உறுதியுடன் இருந்தார். அந்த உறுதியின் காரணமாகத் தான், அவர் நம்மை விட்டுப் பிரியும் வரை, அவரது நெற்றி நிறைந்த திருநீற்றோடு விளங்கியது.



தனது பள்ளிப் படிப்பை முடித்த நேரத்தில், ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு, எப்படியாவது சாவு மணி அடிக்க வேண்டும் என்ற எண்ணம், அவர் நெஞ்சில் மேலோங்கி நின்றது. என்ன விலை கொடுத்தாவது, சுதந்திரத்தைப் பெற, இந்திய மக்களைத் தயார் செய்ய வேண்டும் என்று, தீர்க்கமாக இருந்தார். அந்த எண்ணங்களின் விளைவாகத் தான், நேதாஜி சுபாஸ் சந்திரபோஸ் அவர்களின் தலைமையை, எதற்கும் அஞ்சாத சிங்கமான தேவர் அவர்கள், ஏற்றுக் கொண்டார்கள்.

சுபாஷ் சந்திரபோஸ், பாலகங்காதர திலகர், போன்ற தீவிரவாத தேசியத் தலைவர்களோடும் தீவிரவாத கொள்கைக் கூட்டத்திற்கு அன்று தமிழகத்தில் தலைமை ஏற்றிருந்த சீனிவாச ஐயங்கார் போன்றவர்களின் உறுதுணையோடும் தேவர் பெருமகனார் தமிழகம் எங்கும், விடுதலை வேட்கை எனும் தீப் பிழம்புகளை ஏந்தி, வலம் வந்தார். குறிப்பாக, தமிழகத்தின் தெற்குப் பகுதிகளில், சுதந்திரத் தாகம் கொழுந்து விட்டு எரியச் செய்ததில், தென்னகத்து நேதாஜி தேவர் அவர்களின் பங்கை எவரும் குறைத்துச் சொல்ல முடியாது.

ஆங்கில ஆட்சியாளர்களுக்குத் தேவர் ஒரு சிம்ம சொப்பனமாகவே விளங்கினார் என்பதை, அவர் ஆங்கிலேயர்களால் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு, எத்தனை முறை சிறைக்கு அனுப்பப்பட்டார் என்பதிலிருந்து, தெரிந்து கொள்ள முடியும். கடுமையான சட்டப் பிரிவுகளின் கீழ், பல்வேறு, வழக்குகளில் ஆட்படுத்தப்பட்டார். அன்றைக்குத் தமிழகத்தில் இருந்த, பெரும்பாலான சிறைச்சாலைகள் அனைத்திலும் அடைக்கப்பட்ட ஒரே அரசியல் தலைவர், தேவர் திருமகனார் தான்.

வீரம், விவேகம், தன்னடக்கம், எளிமை போன்ற பண்புகளின் ஒட்டுமொத்த சின்னமாக அவர் விளங்கியதால் ஒரு புறம் சுவாமி விவேகானந்தரின் வடிவாகவும், மறுபுறம், சுபாஷ் சந்திரபோஸின் வடிவாகவும் அவர் திகழ்ந்தார்.

தெய்வீகச் சேவைக்கும், தேசியச் சேவைக்கும், எங்கே தனது மண வாழ்வு இடையூறாக அமைந்துவிடுமோ என்று முற்றும் துறந்த முனிவராக வாழ்ந்த தேவர், தன்னை நம்பிய மக்களின் நன்மைக்கும், நல்வாழ்விற்கும், எத்தகைய தியாகத்தையும் செய்யத் தயங்கியது இல்லை.

1934–ஆம் ஆண்டு, ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த, குற்றப் பரம்பரைச் சட்டத்தைத் தகர்த்தெறிய, தன்னந்தனியாகப் போராடி அவர் வெற்றி பெற்றதே, அதற்கு ஓர் எடுத்துக்காட்டு. குறிப்பிட்ட சமுதாய மக்கள், தினமும் காவல் நிலையத்திற்குச் சென்று, கை ரேகை வைத்துச் செல்ல வேண்டும் என்றும் வெளியூர் செல்வதாக இருந்தால் காவல் துறையினரின் அனுமதி பெற்ற பின்பே செல்ல வேண்டும் என்றும் பிறப்பிக்கப்பட்ட ஒரு சட்டத்தை எதிர்த்து, அவர் போராடிய காரணத்தால் தான் அந்த இருட்டுச் சட்டம் ஆங்கில அரசால் திரும்பப் பெறப்பட்டது. ஒரு சமுதாயத்திற்கு நேர இருந்த இழிவைத் தடுத்தவர் என்பதால் தான், இன்றைக்கும் அந்தப் பகுதி மக்கள், அவரைத் தெய்வமாக வழிபட்டு வருகிறார்கள்.

1937–இல் நடைபெற்ற பொது தேர்தலில், அன்றைய இராமநாதபுரம் சமஸ்தானத்தின், இராஜா சேதுபதியை எதிர்த்து, மிகவும் துணிவுடன் போட்டியிட்டார். எங்கே பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள், காட்டாறு போன்ற, தனது கருத்தாழமிக்க பேச்சுக்களால், மக்கள் மனதைக் கவர்ந்து விடுவாரோ என்று பயந்து; எந்த மேடையிலும், அவர் சொற்பொழிவு ஆற்றக் கூடாது, என்று வாய்ப்பூட்டு போட்டது, அன்றைய ஆங்கிலேய அரசு. ஆனால் ஒவ்வொரு மேடையிலும், ஒரு ஞானியைப் போல அமர்ந்து விட்டு, மக்களைப் பார்த்து கரம் கூப்பி, வணக்கம் தெரிவித்து விட்டு ஒரு வார்த்தைக் கூடப் பேசாமல், அந்தத் தேர்தலிலே, மாபெரும் வெற்றியைப் பெற்றுக் காட்டியவர், தேவர் திருமகனார் என்றால், எந்த அளவிற்கு மக்கள் மனதை, அவர் ஆக்கிரமித்து இருந்தார் என்பது தெளிவாகும்.

"விவேகம் அற்ற வீரம் – முரட்டுத்தனம், வீரம் அற்ற விவேகம் – கோழைத்தனம்'' என்று முழங்கியதோடு மட்டுமின்றி நடைமுறைப்படுத்தியும் காட்டியவர் தேவர் அவர்கள்''

***– சென்னையில் 19.10.94 அன்று பசும்பொன்முத்துராமலிங்கத் தேவர் சிலை திறப்பு விழாவில் ஆற்றிய உரையிலிருந்து***

# 2002-2003ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள்



மாண்புமிகு நிதியமைச்சர் திரு. **சி.பொன்னையன்** அவர்கள் 2002–2003ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை சட்டமன்றப் பேரவை முன்வைத்து, 2002ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ஆம் நாளன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

2002–2003ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தின் முன்வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவானதொரு அறிக்கை, இம் மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.175.99 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூ.119.19 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூ.56.80 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2002ஆம் ஆண்டு மார்ச் 28ஆம் நாளன்று, கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து, முன்பணங்கள் பெற்று, "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

கழிமுகப் பகுதியிலுள்ள விவசாயிகளின் துயர் – துடைக்க அரசு பெரும் திட்டமொன்றை அறிவித்துள்ளது.

2002–03ஆம் ஆண்டில் தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் ஆகிய கழிமுக மாவட்டங்களில் நெய்வேலி காட்டாமணக்கு செடியை (IPOMEA) ஒழிப்பதற்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.2 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.



2001–2002ஆம் ஆண்டு நெல் பருவகாலங்களுக்கு இந்தியப் பொதுக் காப்புறுதிக் கழகத்தினால் (General Insurance Corporation of India) ஏற்பளிக்கப்பட்ட இழப்பீடுகளில் மாநில அரசின் 50 சதவிகித பங்குச் செலினத்திற்காக ரூ.6.61 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 5 – வேளாண்மைத் துறை" என்பதன் கீழ் சேர்க்கப் பட்டுள்ளது.

தேசிய வேளாண்மைக் காப்புறுதித் திட்டத்தின் கீழ்வரும் தொகுப்பு நிதிக்கு மாநில அரசின் பங்குத் தொகையாக ரூ.5.50 கோடி எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களிடமிருந்து 18 இலட்சம் சேலைகள் மற்றும் 9 இலட்சம் வேட்டிகள் வாங்குவதற்காக ரூ.25 கோடியை அரசு அனுமதித்துள்ளது. இது துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு 31.12.1998 முதல் 31.12.2001 வரையிலான காலத்திற்கான வட்டிக்கான உதவித் தொகையாக ரூ.27.50 கோடி அரசு அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.24.08 கோடி முன்பணம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒப்பளிப்பு செய்யப்பட்ட முழுத்தொகையும் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 16 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை – கைத்தறி மற்றும் துணிநூல்" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

ஐந்து அரசினர் மருத்துவக் கல்லூரிகளுக்கு சாதனங்கள் மற்றும் அறைகலன்கள் வாங்கவும், கட்டடங்கள் கட்டவும் ரூ.28.80 கோடி அரசு அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.1 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 18 – மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை" என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகர காவல் துறை பணியாளர்களுக்கு உணவு கட்டண வீதங்களை உயர்த்தி வழங்குவதற்காக ரூ.9.68 கோடிக்கு அரசு அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 21 – உள்துறை – காவல்" என்பதன் கீழ் ரூ.2.42 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்ற கடன் தொகையை ஏழு கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்கு கடனாக வழங்க அரசு ரூ.37.20 கோடி அளித்துள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 26 – தொழில் துறை" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

ஆசாரிப்பள்ளத்தில் உள்ள அரசு காசநோய் மருத்துவமனையில் கட்டடங்களை மேம்படுத்துவதற்காக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.1.30 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 38 – பொதுப் பணித்துறை" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

முதியோர் ஓய்வூதியம் பெறும் 71,974 பேர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 10 கிலோ உணவு தானியம் வழங்குவதற்காக அன்னபூர்ணா திட்டத்தை செயல்படுத்துவதற்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.6.03 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண் 43 – சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை" என்பதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது. ★

**தமிழ்க்கலை உயர்ந்ததாய் இருக்க வேண்டுமானால், கலைக்குக் காரணமான எண்ணங்களும் உயர்ந்தவையாய் இருக்க வேண்டும்.**

— பாரதிதாசன்

**தீவிரவாதத்தை முறியடித்த**

# காவல்துறையினருக்கு முதல்வர் பாராட்டு

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 4.10.2002 அன்று பயங்கரவாத செயல்களில் தொடர்புடைய குற்றவாளியான இமாம் அலியை சுட்டு வீழ்த்தி வீரச் செயல் புரிந்த காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களை தலைமைச் செயலகத்தில் சந்தித்து பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

பல்வேறு பயங்கரவாத செயல்களில் தொடர்புடைய குற்றவாளியான இமாம் அலியின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து முற்றுகையிட்டு, கடந்த 29.9.2002 அன்று அதிகாலை பெங்களூரில் சுட்டு வீழ்த்தி வீரச் செயல் புரிந்த தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் பாராட்டுக் கடிதம், தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் வீர விருதான "அண்ணா பதக்கம்" வழங்கப்படுவதற்கான அரசாணை, மற்றும் தலா ரூ.25,000 ரொக்கப் பரிசையும் முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த அதிரடி நடவடிக்கையில் சிறப்பு அதிரடி படையைச் சேர்ந்த 27 பேர், மற்றும் கோயம்புத்தூர், மதுரையைச் சேர்ந்த சிறப்புக் குழுவினர் 11 பேர் உள்ளிட்ட தமிழ்நாடு காவல் துறையைச் சேர்ந்த 38 அதிகாரிகளும், காவலர்களும் பங்கேற்றனர். இந்த சாகசச் செயலின்போது, சார் ஆய்வாளர் திரு. செல்வகன் டேவிட் பலத்த காயங்கள் அடைந்துள்ளார். அவரது சார்பாக, பாராட்டுக் கடிதம், பதக்கம் வழங்குவதற்கான அரசாணை மற்றும் ரொக்கப் பரிசை சிறப்பு அதிரடிப் படை கண்காணிப்பாளர் திரு. எம். அசோக் குமார் முதலமைச்சர் அவர்களிடம் பெற்றுக் கொண்டார்.

"தமிழ்நாடு காவல் துறையின் சிறந்த பொறுப்புணர்வுக்கும், உயரிய செயல்திறனுக்கும், இணையற்ற வீரத்திற்கும் மற்றுமோர் எடுத்துக்காட்டாக இந்த வீரச் செயல் விளங்குகிறது என்றும், இந்த துணிச்சலான முயற்சியில் ஈடுபட்டு அற்புதமான சாதனை நிகழ்த்திய அனைத்து காவல் துறை அதிகாரிகளையும், காவலர்களையும் பெரிதும் பாராட்டுகிறேன் என்றும்" தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார். மேலும் இத்தகைய வீரச் செயல் புரிந்த அதிகாரிகள் மற்றும் காவலர்களின் வீரத்தை போற்றும் வகையிலும், அவர்களது செயல் திறனை ஊக்குவிக்கும் வகையிலும் கீழ்க்கண்டவற்றை வழங்கினார் :

- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் பாராட்டுக் கடிதம்
- இந்த அதிரடி நடவடிக்கையில் ஈடுபட்ட 33 அலுவலர்கள் மற்றும் காவலர்களுக்கும் தமிழ்நாடு முதலமைச்சரின் காவல்துறை வீரப்பதக்கமான "அண்ணா பதக்கம்" வழங்குவதற்கான அரசு ஆணை
- இவர்கள் அனைவருக்கும் தலா ரூ.25 ஆயிரம் ரொக்கப் பரிசு
- கோயம்புத்தூர் சரக காவல் துறை துணைத் தலைவர் திரு. அசுதோஷ் சுக்லா, மதுரை மாநகர் (குற்றம் மற்றும் போக்குவரத்து) துணை ஆணையர் முகம்மது ஷகீல் அக்தர், தமிழ்நாடு சிறப்பு அதிரடிப்படை கண்காணிப்பாளர் திரு. அசோக்குமார், மதுரை மாநகர் காவல் துறை உதவி ஆணையர் திரு. ஆர். காளிமுத்து, சிறப்பு அதிரடிப்படையில் பணி மேற்கொண்டுள்ள தமிழ்நாடு கமாண்டோ பள்ளி துணை கண்காணிப்பாளர் திரு. எஸ். சேகர் ஆகிய 5 அதிகாரிகளுக்கு குடியரசுத் தலைவரின் வீர விருதுகளுக்கு பரிந்துரைக்கப்படுவதற்கான அரசுக் கடிதம்.

காயமுற்று மருத்துவ சிகிச்சை மேற்கொண்டுள்ள சார் ஆய்வாளர் திரு. செல்வகன் டேவிட் அவர்களின் மருத்துவச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்ளும். பயங்கரவாதிகள் நடத்திய எதிர்தாக்குதலால் பலத்த காயமடைந்த இவருக்கு கருணைத் தொகையாக ரூ.2 இலட்சம் தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

முதலமைச்சர் அவர்களிடம் பாராட்டுக் கடிதம், அண்ணா பதக்கத்திற்கான அரசாணை மற்றும் ரொக்கப் பரிசைப் பெற்றுக் கொண்ட அனைவரும் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியின் போது உள்துறைச் செயலாளர் திரு. சையது முனிர் ஹோடா, காவல்துறைத் தலைவர் திரு. பி.பி. நெயில்வால் மற்றும் சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு. கே. விஜய்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.



# "மகாத்மா காந்தி காவல் துறைப் பதக்கம்"


**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் கள்ளச்சாராயத்தை ஒழிப்பதில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியதற்காக தமிழக காவல் துறையைச் சேர்ந்த ஐந்து காவல் துறை அதிகாரிகள், 2002ஆம் ஆண்டிற்கான "மகாத்மா காந்தி காவல்துறைப் பதக்கம்" வழங்கப்பட தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

காந்தி ஜெயந்தியையொட்டி தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்தப் பதக்கங்களை பெறுபவர்களில்
1. திரு. தே. கிருஷ்ணமூர்த்தி, காவல் உதவி ஆணையாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு, பூக்கடை சரகம், சென்னை,
2. திருமதி. இ. செல்வி ஹேமா பிரமிளா, காவல் உதவி ஆணையாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு, தல்லாகுளம், மதுரை நகர், 3. திரு. சீ. சீத்தாராமன், காவல் ஆய்வாளர், இராணிப்பேட்டை காவல் நிலையம், வேலூர் மாவட்டம்,
4. திரு. இரா.ச. சீனிவாசன், காவல் ஆய்வாளர், ராசிபுரம் காவல் நிலையம், நாமக்கல் மாவட்டம் மற்றும் 5. திரு. எம்.ஜி. தேசன், காவல் உதவி ஆய்வாளர், விழுப்புரம் நகர் (கிழக்கு) காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம் ஆகியோர் அடங்குவர்.

தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும் இந்த பதக்கங்களுடன், ஒவ்வொருவருக்கும் ரூ.10,000–க்கான ரொக்கப் பரிசும் வழங்கப்படும் "மகாத்மா காந்தி காவல்துறைப் பதக்கங்கள்" வருகின்ற குடியரசு தினத்தன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படும்.

★ ★ ★

# கல்வி பயில உதவி பெற்றோர்



## மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றி



தமிழகத்தில் உள்ள, மருத்துவம், பல் மருத்துவம், மருந்தியல், செவிலியர், கால்நடை மருத்துவம், பிசியோதெரோபி மற்றும் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் பயில இடம் கிடைத்தும் போதி நிதி வசதி இல்லாத காரணத்தால் ஆரம்ப நிலைக் கட்டணத்தைக் கூட கட்ட முடியாமல் தவிக்கின்ற 15 மாணவ–மாணவியர்கள், தாங்கள் சேர அனுமதி பெற்ற கல்லூரிகளில் சேர்ந்து கல்வி பயில உதவி செய்யும்படி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் மனு அளித்திருந்தார்கள். அதன்படி, போதிய நிதிவசதி இல்லாமல் தவித்த இந்த மாணவர்களுக்கு 'முதலமைச்சர் பொது நிவாரண நிதி'யிலிருந்து தலா ரூ.25 ஆயிரம் வீதமும், மருந்தியல் பட்டப்படிப்பு பயில ஒரு மாணவிக்கு ரூ.13,435 வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்.

இதன்படி, சேலம் மாவட்டம் எம். புவனா, நாமக்கல் மாவட்டம் சி. கார்த்திகேயன் ஆகியோர் மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து எம்.பி.பி.எஸ். பயிலவும், பெரம்பலூர் மாவட்டம் டி. கணேஷ், பல் மருத்துவ கல்லூரியில் சேர்ந்து பல் மருத்துவ படிப்பு பயிலவும், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த ஆர். சதீஷ் குமார், ஆர். சத்தியமூர்த்தி, சேலம் மாவட்டம் ஆர். சரசு ஆகியோர் மருந்தியல் கல்லூரிகளில் சேர்ந்து மருந்தியல் படிப்பு பயிலவும், திருநெல்வேலி மாவட்டம் சி. சத்தியகலா, கன்னியாகுமரி மாவட்டம் டி. பிரவீணா, தருமபுரி மாவட்டம் எஸ். மணிமேகலை, திருவள்ளூர் மாவட்டம் எம். டைய்னா ஆகியோர் செவிலியர் கல்லூரிகளில் சேர்ந்து செவிலியர் பட்டப்படிப்பு பயிலவும், சேலம் மாவட்டம் பி. ராஜகுமாரி, கால்நடை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து கால்நடை மருத்துவ படிப்பு பயிலவும், மதுரை மாவட்டம் எஸ். செல்வி பிசியோதெரோபி கல்லூரியில் சேர்ந்து பிசியோதெரோபி படிப்பு பயிலவும், நாமக்கல் மாவட்டம் எம். தஸ்லிம் நிஷா திருநெல்வேலி மாவட்டம் சுகந்தி ஆகியோர் ஆசிரியர் பயிற்சி கல்லூரியில் சேர்ந்து ஆசிரியர் பயிற்சி படிப்பு பயிலவும் மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25,000 வீதம் மொத்தம் ரூ. 3,50,000, சென்னை எண்ணூரைச் சேர்ந்த கே. பூங்கொடி மருந்தியல் கல்லூரியில் சேர்ந்து மருந்தியல் படிப்பு பயிலுவதற்கு ரூ.13,435ம், ஆகமொத்தம் ரூ. 3,63,435க்கான காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.10.2002 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்.

நிதியுதவியைப் பெற்றுக் கொண்ட மாணவ–மாணவியர்கள் அனைவரும் தங்களது கல்வி தொடர தக்க நேரத்தில் நிதியுதவி அளித்த முதலமைச்சர் அவர்களுக்கு, தங்களது உளப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.



இயற்கை வளங்களில் நிலமும், நீரும் முக்கிய பங்கு வகிக்கின்றன. நமது நாட்டில் 70 சதவிகிதத்திற்கும் அதிகமான மக்கள் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களையே செய்து வருகின்றனர். இவ்விரு வளங்களும் சமீபகாலமாக குன்றி வருகின்ற காரணத்தினால் விளைநிலங்கள் பெருமளவில் தரிசு நிலங்கள் ஆகிவிட்டன. இந்நிலங்களை நம்பி வாழும் விவசாயிகளின் வாழ்க்கைத்தரமும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டு உள்ளது. அது மட்டுமில்லாமல் பெருகிவரும் மக்கள் தொகையும் தேவைக்கேற்ப தரிசாக மாறியுள்ள நிலங்களை பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க வேண்டியது தற்போதைய காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு "விரிவான தரிசு நிலத்திட்டம்" என்ற சிறப்பானதொரு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இத்திட்டம் நடப்பாண்டில் (2001–2003) தமிழ்நாட்டில் 10 மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. அவற்றுள் நமது தேனி மாவட்டமும் ஒன்றாகும். இம்மாவட்டத்தில் பெரியகுளம், ஆண்டிபட்டி மற்றும் மயிலாடும்பாறை ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. பெரியகுளம் ஒன்றியத்தில் 9 நீர்வடிப் பகுதிகளும், ஆண்டிபட்டி ஒன்றியத்தில் 13 நீர்வடிப் பகுதிகளும், மயிலாடும்பாறை ஒன்றியத்தில் 5 நீர்வடிப் பகுதிகளும் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக ரூ.70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆரம்ப கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தரிசு நிலத்தில் வறட்சியை தாங்கக்கூடிய தண்ணீர்த்தேவை அதிகமில்லாத பழச்செடிகள் மற்றும் மரக்கன்றுகள் பயன்தரத்தக்க வகையில் சுற்றுச்சூழலை மேம்படுத்தும் விதமாக நட்டு வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

**முக்கிய நோக்கங்கள்:**

நீர்வடிப் பகுதிகளில் உள்ள தரிசான விளைநிலங்களை மீண்டும் பயன்பாட்டின் கீழ் கொணர்ந்து அவற்றின் மூலம் உணவு, எரிபொருள், மூலப்பொருள் மற்றும் தீவன உற்பத்தியை மேம்படுத்துதல். இயற்கை வளங்களான நிலம், நீர், தாவர வளங்களை மேம்படுத்தி, சுற்றுப்புற சூழ்நிலையை தற்போதைய நிலையிலிருந்து மேம்படுத்துதல். கிராமப்புற ஏழை எளியவர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பினை அளித்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல். வேறுபட்ட நிலங்களை கொண்டுள்ள மக்களின் சமூக மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை களைதல். கிராமபுற மக்களின் விழிப்புணர்வு மற்றும் திறமைகளை வளர்த்து



அவர்களுடைய நிலைகளை செம்மையான இயற்கைச் சூழ்நிலைகளைக் கொண்டு உயரச் செய்தல். கிராம மக்களை சுயசார்புடையவர்களாக உருவாக்குதல் மற்றும் உயிர்தாவரங்கள் (Biomass) மற்றும் தோட்டப் பயிர்களின் விளைச்சலை அதிகப்படுத்துதல்.

**நீர்வடிப்பகுதி:**

ஒரு ஓடையின் ஓர் இடத்திலும் ஒரு நதி அல்லது குட்டைக் குளம் மற்றும் பெரிய நீர்த்தேக்கங்களுக்கு மழைநீர் எங்கிருந்தெல்லாம் வருகின்றதோ அந்த நிலத்தின் பரப்பே நீர்வடிப் பகுதியாகும்.

### திட்ட செயல்முறை:

விரிவான தரிசுநிலத் திட்டம், நீர்வடிப்பகுதி முறையில், மண் மற்றும் நீர்வள மேம்பாட்டுடன், பல்வகை மரங்களை வளர்த்து, ஒரு நிலத்தை மேம்பாட்டினை உருவாக்கும் முறையில் செயல்படுகின்றது. இத்திட்டம் தரிசு நிலமுடையோருடன், நிலமற்ற ஏழை மக்களும் பயன்பெரும் வகையில் செயல்படுகின்றது. இத்திட்டம் மக்கள் பங்கேற்கும் முறையில் திட்டப் பகுதிகளில் ஏற்படுத்தப்படும் மக்கள் அமைப்புகளால் செயல்படுத்தப் படுகின்றது.

## நிர்வாக அமைப்புகள்:

### மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டுக்குழு:

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலக உறுப்பினரை செயலராகக் கொண்டு இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் மாவட்ட அளவிலான அரசு துறை அலுவலர்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள், பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் முதலியவற்றின் பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர். இத்திட்டத்திற்கான விழிப்புணர்வு முகாம்கள், சமுதாய அமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் பயிற்சி நடவடிக்கைகள், செயல்திட்டங்கள் தயாரித்தல் ஆகியவற்றிற்கு இக்குழு ஆலோசனை வழங்குதல் திட்ட நடவடிக்கைகளில் முன்னேற்றத்தை கண்காணித்தல், ஆய்வு செய்தல், வழிகாட்டுதல் முக்கியமான திட்ட கொள்கைகளை வகுத்தல், திட்ட கணக்குகள், வளர்ச்சி கணக்குகள் மற்றும் பதிவேடுகளை சரிபார்த்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும்.

### மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை:

இத்திட்டம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் முழு வழிகாட்டுதல் மற்றும் கண்காணிப்பில் செயல்படுத்தப்படும். அரசிடமிருந்து திட்டத்திற்கான நிதியை பெற்றுதிட்டச் செயலாக்கத்திற்கு அளித்தல் மற்றும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டிற்கு திட்டமிடல், செயல்படுத்துதல், கண்காணித்தல், பராமரிப்பு பணிகளுக்கு வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வை இடுதல் ஆகிய பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மேற்கொள்ளும்.

### திட்ட செயலாக்க முகமை:

திட்ட செயலாக்க முகமைகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையால் நியமனம் செய்யப்படுகின்றன. ஒவ்வொரு திட்ட செயலாக்க முகமையும் சுமார் 2,000 முதல் 4,000 எக்டேர் நிலப்பரப்புள்ள நீர்வடிப்பகுதிகளில் திட்ட நடவடிக்கை களை நிர்வகிக்கும். நீர்வடிப்பகுதிகளில் விழிப்புணர்வு மற்றும் சமுதாய அமைப்புகள் ஏற்படுத்துதல், பயிற்சி அளித்தல், ஊரக மக்கள் பங்கேற்பு முகாம்களை நடத்துதல், செயல்திட்டம் தயார் செய்ய வழிகாட்டுதல், திட்ட நடவடிக்கைகளை வழி நடத்துதல், கண்காணித்தல், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் திட்ட முன்னேற்றத்தை அறிக்கைகள் முதலியவற்றை சமர்பித்தல் ஆகிய பணிகளை திட்ட செயலாக்க முகமைகள் மேற்கொள்ளும். இந்த பணிகளுக்கு இத்திட்டத்திற்கென நியமிக்கப்படும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணியினர் உதவிபுரிவர்.

### அரசு சாரா தொண்டு நிறுவனம்:

இத்திட்டத்திற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள சென்ாா்டு தொண்டு நிறுவனங்கள், இத்திட்டத்தில் பணிபுரியும் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர்களை அயர்பணியில் அளிக்கும், இவைகள் திட்டப்பகுதிகளில் விழிப்புணர்வு மற்றும் மக்கள் பங்கேற்பு மதிப்பாய்வு முகாம்கள், சமுதாய அமைப்ப மற்றும் பயிற்சி நடவடிக்கைகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தும் மற்றும் திட்ட காலத்திற்குப் பிந்திய நிலத்தை வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள கிராம மேம்பாட்டு சங்கத்திற்கு உதவிபுரியும்.

### நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணியினர்:

ஒவ்வொரு திட்ட செயலாக்க முகமையிலும், சமூகவியலர், பொறியியலர் மற்றும் தாவரவியலர் ஆகிய மூவர் அடங்கிய ஒரு நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி பணிபுரியும். இவற்றில் ஒரு தொழில்நுட்ப உறுப்பினர் அரசு துறையிலிருந்து பணியமர்த்தப்படுவர். நீர்வடிப்பகுதி மேம்பாட்டு சங்கம் மற்றும் இதர அமைப்புகள் தங்களின் பணிகளை



மேற்கொள்ள உதவிபுரிதல், கண்காணித்தல் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்குதல் முதலியவை இந்த அணியின் முக்கிய பணிகளாகும். இவர்கள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திட்ட செயலாக்க முகமை மற்றும் நீர்வடிப்பகுதி சமுதாயத்திற்கு ஒரு தொடர்பு பாலமாக செயல்படுவர்.

### சுய உதவிக் குழுக்கள்:

திட்டப் பகுதிகளில் உள்ள நிலமற்ற ஏழைகள் அல்லது மிகக் குறைந்த அளவு நிலம் கொண்டுள்ள ஒரே நோக்கம் அல்லது தொழிலைக் கொண்ட 12 முதல் 20 நபர்கள் தங்கள் வளர்ச்சிக்காக சுய உதவிக் குழுக்கள் அமைத்து செயல்பட இத்திட்டம் உதவிபுரிகின்றது. இந்த சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்கும், செயல்படுவதற்கான வழிகாட்டுதல், பயிற்சி அளித்தல், திறமைகளை வளர்த்தல் மற்றும் சுழல்நிதி அளித்தல் முதலிய பணிகளை செய்து அவர்கள் தம் வளர்ச்சிக்கு இத்திட்டம் உதவி புரியும். முக்கியமாக, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர், பெண்கள், ஆடு, மாடு மேய்ப்பவர், விவசாயக் கூலிகள் ஆகியோர் அடங்கும் குழுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். இதுவரை 89 சுய உதவிக் குழுக்களுக்கு 1071 உறுப்பினர்களைக் கொண்டு, இம்மூன்று நீர்வடிப் பகுதிகளிலும் செயல்படத் துவங்கியுள்ளது.

### பகுதிக் குழுக்கள்:

திட்டப் பகுதிகளில் ஒவ்வொரு 10 எக்டேர் தரிசு நிலங்களிலும் மரம் வளர்த்து நேரடியாக பயன்பெறவிருக்கும் விவசாயிகள் ஒரு பகுதிக் குழுவாக சேர்ந்து செயல்படுதல் வேண்டும். ஒவ்வொரு நீர்வடிப்பகுதிக்கும் சுமார் 8 முதல் 10 நீர்வடிப் பகுதிக் குழுக்கள் அமைக்கலாம். தங்களுக்குள் ஒற்றுமையாக செயல்பட்டு பொதுவான உயிர்வேலி அமைத்தல், நீர் ஆதாரங்களை ஏற்படுத்துதல் மற்றும் மரச் செடிகள் நட்டு பராமரித்தல் மற்றும் இதர வேளாண் பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியன இந்த பகுதிக் குழுக்களின் பணிகளாகும். இம்மூன்று நீர்வடிப்பகுதிகளிலும் 176 பகுதிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

### பயனாளிகள் குழுக்கள்:

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீர்வடிப்பகுதிகளில் உள்ள ஒரேவிதமான வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளக்கோரும் நிலமுடையோர் இணைந்து 30 நபர்களுக்கு மிகாமல் ஒரு பயனாளிகள் குழுவாக செயல்படுவார்கள். தங்களுக்கு தேவையான நீர்வடிப்பகுதி மேம்பாட்டுப் பணிகளை திட்டமிடுதல் செயல்படுத்துதல் மேற்பார்வை செய்து பராமரித்தல் முதலியன இந்தக் குழுக்களின் செயல்பாடுகளாகும்.

### கிராம மேம்பாட்டு சங்கம்:

ஒவ்வொரு நீர்வடிப் பகுதியிலும் அமைக்கப்படும் அனைத்து சுய உதவிக் குழுக்கள், பகுதிக் குழுக்கள், பயனாளிக் குழுக்கள், நீர்வடிப்பகுதியைச் சார்ந்த இதர விவசாயிகள் ஆகியோர் அனைவரையும் இணைத்து கிராம மேம்பாட்டு சங்கம் என்ற சங்கத்தை ஏற்படுத்துதல் வேண்டும். இதுவே நீர்வடிப் பகுதியின் தலைமை அமைப்பும் உயிர்நாடியும் ஆகும். பல்வேறு குழுக்களின் செயல்திட்டங்களை ஆராய்தல் அங்கீகரித்தல் திட்ட செயல்பாட்டிற்கு குழுக்களை ஊக்குவித்தல் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி மற்றும் திட்ட செயலாக்க முகமையுடன் இணைந்து செயல்படுத்துதல் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் ஆய்வு மற்றும் வழிகாட்டுதலில் செயல்படுதல் ஆகியவை இச்சங்கத்தின் பணிகளாகும்.

### நீர்வடிப்பகுதி செயற்குழு:

ஒவ்வொரு நீர்வடிப் பகுதியிலும் அமைக்கப்படும் கிராம மேம்பாட்டு சங்கத்தின் கீழும் சுயஉதவிக் குழுக்கள், பகுதிக் குழுக்கள், பயனாளிகள் குழுக்கள், ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், விவசாயிகள் மற்றும் திட்ட பணியாளர்கள் ஆகியோரை சுழல்முறையில் பிரதிநிதிகளாக கொண்டு ஒரு செயற்குழு அமைக்கப்படும். இதில் 7 முதல் 9 உறுப்பினர்கள் இருப்பர். திட்டத்தின் அன்றாட நடவடிக்கைகளை செயல்படுத்துதல், பல்வேறு குழுக்களுக்கும், நீர்வடிப் பகுதி மேம்பாட்டு அணியினர் திட்ட செயலாக்க முகமை ஆகியோரது தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் செயல்படுதல் ஆகியவை இக்குழுவின் பணிகள் ஆகும்.

### நீர்வடிப்பகுதி மேற்பார்வை குழு:

இதுவும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டு சங்கத்தின் ஓர் அங்கமாகும். ஒவ்வொரு குழுவிலும் 5 முதல் 7 நபர்களை கொண்டு மேற்கண்ட பிரதிநிதிகளைக் கொண்டு அமைக்கப்படும். திட்ட நடவடிக்கைகளை பணிகளை மேற்பார்வை செய்தல், அறிக்கைகளை சங்கத்திற்கு அளித்தல் முதலியவை இதன் பணியாகும். செயற்குழுவின் உறுப்பினர்கள் மேற்பார்வை குழுவில் இடம்பெற மாட்டார்கள்.

### உள்ளூர் அமைப்புகளுடன் தொடர்பு:

திட்ட பகுதிகளில் ஏற்கெனவே செயல்படும் மகளிர் திட்ட குழுக்கள், டான்வா மகளிர் குழுக்கள், தொண்டு நிறுவனங்கள் முதலியவற்றின்

வீணாக்குபவர்கள் மத்தியில் வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம் செட்டிகுளம் ஊராட்சியைச் சார்ந்த செல்வி பி. அமுதா விதிவிலக்கானாள். பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்ற இவர், மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்த சிறுசேமிப்பு முகவர் பணிக்கு விண்ணப்பித்து, வள்ளியூர், செட்டிகுளம் பகுதிக்கு சிறுசேமிப்பு முகவராக நியமிக்கப்பட்டார். இப்பகுதியிலுள்ள பொதுமக்களை சந்தித்து சிறுசேமிப்பு பற்றியும் அதனால் பெறக்கூடிய நன்மைகள் பற்றியும் எடுத்துக்கூறி அனைவரையும் அஞ்சலகத்தில் நடப்புக் கணக்கு துவங்கச் செய்தார். பல்வேறு மக்களிடையே சிறுசேமிப்பு நிதியாக ரூ.37,170ஐ திரட்டி அஞ்சலகத்தில் செலுத்தினாள். இதற்காக ஊக்கத்தொகையாக ரூ.1,230ஐ அரசு அவருக்கு அளித்தது. தொடர்ந்து அப்பகுதி மக்களிடையே சிறுசேமிப்பு பற்றி எடுத்துகூறி 424 குடும்பங்களை அஞ்சலகத்தில் நடப்புக் கணக்கை துவங்கச் செய்தார். அதன் பலனாக அக்டோபர் மாதத்தில் ரூ.76,255ஐ வசூல் செய்து ஊக்கத்தொகையாக ரூ.4,575ஐ பெற்றார். நவம்பர் மாதத்தில் ரூ.79,340ஐ வசூல் செய்து ரூ.4,740 ஊக்கத்தொகையும் பெற்றார். ஏப்ரல் 2002 முதல் மாதந்தோறும் ரூ.1,20,000ஐ அஞ்சலகத்தில் செலுத்தி ரூ.7,350 ஊக்கத்தொகை பெற்று வருகிறார்.

இவரின் திறமையை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப. அவர்கள் வள்ளியூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடந்த சிறுசேமிப்பு முகவர் கூட்டத்தில் பாராட்டி பரிசு வழங்கினார். இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் கூறும்போது செல்வி பி. அமுதா போன்ற திறமையான முகவர்கள் மூலமாக நமது மாவட்டம் சிறுசேமிப்பில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது என்று கூறினார். தொடர்ந்து சிறுசேமிப்பில் ஊக்கமுடன் பணியாற்றும் செல்வி பி. அமுதா மாதந்தோறும் ரூ.10,000 ஊக்கத்தொகை பெறுவேன் என்று கூறி அதற்காக ரூ.5,000 அதிகமான அளவில் புதிய நடப்பு கணக்குகளை ஒவ்வொரு மாதமும் துவக்கிய வண்ணம் உள்ளார்.

மேலும் இப்பணியில் இம்மாவட்டத்தைச் சார்ந்த 1014 மகளிர் முகவர்களும் ஈடுபட்டுள்ளனர். 2001–2002ஆம் ஆண்டில் மேலும் 585 முகவர்கள் புதிதாக நியமிக்கப்படுகிறார்கள். மாதந்தோறும் நிரந்தரமாக கணிசமான அளவு வருவாய் ஈட்டி வருகின்றனர். இவர்களுக்கு வழிகாட்டும் செல்வி பி. அமுதா அவர்களின் பணி தன்னம்பிக்கையூட்டும் என்பதில் ஐயமில்லை.

*– சிவ.சு. சரவணன்,*
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*திருநெல்வேலி.*

## ஜவஹர் நினைவு

நேருவை நினைத்தவுடன்
நேர்மைக்குணம் என்னும்
மேருவை நிகர்த்தஒளி
மின்னிவரும் முன்னால்
பாரிலுள்ள யாவரும்நம்
பந்துஜன மென்றே
கோரும்ஒரு மெய்யுணர்வின்
கொள்கைவரும் அன்றோ ?

ஜவஹரை நினைத்தவுடன்
ஜாதிநிற பேதம்
அவனியில் அழிந்தொழிய
ஆர்வம்நம தாகும்
நவநவ உணர்ச்சிகளின்
நன்னெறியை ஊட்டும்
நல்லதுணை வல்லனென
நம்மறிவு காட்டும்.

தீமையை எதிர்க்கும்ஒரு
தீரனுளன் என்றும்
வாய்மையை வளர்க்குமொரு
வள்ளலிவன் என்றும்
தூய்மைதவ றாதமுறை
சொல்வளவன் என்றும்
சிமைதொறும் வாழ்த்துஜவ
ஹரர் அரிய சீலன்.

சொந்தமுள தன்னுடைய
சொத்துசுக மெல்லாம்
வந்தநில மக்கள்சுக
வாழ்வுபெற வென்றே
தந்தைதர மைந்தனிவன்
தானமெனத் தந்தான்
எந்தமொழி எந்தக்கதை
ஈடுசொல உண்டு ?

தன்னல மறுப்பினுயிர்
தன்மை யிதுவென
இன்னல்களை இன்பமென
ஏற்கஒளி மின்னும்
பொன்னில்மணி வைக்கஉயிர்
பெற்றசிலை போலும்
என்னசொலிப் போற்றிடுவோம்
எம்ஜவஹர் லாலை !

ஏழையின் மனக்குறைகள்
இன்னவெனக் காட்டிக்
கோழைகளைக் கண்டுகொதி
கொண்டதுயர் கூட்டி
ஊழ்வினையை வெல்லுமொரு
ஒவியமும் ஆகும்
வாழிஜவ ஹர்மகிபன்
வாழிநெடுங் காலம் !

● நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை





## முதலமைச்சரின் பொது நிவாரண நிதி


## விபத்தில் சிக்கிய சிறுவன் மற்றும் ஊனமுற்றோருக்கு உதவிகள்!

திருவொற்றியூர், காலடிப்பேட்டையைச் சேர்ந்த மு. நாகராஜன் என்பவர் தனது மனைவியை துன்புறுத்தும் நோக்கில் இரும்பு பூட்டைக் கொண்டு தாக்கியதில், அந்த இலக்கு தவறி அதே குடியிருப்பில் வசித்து வரும் முருகனின் மகன் காமேஸ்வரன் என்ற 13 வயது சிறுவன் மீது விழுந்தது. இதனால், மண்டை உடைந்து பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையின் நரம்பியல் பிரிவில் ரூ.1.5 இலட்சம் செலவில் அறுவை சிசிச்சை மேற்கொண்ட செலவினத்தை ஈடுசெய்ய நிதி உதவி கோரப்பட்டது. இந்த மனுவினை பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் போதிய நிதிவசதி இன்றி தவிக்கும் இந்த சிறுவனின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து சிறப்பு நிகழ்வாக ரூபாய் ஒரு இலட்சம் வழங்க ஆணையிட்டார். இதன்படி, இந்த ஒரு இலட்ச ரூபாய்க்கான காசோலையை 8.10.2002 அன்று சிறுவனின் தாயார் என். சுலோசனாவிடம் வழங்கினார்.

மேலும், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஏ. இருதயராஜ், சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த ஆர். துரைசாமி ஆகியோர் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு அனுப்பியிருந்த மனுவில் உடல் ஊனமுற்ற தங்களுக்கு உதவி புரியுமாறு வேண்டியிருந்தார்கள். இவர்களது மனுக்களை, பரிவுடன் பரிசீலனை செய்த முதலமைச்சர் அவர்கள் இருதயராஜுக்கு ஊன்றுகோல்களையும், காது கேளாத துரைசாமிக்கு சூரிய ஒளியில் இயங்கக்கூடிய பாட்டரியுடன் இணைந்த காதொலிக் கருவியையும் வழங்க உத்தரவிட்டு, இவர்களுக்குரிய ஊன்றுகோல்கள், காதொலிக் கருவி ஆகியவற்றையும் தலைமைச் செயலகத்தில் அவர்களிடம் நேரில் வழங்கினார்.

இந்த உதவிகளைப் பெற்றுக் கொண்ட சிறுவன் காமேஸ்வரன் அவனது தாயார் சுலோசனா மற்றும் இருதயராஜ், துரைசாமி ஆகியோர் தங்களது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர்.

• • •



ஒத்துழைப்போடும், பங்கேற்புடனும் இத்திட்டத்தின் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**சமுதாய அமைப்பு பணிகள்:**

இத்திட்டத்தின் நோக்கத்தை மக்களிடையே தெரிவித்தல், விழிப்புணர்வு முகாம்களை நடத்துதல், திட்டத்திற்கான அமைப்புகளை ஏற்படுத்தி அவைகளை வழிநடத்துதல், மதிப்பீட்டு முகாம்களை நடத்துதல், செயல்திட்டம் தயார் செய்தல், ஒருங்கிணைந்த செயல்பாட்டிற்கு வழி வகுத்தல் முதலிய சமுதாய அமைப்பு நடவடிக்கைகள் இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள சென்னார்டு தொண்டு நிறுவனம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

**பயிற்சி நடவடிக்கைகள்:**

திட்டத்தில் பங்குபெறும் பல்வேறு கிராம அமைப்புகள், அதன் நிர்வாகிகள் மற்றும் தொடர்புடைய திட்டப் பணியாளர்களுக்கு திட்டம் மேலாண்மை மற்றும் தொழில் நுட்ப பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

**நிதி வழங்குதல்:**

இத்திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் அனைத்து திட்ட வளர்ச்சிப் பணிகளுக்கான நிதியானது சம்பந்தப்பட்ட சங்கம் அல்லது குழுக்களுக்கு நேரடியாக மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலம் வழங்கப்படும் சமுதாய அமைப்பு மற்றும் பயிற்சி நடவடிக்கைகளுக்கான நிதி சம்பந்தப்பட்ட துறை அல்லது தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு நடவடிக்கைகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மேற்பார்வை செய்யப்படுகிறது.

**கணக்கு மற்றும் பதிவேடுகள் பராமரித்தல்:**

ஒவ்வொரு நீர்வடிப் பகுதியிலும் செயல்படுத்தப்படும் திட்டப் பணிகளுக்கான கணக்கேடுகள் மற்றும் பதிவேடுகளை சம்பந்தப்பட்ட சங்க குழுக்கள் பராமரித்தல் வேண்டும். அதற்கான வங்கிக் கணக்குகள் அருகிலுள்ள வங்கியிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**நிலைத்த தொடர் வளர்ச்சிப் பணிகள்:**

இத்திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படும் அமைப்புகள் திட்ட காலத்திற்கு பின்னரும் தன் பணிகளை செவ்வனே செய்திடுவதற்கு ஏதுவான மேலாண்மைத் திறனை திட்ட காலத்திலேயே வளர்த்துக் கொள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயலாக்க முகமை / சென்னார்டு தொண்டு நிறுவனம் திட்டம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**மக்கள் பங்கேற்பு:**

மக்கள் பங்கேற்புடன் நீர்வடிப்பகுதியை மேம்படுத்தி வேலை வாய்ப்பையும், வேளாண்மை உற்பத்தியையும் மேம்படுத்துதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இந்த மகத்தான திட்டத்தை மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு தேனி மாவட்டத்தை பசுமையாக்குதல் மூலம் சிறந்த பகுதியாக மாற்றி திட்டம் வெற்றிபெறச் செய்வோம் என உறுதியுடன் செயல்படுத்தப்படுகிறது.

**- உ.ல. ரவீந்திரன்**
செய்தி—மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.



# சிறுசேமிப்பு முகவர் செல்வி பி. அமுதாவின் சிகரச் சாதனைகள்

சிறுசேமிப்புத் திட்டச் செயலாக்கத்தில் மாநில அளவில் தொடர்ந்து முதல் நிலையிலிருந்தது. 2001–2002ஆம் ஆண்டில் ரூ.8.15 கோடி அதிகம் வசூல் செய்யப்பட்டது. (வளர்ச்சி சதவீதம் 109.59) மாநில அளவில் இலக்கை எய்திய ஆறு மாவட்டங்களில் திருநெல்வேலி மாவட்டமும் ஒன்றாகும்.

தற்போது 2002–2003ஆம் ஆண்டிற்கு சிறுசேமிப்பு இலக்காக ரூ.102 கோடி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.




மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் நலப்பணித் திட்டங்களில் சிறுசேமிப்பு திட்டமும் ஒன்று. சிறுசேமிப்பு திட்டத்தின் மூலம் பொதுமக்களிடமிருந்து திரட்டப்படும் முதலீடானது மாநில அரசால் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு செலவிடப்பட்டு வருகிறது. எனவே ஒவ்வொரு ஆண்டும் சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் மாநில அரசால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் திட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்படுகிறது. இக்குறியீட்டினை அடைவதற்கு ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர்களும் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அந்த வகையில் திருநெல்வேலி மாவட்டத்திற்கு 2001–2002ஆம் ஆண்டிற்கு சிறுசேமிப்பு குறியீடாக ரூ.85 கோடி நிர்ணயிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவராக திரு. சுனீல் பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து சிறுசேமிப்பு இலக்கை எய்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. ஒவ்வொரு மாதமும் இவ்விலக்கினை அடைந்திட முனைப்புடன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. ஆகஸ்ட் 2002 வரையிலான மொத்த நிகர வசூல் ரூ.38 கோடி ஆகும். மாநில அளவில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் சிறுசேமிப்பு இலக்கை அடைய ஊராட்சி அளவில் முகவர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்கள். இம்முகவர்கள் மூலம் பொதுமக்களிடையே சிறுசேமிப்புப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி அதன்மூலம் வீடும் நாடும் நலம் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் கணிசமான அளவு வருமானம் ஈட்டவும், வாழ்க்கையில் முன்னேறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அரசு வேலை மட்டுமே எதிர்பார்த்து கொண்டு வெறுமனே காலத்தை

# 'ஆசிய தடகள போட்டி'யில் பதக்கம் வென்றவர்களுக்கு பாராட்டு

சீன நாட்டின் தாலியன் நகரில், 2002ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 15 முதல் 20 தேதி வரை ஆசிய வயது வந்தோர்க்கான தடகள போட்டி நடைபெற்றது. இந்த தடகள போட்டிகளில் தமிழ்நாடு காவல்துறை நீலகிரி மாவட்டத்தைச் சார்ந்த தலைமைக் காவலர் திருமதி. பி. ஜெயம்மா 4 x 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் தங்கப் பதக்கத்தையும், 4 x 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், 1500 மீட்டர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும், 400 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும் வென்றார். சென்னையில் உள்ள தமிழ்நாடு கமாண்டோ பள்ளி சார் ஆய்வாளர் திரு. ஜோசப் சாம் 200 மீட்டர் ஓட்டத்தில் வெள்ளிப் பதக்கத்தையும், கடலூர் மாவட்டத்தைச் சார்ந்த சார் ஆய்வாளர் திருமதி. ஏ. அலைஸ் மேரி சுத்தியல் எறியும் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், தலைமைக் காவலர் திருமதி. பி. பவானி 4 x 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் வென்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர்.



ஆசிய வயது வந்தோர்க்கான தடகள போட்டிகளில் பங்கேற்று பதக்கங்களை வென்று தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த இவர்களது சாதனைகளை பாராட்டி கௌரவிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 8.10.2002 அன்று இவர்களுக்கு கீழ்கண்டவாறு ரொக்கப் பரிசு வெகுமதிகளை வழங்கினார்.

1. திருமதி பி. ஜெயம்மா – ரூ. 30 ஆயிரம்
2. திரு. ஜோசப் சாம் – ரூ. 15 ஆயிரம்
3. திருமதி. ஏ. அலைஸ் மேரி – ரூ. 15 ஆயிரம்
4. திருமதி. பி. பவானி – ரூ. 10 ஆயிரம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து ரொக்கப்பரிசு வெகுமதிகளை பெற்றுக் கொண்ட இவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

□ □ □



# நெல்லுக்கு ஊக்கத் தொகை

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு அனுப்பிய 1.10.2002 நாளிட்ட கடிதம்*

"தற்போது நமது நாட்டை வறட்சி நிலைமை பரவலான பாதிப்புக்குள்ளாக்கி இருக்கின்ற சூழ்நிலையில், விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையினை பாதுகாக்கின்ற முக்கியமான பொருள் ஒன்றினை தங்களுடைய கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

இந்த வருடம் அக்டோபர் மாதத்திலிருந்து தொடங்கி இருக்கின்ற நெல் கொள்முதலுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையினை (Minimum Support Price) குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20 என்ற அளவில் உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசு நியமித்துள்ள வேளாண் விளைபொருட்கள் உற்பத்திச் செலவு மற்றும் விலைகள் ஆணையம் (Commission for Agricultural Costs and Prices - CACP) பரிந்துரை செய்துள்ளது என அறிகிறேன். மேலும், உரங்களுடைய விலைகளை இந்த ஆண்டின் பட்ஜெட்டுக்கு முன்பு நிலவிய அளவிற்கே குறைத்து அமைக்க வேண்டும் என்றும், வேளாண் கடன்கள் மீது ஓர் ஆண்டு காலத்திற்கான வட்டி முழுமையாக ரத்து செய்யப்பட வேண்டும் என்றும், வேளாண் விளைபொருட்கள் உற்பத்திச் செலவு மற்றும் விலைகளை ஆணையம் பரிந்துரை செய்துள்ளதாகவும் நான் அறிகிறேன். வரவிருக்கின்ற வேளாண் பருவத்திற்கு நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20 ஊக்கத் தொகை வழங்குவதாக தாங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பை நான் வரவேற்கிறேன்.

பொதுவாக, சாதாரண நடைமுறையின்படி, சந்தை நிலவரங்கள் அடிப்படையில் தான் எந்த ஒரு விளைபொருளுக்கும் விலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்றாலும்கூட, இந்த ஆண்டில் வறட்சி நிலைமையால் விவசாயிகள் சந்தித்து வருகின்ற கடுமையான சூழ்நிலையை நாம் மிக உன்னிப்பாக கருத்தில் கொள்ள வேண்டும். நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையோடு ஏதேனும் ஒரு வகையில் கூடுதல் ஊக்கத் தொகை அளிப்பது தான், விவசாயிகளுக்கு உண்மையிலேயே கூடுதல் வருவாய் மூலமாக ஆதரவு அளிப்பதற்கு மிகச் சிறந்த வழி ஆகும். கடந்த வேளாண் பருவம் வரை, தமிழ்நாட்டில் நெல்லுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு மேலாக ஒரு குவிண்டால் ஒன்றுக்கு கூடுதல் ஊக்கத் தொகையாக ரூ.40ஐ வழங்கி வந்துள்ளோம். இந்த வருடம் தற்போது தான், நாங்கள் மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் முறைக்கு மாறிக் கொண்டு வருகிறோம். இதன்படி, நெல் கொள்முதலைப் பொறுத்த வரையில், மத்திய அரசின் வழிக்காட்டி நெறிமுறைகளைத் தான் பின்பற்ற வேண்டியுள்ளது. தற்போது நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20 ஊக்கத்தொகை என தாங்கள் அறிவித்து இருந்தாலும், விவசாயிக்கு இனியும் நெல்லைப் பொறுத்த வரையில் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.20 குறைவாகத் தான் கிடைக்கும். எனவே இந்த முடிவு மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்றும், கடந்த ஆண்டு நெல்லுக்கு வழங்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலைக்கும் மேலாக குவிண்டால் ஒன்றுக்கு ரூ.40 ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இது மட்டுமின்றி, காவிரி டெல்டா பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் தற்போது எதிர்நோக்கி இருக்கின்ற பிரத்தியேகப் பிரச்சினையை உங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். பொதுவாக, தமிழ்நாட்டில் குறுவைப் பருவம் என்று சொல்லக்கூடிய குறுகிய காலப் பயிர் அறுவடைக்கு வரும்போது, வடகிழக்கு பருவ மழை தொடங்கி அதன் வாயிலாக கடுமையான மழை பெய்யும். இதனால், நெல்லில் உள்ள ஈரப்பதம் உயருகின்றது. கடந்த ஆண்டு வரையில், குறுகிய காலப் பயிரான குறுவைப் பருவ நெல்லின் ஈரப்பதம் 25 சதவீதம் அளவுக்கும், சம்பா பருவத்தில் 22 சதவீதம் அளவுக்கும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்தது. ஆனால், தற்போது தமிழ்நாட்டில் மத்திய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் முறைக்கு நாங்கள் மாறியுள்ளதாலும், அதன்படி இது குறித்து மத்திய அரசின் விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்பதாலும், நெல்லின் ஈரப்பதம் 18 சதவீதம் அளவுக்குத் தான் ஏற்றுக் கொள்ளப்படும். ஆகையினால், தற்போதைய குறுவைப் பருவத்திலும்கூட, 25 சதவீதம் அளவு ஈரப்பதம் உள்ள நெல்லை, விவசாயிகள் கொள்முதலுக்காக கொடுக்கின்ற முறை தொடரப்படுகின்ற வகையில் தாங்கள் இந்த பிரச்சினையில் தலையிட்டு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு விவசாயிகளுக்கு சலுகைகள் அடங்கிய நிவாரணத் திட்டம் ஒன்றை வழங்குவது மிகவும் இன்றியமையாதது. உர விலை உயர்வை கடந்த ஆண்டின் நிலையிலேயே திரும்பப் பெறுவது குறித்தும், விவசாயிகள் பெற்றுள்ள வேளாண் கடன்கள் மீது ஒரு ஆண்டிற்குரிய வட்டியை ரத்து செய்வது குறித்தும், வேளாண் விளைபொருட்கள் உற்பத்திச் செலவு மற்றும் விலைகள் பற்றி ஆணையம் செய்துள்ள பரிந்துரைகள் தற்போது அவசியமாக பரிசீலிக்கப்பட வேண்டும். இவ்விரு பொருள்கள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும், தற்போது நாட்டில் பரவலாக வறட்சி நிலவி வருகின்ற சூழ்நிலையில் விவசாயிகளுக்கு உதவுகின்ற வகையில் பொருத்தமான சலுகைகள் அடங்கிய நிவாரணத் திட்டம் குறித்த அறிவிப்பை வெளியிட வேண்டும் என்றும் நான் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ❖

### தொழில் முனைவோர் கவனத்திற்கு!

# புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

தமிழகத்திலுள்ள ஊரகப் பகுதிகளின் பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்யவும், வேளாண் சார் தொழில்களை ஊக்குவிக்கவும் தமிழகத்திலுள்ள 385 ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்தது ரூ.1 கோடி அளவிலான முதலீட்டில் "புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்" கீழ் வேளாண்சார்/உணவு பதப்படுத்தும் சிறுதொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ், மாவட்டங்களில் இதுவரை 100க்கும் மேற்பட்ட அளவில் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. இவை உணவு பதப்படுத்துதல், காய்கறி பதப்படுத்துதல், மலர் வளர்ப்பு, குளிர்பதனம், அரிசி ஆலை, மாவு ஆலை/சேமியா, கயிறு தயாரித்தல், முந்திரி பதப்படுத்துதல், தாவர உரம், ஜெட்ரோபா, வெள்ளைக்காளான் உற்பத்தி, கரும்பு மற்றும் வெல்லம், தானியம் மற்றும் பயறு வகைகள், சேகோ, மூலிகைச் செடிகள், இயற்கைச் சாய விதைகள், எண்ணெய் வித்துக்கள், நிலக்கடலை, தென்னை உற்பத்திப் பொருட்கள், கலப்பு உரம், கோழி மற்றும் கால்நடை தீவனம் தயாரித்தல் ஆகியவை உள்ளிட்ட தொழில்கள் குறித்தவையாகும்.

இவ்விண்ணப்பங்களைப் பரிசீலித்து இறுதி ஒப்புதலுக்காக மாநில அளவிலான குழுவிற்கு அனுப்பி வைக்கும் பொறுப்பு மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் இயங்கும் மாவட்ட அளவிலான குழுவைச் சார்ந்ததாகும். மாநில அளவிலான குழு ஒப்புதல் அளித்த பிறகு, நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெற்றுத்தர மேல் நடவடிக்கைகளையும், இந்தத் தொழில்கள் தொடங்கப்படும் இடங்களில் சாலை, மின்சாரம், தண்ணீர் போன்ற வசதிகள் மற்றும் இத்தொழில்களுக்கான முறையான உரிமங்கள் கிடைக்கச் செய்யவும் தேவையான முதற்கட்ட நடவடிக்கைகளை மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் எடுக்கிறார்.

இதுவரை 102 தொழில் திட்டங்கள் மாநில அளவிலான குழுவினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, நிதி நிறுவனங்களுக்கு கடன் வழங்குவதற்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளன. இந்த நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் தொகைக்கான ஒதுக்கீடு ஆணை பெற்றவுடன், தொழில் முனைவோர்கள் தங்கள் தொழில்களைத் தொடங்குவதற்குத் தேவையான கட்டுமானப் பணிகளைத் தொடங்குவார்கள்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான மேற்கண்ட தொடர் நடவடிக்கைகள் குறித்தும், விரிவாக்க பணிகள் உள்ளிட்ட உதவிகள் தேவைப்படும் தொழில் முனைவோருக்கு உதவவும் வழி காட்டிடவும் தொழில் வணிக இயக்குநர் அலுவலகம், சென்னை–5இல் ஒரு தனிப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் குறித்த தகவலோ, இதர வழிகாட்டும் உதவியோ தேவைப்படும் தொழில் முனைவோர் மாநில அளவிலான தனிப் பிரிவின் கீழ்க்கண்ட அலுவலரை அணுகலாம் :–

திரு. கே. துரையன்,
கூடுதல் இயக்குநர்
(ஊரகத் தொழில்கள்)
தொழில் வணிக இயக்குநரகம்,
சேப்பாக்கம்,
சென்னை–600 005.
தொலைபேசி:
854 8173/854 8243/854 8843
நிகரி : 854 8513/854 7026
மின் அஞ்சல்:
indcom dic @yahoo.co.in



□ டாக்டர் செ. வில்லி

# மக்கள் தொடர்பு சாதனங்களும் ஊரக வளர்ச்சியும்

**முன்னுரை :**

மத்திய மாநில அரசுகளின் திட்டங்களையும், கொள்கைகளையும் அதன் பயன்பாட்டையும் எடுத்துச் சொல்ல காலங்காலமாக பல்வேறு முயற்சிகளையும் தொடர்பு சாதனங்களையும் நாம் பயன்படுத்தி வருகின்றோம். ஆனாலும் இன்றும் நமது நாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்களிடம் அரசு நலத்திட்டங்களும், அதன் கொள்கைகளும் சென்றடைந்து விழிப்புணர்வு பெற்றவர்களாக இருக்கின்றார்களா ? என்றால், எதிர்பார்த்த அளவு இல்லை என்றுதான் கூறவேண்டும். காரணம் நாம் நம்மிடையே இருக்கும் மக்கள் தொடர்பு சாதனங்களை முழுமையாக பயன்படுத்தி அதன் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்பட முழுமையான முயற்சிகள் எடுக்கப்படவில்லை என்பது உண்மையே. மக்கள் தொடர்பு சாதனங்கள் என்னென்ன ? அதன் பயன்பாடுகள் என்னென்ன ? அவை ஊரக வளர்ச்சிக்கு எந்த வகையில் பயன்படுகின்றது என்பதைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**மக்கள் தொடர்பு என்றால் என்ன?**

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களிடையே நிகழும் கருத்து பரிமாற்றமே தொடர்பு ஆகும். இது பேசுவது, எழுதுவது, பார்ப்பது, தொடுவது, கேட்பது, கவனிப்பது ஆகியவற்றின் மூலம் ஏற்படலாம். நாம் என்ன நினைக்கிறோம், என்ன உணர்கிறோம், என்ன செய்ய விரும்புகிறோம் என்பதை மற்றவர்கள் தெரிந்து கொள்ளவும், என்ன நடந்தது, அல்லது என்ன நடக்கப் போகிறது என்பதை




பற்றி தகவல் பரிமாற்றம் செய்து கொள்வதே தொடர்பு அல்லது மக்கள் தொடர்பு என்கிறோம்.

**மக்கள் தொடர்பு சாதனங்களும் வளர்ச்சி திட்டங்களும்**

அரசு நிறுவனங்கள் அவ்வப்போது அறிமுகப் படுத்தும் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை மக்கள் பணியில் ஈடுபட்டு கொண்டு வரும் நாம் மக்களிடம் எடுத்துச் செல்ல வேண்டும். அவர்களுக்கு திட்டங்களை பற்றியும் அதன் பல்வேறு அம்சங்கள் பற்றியும் பலன்கள் பற்றியும் ஒட்டுமொத்த விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இது நமது தலையாய கடமையாகும். மக்கள் சரியாக திட்டங்களை புரிந்து கொண்டால்தான் திட்டங்களில் மக்களின் பங்கேற்பை அதிகம் எதிர்பார்க்க முடியும். ஆகவே, தகவல்களை மக்களிடம் எடுத்துச் செல்ல உதவும் பல்வேறு மக்கள் மற்றும் தனி நபர் தொடர்பு சாதனங்களைப் பற்றி காண்போம்.

**மக்கள் தொடர்பு சாதனங்கள்**

ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி சார்ந்த தகவலையும், கருத்துக்களையும் அனுபவங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல ஒரு பாலமாக / கருவியாக பயன்படுவதுதான் மக்கள் தொடர்பு சாதனங்கள் ஆகும். இச்சாதனங்கள் ஒன்றாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டதாகவோ அல்லது சிறியதாகவோ அல்லது பெரியதாக இருக்கலாம். நாம் சாதிக்க வேண்டிய நோக்கத்தை பொறுத்து மக்கள் அல்லது தனி நபர் சாதனங்களை தேர்வு செய்து பயன்படுத்தலாம்.



**மக்கள் தொடர்பு சாதன பயன்பாடுகளின் நோக்கங்கள்**

ஊரக வளர்ச்சித் திட்டங்களை மக்களிடம் எடுத்துச் செல்ல நாம் பல்வேறு மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்த வேண்டும். அவ்வாறு நாம் பயன்படுத்தும்பொழுது கீழ்கண்ட நோக்கங்களின் அடிப்படையிலேயே நாம் பயன்படுத்துகிறோம்.

- வளர்ச்சித் திட்டங்களை அறிமுகம் செய்தல்
- வளர்ச்சித் திட்டங்களின் மூலக்கூறுகளை தெரியப்படுத்துதல்
- மக்களிடையே பொது விழிப்புணர்வை ஏற்படுத்துதல்
- மக்களின் பங்களிப்பை கொணரச் செய்தல்
- மக்களின் மனநிலையை மாற்றுதல்
- மக்களை ஊக்கப்படுத்துதல்
- வளர்ச்சி நிறுவனங்களோடு நெருக்கமான தொடர்பு ஏற்படுத்துதல்
- அரசு, வளர்ச்சி திட்டங்கள், மக்களுக்கிடையே ஒரு இணைப்புப் பாலமாக செயல்படுதல்
- முடிவு எடுக்கும் எண்ணத்தை ஊக்குவித்தல்
- மக்களின் பொறுப்புகளை உணரச் செய்தல்

**மக்கள் தொடர்பு சாதனங்களின் வகைகள் / முறைகள்**


நாம் காலங்காலமாக பல்வேறு மக்கள் தொடர்பு சாதனங்கள் பயன்படுத்தியும் பயன்பெற்றும் வருகின்றோம். அவைகளை கண்டுபிடித்து புது பொலிவுடன் பயன்படுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடலாம்.

**கூட்டகல்வி முறைகள்** (Mass approach)

- பொதுக் கூட்டங்கள் (Public Meetings)
- தொலைக்காட்சி (Television)
- ஒலிப்பதிவு (Tape recorder)
- திரைப்படங்கள் (Cinemas)
- வானொலி (Radio)
- ஒலிக்காட்சி (Audio)
- கலை நிகழ்ச்சி (Cultural Programmes)
- சுவரொட்டிகள் (Posters)
- துண்டுப் பிரசுரங்கள் (Bit Notice)
- செய்தி தாள்கள் (News Papers), சுவர் விளம்பரங்கள் (Wall Writings)
- கருத்தரங்குகள் (Workshop/Conference)

**குழு தொடர்பு முறைகள்** (Group approach)

- தொகுப்புத் தாள்கள் (Flip Chart)



- ஒட்டுப்படங்கள் (Flannel Graph)
- படஅட்டைகள் (Flash Cards)
- வரைபடங்கள் (Graphs)
- படதொகுப்புகருள் (Film Strips)
- ஸ்லேடுகள் (Slides)
- பயிற்சிகள், கருத்துப்பட்டறைகள்

**தனிநபர் தொடர்பு முறை**
(Individual approach)


- வீட்டுத் தொடர்பு
- அலுவலகத் தொடர்பு
- தொலைபேசித் தொடர்பு
- தனிக் கடிதங்கள்
- சிற்றிதழ்கள்
- சுற்றறிக்கைகள்

**கிராம தகவல் அளிப்பவர்கள்**
(Software Categories)

- படித்தவர்கள் (Educated People)
- வருகை தருபவர்கள் (Potential Visitors)
- போக்குவரத்துகள் (Transportation)
- அஞ்சல் அலுவலர்கள் (Post Men)
- விற்பனை முகவர்கள் (Sales Rep.)
- அரசியல் தலைவர்கள் (Political Leaders)
- திட்டத்தை செயல்படுத்துபவர்கள் (Pros-Oriented People)

**அமைப்பு ரீதியான சாதனங்கள்**
(Institutional Medias)

- இளைஞர் மன்றம் (Youth Clubs)
- அரசியல் அமைப்புகள் (Political Organisation)



- சுய உதவிக் குழுக்கள் (Self Help Group)
- தொண்டு நிறுவனங்கள் (NGO)
- சமுதாய சார்ந்த அமைப்புகள் (CBO)
- பல்வேறு சங்கங்கள் (Various Association)
- பல்வேறு குழுக்கள் (Various Groups)
- போக்குவரத்து அமைப்புகள் (Transport Organisation)
- நடமாடும் நூலகம் (Mobile Library) கிராம படிப்பகம் (Village Reading Room)
- சமுதாய கல்விக் கூடம் (Social Education Centre)
- வெளித் திரையரங்கம் (Popular Theatre)

- கூத்தாட்ட கலை மையங்கள் (Folk Cultural Centres)

- தொடர் கல்வி மையங்கள்

**இசை நாடகம் சார்ந்த சாதனங்கள்**

❖ கிராமப்புற நாடகங்கள்

❖ கலைக் கூத்துகள்



❖ தெரு கூத்துகள்

❖ பொம்மலாட்டங்கள்

❖ பாட்டுக் கச்சேரிகள்

❖ கதைகள் கூறுதல்

**சமுதாய நிகழ்ச்சிகள் சார்ந்த சாதனங்கள்**

⌘ திருவிழாக்கள்

⌘ மதச் சடங்குகள்

⌘ கிராம கூட்டங்கள்

⌘ விழா நிகழ்ச்சிகள்

⌘ கண்காட்சிகள்

**மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் கற்றல்/செயல்பாடு**

சாதனங்கள் – தகவல் – விழிப்புணர்வு – புரிந்து கொள்ளுதல் – மனதில் நிறுத்துதல் – செயல்படுத்துதல் பரிசீலனை/கற்றல் – வளர்ச்சி

**மக்கள் தொடர்பு/வளர்ச்சி அலுவலர்களின் கடமைகள்/பொறுப்புகள்**

★ தொடர்பு கொள்பவரிடம் சுமூகமான சூழ்நிலையை உருவாக்குதல்

★ தொடர்பு செய்வதற்கு முன்பே திட்டமிடுவது

★ சரியான தொடர்பு சாதனத்தை தெரிவு செய்தல்

★ தொடர்பு கொள்ள வேண்டியவரை தீர்மானித்தல்

★ தொடர்பு கொள்பவரின் ஆர்வத்தைத் தூண்டுதல்

★ தொடர்பு கொள்வதற்குரிய நேரத்தை தெரிவு செய்தல்

★ சரியான மொழியை பயன்படுத்துதல்

★ உதாரணங்களுடன் விளக்குதல்

★ மற்றவர்கள் பேசுவதையும் கவனித்தல்

★ கேள்விகளுக்குரிய பதிலை அளித்தல்

**மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதின் வெளிப்பாடுகள்**

★ மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படும்

★ தன்னம்பிக்கை ஏற்படும்

★ திட்டங்களைப் பற்றி தெளிவு ஏற்படும்

★ ஊக்குவிக்கப்படுவார்கள்

★ செயல்திறன் மேம்படும்

★ திட்டங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்

★ மக்கள் பங்களிப்பு மேம்படும்

**முடிவுரை:**

கிராமப்புறங்களில் பல்வேறு சமூகப் பொருளாதார கலாச்சார அடிப்படையில் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு, அரசு சாரா நிறுவனங்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டங்கள் மக்களிடம் எடுத்து சென்று அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட மேற்கண்ட அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தி வெற்றி பெறுவோம்.



## அரசு நடவடிக்கையினால் தமிழ்நாட்டில் போலியோ நோய் இல்லை



போலியோ என்ற இளம்பிள்ளை வாதத்தை முற்றிலும் ஒழிப்பதற்காக தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை 7 சுற்றுகள் பல்ஸ் போலியோ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுற்றிலும், ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் **70** இலட்சம் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர். இவ்வாறு பல்ஸ் போலியோ முகாம்கள் மூலம் சொட்டு மருந்து வழங்குவது மட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் ஒரு வயதிற்குட்பட்ட சுமார் **12** இலட்சம் குழந்தைகளுக்கு வழக்கமான தவணைகளில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

பல்ஸ் போலியோ முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாலும், ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழக்கமான தவணைகளில் தொடர்ந்து சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு வருவதாலும் தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக "போலியோ நோய் பாதிப்பு இல்லை" என்ற நிலை உருவாகியுள்ளது. எல்லா மாவட்டங்களிலும், போலியோ நோயினால் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளை கண்டறியும் பணி, தேசிய போலியோ கண்காணிப்புத் திட்டத்தின் (NPSP) ஒத்துழைப்புடன் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

போலியோ நோய் பாதிப்பு என்று சந்தேகிக்கக்கூடிய எல்லா குழந்தைகளுக்கும், மல மாதிரிகள் (Stool Specimen) எடுக்கப்பட்டு சென்னையிலுள்ள கிங் நிலைய ஆய்வகம் மூலம் பரிசோதிக்கப்பட்டதில், இதுவரை எந்தக் குழந்தையும் போலியோ கிருமிகளினால் பாதிக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

போலியோ என்று சந்தேகிக்கக்கூடிய குழந்தைகளை **60** நாட்கள் கழித்து மீண்டும் தொடர்பார்வை செய்து நோயின் வேறு தன்மை குறித்து அறியப்படுகிறது. மேலும் புதியதாக குழந்தைகள் ஏதும் பாதிக்கப்படுமானால் அவர்களை கண்டறிந்து உடனுக்குடன் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(5)

கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் போலியோ நோய் பாதிப்பு இல்லை என்ற போதிலும், போலியோ இல்லாத நிலையை மேலும் தொடர்வதற்கு இந்த ஆண்டும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. போலியோ ஒழிப்பு நடவடிக்கைக்கு பொது சுகாதாரத் துறையோடு மக்களும் ஒத்துழைத்து, சந்தேகப்படும்படியான போலியோ நோய் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளை கண்டறிந்து, தகுந்த மேல் நடவடிக்கை எடுக்க உதவிட வேண்டும்.

எதிர்வரும் **5–1–2003** மற்றும் **9–2–2003** தேதிகளில் தமிழ்நாட்டில் பல்ஸ் போலியோ முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**முக்கிய அம்சங்கள் :**

தமிழ்நாட்டில் சுமார் **40,000** சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்கப்படும். இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட உள்ளன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாட்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஆண்டு சுமார் **73** இலட்சம் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இதன்மூலம் பயன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பொது சுகாதாரத்துறை, பல்வேறு அரசுத்துறைகள், ரோட்டரி சங்கம் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இப்பணியில் ஈடுபடவுள்ளார்கள்.

சொட்டு மருந்து கொடுக்கப்பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை சுண்டுவிரலில் "ஜென்ஷன் வயலட்" என்ற அடையாள திரவம் வைக்கப்படும். குழந்தைகள் வாய்க்குள் விரலை வைத்தாலும் இந்த திரவத்தால் எந்த ஆபத்தும் ஏற்படாது.

மேலும் ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள குழந்தைக்கு சொட்டு மருந்து தந்துள்ளதை "P" என்ற குறியீடு செய்து உறுதி செய்யப்படும்.

முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமானதவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்; போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது; எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம்; அதனால் எந்த பாதிப்பும் இல்லை. எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்தோடு எதிர்வரும் முகாம் நாட்களில் தவறாமல் இரண்டு தவணைகள் சொட்டு மருந்து கொடுத்து, தமிழ்நாட்டில் போலியோ இல்லாத நிலை மேலும் தொடர ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.


• • •

- கூத்தாட்ட கலை மையங்கள் (Folk Cultural Centres)
- தொடர் கல்வி மையங்கள்

**இசை நாடகம் சார்ந்த சாதனங்கள்**

❖ கிராமப்புற நாடகங்கள்

❖ கலைக் கூத்துகள்



❖ தெரு கூத்துகள்

❖ பொம்மலாட்டங்கள்

❖ பாட்டுக் கச்சேரிகள்

❖ கதைகள் கூறுதல்

**சமுதாய நிகழ்ச்சிகள் சார்ந்த சாதனங்கள்**

⌘ திருவிழாக்கள்

⌘ மதச் சடங்குகள்

⌘ கிராம கூட்டங்கள்

⌘ விழா நிகழ்ச்சிகள்

⌘ கண்காட்சிகள்

**மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் கற்றல்/ செயல்பாடு**

சாதனங்கள் – தகவல் – விழிப்புணர்வு – புரிந்து கொள்ளுதல் – மனதில் நிறுத்துதல் – செயல்படுத்துதல் பரிசீலனை/கற்றல் – வளர்ச்சி

**மக்கள் தொடர்பு/வளர்ச்சி அலுவலர்களின் கடமைகள்/பொறுப்புகள்**

★ தொடர்பு கொள்பவரிடம் சுமுகமான சூழ்நிலையை உருவாக்குதல்

★ தொடர்பு செய்வதற்கு முன்பே திட்டமிடுவது

★ சரியான தொடர்பு சாதனத்தை தெரிவு செய்தல்

★ தொடர்பு கொள்ள வேண்டியவரை தீர்மானித்தல்

★ தொடர்பு கொள்பவரின் ஆர்வத்தைத் தூண்டுதல்

★ தொடர்பு கொள்வதற்குரிய நேரத்தை தெரிவு செய்தல்

★ சரியான மொழியை பயன்படுத்துதல்

★ உதாரணங்களுடன் விளக்குதல்

★ மற்றவர்கள் பேசுவதையும் கவனித்தல்

★ கேள்விகளுக்குரிய பதிலை அளித்தல்

**மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்துவதின் வெளிப்பாடுகள்**

★ மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படும்

★ தன்னம்பிக்கை ஏற்படும்

★ திட்டங்களைப் பற்றி தெளிவு ஏற்படும்

★ ஊக்குவிக்கப்படுவார்கள்

★ செயல் திறன் மேம்படும்

★ திட்டங்களில் ஈடுபாடு அதிகரிக்கும்

★ மக்கள் பங்களிப்பு மேம்படும்

**முடிவுரை:**

கிராமப்புறங்களில் பல்வேறு சமூகப் பொருளாதார கலாச்சார அடிப்படையில் வாழும் மக்களின் முன்னேற்றத்திற்காக அரசு, அரசு சாரா நிறுவனங்கள் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டங்கள் மக்களிடம் எடுத்து சென்று அவர்களின் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்பட மேற்கண்ட அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களை பயன்படுத்தி வெற்றி பெறுவோம்.



## அரசு நடவடிக்கையினால் தமிழ்நாட்டில் போலியோ நோய் இல்லை



போலியோ என்ற இளம்பிள்ளை வாதத்தை முற்றிலும் ஒழிப்பதற்காக தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் பல்ஸ் போலியோ சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்படுகின்றன. இதுவரை 7 சுற்றுகள் பல்ஸ் போலியோ முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு சுற்றிலும், ஐந்து வயதிற்குட்பட்ட சுமார் **70** இலட்சம் குழந்தைகள் பயன் பெற்றுள்ளனர். இவ்வாறு பல்ஸ் போலியோ முகாம்கள் மூலம் சொட்டு மருந்து வழங்குவது மட்டுமின்றி ஒவ்வொரு ஆண்டும் ஒரு வயதிற்குட்பட்ட சுமார் **12** இலட்சம் குழந்தைகளுக்கு வழக்கமான தவணைகளில் போலியோ சொட்டு மருந்து வழங்கப்படுகிறது.

பல்ஸ் போலியோ முகாம்கள் வெற்றிகரமாக நடத்தப்பட்டதாலும், ஒரு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு வழக்கமான தவணைகளில் தொடர்ந்து சொட்டு மருந்து கொடுக்கப்பட்டு வருவதாலும் தமிழ்நாட்டில் கடந்த சில ஆண்டுகளாக "போலியோ நோய் பாதிப்பு இல்லை" என்ற நிலை உருவாகியுள்ளது. எல்லா மாவட்டங்களிலும், போலியோ நோயினால் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளை கண்டறியும் பணி, தேசிய போலியோ கண்காணிப்புத் திட்டத்தின் (NPSP) ஒத்துழைப்புடன் தீவிரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

போலியோ நோய் பாதிப்பு என்று சந்தேகிக்கக்கூடிய எல்லா குழந்தைகளுக்கும், மல மாதிரிகள் (Stool Specimen) எடுக்கப்பட்டு சென்னையிலுள்ள கிங் நிலைய ஆய்வகம் மூலம் பரிசோதிக்கப்பட்டதில், இதுவரை எந்தக் குழந்தையும் போலியோ கிருமிகளினால் பாதிக்கப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.

போலியோ என்று சந்தேகிக்கக்கூடிய குழந்தைகளை **60** நாட்கள் கழித்து மீண்டும் தொடர்பார்வை செய்து நோயின் வேறு தன்மை குறித்து அறியப்படுகிறது. மேலும் புதியதாக குழந்தைகள் ஏதும் பாதிக்கப்படுமானால் அவர்களை கண்டறிந்து உடனுக்குடன் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(5)

கடந்த சில ஆண்டுகளாக தமிழ்நாட்டில் போலியோ நோய் பாதிப்பு இல்லை என்ற போதிலும், போலியோ இல்லாத நிலையை மேலும் தொடர்வதற்கு இந்த ஆண்டும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படவுள்ளன. போலியோ ஒழிப்பு நடவடிக்கைக்கு பொது சுகாதாரத் துறையோடு மக்களும் ஒத்துழைத்து, சந்தேகப்படும்படியான போலியோ நோய் பாதிப்புக்குள்ளாகும் குழந்தைகளை கண்டறிந்து, தகுந்த மேல் நடவடிக்கை எடுக்க உதவிட வேண்டும்.

எதிர்வரும் **5–1–2003** மற்றும் **9–2–2003** தேதிகளில் தமிழ்நாட்டில் பல்ஸ் போலியோ முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**முக்கிய அம்சங்கள் :**

தமிழ்நாட்டில் சுமார் **40,000** சிறப்பு மையங்கள் மூலம் சொட்டு மருந்து வழங்கப்படும். இம்மையங்கள் அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிக்கூடங்கள் மற்றும் முக்கியமான பொது இடங்களில் அமைக்கப்பட உள்ளன. மேலும் பேருந்து நிலையம், ரயில் நிலையம் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகிய இடங்களில் நடமாடும் சிறப்பு மையங்கள் அமைக்கப்பட்டு முகாம் நாட்களில் பயணம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கு சொட்டு மருந்து வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த ஆண்டு சுமார் **73** இலட்சம் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகள் இதன்மூலம் பயன்பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பணியைச் சிறப்பாகச் செய்ய பொது சுகாதாரத்துறை, பல்வேறு அரசுத்துறைகள், ரோட்டரி சங்கம் மற்றும் பல தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் சேர்ந்த 2 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இப்பணியில் ஈடுபடவுள்ளார்கள்.

சொட்டு மருந்து கொடுக்கப்பட்டதற்கான அடையாளம் தெரிந்து கொள்வதற்காக, குழந்தையின் இடது கை சுண்டுவிரலில் "ஜென்ஷன் வயலட்" என்ற அடையாள திரவம் வைக்கப்படும். குழந்தைகள் வாய்க்குள் விரலை வைத்தாலும் இந்த திரவத்தால் எந்த ஆபத்தும் ஏற்படாது.

மேலும் ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு அந்த வீட்டில் உள்ள குழந்தைக்கு சொட்டு மருந்து தந்துள்ளதை "P" என்ற குறியீடு செய்து உறுதி செய்யப்படும்.

முகாம் நாட்களில் கொடுக்கப்படும் சொட்டு மருந்து வழக்கமானதவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்திற்கு மாற்று அல்ல. இது ஒரு கூடுதல் தவணையாகும்; போலியோ சொட்டு மருந்து மிகவும் பாதுகாப்பானது; எத்தனை முறை வேண்டுமானாலும் கொடுக்கலாம்; அதனால் எந்த பாதிப்பும் இல்லை. எனவே, பொதுமக்கள் அனைவரும் தங்கள் குழந்தைகளுக்கு வழக்கமான தவணைகளில் கொடுக்கப்படும் சொட்டு மருந்தோடு எதிர்வரும் முகாம் நாட்களில் தவறாமல் இரண்டு தவணைகள் சொட்டு மருந்து கொடுத்து, தமிழ்நாட்டில் போலியோ இல்லாத நிலை மேலும் தொடர ஒத்துழைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

• • •

# மும்பையில் தமிழ்வழி பயிலும் ஏழை எளிய மாணவர்களுக்கு இலவசமாக பாடநூல்கள் தமிழ்நாடு அரசு வழங்கியது

மும்பை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 47 தமிழ் வழி ஆரம்ப மற்றும் நடுநிலை பள்ளிகளில் பயிலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்த மாணவ மாணவியர்களுக்கு தமிழக அரசின் சார்பில் பாடநூல்களை இலவசமாக வழங்குமாறு மும்பையிலுள்ள பி.எம்.சி. தமிழாசிரியர்கள் தமிழக அரசை கோரியிருந்தனர்.


இவர்களது கோரிக்கையை ஏற்ற மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், மும்பை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தமிழ் வழி கல்வி கற்பிக்கும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்காக 1 முதல் 12ம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய தமிழ், கணிதம், அறிவியல், சமூக அறிவியல், கணினி அறிவியல் போன்ற பாடநூல் ஒவ்வொன்றிலும் 50 நூல்கள் வீதம் மொத்தம் 2,750 நூல்களை தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனம் மூலம் வழங்க ஆணையிட்டார்.

இதன்படி, மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்கு தேவையான இந்தப் புத்தகங்களை, மும்பையைச் சேர்ந்த பி.எம்.சி. தமிழாசிரியர்கள் முன்னணியைச் சேர்ந்த திரு. பால் செபஸ்டியன் மற்றும் தமிழ்நாடு அரசின் தமிழ் மையப் பணிகளை இணைந்து மேற்கொண்டு வரும் நவி மும்பைத் தமிழ்ச் சங்க அறங்காவலர் குழுத் தலைவர் திரு. கி. இராசகோபாலன் ஆகியோரிடம் 3.10.2002 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்.

மும்பையில் தமிழ் வழி கல்வி பயிலும் ஏழை எளிய மாணவர்கள் பெரிதும் பயன்பெறும் வகையில் புத்தகங்களை வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு, திரு. பால் செபஸ்டியன் மற்றும் திரு. கி. இராசகோபாலன் ஆகியோர் மும்பை தமிழ் மக்களின் சார்பில் தங்களது நன்றியை தெரிவித்து கொண்டனர்.







# 'திருக்குறள் மதுர கீர்த்தனை' வெளியீடு

மாண்புமிகு **தமிழக முதல்வர்** அவர்கள் நிதி உதவி

மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள திருவழுந்தூரில் 1892இல் பிறந்த சங்கீத சாகித்ய வித்வான் மாயூரம் டி.ஆர். விஸ்வநாத சாஸ்திரியார் வாய்ப்பாட்டிலும், இராக ஆலாபனையிலும், சுரம் பாடுவதிலும், புலமை பெற்றவர். இவர் வடமொழியில் 118 கீர்த்தனைகளும், தமிழில் 308 கீர்த்தனைகளும், ஜயதேவர் தசாவதாரம் போன்ற நாடகங்களுக்கு 124 உருப்படிகளுமாக 550 கீர்த்தனைகளையும், திருக்குறள் கீர்த்தனைகள், அச்சுத தாஸர் கீர்த்தனைகள், திருவாய்மொழிப் பிரபந்தம், திருப்பாவை, பாரதியார் பாடல்கள், திருப்புகழ், திருவருட்பா போன்ற மற்றவர்களின் பாடல்களையும் கீர்த்தனையாக்கி உள்ளார். இவர் உருவாக்கிய 'திருக்குறள் மதுர கீர்த்தனை' என்ற படைப்பினையும் அவரது இதர இசைப்படைப்புகளையும் பொது மக்களிடையே பரப்புவதற்காக, இவற்றை ஒலிநாடா, ஒளி நாடா, குறுந்தகடு மற்றும் வலைதளம் ஆகியவற்றின் மூலம் தயாரிக்க ஏற்படும் செலவுகளின் ஒரு பகுதியாக ரூ.5 இலட்சம் நிதியுதவி வழங்க வேண்டும் என்று திரு. தே.கு. இராமநாதன் அவர்கள் ஏற்கெனவே தமிழக அரசுக்கு மனு அளித்திருந்தார். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்களும் இதனை அரசுக்கு பரிந்துரை செய்தார்.

இந்த மனுவினை பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மாயூரம் விஸ்வநாத சாஸ்திரியார் அவர்களின் இசைப் படைப்புகளை இரு தொகுதிகளாக வெளியிடவும், அவற்றை ஒளி நாடா, ஒலிநாடா, குறுந்தகடு மற்றும் வலைதளம் ஆகியவற்றின் வாயிலாக வெளிக்கொணர ஏற்படும் செலவினத்தின் ஒரு பகுதியாக ரூ.5 இலட்சம் மானியமாக வழங்க உத்தரவிட்டார்.

இதன்படி, மாயூரம் விஸ்வநாத சாஸ்திரியாரின் "திருக்குறள் மதுர கீர்த்தனை" என்ற படைப்பினை ஒலி, ஒளி, குறுந்தகடு, வலைதளம் வாயிலாக வெளிக் கொணர்ந்து மக்களிடையே பரப்புவதற்காக மாயூரம் டி.ஆர். விஸ்வநாத சாஸ்திரியாரின் சகோதரர் மகன்களான திரு. தே.கு. இராமநாதன், திரு. தே.கு. சுவாமிநாதன் ஆகியோருக்கு ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை



3.10.2002 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நேரில் வழங்கி, இந்த பணிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

இந்த நிதி உதவியைப் பெற்றுக் கொண்ட இருவரும் 'திருக்குறள் மதுர கீர்த்தனை'யை மக்களிடையே பரப்புவதற்காக நிதி வழங்கி சிறப்பித்த முதலமைச்சர் அவர்களுக்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

• • •

# 3வது அகில இந்திய சிறுதொழில் கணக்கெடுப்பு

முதல் அகில இந்திய சிறுதொழில் கணக்கெடுப்பு 1973–74இல் நடைபெற்றது. அப்போது 30.11.1973 வரை பதிவு செய்யப்பட்ட 2.58 இலட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. அதன் பிறகு, இரண்டாவது அகில இந்திய சிறுதொழில் கணக்கெடுப்பு 1990–91ஆம் ஆண்டில் நடைபெற்றது. அப்போது 31.3.1988 வரை அகில இந்திய அளவில் பதிவு செய்யப்பட்ட 9.87 இலட்சம் சிறுதொழில் நிறுவனங்கள் ஆய்வு செய்யப்பட்டன. இரண்டாவது அகில இந்திய சிறுதொழில் கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டில் 31.3.1988 வரை 83,267 சிறுதொழில் நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

தற்போது இந்திய அரசு ஆணைப்படி மூன்றாவது அகில இந்திய சிறுதொழில் கணக்கெடுப்பு அக்டோபர் 2002 மூன்றாவது வாரத்தில் ஆரம்பித்து 30.11.2002இல் முடிவு பெற உள்ளது.

இக்கணக்கெடுப்பின் போது மாநிலத்தில் 31.3.2001 வரை பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களின் ஆய்வு மற்றும் பதிவு செய்யப்படாத சிறுதொழில்களின் மாதிரி ஆய்வு நடைபெற உள்ளது. பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத சிறுதொழில் நிறுவனங்களின் அமைப்பு, இன்றைய நிலை, குறிப்பாக சிறுதொழில் நலிவிற்கான மூலகாரணங்கள் ஆகியவற்றைக் கண்டறிதல் இக்கணக்கெடுப்பின் முக்கிய குறிக்கோளாகும்.

தமிழ்நாட்டில் இப்பணி தொழில் வணிகத் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. கிண்டியில் உள்ள சிறுதொழில் சேவை நிலையமும் (SISI) இப்பணியில் உறுதுணையாக நின்று செயல்புரியும்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள, கணிதம், புள்ளியியல், பொருளாதாரம் மற்றும் வணிகம் ஆகிய துறைகளில் பட்டம் பெற்ற 1,851 நபர்கள் கணக்கெடுப்பாளர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். கணக்கெடுப்பாளர்களால் சேகரிக்கப்பட்டப் புள்ளி விபரங்களை உறுதி செய்ய, தமிழ்நாடு அரசின் புள்ளியியல் துறையிலிருந்து 185 மேற்பார்வையாளர்களும், 70 புள்ளிவிபர ஆய்வாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்ட கணக்கெடுப்பாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களுக்கான புள்ளிவிபர கணக்கெடுப்புப் பயிற்சி ஏற்கெனவே நிறைவு பெற்றுவிட்டது. மேலும் கணக்கெடுப்பாளர்கள் அக்டோபர் 2002 மூன்றாவது வாரம் முதல் 30.11.2002 முடிய கணக்கெடுப்புக் களப்பணியில் சிறுதொழில் நிறுவனங்களைப் பார்வையிட உள்ளனர்.

மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்கள் மற்றும் மண்டல இணை இயக்குநர், சென்னை ஆகியோர் கணக்கெடுப்புப் பணிக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்புரிவதோடு இப்பணியின் முன்னேற்றத்தையும் கண்காணிப்பர்.

இக்கணக்கெடுப்புப் பணியில் மாநில ஒருங்கிணைப்பு அலுவலராக உள்ள இணை இயக்குநர் (பொறியியல்), தொழில் வணிகத் துறை, சென்னை அவர்களைத் தலைமையாகக் கொண்ட முக்கிய அலுவலர்களைக் கொண்ட ஒரு குழு மாநிலம் முழுவதும் நடக்கின்ற கணக்கெடுப்புப் பணியைப் பார்வையிடும். சிறுதொழில் சேவை நிலையத்தைச் சேர்ந்த இரண்டு அலுவலர்களும் இக்குழுவில் இடம்பெறுவர்.

கணக்கெடுப்பாளர்களால் சேகரிக்கப்பட்ட புள்ளிவிபரங்கள் அடங்கிய படிவங்கள், புள்ளிவிபர ஆய்வாளர்களால் குறியீடு செய்யப்பட்டு, மேற்பார்வையாளர்களால் 100 சதவீதம் சரிபார்க்கப்பட்டு, ஐ.சி.ஆர். ஸ்கேனிங் முறையில் ஒரே இடத்தில் புள்ளி விபரங்களைத் தொகுக்க, மேம்பாட்டு ஆணையாளர் (சிறு தொழில்கள்), புதுடெல்லி, அவர்களுக்கு அனுப்பப்படும்.

இப்புள்ளி விபரங்கள் சரிபார்க்கப்பட்டு, பட்டியலிடப்பட்டு, அகில இந்திய அறிக்கை, மேம்பாட்டு ஆணையாளர் (சிறுதொழில்கள்), புதுடெல்லி, அலுவலகத்தில் தயாரிக்கப்படும்.

புதுடெல்லியில் உள்ள மேம்பாட்டு ஆணையாளர் (சிறுதொழில்கள்) அலுவலகத்திலிருந்து அனுப்பப்படும் புள்ளி விபரங்களின் அடிப்படையில், மாநில அளவிலான அறிக்கை மாநில அரசால் தயாரிக்கப்படும்.

மூன்றாவது கணக்கெடுப்பின் முடிவில், 31.3.2001 வரை பதிவு செய்யப்பட்டு இயங்கும் நிலையில் உள்ள சிறுதொழில் நிறுவனங்களின் பட்டியல் மாநிலங்களுக்குப் புதிய நிலை படிவத்தில் அனுப்பப்படும்.

31.3.2001க்குப் பின் பதிவு செய்யப்பட்ட சிறுதொழில் நிறுவனங்களின் விபரங்கள் நிலையாக புதிய அமைப்புப் பட்டியலில் புதுப்பிக்கப்படும்.

அனைத்து சிறுதொழில் சங்கங்களும், உற்பத்தியாளர் சங்கங்களும், சிறுதொழில் நிறுவன அதிபர்களும், தங்களை அணுகும் கணக்கெடுப்பாளர்களுக்கு விபரங்கள் அளித்து மூன்றாவது அகில இந்திய சிறுதொழில் கணக்கெடுப்புப் பணி சீரிய முறையில் நிறைவேற முழு ஒத்துழைப்பு நல்க வேண்டுமென தொழில் வணிகத் துறை இயக்குநர் திரு. எஸ். கருத்தையா பாண்டியன் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

• • •



தமிழ்நாடு அரசின் சார்பில் – சென்னையில்

# பிறந்தநாள் விழா

"அவர் ஓர் தூயவர், சமதர்மவாதி, நமது
நாட்டு அடிமைத்தளைகளை
உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினன்,
ஏழை பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற
வழிவகுத்தவர்,
அவர் ஓர் காலத்தின் சின்னம்,
எழுச்சியின் அடையாளம்"

**இது அகிம்சையையும் அன்பு நெறியையும் போராட்ட வழிமுறையாகக் கொண்டு ஒரு நாட்டிற்கு விடுதலையையும் மக்களுக்கு உரிமை வாழ்வையும் பெற்றுத் தந்த மகாத்மா காந்தியடிகளுக்கு பேரறிஞர் அண்ணா சூட்டிய புகழாரமாகும்.**

**உலகம் போற்றும் உத்தமர் மகாத்மா காந்தியடிகளின் வாழ்வும் வாக்கும் – நாடு, மொழி, இனம் எனும் எல்லைக் கோடுகளை எல்லாம் கடந்து மனித சமூகத்தை கவர்ந்திடும் தன்மை வாய்ந்தவையாகும்.**



அமைதி வழியில் உரிமைபெறத் துடிக்கும் மக்கள் அனைவருக்கும் வழிகாட்டும் ஒளிவிளக்காகத் திகழ்ந்திடும் மகாத்மா காந்தியடிகளின் 134வது பிறந்தநாள் விழா – தமிழ்நாடு அரசின் சார்பில், அக்டோபர் திங்கள் 2ஆம் நாள் காலை முதல் இரவு வரை மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

காலை 8 மணியளவில் மெரினா கடற்கரைச் சாலையிலுள்ள மகாத்மா காந்தியடிகள் திருவுருவச்சிலைக்கு மேதகு தமிழக ஆளுநர் திரு.பி.எஸ். ராமமோகன் ராவ் அவர்கள், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் முக்கியப் பிரமுகர்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

மகாத்மா காந்தியடிகள் திருவுருவச்சிலைக்கு அருகில் நூற்புவேள்வி, கூட்டு வழிபாடு ஆகியவை நடைபெற்றன.

காலை 8–15 மணியளவில், 'தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, உலக அமைதி' ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில் நடைபெற்ற மாணவ–மாணவியரின் சைக்கிள் பேரணியை சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர் கா.காளிமுத்து அவர்கள் துவக்கிவைத்தார். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.கே.பாலசுப்ரமணியன் அவர்கள் உடனிருந்தார்.

காலை 10–00 மணியளவில் சென்னை காந்திமண்டபத்தில், மகாத்மா காந்தியடிகள் பற்றிய புகைப்படக் கண்காட்சியினையும் மற்றும் பல்வேறு துறைகள் பங்கேற்ற கண்காட்சி மற்றும் விற்பனை அரங்கங்களையும் மாண்புமிகு மின்சாரம், தொழில் மற்றும்

ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.நயினார் நாகேந்திரன் அவர்கள் திறந்துவைத்தார்.



மாலை 5–00 மணிக்கு காந்தி மண்டபத்தில், மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் விழா, தமிழ்த்தாய் வாழ்த்துடன் துவங்கியது.

விழாத் துவக்கத்தில் வரவேற்புரை ஆற்றிய மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.கே.கே. பாலசுப்ரமணியன் அவர்கள் ``அன்பையும், அமைதியையும், அறநெறியையும் போதித்து அவற்றினைப் பின்பற்றி நடந்த மகாத்மா காந்தியடிகளின் எண்ணங்களை ஈடேற்ற தமிழக அரசு பாடுபட்டு வருகிறது`` என்று குறிப்பிட்டார்.

விழாவிற்கு தலைமை வகித்து பேசிய மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் மு. தம்பிதுரை அவர்கள் மகாத்மா காந்தியடிகளின் அடியொற்றி அரசு ஆற்றி வரும் அரும் பணிகளை விவரித்தார்.

விழாப் பேருரையாற்றிய மேதகு ஆளுநர் திரு.பி.எஸ்.ராமமோகன் ராவ் அவர்கள் குறிப்பிட்டதாவது, "புத்தருக்குப் பின்னர் இந்தியாவில் பிறந்த மாபெரும் மனிதர் மகாத்மா காந்தியடிகள் ஆவார். அவரது போதனைகள் இருபத்தோராம் நூற்றாண்டுக்கும் பொருத்தமானதாக உள்ளது. இந்தியா முழுவதும் இன்றைக்கு மகாத்மா காந்திக்கு மரியாதை செலுத்தப்படுகிறது. அண்ணல் காந்தியடிகள் மீது பக்தியும், மரியாதையும் கொண்டிருந்தால் மட்டும் போதாது. அவரது கொள்கைகளைப் பின்பற்றி நடக்கவேண்டும். மகாத்மா காந்தியடிகள் அனைத்து மக்களையும் சமமாகக் கருதினார்.



மகாத்மா காந்தியடிகளுக்கும், ஜின்னாவுக்கும் கருத்து வேறுபாடு இருந்தபோதிலும் அவரை மகாத்மா காந்தியடிகள், சகோதரராக மதித்தார். மதநல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும், சமத்துவத்தையும், ஏழைகளுக்கு உதவுவதையும் அவர் எப்போதும் வலியுறுத்தினார்.

கிராமத் தொழில்கள் வளரவேண்டும் என்று காந்திஜி விரும்பினார். அவற்றை வளர்ப்பதில் நாம் முழுமையான அக்கறை செலுத்தவேண்டும்''.

– இவ்வாறு மேதகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டார்.

பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியப்போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவ–மாணவிகளுக்கு மேதகு ஆளுநர் பரிசுகள் வழங்கினார்.

விழா முடிவில், செய்தி – சுற்றுலாத் துறைச் செயலர் திரு.வ. ராமதாஸ், இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.


விழாவில் செய்தி – மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.கே.செல்லமுத்து, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் பங்கேற்றார்கள்.

விழா நிகழ்ச்சியினைச் செய்தி மக்கள் தொடர்புத்துறை ஏற்பாடு செய்திருந்தது.

தொடர்ந்து, பள்ளி – கல்லூரி மாணவ – மாணவியரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

• • •






# முதலமைச்சர்கள் மாநாடு

## தமிழக முதலமைச்சர்

## செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உரை

மாநில நிதி நிலையை விவாதிக்கக் கூட்டப்பட்டிருக்கும் மாநில முதலமைச்சர்களின் இந்த கூட்டம் எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. இதுகுறித்து பிரதமரிடம் நான் மார்ச் 2002ல் இதுபோன்ற மாநில அமைச்சர்களின் கூட்டம் கூட்டப்பட வேண்டும் என்று அவரது கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன். அந்தக் கடிதத்தில் நாட்டின் நிதி மேம்பாட்டிற்கும், சீர்திருத்தத்திற்கும் மாநில முதலமைச்சர்கள் கூடி ஒரு திட்டம் வகுக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தேன்.

### புதிய மேம்பாட்டுத் திட்டம் அவசியம்

அந்தச் சமயத்தில் தமிழ்நாட்டிற்கு ரூபாய் 3000 கோடி தரும்படி (Untide grant package) கேட்டிருந்தேன். இந்தக் கூட்டத்திற்கு பொருள் பரவலான நிதி சீர்திருத்தத்தைப் பற்றி அமைந்திருக்கிறது என்று தெரிகிறது. நிதி சீர்திருத்தமானது அத்தியாவசியமான ஒரு கசப்பு மருந்து. அதை நாம் நாடு முன்னேற என்று எடுத்துக்கொள்ள வேண்டும். இதுபற்றி இருவேறு கருத்துக்கள் இருக்க முடியாது. என்னுடைய கருத்தின்படி நிதி சீர்திருத்தமும்

துரிதமான மேம்பாடும் ஒன்றாக செல்ல வேண்டும். நிதி சீர்திருத்தத்தின் கடுமையை மட்டுமே மக்கள் ஏற்றுக்கொள்ள முடியாத நிலை. இன்றைய சூழ்நிலையில் நிதி சீர்திருத்தத்தை முன்னால் கொண்டுபோக ஒரு புதிய மேம்பாட்டுத் திட்டம் வரையவேண்டிய அவசியம் இருக்கிறது.

1991ல் முதல் சுற்று பொருளாக சீர்திருத்தங்கள் மத்திய அரசால் கொண்டுவரப்பட்டபோது, நான் இந்திய பொருளாதாரத்தின் விரிவாக்கத்தினை முக்கிய கோணத்தில் பார்க்க வேண்டிய அவசியத்தைப் பற்றி வலியுறுத்தினேன். குறிப்பாக எனது மாநிலத்திற்கு பரவலான சமூக பாதுகாப்பு தேவை என்று வலியுறுத்தி வந்தேன். தமிழ்நாடு இந்த சமூக பாதுகாப்பு அமைப்புக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது. இது தேசிய அளவில் 1995ல் பின்பற்றப்பட்டது. பிரதமர் அவர்களே, கோபன் ஹேகனில் நீங்கள் குறிப்பிட்டது என்னவென்றால், பொருளாதார விரிவாக்கம், மனித நேயத்துடன் இருக்க வேண்டும். நாம் இதுபோன்று செயல் படுகிறோமா? இதுபற்றிதான் நாம் முதலாவதாக சிந்திக்க வேண்டும்.

பொருளாதார சீர்திருத்தம் என்பது ஒரு வறண்ட கல்வி பயிற்சி அல்ல. அதனை நேயத்துடன் காப்பாற்றப்படவேண்டிய எளிய மற்றும் அடித்தளத்து மக்களிடையே திணிக்கமுடியாது. வறுமையை ஒழிக்க போராட வேண்டிய நாம், அதற்குண்டான சமூக பாதுகாப்பிற்கு ஆவன செய்திருப்போமா என்பதுதான் நம்மிடையே முக்கிய விஷயம். எனக்குத் தெரிந்தவரை இதுபோன்று நடக்கவில்லை. மாநில நிர்வாகம் மக்களிடையே நெருங்கியிருப்பதால் பொருளாதார சீர்திருத்தத்தின் விளைவுகளை நேரடியாக எதிர்நோக்க வேண்டியுள்ளது.

### கிராம மக்களுக்கு வேலைவாய்ப்புகள் பெருகும்

வளர்ந்துகொண்டிருக்கிற பொருளாதாரத்தில் மாநிலத்தின் உற்பத்தியில் விவசாயம், மற்றும் அதைச் சார்ந்த பணிகள் சரிந்துகொண்டிருக்கும் நிலையில் இருக்கிறது. இதில் பிரச்சினை என்னவென்றால், இந்தப் பகுதி மக்கள் தொகை விகிதத்திற்கு ஏற்றவாறு அமையாத ஒரு சூழல் உள்ளது. பொருளாதாரம் முடுக்கிவிடப்பட்டால் தான் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்புகள் பெருகும். அப்படி இல்லாவிடில் அவர்களால் நிதி சீர்திருத்தங்களை தாங்கிக்கொள்ள முடியாது.

முதலீடு உச்சநிலையை அடைந்தால்தான் சீர்திருத்தங்களின் பயன்களை நாம் அடைய முடியும். இதற்காக பொது மற்றும் தனியார் முதலீடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்பதில் நாம் ஒத்த கருத்துடையவர்களாக இருக்கிறோம். நாம் இப்போது இருக்கும் நிலையில், பெருவாரியான முதலீடுகள் குறிப்பாக, உள்கட்டமைப்புத் திட்டங்களாக இருந்தால் அது பொருளாதார மேம்பாட்டிற்கு ஓர் அத்தியாவசியமான வேகத்தைக் கொடுக்க முடியும்.

ஒரே சமயத்தில் பெருமளவு பொது முதலீடு செய்ய முடியுமா என்பது புதிராக இருக்கிறது.

### அரசுப் பணியாளர்களுக்கே நிதி ஆதாரம் பயன்படுகிறது

ஏற்கெனவே அரசாங்கத்தில் பணிபுரிபவர்கள் அரசு வருவாயில் பெரும் பங்கை எடுத்துக் கொள்கிறார்கள். இந்த முக்கிய காரணம்தான் நமது முதலீட்டிற்கு சரியான ஆதாரம் இல்லாமல், முதலீட்டு வளர்ச்சிக்கு குந்தகமாக அமைந்திருக்கிறது. அரசாங்கப் பணியாளர்களை திருப்திபடுத்தவே, அவர்களுடைய உயர்வுக்கே நம்முடைய நிதி ஆதாரங்கள் பெருமளவில் பயன்படுகின்றன. நாம் இதிலிருந்து தெரிவது என்னவென்றால், வளர்ச்சியின் சோகக் கதையை, தேசிய அளவில் ஒருமித்த கருத்தாக கொண்டு, நாம் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

ஐந்தாவது மத்திய ஊதியக் குழு பெருமளவு நிதியை அரசாங்க பணியாளர்களுக்குக் கொடுத்தது குறித்து எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. ஏனென்றால், மாநில அரசுகள், நிர்வாக அமைப்புகளை சரிப்படுத்தும் ஒரு கட்டத்தில் இருந்த நேரம் அது. ஊதியக் குழுவின் பரிந்துரைகளை மாநில அரசுகள் முழுமையாக ஏற்றுக்கொண்டன. மத்திய அரசு பெரும்பாலும் கடன் வாங்கியே தங்களுடைய நிதிப் பொறுப்புகளை சரிக்கட்டி வந்திருக்கின்ற சூழலில் ஐந்தாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதிலேயே மாநில அரசுகளும் ஒரு பெரும் நிதிச் சூழலில் மாட்டிக் கொண்டு, மீள முடியாமல் அவதிப் படுவதைப் பார்க்க எனக்கு வியப்பாக இருக்கிறது.

இதன் முடிவுகள் ஒரு பேராபத்தாகவே முடியும். பொதுத்துறை பணியாளர்கள் ஐந்து சதவிகிதமே இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரமும் பாதுகாப்பும் உயர்ந்திருக்கிறது. ஆனால், மற்ற துறையின் ஊழியர்கள் நிராதரவாக இருக்கிறார்கள். இந்த நிலையை ஏற்றுக் கொள்ள முடியுமா? நாம் நிதி சீர்திருத்தம் என்ற போர்வையில் மறுபடியும் இம்மாதிரியான அலங்கோலமான நிலையை உண்டாக்கி, எந்த ஏழை-எளிய மக்களுக்கு முன்பே நாம் ஒன்றும் செய்ய முடியவில்லையோ, அதே ஏழைகளை இன்னும் அதள பாதாளத்தில் தள்ளிவிட்டோம் என்று தெரிகிறது.





நம்மில் யாராவது, ஏழை-எளியவர்களை மேலும் ஏழைகளாக்க காரணமாக இருப்போமா என்ற கேள்வியை இந்தக் கூட்டத்தில் உங்கள் முன் வைக்கிறேன்.

### கடந்த ஆட்சியில் நிதிக் கொள்கை செயலற்றுப் போனது

இதைச் சரிசெய்ய மத்திய அரசு முன்வர வேண்டும். பரவலாக ஆராய்ந்து, பொருளாதார சீர்திருத்தத்திற்காக எப்படி பொது நிதிகளை கையாள வேண்டும், 2000-2001ஆம் ஆண்டில் மொத்த வரி வருவாயில் 94 சதவிகிதம் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக தமிழ்நாடு செலவிட்டுள்ளது. கடந்த ஆட்சியில் 1996-2001ல் நிதிக் கொள்கை செயலற்று போனதினால், அந்த சுமையும் நம்மீது விழுந்தது. ஆதலால் கடுமையான முடிவுகள் எடுக்கும் நிலைக்கு எங்கள் அரசு தள்ளப்பட்டது. நாம் அப்படி செய்தால்தான் தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் சென்று அதன்மூலமாக ஏழை-எளியவர்களுக்கு வாய்ப்புகள் தர முடியும்.

கட்டுக்கடங்காத பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாளர்களுக்கு சம்பளம் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையினால் மாநிலங்களின் நிதி வீழ்ச்சிக்கு காரணமாக அமைந்தது. ஓய்வூதியம் மத்திய அரசினால் உயர்த்தப்பட்டன. இதையே மாநிலங்களும் அமல்படுத்தின. 1997-98 முதல் 2001-2002 வரை அளிக்கப்படவேண்டிய ஓய்வூதியத் தொகை மூன்று மடங்கு உயர்ந்ததினால், எங்கள் அரசு மீது இந்தப் பளுவும் சுமத்தப்பட்டது. இதை எந்த மாநிலமும் கையாள முடியாது.

தற்போதுள்ள கேள்வி என்னவென்றால், ஒவ்வொரு ஆண்டும், ஓய்வூதியத் தொகையின் விகிதம் உயரும்போது, எப்படி 10 சதவிகிதத்திற்குள் நாம் அதை கட்டுக்குள் கொண்டுவர முடியும்?

### நிதி ஏற்றத் தாழ்வுகளை சீர்செய்ய வேண்டும்

எல்லாவித நிதி நெருக்கடிக்கும் உடனடித் தீர்வு காண உணவு மற்றும் மின்சாரத்திற்கான மான்யங்களை வெட்ட வேண்டும் என்றும் நிதி நிபுணர்களும், தேர்ந்த பொருளாதார வல்லுநர்களும் தெரிவித்திருக்கிறார்கள். இதேபோன்று சமூகப் பணிகளுக்கான மானியங்களும் கண்மூடித்தனமாக கடுமையாக வெட்டப்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். இங்குதான் நாம் சரியாக கணக்கிட்டு, சீர்திருத்தங்களைக் கொண்டுவர வேண்டும். பணியாளர்களின் உயர்ந்து வரும் ஊதியங்களினால் ஏற்படும் செலவின் காரணமாக ஏற்படும் நிதி ஏற்றத் தாழ்வுகளை சீர்செய்ய வேண்டும் என்பது என்னுடைய உறுதியான கருத்தாகும்.

அத்தியாவசியமான துறைகளைத் தவிர, மற்ற துறைகளில் பணியாளர்கள் நியமனங்களை எங்கள் அரசு தமிழகத்தில் தடை செய்திருக்கிறது.

எனவே, நிதிச் சுமையை சரிக்கட்ட மாநிலங்களுக்கு எளிய நிபந்தனைகளுடன் கூடிய நிதி வசதிகளை மத்திய அரசு செய்து தர வேண்டும். ஆனால் பணியாளர்களுக்கு தானாகவே வழங்கப்படவேண்டிய இழப்பீட்டை நாங்கள் சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த விஷயத்தில் முதலமைச்சர்களின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. இது, குறிப்பாக அகவிலைப் படிக்கும் பொருந்தும்.

ஊதியம் கொடுக்க புது வழிமுறைகள் வகுக்கப்பட வேண்டும். இது கடந்த காலத்தில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இந்த இடர்ப்பாட்டை நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும். மாநில அரசு ஏழை-எளிய மக்களுக்காக நல்லது செய்ய, பணியாற்ற தத்தளித்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையை உணர்ந்து, பணியாளர்கள் தங்களுக்கு வழங்கப்படும் பணி தொடர்பான வருவாயை எதிர்பார்க்கக்கூடாது.

நாம் எதற்காக பதவிக்கு வருவதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டோம்? என்ன காரணத்திற்காக தேர்வு செய்யப்பட்டோம்? அரசுப் பணியாளர்களுக்கு முதலிடம் அளிப்பதற்காகத்தான் நாம் பதவிக்கு வந்தோமா? சமூகப் பாதுகாப்பை நிலைகுலையச் செய்வோமா? இதனை கைகட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கும் வெறும் பார்வையாளராக நம்மால் இருக்க முடியுமா?

**தேசிய அளவில் உடன்பாடு**

முந்தைய ஆண்டுகளில், கடன் அதிகமாக வாங்குவதே எளிமையான வழியாக இருந்தது. தற்போது இந்த வழியும் மாநில அரசுக்கு அடைக்கப்பட்டுவிட்டது. இதே விஷயத்தை பற்றியே திரும்பத் திரும்ப சுற்றிக் கொண்டிருக்கவேண்டாம். அரசு பணியாளர்களுக்காக செலவிடப்படும் செலவுகளை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு தேசிய அளவில் ஒரு உடன்பாடு ஏற்படவேண்டும். இந்த நடவடிக்கையை இந்த அவை செய்யாவிட்டால் வேறு யார் செய்வார்கள்? இதைச் செய்வதற்கு பாரதப் பிரதமர் அவர்களே, நீங்கள் முன்வர வேண்டும்.

நாம் ஏழை-எளிய மக்களின் பாதுகாப்பாளராக இருக்கிறோம் என்பதை, இந்த சமயத்திலாவது உறுதியுடன் ஒலிக்க வேண்டாமா?

கடன் பேரம் பற்றி நிதியமைச்சர்களால் விவாதிக்கப்பட்டு, இந்த அவையின் முன்பு கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரை இந்தப் பிரச்சினை மேலோட்டமாகவே விவாதிக்கப்பட்டிருக்கிறது. இது ஆச்சர்யமாக இருக்கிறது. என்ன ஆச்சரியமென்றால், போதிய நிதி வசதியற்ற மாநில அரசுகள் தங்களுடைய சிறுசேமிப்புத் திட்டங்கள் மூலம் வசூலான தொகைகளில் 20 சதவிகிதத்தை மத்திய அரசிடமிருந்து வாங்கி பெரிய அளவிலான கடன் தொகைக்கு பரிமாற்றம் செய்ய திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று பாரதப் பிரதமரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாநிலங்களின் மொத்த வசூலிலிருந்து சிறு சேமிப்புக் கடன்கள் கிடைக்கிறது. ஆதலால் இது அவர்களுக்கு கிடைக்க வேண்டிய உரிமைத் தொகையே தவிர கருணை அடிப்படையில் கொடுக்கப்படும் தொகை அல்ல. இந்த 20 சதவிகிதம் முன்கூட்டியே விலக்கப்பட்டால், இது மாநிலங்களின் நிதி நிலையில் மேலும் சிக்கலை உருவாக்கும்.

சிறு சேமிப்பு திட்டங்கள் மூலம் வசூலான 100 சதவிகித தொகை நடப்பு ஆண்டு திட்டங்களுக்கு உதவியாக இருக்கும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். இந்த 100 சதவிகித வசூல் தொகையில் 20 சதவிகிதம் குறைக்கப்பட்டால், மேம்பாட்டுத் திட்டங்களுக்கு குந்தகம் ஏற்படும். தவிர இத்தருணத்தில் திட்டங்களுக்கு நாம் மேலும் செலவு செய்ய வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

**கண்டுகொள்ளாதது ஏன்?**

வரப்போகும் நிதி நெருக்கடியை பதினோராவது நிதிக் குழு தன்னுடைய பரிந்துரைகளில் கண்டுகொள்ளாதது அதிர்ச்சி அளிக்கிறது. ஓராண்டிலேயே பரிந்துரைகள் பலம் இழந்துவிட்டது. சிறிதளவாவது முன்னேறிய நிலையில் இருக்கும் மாநிலங்கள், நிதியின் மறு பங்கீடு என்ற போர்வையில் பின்தங்கிய மாநிலங்களின் நிலைக்குத் தள்ளப்படுவதை தொடர்ந்து நிதிக் குழு கடைபிடித்து வருகிறது என்ற அதிர்ச்சியான விஷயத்தையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.


11-வது நிதிக்குழு அதிகபட்சமாக தமிழ்நாட்டை துன்புறுத்தியிருக்கிறது. நிதிக் குழுவின் பரிந்துரையால் 2000-2005 கால கட்டத்தில் எங்கள் கணக்குப்படி தமிழ்நாட்டுக்கு 2,946 கோடி ரூபாய் இழப்பு ஏற்படும். இதைத் தவிர, நாம் ஏற்கெனவே 2001-2002ல் மத்திய அரசின் வரி வசூல் பற்றாக்குறையினால் 540 கோடி ரூபாய் கூடுதலாக இழந்திருக்கிறோம். எந்த மாநிலமும் இம்மாதிரி நிதி தாக்குதல்களுக்கு உட்பட்டு மீண்டிருக்க முடியாது.

**விகிதாச்சாரங்களை உயர்த்த வேண்டும்**

11-வது நிதிக் குழுவும் மத்திய அரசும் தமிழ்நாட்டிற்கு அதிக நிதிப் பங்கீட்டை அளிப்பது பற்றி கண்டுகொள்ளவே இல்லை. மொத்த வருவாயில் 29.5 சதவிகிதம் மாநிலங்களின் பங்காக அளிக்கப்பட வேண்டுமென்ற விகிதாச்சாரம் நீண்ட நாட்களாக நம்மிடையே நிலவி வருகிறது. இந்த விகிதாச்சாரத்தை உடனடியாக உயர்த்த வேண்டும். இது அடுத்த நிதிக் குழுவின் பார்வைக்கு விடவேண்டும் என்ற சாக்குபோக்கு ஏற்றுக்கொள்ள முடியாது.

தெளிவாக, மாநிலங்களின் நிதி நெருக்கடியை கருத்தில் கொண்டு, இந்த விகிதாச்சார பங்கீட்டை உயர்த்த வேண்டும். பதிலாக, கடன் பரிமாற்றத் திட்டத்தையே கொண்டு வந்திருக்கிறது. கடன் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் எள்ளளவே நிதி நிவாரணம் அளிக்கப்படுகிறது. இதற்குப் பதிலாக குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகளுக்காவது மத்திய அரசுக்கு கடன் திருப்பி கொடுக்க மாநிலங்களுக்கு குறிப்பிடும்படியான நிவாரணம் திட்டம் கொண்டுவரப்பட வேண்டும்.

இது நிதியின் கோணத்தில் செயல்படுத்த முடியும். ஏனென்றால், பெருமளவிலான கடனுக்கு முன்கூட்டியே




இதில் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால், 11-வது நிதிக் குழு மாநிலங்களின் கடன் சுமையை கண்டுகொள்ளவே இல்லை. ஐந்தாவது மத்திய ஊதியக் குழு மாநிலங்கள் பொருளாதார நிதி நெருக்கடிக்கு தள்ளப்பட்டதற்குக் காரணம், ஊதியங்களின் பளு மாநிலங்கள் மீது விழுந்தது தான். உயர்ந்துகொண்டே போகும் கடன் பிரச்சினையை கண்டுகொள்ளாமல் இருந்ததால், 11-வது நிதிக் குழு தன்னுடைய பொறுப்பை துறந்து விட்டது.

**எள்ளளவே நிவாரணம்**

பிரதமர் அவர்களே, இதேபோன்று மத்திய நிதி அமைச்சகமும் முழுமையான கடன் நிவாரணத் திட்டத்திற்கு பணம் வழங்கப்பட்டிருப்பதனால். மேலும் மத்திய நிதி உதவி விகிதாச்சாரம் மாற்றப்படவேண்டும். தற்பொழுதுள்ள 30 சதவிகிதத்தை 50 சதவிகிதமாக உயர்த்திக் கொடுக்கப்பட வேண்டும். தவிர, அந்த கடன் பங்கிலிருந்து வட்டி விகிதம் குறைக்கப்பட வேண்டும்.

பல விஷயங்கள் பற்றிய திட்டக் குறிப்புகள் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதில் மாநிலங்களுக்கான கடனை வெட்டுவது மற்றும் சிறப்பு நோக்க அமைப்பு (Special Purpose Vehicle) பற்றி இடம்பெற்றிருக்கிறது. இந்திய ரிசர்வ் வங்கி கடன் விஷயத்தில் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறது. நிதி சீர்திருத்தங்களை அவ்வளவு எளிதாக செய்ய முடியாது. அதற்கு பொருத்தமான காலம் இருக்கிறது. உதாரணமாக மாநிலங்கள் வறட்சி நிலையில்

உள்ளபோது நிதிசீர்திருத்தங்கள் செய்வது எளிதாக இருக்காது. இருந்தும் எங்கள் மாநிலம் வறட்சியில் உள்ள நிலையிலும் நான் முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறேன். பிரதமர் அவர்களே, Special Purpose Vehicle கடன்களுக்கும், அதை வாங்குவதில் உள்ள தடைகள் பற்றியும் உங்களுக்கு நான் கடிதம் எழுதியிருக்கிறேன். தற்போதுள்ள சூழ்நிலையில் மாநிலங்கள் நிதி நெருக்கடியை சந்தித்துக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் இம்மாதிரித் திட்டங்கள் எப்படி உருவாக்கப்பட்டது என்பது ஆச்சரியம் அளிக்கிறது.

## வருமான இழப்பு 100 சதவீதம் வேண்டும்

மாநில அளவில் மதிப்பு கூட்டு வரியை 1.4.2003 முதல் அறிமுகப்படுத்த நாங்கள் முடுக்கி விட்டுள்ளோம். இதை செயல்படுத்த மாநிலங்கள் ஒருமித்த கருத்துடன் இருக்கின்றன. இந்நிலையில் மாநிலங்களுக்கு மதிப்பு கூட்டுவரி அறிமுகப்படுத்து வதால் ஏற்படும் வருவாய் இழப்பை ஈடுகட்ட ஒருமித்த செயல் திட்டத்தை நாம் கொண்டுவர வேண்டும். தமிழ்நாடு போன்ற மாநிலங் களுக்கு மதிப்பு கூட்டு வரி செயல்படுத்துவதன் மூலம் ஏற்படும் நிதிநெருக்கடி மறுபடியும் நேராதிருக்க பிரதமர் அவர்களே, தாங்கள் இதனை பரந்த மனப்பான்மையுடன் கவனித்து ஆவன செய்ய வேண்டும். 11வது நிதிக்குழு காலகட்டத்தில் (2000-2005) மதிப்பு கூட்டுவரி அமல்படுத்தினால் ஏற்படும் வருமான இழப்பிற்கு நூறு சதவீத இழப்பீடு தரப்பட வேண்டும் என்பது என் கருத்தாகும். இதேபோன்று மத்திய விற்பனை வரியும் படிப்படியாக தளர்த்தப்பட்டால் இழப்பீடு ஈடுசெய்யப்பட வேண்டும்.

சேவை வரி விஷயமாக லெவி மற்றும் வசூல் பற்றிய சில திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. இதில் வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் மத்திய அரசு வங்கிகள், காப்பீடு, டெலிகாம் துறைகளில் வசூலிக்கும் பெருமளவு வருவாயை தன்னிடமே வைத்துக் கொண்டு, முடிதிருத்தகங்கள், அழகு நிலையங்கள், சலவையகங்கள் போன்றவற்றுக்கான வரிகள் மாநிலங்களுக்கு அளிக்கப்படுகின்றன. இது என்ன நீதி? வரும் பாராளுமன்ற குளிர்கால கூட்டத் தொடரின்போது வருமானம் அதிகம் வரும் பிரிவுகளில் வரும் வருமானங்களை மாநிலங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய கருத்து.

## விரைவான வலுவான செயல்

பிரதமர் அவர்களே, பெருவாரியான மாநிலங்கள் பண நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்றன. செலவுகள் கூடிக்கொண்டே போகின்றன, அதனால் வளர்ச்சித் திட்டங்கள் பாதிக்கப்பட்டு முற்றிலுமாக நிலைகுலைந்து விட்டது. நீங்கள் இந்த நெருக்கடியை கவனிக்க வேண்டும். மாநிலங்களுக்கு விரைவாக உதவி தேவைப்படுகிறது. மாநிலங்கள் இந்த நிலையில் இருந்தால் மத்திய அரசு வலுவாக இருக்க முடியாது. ஜஸ்வந்த் சிங் அவர்கள் மாநிலங்களுடன் நிதி விஷயமாக பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டிருக்கிறார். ஆனால் நமக்கு வேண்டியது விரைவான வலுவான செயல்.

## ஆணிமுனை சிம்மாசனம்

என் பரிந்துரை என்னவென்றால் பண நெருக்கடி விஷயத்தில் மாநிலங்களுக்கு உரிய நிவாரணத் தொகுப்பு அளிக்கப்பட வேண்டும். அதை மாநிலங்களின் ஆரம்பப் பற்றாக்குறையுடன் இணைக்கக் கூடாது. நிதி நிவாரணத்தில் அக்கறை இருந்தால் இந்த தொகுப்பு மிகவும் தேவைப்படும். முந்தைய ஆட்சி எங்களுக்கு அளித்து விட்டுச் சென்ற முள்கிரீடமும், ஆணிமுனை சிம்மாசனம் என்பதால் நிவாரணம் மிகவும் அவசியமாகிறது. அதே சமயத்தில் இந்திய ரிசர்வ் வங்கியினால் ஏப்ரல் 2003ல் வெளிப்பட வேண்டிய ஓவர் டிராப்ட் நிபந்தனைகள் அதை முன்கூட்டியே டிசம்பர் 2002ல் வெளியிட்டால் அதன் மூலம், புதிய கட்டுப்பாடுகள் பற்றி விமர்சனம் செய்ய முடியும். புதிய நிதியமைச்சர் எங்களுடைய 'சரிசெய்யும் கடன் திட்டத்'திற்கு உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும்.

நிதியமைச்சகம் 11வது நிதிக்குழு பரிந்துரைகளின் படி கொண்டுவரப்பட்ட நிதி சீர்திருத்த வசதிகளின் அளவு எங்களுக்கு மேலும் வியப்பளிக்கிறது. பல்வேறுவகையான நிதி சீர்திருத்தங்களை தமிழ்நாடு செய்தால் மொத்தமாக 5 வருட காலகட்டத்தில் மாநிலத்திற்கு 402 கோடி ரூபாய் கிடைக்கும். எந்த மாநிலமும் தன்னுடைய வருவாய் பற்றாக்குறையை 2005ம் ஆண்டில் பூஜ்யத்திற்கு கொண்டு வந்தால் இம்மாதிரியான நிதி சீர்திருத்தத்திற்கு தேவையே இருக்காது. குறைந்தபட்சமாக ஊக்கத்துடன் நிதி சீர்திருத்தத்தை செயல்படுத்த இந்த வசதியை மூன்று மடங்கிற்கு உயர்த்தப்பட வேண்டும். அதே சமயத்தில் 'மத்திய அரசின் பல அமைச்சகங்கள் தேர்ந்த நிதி சீர்திருத்தவாதிகள் போல்' தங்களை பாவித்துக் கொள்வது எனக்கு வியப்பளிக்கிறது. இவர்கள் மாநிலங்களுக்கு சீர்திருத்தத்துடன் இணைந்த உதவியைத் தர 'காரட்'டை நம் முன் காட்டுகிறார்கள். தனி ஒரு மாநிலத்தின் சிறப்புத் தன்மைகளைக் கண்டுகொள்ளாமல் இம்மாதிரியான சீர்திருத்தத்துடன் இணைந்த உதவித் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. மாநில அளவில் நடத்தப்படும் நிதி சீர்திருத்தங்கள் மையமான முதன்மை அளவில் கையாளப்பட வேண்டும்.

## சீர்திருத்தத்துடன் வளர்ச்சி

பிரதமர் அவர்களே, வளர்ச்சிப் பணிகளில் மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கொடுக்கப்பட வேண்டும் என்ற துணிச்சலான முடிவு எடுக்கப்படுவது தேவையாகிறது. புதுடெல்லியில் பரந்து இருக்கும் அதிகார வர்க்கத்தை பிரிக்காமல் மத்திய அரசுக்கு அதிகாரிகள் முன்ஜாக்கிரதையாக மாற்றப்படுவதை நாம் காண்கிறோம். அதைவிட வருந்தத்தக்க விஷயம் என்னவென்றால் மத்திய அரசு மாநில அரசுகள் மீது நம்பிக்கையின்றி, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இல்லாத நிறுவனங்களுக்கும், கழகங்களுக்கும் நிதியை அளிக்கின்றன. சில மத்திய அமைச்சகங்கள் கூட்டாட்சி தத்துவத்திற்கு எதிராக தங்களுடைய சொந்த ஆதிக்கத்தை வலுப்படுத்த மாநில அரசுகளைக் கண்டுகொள்ளாமல் இருக்கின்றன.

நிதி சீர்திருத்தங்கள் செய்வதில் தமிழகம் பின்வாங்காது. நிதிசீர்திருத்தமும், வளர்ச்சியும் எப்படி கூடுதலாக செயல்படுத்த வேண்டும் என்பதுதான் இப்போது நமக்கு தெளிவாகத் தெரிய வேண்டியதாகும். இது தேசிய அளவில் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இதை அரசியலாக்கக் கூடாது. தேசிய அளவில் கடைப்பிடிக்க வேண்டிய நிதிச் சீர்திருத்த திட்டத்தை நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து கொண்டுவர வேண்டும்.

இதன்மூலம் நம் தேசத்தில் காணப்படும் பல்வேறு சிக்கலான பிரச்சினைகளுக்கு முடிவு காண முடியும். கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களுக்கு வளர்ச்சித் திட்டத்தை உருவாக்குவது தான் இதைவிட பெரிய சவாலாகும். இதைச் செய்யாவிடில் நிதிசீர்திருத்தத்திற்கு ஓர் அர்த்தமுமில்லாமல் இதன் விளைவுகள் வெகுவாக நம்மை பாதிக்கும் என்பதே உண்மை. தேசிய வளர்ச்சிக் கவுன்சிலில் இதைப் பற்றி முழுமையாகவும், விரிவாகவும் விவாதிக்க சந்தர்ப்பம் ஏற்படும் என்று நம்புகிறேன். "சீர்திருத்தத்துடன் வளர்ச்சி" என்பதே என்னுடைய அறைகூவலாகும். இவை இரண்டும் கைகோர்த்துச் செல்ல வேண்டும். புதிய வளர்ச்சிப் பாதையில்தான் கோடிக்கணக்கான ஏழை எளியவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும் என்று உறுதியாக நம்புகிறேன்.

நிகழ்ச்சி நிரலில் உள்ள இனங்கள் மீதான, எனது சுருக்கமான கருத்துக்களை, இங்கே, இடையிட்டு, தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய விரிவான பார்வைகள் எனது உரையில் கொடுக்கப்பட்டுள்ளது. அதனை அதிகாரப்பூர்வமானதாக எடுத்துக் கொள்ளலாம். மாநில அளவிலான பொதுவருவாய் சீர்திருத்தம் குறித்த விரிவான பிரச்சினை குறித்து எனது கருத்தை நான் கூற விரும்புகிறேன்.

"நடுத்தர கால பொதுவருவாய் நிதிநிலை சீர்திருத்த-திட்டங்கள்" ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன என்பதையே நிகழ்ச்சிநிரல் சுட்டிக் காட்டுகிறது.

நான் மிகவும் உடன்படுகிறேன். ஏனெனில் நாம் தொடர்ந்து முன்னேறத் தேவையான கசப்பு மருந்தை எடுத்துக் கொள்ள வேண்டியதை இது தன்னகத்தே கொண்டுள்ளது.

பொதுவருவாய் நிதி சீர்திருத்தமும், அதிவேக நல வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து நடைபெறவேண்டும் என்பதே எனது கருத்தாகும். "சீர்திருத்தமும்- நல வளர்ச்சியும்" என்பதுதான் நம்முடைய ஆதாரத்திட்டமாக இருக்க வேண்டும். 11-வது நிதி குழுவின் பரிந்துரைகளின் மீது நிதி அமைச்சகம் ஏற்படுத்தியுள்ள, பொதுவருவாய் நிதி சீர்திருத்த வசதி அளவு முற்றிலும் பிரமிப்பாக உள்ளது. 5 ஆண்டு காலகட்ட நிதி நெருக்கடி ரூ.402 கோடி தொகை தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டும். விரிவான அளவில் நிதி சீர்திருத்தம் எடுத்து செய்யப்பட வேண்டுமானால் இத்தொகை அவசியம்.

2005-ம் ஆண்டிற்குள் செய்து முடிக்க வேண்டும் என்கிற, அடிப்படையில், ஒரு மாநிலம், உண்மையிலேயே, தனது வருவாய் பற்றாக்குறையை "பூஜ்யம்" அளவுக்கு, கொண்டு வந்தால், அப்படிப்பட்ட ஒரு நிதிநிலை பொருளாதார வசதி என்பது சக்திக்கு மீறியதாகும்!

நிதிநிலை சீர்திருத்தத்தை உற்சாகத்துடன் செயல்படுத்தவேண்டுமானால், குறைந்த அளவு, இந்த வசதியை 3 மடங்கு ஆக்குவதுதான் நமக்கு தேவையானதாகும். மாநிலங்களின் சிறப்பு நோக்கு வழி முறைகளும் (எஸ்.பி.வி.) மாநிலங்களின், பேச்சுவார்த்தை மூலம் பெறும் கடன்களையும் கட்டுப்படுத்தும், அடுக்கடுக்கான கருத்துக்களையும், நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேர்க்கப்பட்டிருப்பது வளர்ச்சிக்குப் புறம்பான கருத்து. நலத்திட்ட வளர்ச்சி திட்டத்தில் ஈடுபடுவதை நாம் கை விட்டுவிட வேண்டும் என்று உணர்த்தும் அளவுக்கு இது சென்றுள்ளது.

பிரதமர் அவர்களே, சிறப்பு நோக்கு வழிமுறைகள் மூலம் கடன் பெறுவதின் மீதும் மாநிலங்களே பேச்சுவார்த்தைமூலம் பெறும் கடன்களின் மீதும், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பதைப் பற்றி, ஏப்ரல்-2002ல் நான் தங்களுக்கு கடிதம் எழுதி இருக்கிறேன். குழந்தையை அதைக் குளிப்பாட்ட உதவும் தொட்டியுடன் சேர்ந்து தூக்கி எறிவது போல் இது உள்ளது. பள்ளிக்கூடம் கட்டுவதற்காக, மருத்துவமனைக்காக, சாலை வசதிக்காக, குடிநீர் விநியோகத்திற்காக ஆகிய நலப் பணிகளுக்காக நாம் கடன்பெறக் கூடாதா?

எனது கருத்தில் இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் அவசியமற்றது என எனக்குப்படுகிறது.

ஒரு மாநிலம் சீர்திருத்தங்களை மேற்கொண்டு தான் ஆகவேண்டும். கடன் வாங்குவதிலும் ஒரு மாநிலம், தனக்குத்தானே, சில நெறிமுறைகளை, விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். கட்டுப்பாடில்லாது பெறும் கடன், ஆபத்தில்தான் முடியும் என்கிற உள்ளார்ந்த

உண்மை ஒரு மாநிலத்திற்கு நன்கு தெரியும். எனவே, இந்த நிலையில் ஏன் இவ்வளவு கட்டுப்பாடுகள்!

திரும்பச் செலுத்த வேண்டிய கடனை எவ்வாறு சமாளிப்பது அல்லது தீர்ப்பது என்கிற அம்சமும் இதில் உள்ளது. மாநிலங்களின் வட்டிச் சுமை குறைய இந்த திரும்ப செலுத்த வேண்டிய கடனை சமாளிக்கும் நெறிகளிலிருந்து ஒரு தீர்வு கிடைக்கும்.

சிறுசேமிப்பு கடன் தொகையில் 20 சதவீதம், இதற்காக பயன்படுத்த கருத்துரு வைக்கப்பட்டுள்ளது. இந்த வகையிலான நிதி உதவி கருத்துருவை என்னால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை. இது சாத்தியமற்றது. மாநிலங்கள் கடும் நிதி நெருக்கடியில் உள்ளன. எனவே இந்த 20 சதம் பங்களிப்பை ஏற்க இயலாது. திட்ட அமலாக்கத்தில் இது ஒரு வெட்டு என்றே கருத வேண்டி உள்ளது.

வேறு முறையில் நிதி உதவிக்கான ஒரு வழியை கண்டுபிடிக்க வேண்டும். கொடுக்கப்பட வேண்டிய கடன் அளவைத் தீர்ப்பது என்பது மத்திய அரசு பெருமளவில் முன்கூட்டியே செலுத்துவதாகும். இது மத்திய அரசின் நிதிப்பற்றாக்குறையை மேலும் குறைத்துவிடும். இந்தச் சூழ்நிலையில், மத்திய அரசு தாராள போக்கைக் காட்ட வேண்டும். மாற்றுத் திட்டத்திற்கு அனுமதிக்க வேண்டும்.

மாநிலங்கள் எதிர்நோக்கும் கடன் சுமைப் பொறியை பொருத்த அளவில் 11-வது நிதிநிலை ஆணையம் மரங்களற்ற காடு என்பார்களே அது போன்ற நிலையில் உள்ளது. இந்த அம்சத்தை அடுத்தடுத்து வந்த நிதிநிலை ஆணையம் கவனிக்கத் தவறிவிட்டது. எனவே, நிலைமை இந்த அளவுக்கு வளர்ந்து விட்டது. இதனால் மாநிலங்கள் தண்டிக்கப்பட்டன. எனவே, தங்களது சிறுசேமிப்பு கடன் திரட்டிலிருந்து 20 சதவிகிதத்தை, மாநிலங்கள் விட்டுக் கொடுக்க வேண்டும் என்கிற கருத்துருவை கைவிட்டால் என்ன என்று எனது கருத்தை முன்வைக்கிறேன். மேலும் செலுத்த வேண்டிய கடன் தீர்வு திட்டம் ஒன்று அறிவிக்கப்பட வேண்டும். அதன்படி, மத்திய அரசுக்கு, செலுத்த வேண்டிய அசல் தொகையை திரும்ப செலுத்துவதில், பொருத்த அளவில் ஒரு தீர்வை மாநிலங்களுக்கு வழங்க வேண்டும். அத்தீர்வின்படி, அடுத்த நிதிநிலை ஆணையத்தின் பரிந்துரைகள் அமல் செய்யும் காலம் வரை அதாவது குறைந்தபட்சம் எதிர்வரும் 3 ஆண்டுகளுக்கு இந்த தீர்வு கிடைக்க வேண்டும்.

1.4.2003 முதல் எல்லா மாநிலங்களும், மதிப்புக் கூட்டு வரியை நடைமுறைப்படுத்த ஒப்புக் கொண்டுள்ளன. பிரதமர் அவர்களே, மாநிலங்களுக்காக, ஈடுசெய் திட்டம் என்ற ஒன்றை, அரசியல் விவேகியாக தாராள போக்குடன் கூடிய ஒன்றை இங்கே அறிவிக்க தங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனெனில் மதிப்பு கூட்டப்பட்ட வரி அமல் செய்வதால் மாநிலங்கள் வருவாயை இழக்கின்றன.

11-வது நிதிக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்தியதால், தமிழ்நாடு மிகவும் மோசமாக ஏற்கெனவே பாதிப்படைந்துள்ளது. எனவே, மதிப்புக் கூட்டப்பட்ட வரியை ஏற்க இயலாது.

2005ஆம் ஆண்டு வரையிலான 100 சதவீத வருவாய் இழப்பை, ஈடு செய்தாலொழிய இதனை ஏற்க இயலாது. ஏனெனில் அப்போது தான் அடுத்த நிதிதுறை ஆணையத்தின் பரிந்துரைகள் எடுத்துக்கொள்ளப்படும். அதுபோலவே, மத்திய விற்பனை வரி விதிப்பு குறைவாக கீழிறங்கினால், அதுவும் 100 சதவீதம் ஈடு செய்யப்பட வேண்டும். சேவை வரியைப் பொருத்தவரையில், சில சேவைகள் மீது வரிவிதிக்க, மாநிலங்களுக்கு அதிகாரமளிப்பது என்கிற கருத்துருவை நான் வரவேற்கிறேன். வங்கித் துறை, ஆயுள் பாதுகாப்புத் துறை, தொலைத் தொடர்பு ஆகிய அகன்ற விரிந்த துறைகளை மத்திய அரசே தனக்காக வைத்துக் கொண்டிருப்பது, ஏற்புடையதல்ல. சலவைத் தொழிலகம், முடி திருத்தகம், அழகு நிலையங்கள் ஆகிய இனம் போன்றவற்றை வருவாய் ஈட்டுவதற்காக, மாநிலங்களுக்கு ஒதுக்கி இருப்பதும் ஏற்புடையதல்ல. இன்னும் சமநிலையில் வருவாய் பங்கீட்டை நாம் செய்து கொள்ள வேண்டும்.

மாநிலங்களில் மத்திய அரசால் நிறைவேற்றப்படும் திட்டங்களுக்கு உரிய நிதியை, எந்த வழியில் அனுப்புவது என்பது குறித்தான கேள்விக்கு, இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்க முடியாது. அரசியலமைப்பு சட்டத்தில் தெரிவிக்கப்பட்டபடி, எல்லா நிதி உதவியும், மாநில அரசு வழியாகத்தான் அனுப்பி வைக்க வேண்டும்.

மத்திய நிதி உதவியாக கடனாக 70 சதவீதமும், மானியமாக 30 சதவீதமும், தற்போதுள்ள அளவுப் படியே, தொடர்ந்து இருக்கும் என நிகழ்ச்சிநிரல் தெரிவிக்கிறது. இது மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும் என்கிற கருத்தை நான் கொண்டுள்ளேன். வட்டி விகிதங்கள் குறைந்துவிட்டன. ரூபாயின் மதிப்பு நிலையானதாகவும், உறுதியானதாகவும் இருக்கிறது. எனவே, இந்த ஏற்பாட்டை, 50 சதவீதம் மானியம், 50 சதவீதம் கடன் என்கிற அளவிலும் வட்டி விகிதம் குறைக்கவுமான கருத்துக்களை நான் உங்கள் முன் வைக்கலாமா?

ஜஸ்வந்த் சிங் அவர்களே, எங்களுக்கு ஏற்பட்டுள்ள, மிகப்பெரிய அளவிலான, நிதி நெருக்கடி நிலையில், பொருளாதார மறுசீரமைப்பு குறித்தும், தங்களுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளேன்.

நாம் வருவாய் நிதிநிலை சீர்திருத்தம் குறித்து அக்கறையுடன் களத்தில் இறங்கி இருப்பதால், இது மிகவும் விரைவில் தீர்க்கப்படும் என்று நான் நம்புகிறேன். சாதாரண காலத் திட்ட உதவியைவிட; இந்த உதவி குறித்த கால நிர்ணயம் இன்னும் சிறப்புடையதாக இருக்க வேண்டும். ஏனெனில் அடிப்படையில் இந்தக் கடன்கள் எல்லாம், இடர்ப்பாட்டுக் காலத்தில் பெறப்பட்டவையாகும்.

நிகழ்ச்சி நிரலில் 4-வது இனம் குறித்து நான் இப்பொழுது பேச விழைகிறேன். பெரும்பாலான மாநிலங்களின், பணத்தட்டுப்பாடு நிலைமை உண்மையில் மிகவும் சிக்கலானதாகவே உள்ளது. இதுதான் நிஜமான உண்மை. கொடுக்கப்பட வேண்டிய கடன் மற்றும் சம்பளம் ஆகியவற்றைத் தவிர, இவைகளால் எந்த செலவும் செய்ய முடியவில்லை. இது ஒரு மோசமான நெருக்கடியாகும். இதனை உடன் தீர்த்து வைக்கும் திட்டம் அவசியம் தேவை. இந்த நெருக்கடியை சமாளிக்கும் வகையில், பெரும்பாலான மாநிலங்கள், 31.3.2002ல் கொடுக்கப்படவேண்டிய பட்டியல்களை திருப்பி அனுப்பி விடுகின்றன. வெளிப்படையான, பணப்பற்றாக்குறை அடிப்படையில் இது இருக்கக் கூடாது என்பதாலேயே, இவ்வாறு செய்ய வேண்டியுள்ளது.

தமிழ்நாட்டின், ஒருங்கிணைந்த நிதிப் பற்றாக்குறையை, தீர்க்கவே, ரூபாய் 3 ஆயிரம் கோடி கேட்டு, மார்ச் 2002ல் பிரதமர் அவர்களுக்கு நான் கடிதம் எழுதியுள்ளேன்.

ஓவர் டிராப்ட் என்கிற கூடுதல் பண எடுப்பை, சராசரியாக பயன்படுத்திக் கொண்டது மற்றும் ஏப்ரல் மாதத்திற்கு பிறகு, முன்பணம், மற்றும் ஓவர் டிராப்ட், செயல்பாடுகளில் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்ட, வழிமுறைகள் மற்றும் அதன் அடிப்படையில் விவரங்கள் திரட்டப்பட்டு, அந்த திரட்டப்பட்ட விவர அடிப்படையில் ஒருங்கிணைந்த தீர்வு ஏற்படுத்திக் கொடுப்பதே சரியான வழி முறையாகும்.

மாநிலங்கள் அமைப்பு ரீதியாக இச்சிக்கலில் தீர்வு பெற இது ஒன்று மட்டுமே தீர்வாகும்.

ஓவர் டிராப்ட் வரைமுறை திட்டம், தற்போது இந்தியன் ரிசர்வ் வங்கி மூலம் மேற்கொள்ளப்படுகிறது. ஏப்ரல் 2003ல் இந்த மேலாய்வை ரிசர்வ் வங்கி மேற்கொள்ள வேண்டும். டிசம்பர் 2002க்குள் இம்மேலாய்வை முடித்து, ஒரு முடிவுக்கு இதனைக் கொண்டுவர வேண்டும் என்று எடுத்துக்கூற விரும்புகிறேன்.

5-வது இனமாக குறிப்பிடப்பட்டுள்ள, நீதித் துறை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பளம் மற்றும் பிற சம்பள பயன்கள் குறித்தானவை மிகவும் உணர்ச்சி சம்பந்தப்பட்ட பிரச்சினையாகும். இந்தச் சுமையை மாநிலங்களால் ஏற்க முடியாமல் உள்ளது. தற்போதுள்ள ஈட்டுத் தொகையை, நடைமுறையில் வழங்குவதில் குறைக்க வேண்டி இருப்பதால், இந்தப் புதிய சுமையை ஏற்க இயலாது. இதில் உள்ள சுணக்கத்தை தீர்க்க மத்திய அரசே இதனை வழி நடத்தி, இந்தப் பிரச்சினையை, உச்சநீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

நிகழ்ச்சி நிரலில் உள்ள கடைசி இனம் குறித்து நான் இப்பொழுது பேச விழைகிறேன். அரசுப் பணியாளர்களின், எண்ணிக்கை குறித்தும், அவர்களின் சம்பளம், பெறும் படிகள் மற்றும் ஓய்வூதிய பணப் பலன்கள் ஆகிய சிக்கலான பிரச்சினையை இது பேசுகிறது. இந்த அமைப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிவு செய்ய வேண்டிய முக்கியமான பிரச்சினையாக, இதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் கருதுகிறேன்.

வளர்ச்சியை உருவாக்கும் பணி குறித்தான வேலைகளுக்கு தேவையான நிதியை தேடிக் கண்டுபிடிப்பது மாநிலங்களுக்கு முன் உள்ள ஒரு குழப்பமான நிலையாகும். தங்களது கைகள் கட்டப்பட்டுள்ளதாக மாநில முதல்வர்கள் கருதுகிறார்கள். இருக்கும் பொது நிதியின் பெரும் பகுதியை அரசு அலுவலர்களுக்கே, பங்கு போட்டு கொடுத்துவிட வேண்டியுள்ளது. போதுமான பொது நிதியை, வளர்ச்சித் திட்டத்தில் முதலீடு செய்ய இயலாமைக்கு, இதுவே அடிப்படைக் காரணமாகும். வருவாயை அதிகரிக்க வைக்கும் எல்லா நிதி ஆதாரங்களும், அரசுப் பணியில் உள்ளவர்களை திருப்திபடுத்தவே பயன்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பொதுத்துறைப் பணியில் ஈடுபட்டிருக்கும் 5 சதம் வேலை செய்பவர்களுக்கே, தரமான வாழ்க்கையை கொடுக்கவும், பாதுகாக்கவும், நிதி அனைத்தும் செலவிடப்பட்டு விடுகிறது. மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் இவர்கள் 2 சதவிகிதத்தினரே. இதனை ஏற்றுக் கொள்ள முடியுமா?

நிதித்துறை சீர்திருத்தத்தில், இந்த வேறுபாட்டை சிறிதும் கண்டுகொள்ளாமல் இருப்பதன் மூலம், எந்த உரிமையும் பெறாமல், ஏழைகளை மேலும் ஏழைகளான நிலையில் அவர்களுக்குரிய பங்கை கொடுக்காமல் இழக்கச் செய்கிறோம்.

ஏழையின் உரிமையை பாதிக்கும் இதற்கு இந்த அவையில் யாராவது ஒத்துப்போவார்களா? என்கிற நியாயமான, தர்மமான கேள்வியை இங்கே நான் எழுப்புகிறேன்.

மத்திய அரசு இதனை எடுத்துக்கொண்டு வழி நடத்தி இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும்.

நிதிநிலை சீர்திருத்தம் என்பது பொது நிதிவளம், எந்த வகையில் பரவலாக்கப்பட வேண்டும் என்பது குறித்து ஆராய்ந்து அனைவரும் ஏற்கும் திட்டத்தை வகுக்க வேண்டும். 2000-2001ஆம் நிதி ஆண்டில் தமிழக அரசு

தன்னுடைய மொத்த வருவாயில் 94 சதவிகித தொகையை சம்பளத்திற்கும், பணி ஓய்வு பணப் பலனுக்கே செலவிட்டுள்ளது.

நிதிநிலை கொள்கை, தமிழ்நாட்டில் கடந்த 1996 மற்றும் 2001ஆம் ஆண்டுகளில் நூலறுந்த பட்டமாக இருந்தது. இந்த நிலை நம்மை கடுமையான ஒரு நெருக்கடி நிலைக்கு தள்ளி விட்டது.

ஓய்வூதிய பணப் பலன்களை அளிப்பதில் உள்ள பொறுப்பு திகைக்க வைக்கிறது.

1997-98க்கும் 2001-2002க்கும் உள்ள கால இடைவெளியில், தமிழக அரசின் ஓய்வூதிய பொறுப்பு மும்மடங்கு அதிகமாகிவிட்டது. இது முற்றிலும் ஏற்புடையதல்ல. அவர்களுக்குரிய பணப்பலன்களை கட்டுப்படுத்த சில நடவடிக்கைகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

ஓய்வூதியச் செலவின் ஓர் ஆண்டு வளர்ச்சி விகிதம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டு, அது 10 சதவிகிதத்திற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். இதனைச் செய்யாவிட்டால், எந்த ஒரு நிதிநிலை சீர்திருத்தத்திற்கும் பொருள் இருக்காது.

சில கடினமான முடிவுகளை நாம் எடுக்க வேண்டும். இக்கடின முடிவுகள் மூலம், மாநிலங்களை உயர் வளர்ச்சிப் பாதையில் செலுத்த வேண்டும். அப்போதுதான் ஏழைகளுக்கு முன்னேற போதிய வாய்ப்புக்களை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

தானியங்கித் தத்துவமாக, அரசுப் பணியாளர்களின் நலன்களுக்காக ஈடு செய்யப்படும் ஒருங்கிணைந்த செலவுத் திட்டம் தான் இதற்குப் பெரும் ஆதார தடையாக உள்ளது. அகவிலைப் படியை பொறுத்த வரையில் குறிப்பாக இது மிகவும் உண்மையாகும்.

சம்பளம் வழங்கப்படுவதற்குள்ள நமது திறமையின் அடிப்படையில்தான் நாம் புதிய நடைமுறைகளை உருவாக்க வேண்டும்.

கடந்த காலத்தில் இதனை முற்றிலும் நாம் கவனிக்கத் தவறிவிட்டோம்.

இடர்ப்பாடு நமக்குள் பங்கிடப்பட வேண்டும்.

ஏழைகளுக்குச் செய்து கொடுக்க வேண்டிய நலப்பணிகளுக்கு உரிய நிதியை உருவாக்கி கொடுக்கத் துன்பப்படும் நிலையில், எந்தத் தடங்கலும் இல்லாமல், ஊதிய உயர்வுத் தொகை ஆண்டுதோறும் தானாக கொடுக்கப்பட வேண்டும் என அரசுப் பணியாளர்கள் எதிர்பார்க்கக் கூடாது.

நாம் எதற்காக மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறோம்? முதல் கட்டமாக, உரிமையுடன், தன் பங்குக்குரிய ஊதிய விகிதம் எப்போதும் வளர்ந்து கொண்டே இருக்கும் பணப்பலனை, அரசுப் பணியாளர்க்கு கொடுத்து உதவி, உத்தரவாதம் செய்வதற்கா? இதனை நாம் வாய்மூடி மவுனமாக ஏற்றுக் கொள்ளவேண்டுமா?

நமது இயலாமையினால் கை பிசைந்து நாம் நிற்க வேண்டுமா? சமூகப் பாதுகாப்பு என்கிற வலை இவர்களுக்காக பிரித்தெறியப்பட வேண்டுமா? ஆரம்பகால பத்தாண்டுகளில், கூடுதலாக கடன் பெறுவதன் மூலம் இந்த சிக்கல் எளிமையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, தீர்க்கப்பட்டது. மாநிலங்களுக்கு இந்த வழியும் தற்போது மூடப்பட்டுவிட்டது. இனியும் இந்தப் பிரச்சினை குறித்து பேசாமல், அதற்குப் பதிலாக, பணியாளர்களின் பணி நியமன செலவுகளை, ஒரு கட்டுக்குள் கொண்டுவர ஒரு தேசிய கருத்தை நாம் உருவாக்க வேண்டும்.

இந்தப் பூனைக்கு யார் மணி கட்டுவது. இந்த மன்றம், இதனைச் செய்யாவிட்டால், பிறகு யார் இதனை செய்வது. பிரதமர் அவர்களே, இது குறித்து நீங்கள்தான் வழி நடத்திச் செல்ல வேண்டும். இப்பொழுதாவது நாம் தனது உரிமைப் பற்றி குரலெழுப்பத் தெரியாத ஏழைகளுக்காக நமது கவனத்தை சிறிதளவாவது செலுத்தக் கூடாதா? இதனை நாம் உறுதியோடும், தெளிவோடும் வெளிப்படுத்த வேண்டும்.


பிரதமர் அவர்களே, இன்றைய முதலும், முடிவுமான பிரச்சினையே, நாம் எவ்வாறு ஓய்வூதியம், சம்பளம், பல்வேறு அகவிலைப் போன்ற படிகள், அடங்கிய அரசுப் பணியாளர் செலவினத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதே. மென்மையான வழியில் இதனை நாம் செயல்படுத்த வேண்டும். இப்படிப்பட்ட பணியாளர் தனித்த திட்டத்திற்கு நிதி உதவிட மாநிலப் புனரமைப்பு நிதி அமைப்பை நாம் ஏன் உருவாக்கிக் கொள்ளக் கூடாது?

ஓய்வூதியம், சம்பளம், அகவிலைப்படிகள் போன்ற பிற படிகளைக் கட்டுப்படுத்தும், ஆதார அம்சங்களில் நாம் ஒருமித்த கருத்தை எட்டவில்லை என்றால் இது ஒரு துன்பியல் (துயரம் தரும்) வளர்ச்சியாகவே இருக்கும்.

பிரதமர் அவர்களே, மத்திய அரசு இது குறித்து மேலும் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, நான் கேட்டுக் கொள்கிறேன்.

*– டில்லியில் 18–10–2002 அன்று*
*மாண்புமிகு **பாரதப் பிரதமர்** தலைமையில்*
*நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில்*
*மாண்புமிகு தமிழக முதலமைச்சர்*
*செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்*
*ஆற்றிய உரை.*






☐ அறிஞர் **தனிநாயக அடிகள்**

**தெ**ன் நாட்டு மக்கள் மலர்களையும் மாலைகளையும் மிகுதியாய் விருப்புற்றுத் தம் வாழ்க்கைக்குப் பயன்படுத்தி வந்தனர் எனும் உண்மையைப் பிற நாட்டார் பலர் குறித்துள்ளனர். அப்துல் இரசாக் விசய நகரத்தைப் பற்றி விரித்துரைக்கும் பொழுது, அந்நகரின் மக்கள் மலர்களைப் பெரிதும் விரும்புகின்றனர் என்றும், அந் நகரின் பல இடங்களில் பூக்கடைகள் பரவியிருக்கின்றன என்றும் குறிப்பிட்டுள்ளார். காளிதாசரின் இயற்கை ஈடுபாட்டையும், அவர்தம் நாடக பாத்திரங்கள் மலர்களையும் இலைகளையும் பயன்படுத்தும் முறையையும், அவர் உவமைகளைக் குறிப்பிடும் திறனையும் நோக்குமிடத்து, அன்னார் ஐந்திணை இலக்கியத்தையும் தமிழ்ப் புலவரையும் அறிந்திருப்பரோ எனும் கடா எழுகின்றது. மேலும், சாகுந்தல நாடகத்தின் நான்காவது காட்சியில், சகுந்தலை தன்னைத் தன் தந்தையிடமிருந்து பிரிக்கும் செயல் மலையாள மலை தொடரின் சந்தன மரத்தில் படர்ந்துள்ள கொடியை அம்மரத்திலிருந்து பிரிக்கும் செயல் போன்றது எனக் கூறுதலால், அவர் தென் நாட்டினை நன்கு அறிந்திருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது. ஆயினும், காளிதாசரது இயற்கையைப் பற்றிய அடிப்படைக் கருத்து, தமிழ்ப் புலவரது கருத்தினும் வேறுபாடுடையது. அவரது சகுந்தலையுடன் மரங்களும் செடிகளும் பேசுவன போல், தமிழ்த் தலைவியருடன் அவை பேசுவனவல்ல. அன்றியும் "மேகதூதம்" போன்ற ஆற்றுப் படைகளைச் சங்கப் புலவர் இயற்றினார் அல்லர். "இருது சம்ஹாரா"வில் பருவங்களைக் காதல் வாழ்க்கைக்குப் பின்னிலைக் களனாகக் காளிதாசர் கூறும் முறை, அவர் சங்கப் புலவரின் கோட்பாடுகளுக்கு நெடுந்தொலைவில் இருப்பவர் என்று காட்டுகின்றது.

தென் நாட்டில் மட்டும் அன்று; மேற்றிசையிலும், நாகரிக மக்கள் ஆகிய கிரேக்கர் உரோமர் முதலியோர், தம் வழிபாட்டு முறையிலும், தம்மை அணி செய்யும் வகையிலும், மலர்களைப் பெரிதும் பயன்படுத்தினர். வேள்விக்குரிய காளைகளுக்கும், பிற விலங்குகளுக்கும், மாலை இட்டே வேள்வி நடத்தினர். விருந்தினர் கண்ணி சூடியே விருந்துண்டனர். மரதன் பந்தய ஓட்டத்தில் வெற்றி பெற்றதற்கு அடையாளமாக இலைகளால் ஆக்கிய முடி ஒன்றையே கிரேக்கர் சூட்டினர். இன்றும், மேல் நாடுகளில், மலர்கள் மீது அன்பு பூண்டு, அவற்றை மிகுதியாய்ப் போற்றி, அழகுற வழங்கி வருகின்றனர். எனினும், சங்க காலத்தில், தமிழ் மக்கள் அவற்றை வாழ்க்கையின் பல துறைகளுக்குப் பயன்படுத்தியது போல், வேறு மக்கள் எவரும் பயன்படுத்தினர் என யாம் அறிந்திலேம். பொதுவாகப் பசிபிக் தீவுகளிலும், சிறப்பாக ஹாவாய்த் தீவுகளிலும், பொலினீசிய மக்கள், தமிழ் மக்களைப் போல், கோதையும், மாலையும், தாரும், கண்ணியும், தழையுடையும் அணியும் பழக்கம் உடையவராயிருக்கின்றனர். அப்பழக்க வழக்கங்களால், அன்னார் இந்தியாவின் தென் நாட்டிலிருந்து ஆங்குச் சென்று குடியேறிய மக்கள் ஆவார் எனக் கருதுதற்குப் பெரிதும் இடம் உண்டாகின்றது.

## ( 1 )



உலக இலக்கியங்களைப் பயில்பவர், வெர்ஜில், உவோர்ட்ஸ்-உவொர்த் போன்ற மேல் நாட்டுப் புலவரின் இயற்கை ஈடுபாட்டைப் பெரிதும் போற்றுகின்றனர். பேராசிரியர் இரைடர் (Ryder) என்பார், காளிதாசரின் மேகதூதத்தைப் பற்றி ஆராயும் பொழுது, அச்செய்யுளில் தோன்றும் இயற்கை ஈடுபாட்டின் தன்மை பிற இலக்கியங்கள் எவற்றிலும் இல்லை என வியந்து வற்புறுத்துகின்றார். அன்னார் கபில பரணர் முதலானோர் இலக்கியங்களைக் கண்ணுற்றிருப் பரேல், அதனினும் சால வியத்தற்குப் பல காரணங்களைக் கண்டிருப்பர். ஏனெனின், தமிழ் மக்கள், வரலாற்று முறைமை எட்டாத காலந்தொட்டு நிலத்தை ஐந்திணையாகப் பிரித்து, அதன் இயற்கையே பண்பாட்டின் அடிப்படை என உணர்ந்திருந்தனர். மக்கள் இயல் வல்லுநர் ஆகிய இலெப்லே (Leplay) என்னும் பெரியார் கூறிய இவ்வுண்மையைத் தமிழ் மக்கள் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே இனிதுணர்ந்தார் ஆவார். மலை நிலத்திலும், கடல் நிலத்திலும், அவ்வச் சூழ்நிலைக்கு ஏற்ற பண்பாடே இயற்கையாய் அமையும் எனவும், ஆற்றங்கரையை அடுத்துள்ள கழனி நிலங்களில் வேறு பண்பாடு தோன்றும் எனவும் உணர்ந்து, நிலத்தினை ஐந்திணையாகப் பிரித்தனர்.

அவ்வத் திணைகட்கு அவர் இட்ட பெயர்கள் அவரது இயற்கை அன்பினை நன்றாகத் தெளிவுறுத்துகின்றன. நாகரிகமற்ற மக்கள் அவ்வந் நிலங்களில் தோன்றும் பயிர் அல்லது உணவுப் பொருளின் பெயரைஅத்திணைகளுக்குக் கொடுத்திருப்பர். அவ்வாறு செய்தார் அல்லர் பண்புடைப் பண்டைத் தமிழ் மக்கள். மலை நிலத்திற்கும் மலை சார்ந்த நிலத்திற்கும், அவர் கொடுத்த பெயர் குறிஞ்சி. குறிஞ்சி (Strobilanthus Kunthianus) என்பது மலை நாட்டில் பன்னீராண்டுகட்கு ஒருமுறை பூக்கும் ஒரு செடி. நீலகிரி பழனி மலைகளில் அதனைக் காணலாம். அச்செடி பூக்கும் காலத்தில், மலைச்சாரல் எல்லாம் ஒரே நீல நிறமாய் மிக்க அழகுடன் விளங்கும். அப்பூக்களில் தேனும் மிகுதியாகக் கிடைக்கும். அவ்வாண்டில் கிடைக்கும் தேனைப் பெருந் தேன் என்பர். குறுந்தொகை மூன்றாம் பாட்டில்,

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினு மாரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப்பூக் கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

- எனத் தேவகுலத்தார் எனும் புலவர் கூறுதல் காண்க. தொல்காப்பியர் காலத்திற்குப் பன்னூறாண்டுகள் முற்படத் தமிழ் மக்கள் மலை நாட்டிற்குக் குறிஞ்சி நிலம் எனப் பெயரிட்டனர். அதற்கு எத்துணைக் காலத்திற்கு முன்னர், அக் குறிஞ்சிச் செடி மலை நாட்டில் மிக்க சிறப்புடையது எனக் கருதி அவர் ஆராய்ந்திருத்தல் வேண்டும்? அவர் நுண்ணறிவு தான் என்னை! காந்தள், வேங்கை, ஆரம், அகில் என்ற இவற்றில் ஒன்றின்



பெயரால் அதனைக் கூறியிருத்தல் கூடாதோ? குறிஞ்சிப் பூவே சிறப்புப் பூவாதலால், குறிஞ்சியென மலையையும் மலைச் சார்ந்த இடத்தையும் குறித்தனர்.

அவ்வாறே, பிற நிலங்கட்கும் முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பெயர் வைத்ததற்கும் சிறந்த காரணங்கள் உள்ளன. பாலை மரம் (Wrightia tinctoria) இன்று தென் இந்தியாவில் காண்டல் அரிது. ஈழ நாட்டின் காடுகளில் மிகுதியாக வளர்கின்றது. கோடைப் பருவத்தில் மாவும் மக்களும் விரும்பி உண்ணும் பழங்களை நல்குகின்றது. பழைய உரைகாரருள், உரையாசிரியர் எனச் சிறப்புப் பெயர் பெற்ற இளம்பூரணர் ஒருவரே பாலை மரத்தைப் பற்றிக் கூறியுள்ளார்: "பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற் காலம் பற்றி வருதலின், அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பதாம் பாலை என்பதொரு மரமுண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறியிட்டார்" என்பது அவர் கூற்று. பாலை மரத்தின் காய்கள் பற்றுக் குறட்டின் வாய் போன்ற வடிவின என்கின்றார் புலவர் ஒருவர், "கொடிறு போல் காய வாலிணர்ப் பாலை" என்பது நற்றிணை. (107)

முல்லை நிலத்திற்கு முல்லை மலர் அடையாளமாக இருப்பதுடன், அது கற்பு எனும் பண்பினைக் குறித்ததற்குப் பெரிதும் பொருந்திய பூவாகவும் விளங்குகின்றது. "முல்லை சான்ற கற்பினள்" எனவும், "முல்லை நாறும் கதுப்பினள்" எனவும், பன்முறை வருதல் காண்க. மேல் நாட்டினர் இலிலி மலரைப் போற்றியது போல், முல்லையைப் போற்றினர் தமிழர். வெண்மையான நிறமும், சிறப்பான மணமும் உடைய பூவினைக் கற்பிற்கு அறிகுறியாகத் தமிழர் நிறுவியது வியப்பன்று. தமிழ் மக்கள், ஏனைய பூக்களிலும் முல்லையைப் பெரிதும் விரும்பி, அதனைத் தமக்கும், தம் இசைக் கருவிகட்கும், வழிபாட்டிற்கும் பயன்படுத்தினர் என்பதற்குப் பல சங்கப் பாடல்கள் சான்றாவன.

## ( 2 )

தமிழ்ப் புலவர் இயற்கையை நன்றாகப் பயின்ற பின்னரே செய்யுள் செய்யத் தொடங்கினர். ஐந்திணை நிலம், பெரும் பொழுது, சிறு பொழுது என இயற்கை வனப்பு, அவர் அகப் பாடல்கட்கு இன்றியமையாத பின்னிலைக் களனாக விதிக்கப் பெற்றது. பிற இலக்கியங்களில் இத்தகைய கோட்பாடுகள் இருக்கக் காண்கிலேம்.

சங்கப் பாடல்களில் மட்டுமே அன்று; சிறிய வரிப் பாடல்களிலும், தமிழ்ப் புலவர்களின் இத்தகைய ஈடுபாடு வெளிப்படுகின்றது. சிலப்பதிகாரக் கானல் வரியில்,

"பூவார்சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசை
பாடக்
காமர்மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர்மாலை அருகசைய நடந்தெல்லாம்
நின்கணவன்
நாமவேலின் திறம்கண்டே அறிந்தேன்
வாழிகாவேரி"

- என இசைக்குமிடத்து, காவிரியாறு பூவணிந்து, பூமாலையும் தழையுடையும் புனைந்து செல்லும் காட்சியை, சிறிய எளிய இனிய சொற்களில் பேரழகுடன் ஓவியமாகத் தீட்டியுள்ளார் இளங்கோவடிகள். அப்புலவர் தாமே, வையை யாற்றையும், அத்துணைத் திறமையும் அழகும் திகழப் பாடியுள்ளார். வையை எனும் நங்கை கண்ணகிக்குப் பின் நிகழும் தீங்கினை முன் அறிவாள் போல், பூ வாடையால் தலையை மூடிக் கொண்டு, கண்ணீர் சொரிந்தாள் எனக் காட்டுகின்றார்.

"கரைநின் றுதிர்த்த கவிர்இதழ்ச் செவ்வாய்
அருவி முல்லை அணிநகை யாட்டி
விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கயல் நெடுங்கண்
விரைமலர் நீங்கா அவிர் அறற் கூந்தல்
உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி
தையற் குறுவது தானறிந் தனள்போல்
புண்ணிய நறுமலர் ஆடை போர்த்துக்
கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
புனல்யா றன்றிது பூம்புனல் யாறென"


(புறஞ்சேரி: 164-174)

- என அவர் அவ் யாற்றினை உருவகப் படுத்தி, அழகுறப் புனைந்து, புகழ்படப் போற்றிக் கூறியிருத்தல் நினைக்குந் தோறும் இன்பம் பயக்கின்றது. இம் மலராற்றின் வரலாற்றை இனிது ஆராய்வார் பரிபாடல் எனும் தொகை நூலைப் பார்க்க கரையிலுள்ள மரங்கட்கு

வையை ஆருயிர் கொடுத்து வளர்ப்பதால், அம்மரங்கள் எதிர் விருந்தாக மலர்களைச் சொரிந்தன எனப் புலவர் ஒருவர் புகல்கின்றார். தமிழ் நாட்டுக் கடலே "இறவொடு வந்து கோதை யொடு பெயர்கின்றது'' என்கின்றார் வேறொரு புலவர்.

## ( 3 )

ஒவ்வொரு திணையின் கருப் பொருளையும் தமிழ்ப் புலவர் நன்றாய் ஆராய்ந்தால், மிகவும் வியக்கத்தக்க உவமைகளைக் கூறியிருக்கின்றனர். தமிழ்நாட்டின் இயற்கை வனப்பையும், நுண்ணிய பொருட்களையும் ஆராய்வார், புகை வண்டி, விசை வண்டி, மிதி வண்டி, இவற்றில் செல்லுங்கால், அவற்றைக் காண்டல் அரிது. அவர் காவிரி யாற்றின் கழனிகளுடே நடந்து செல்லுதல் வேண்டும். மருத மரங்கள் கரைகளில் நெருங்கி அடர்ந்து நிழலிட்டு, தமது கொம்புகளையும் கிளைகளையும் தெளிந்த நீருக்கு மேலே தாழ்த்தி அழகு செய்யும் குளங்களில், நீராடிக் களித்தல் வேண்டும். "மந்தியும் அறியா மரம் பயில் அடுக்கம் சென்று, வானுற வோங்கி வளம்பெற வளர்ந்திருக்கும் பெரிய மரங்களையும், அவற்றிற்கு அடியில் எண்ணிறந்த பல் வகைச் சிறிய மரங்கள் செறிந்து விரிந்த காடுகளையும், அவற்றின் கீழே தரையில் ஒன்றன்மேலொன்றாகக் கிடந்து, படர்ந்து, தழைத்து, தம்மிடையே எவரும்புக வொட்டாத கொடிகளையும், செடிகளையும், புதர்களையும், அச்சம் என்பது சிறிதும் அறியாது ஆங்காங்கு உலாவித் திரியும் அழகிய வன விலங்குகளையும், மரக்கிளைகளில் அமர்ந்து மகிழ்ந்து பாடும் வனப்பு மிக்க பறவைகளையும், குன்றுகளின் உச்சியிலிருந்து பளிங்குபோல் தெளிந்தோடும் அருவிகளையும், ஓடைகளையும், நீர் நிலைகளையும் கண்ணுற்றுக் குறிஞ்சி நிலத்தின் மாண்பினை உணர்தல் வேண்டும். முல்லை நெய்தல் முதலான நிலங்களின் இயற்கை வளங்களையும், வனப்புகளையும், ஆங்குச் சென்று அந்நில மக்களுடன் உறைந்து, கண்கூடாகக் கண்டால் அன்றி வேறு வகையாய் அவற்றினை உள்ளவாறு அறிந்து கொள்ளல் அமையாது.



தமிழ்ப் புலவரின் உவமைகள் பல வியக்கத் தக்கன. வேப்பம் பூவை நுட்பமாய்ப் பார்த்த புலவர், அது இறால் மீன் கண் போல் இருக்கின்றது என்றனர். வேறொருவர், கலைமான் "இரும்பு திரித் தன்ன மாயிரு மருப்பு'' உடையது என்றார். இன்னொருவர், பாடினியின் சிவந்த மெல்லிய உள்ளங் கால், வேட்டைக்குச் சென்று நீர் வேட்கை மிக்கு இளைப்புற்ற நாயின் நாவினை ஒக்கும் எனக் கூறினர். பின்னொருவர், வாகைப் பூவை மயிலின் சிகைக்கு உவமித்தார். மற்றொருவர், நெல்லிக்கனி முயலின் கண்ணிற்கு நிகர் என நிகழ்த்தினர், பிறர் ஒருவர், நாரையானது "பழம்படு பனையின் கிழங்கு பிளந் தன்ன பவழக் கூர்வாய்'' உடையது என உரைத்துள்ளார். காந்தள் மலரைக் கண்ட புலவர் களிப்புறும் வகைதான் என்னை? காந்தள் இதழ்கள் குவிந்திருப்பது, இறை வழிபாடு செய்யும் இனிய மகளிரின் குவிந்த கைபோல் கவின் செய்கின்றது என்றார் ஒருவர். மாலைப் பொழுது, அதன் தோற்றம் இயற்கை மகள் ஏற்றும் விளக்குப் போல் விளங்குகின்றது என விளம்பினர் மற்றவர். முறுகியிருக்கும் அதன் இதழ்களைக் கண்டவர் உடைந்த அரக்கு வளைகளை அவற்றிற்கு ஒப்புவமை கூறினர். அதன் இலைகளை உற்று நோக்கியவர், கள்ளை மிகுதியாக உண்டு மயங்கித் தடுமாறித் திரியும் களியர்க்கு அவற்றினை ஒப்பிடுகின்றார். இங்ஙனம், மலர்களையும், மரங்களையும், செடிகளையும், கொடிகளையும், எண்ணிறந்த இயற்கைப் பொருட்கள் பிறவற்றையும் தத்தம் மதிநுட்பத்தினால் கையாண்டு, அவர் கூறியுள்ள உவமைத் திறன்கள் மிகச் சிறப்புடையன. அன்னார் யாப்பியல் நன்குணர்ந்த கவிஞர், உளநூல் கற்று வல்ல அறிஞர்; செடி நூல் வல்லுநராகவும் விளங்கினர்.

## ( 4 )

தமிழர் தம் வழிபாட்டு முறைக்கு மலர்களையும், மாலைகளையும், இயற்கை வனப்பையும், பயன்படுத்தி வந்தனர். மலர்களால் வழிபடும் முறை திராவிடச் சிறப்பு முறை எனக் கூறுவாருமுளர். வைதிக வழிபாட்டில் மலர் வழிபாடு இல்லை என்பதும், ஆரியர் திராவிடரிடமிருந்தே மலர் வழிபாட்டு முறையைக் கற்றனர் என்பதும், அவர் துணிபு. "பூஜை'' என்னும் வட சொல், "பூ செய்'' எனும் தமிழ்ச் சொல்லின் திரிபு என்பாருமுளர். அதற்குத் தக்க சான்றுகளும் உள. பூ வழிபாடு வேத காலத்தில் ஆரியர்கண் இன்மையாலும், "பூஜை'' எனும் அடிச்சொல் ஆரியத்தில் தவிரப் பிற இந்தோ-ஐரோப்பிய மொழிகளில் காணாமையாலும், "புஷ்ப கர்ம பூஜை'' திராவிட மக்களின் தனிப் பண்பாட்டிற்கு இசைந்தது என நம்புதற்கு இடமுண்டு.

முருகன் வழிபாடு இயற்கையுடன் கலந்த வழிபாடு. அவன் விரும்பும் இடங்கள் யாவை எனின், இயற்கை வனப்புத் தோன்றும் இடங்கள் அனைத்துமே யாம்.

> **"காடும் காவும் கவின்பெறு துருத்தியும்**
> **யாறும் குளனும் வேறுபல் வைப்பும்**
> **சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்**
> **மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்"**

எனத் திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் கூறுகின்றார். அவனை வழிபடுவோர் சிவந்த மலர்கள் கொண்டே வழிபட்டு வந்தனர். கடம்பின் மலர் மாலை அணிபவன் அவன். வெட்சி மாலையும் விரும்புவான். அவனை வழிபடும் ஆடவரும் மகளிரும், அவனைப் போல், சிவந்த மலர்களை அணிந்தே வருவர். இவ்வாறே, முல்லை நிலத்தில், திருமாலை முல்லை மலர் கொண்டு வழிபட்டு வந்தனர். நிலத்தின் தெய்வத்தை வழிபடுதற்கு, நிலத்தில் தோன்றிய மரம் செடிகளின் மலர்களையும், தழைகளையும், கையாண்டனர்.

தமிழ்நாடு வெப்பம் உடையது. நிழலை நம் மக்கள் விரும்புவது இயற்கையே. ஆதலால், நம் புலவர் குளிரையும் தண்மையையும் குறிக்கும் அடைமொழிகளைப் பெரிதும் கையாளுகின்றனர். வெப்பத்தைப் போருக்கும் துன்பத்திற்கும் உரிய பண்பு எனக் கருதுகின்றனர். புலவர் ஒருவர் தம் புரவலரைப் போற்றுமிடத்து, "மாரி அன்ன வண்மையிற் சொரிந்து, வேனில் அன்ன என் வெப்பம் நீங்க எனக் கூறுகின்றார். மற்றுமொருவர், 'அடுப்பில் சோறு அடும் வெப்பமும் ஞாயிற்றின் வெப்பமுமே அன்றி, வேறு வெப்பம் உன் நாடு அறியாது' என்கின்றார்.

நிழல் என்பார் அதனை நன்கு ஆய்ந்து, அதன் திறங்களை வகுத்துள்ளனர். "கொழு நிழல்'', "புள்ளி நிழல்'', "புகர் நிழல்'', "தண் நிழல்'', "மென் நிழல்'', "வரி நிழல்'', "இன் நிழல்'', "மா நிழல்'' என்றும், வெய்யிலில் வருந்திய மக்கள் நிழலின்அருமையைக் கண்டனர். "கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழல்'' என்றும், "கயம் கண்டன்ன பெருமரக் குழாம்'' என்றும், நிழலைக் குளிர்ந்த நீருக்கு ஒப்புவமை கூறுதலால், நிழலைப் பற்றிய உணர்ச்சிகளை அவர் மிக்குணர்ந்தவர் என்பது போதரும்.

## ( 5 )

மேலும், மலர்கட்கும், மரங்கட்கும், தமிழில் உள்ள பெயர்கள் இன்னோசை உடையவை. வெர்ஜில் எனும் இலத்தீன் புலவர், மலர்ச் செடிகளின் பெயரைக் கொண்டு, இன்னோசை படைத்த் பல அடிகள் யாத்துள்ளனர் என்ப. தமிழ்ப் புலவரும், தமிழ்ப் பெயர்களைக் கொண்டு, செவிக்கினிய பல அடிகள் யாத்துள்ளார்.

> **"மெல்லிணர்க் கொன்றையும் மென்மலர்க் காயாவும்**
> **புல்லிலை வெட்சியும் பிடவும் தளவும்**
> **குல்லையும் குருந்தும் கோடலும் பரங்கரும்**
> **கல்லவும் கடத்தவும் கமழ்கண்ணி மலைந்தனர்"**

என்பது கலித்தொகைப் பாட்டு. இப்பாட்டின் அடிகள் எத்துணை ஓசை இனிமை உடையன என்பதைக் கலிக்குரிய துள்ளல் ஓசையுடன் படித்துப் பார்க்க. கபிலர், குறிஞ்சிப் பாட்டில், தொண்ணூற்றொன்பது பூக்களின் பெயர்களை வைத்து, முப்பத்தைந்து அடிகள்

யாத்துள்ளார். அவற்றை விரைவின்றி மெல்லப் படிக்கும் பொழுது, தமிழ் மக்கள் மலர்கட்கும், மரங்கட்கும் இட்ட பெயர்களை, எத்துணை அழகு வாய்ந்தன என்பது இனிது விளங்கும். சிறு பாணாற்றுப் படையில் வரும் சில அடிகள் ஈண்டுச் சிறப்பாகக் குறிக்கற் பாலன:-


"அலைநீர்த் தாழை அன்னம் பூப்பவும்
தலைநாட் செருந்தி தமனிய மருட்டவும்
கடுஞ்சூல் முண்டகம் கதிர்மணி கழாஅலவும்
நெடுங்காற் புன்னை நித்திலம் வைப்பவும்"

## ( 6 )

தமிழ்ப் புலவர், தம் பாடல்களில், தலைவர் தலைவியர் மலர்களை மிகவும் விரும்பினர் எனக் காட்டியுள்ளார். தலைவன் தலைவிக்குக் கையுறையாகக் கொடுப்பது மலரேயாம். தலைவி தன் தோழியருடன் மலர் கொய்யும் தொழிலில் பொழுது போக்குவாள். தன் இல்லத்தில் அயலைச் செடியை வளர்ப்பாள். அதற்கு நாடோறும் நீர் வார்த்து மிகவும் பேணி வருவாள். இவ்வாறு தலைவர் தலைவியர் ஈடுபாடு மக்களின் ஈடுபாடாய் இருந்தது.

தமிழ்ச் சிறுவர் தாம் பிறந்த நாள் தொடங்கி மலர்களை விரும்பி வந்தனர். போர் வீரன் மனைவி ஆண் மகவைப் பெற்றதும், அவள் கணவன் போர்க்குரிய மாலைகளைச் சூடித் தன் குழந்தைக்கு முதற் காட்சி அளிப்பாள். இக் காலம் போல் அக் காலமும், அன்னையர் தம் சிறுவர்க்குச் சிறு மலர்களை முடியில் மிலைச்சுவது வழக்கமாயிருந்தது. சிறுவர் பூக்களையும், பழங்களையும், விதைகளையும் வைத்து விளையாடினர். ஆடைகளுடன் மாலைகளும் அணிந்தனர். தலையில் அணியும் மாலை கண்ணி எனப் பெயர் பெற்றது. காதிலும் சிறு மாலைகளைத் தொங்க விட்டனர். கழுத்தில் ஆடவர் அணியும் மாலை தார் என்றும், பெண்டிர் அணிவது கோதை யென்றும் பெயர் பெற்றன. மகளிர் தழைகளால் தொடுத்த தழை யுடைகளை அணிந்தனர். இம் மாலைகளும் தழை யுடைகளும், ஒரே வகைப் பூவினாலும், ஒரே வகைத் தழையினாலும் செய்யப் பெற்றன. சில வேளைகளில், பல வகைப் பூக்களையும், தழைகளையும், உரிய முறையே விரவி, மாலைகளும் உடைகளும் செய்தனர்.

தமிழர் தம் இல்லங்களை இயற்கை வனப்பு மிக்க இடங்களில் நிறுவினர். தம் நகரங்களில் பூம் பொழில்களையும், தோட்டங்களையும், இள மரக் காவுகளையும், இனிய சோலைகளையும் நிறுவினர். இல்லங்களின் முன்னே அழகிய பந்தர்கள் அமைத்து வைத்தனர். இறையனார் அகப்பொருளுரையில் அழகுறக் கூறப் பெற்றுள்ள இல்லமும் பொழிலும், அக்காலத்து வனப்பினை ஒருவாறு காட்டுகின்றன. களவொழுக்கம் நிகழும் இடங்கள் எல்லாம் இயற்கை வனப்பு வாய்ந்த இடங்களாகவே தோன்றுகின்றன. சங்கச் செய்யுட்களில், தலைவி தன் தோழியருடன் வேங்கை மலர் கொய்து விளையாடுமிடத்துத் தலைவன் எதிர்ப்படும் வழக்கம்





கூறப் பெற்றுள்ளது. வேங்கை மலர்கள் புலியின் நிறத்தை ஒப்பன. எனவே, 'புலி, புலி' எனப் பூச லிடின், வேங்கை தன் கிளைகளைத் தாழ்த்தி, மலர்களைக் கொடுக்கும் என்பது சிறுவர் நம்பிக்கை. வேங்கை மலர்கள் குறிஞ்சி நிலத்திற்குரிய அழகிய மலர்கள். அது பூக்கும் பருவம் திருமணம் நிகழ்த்துதற்குரிய பருவம் எனக் கருதப் பெற்றது. இயற்கையுடன் அளவளாவிய தமிழ் மக்கள் வேங்கை மரத்தின் நறு நிழயில் திருமணங்களை நிகழ்த்தி வந்தனர் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. வேங்கை பூப்பின் வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிந்த தலைவர் தம் நாடு மீண்டு, தம்மை மணந்து கொள்வர் எனத் தலைவியர் எதிர் நோக்கியிருப்பர். குறுந்தொகைப் பாட்டு ஒன்றில், தலைவி ஒருத்தி வேங்கை பூத்தது கண்டதும், தன்னை அறியாமலே கண்ணீர் சொரிந்தனள் எனப் புலவர் கூறுகின்றார். வேங்கை பூத்தும், தலைவன் வாராமையே அதற்குக் காரணம்.

வேங்கை மலர்களைத் தலைவர் கையுறையாகத் தம் தலைவியர்க்கு நல்கினார். தமக்குள்ளே அம் மலர் மாலைகளை மாற்றிக் கொண்டனர். காதலன் தன் காதலிக்குத் தழையுடையைக் கையுறையாகக் கொடுக்கும் வழக்கம் இருந்தது. காதலி தன் தலைவன் நாட்டு மலைகளையும், அம் மலைகள் மீது தவழும் முகில்களையும், மலையிலிருந்து இழியும் அருவியையும், அருவி நீரில் மிதந்து வரும் செடி கொடி மலர்களையும் காதலிப்பாள். தலைவி ஒருத்தி, தன் தலைவன் மலையில், மாலைப் பொழுதே மழை பொழிவதைக் கண்ணுற்றாள். அடுத்த நாட் காலையில், அருவி வெள்ளத்தில், காந்தட் செடி ஒன்று கிழங்குடன் மிதந்து வருதல் கண்டாள். அச் செடியை மிக்க ஆர்வத்துடன் எடுத்து வைத்து முயங்கினாள். அவ் வெப்பத்தினால் இலைகள் வாடின. ஆயினும் அச் செடியிலுள்ள கிழங்கைத் தன் முற்றத்தில் நட்டு, மிகக் கருத்துடன் நீர் வார்த்து வளர்த்து வந்தாள். (குறுந்தொகை:361)

திருமணம் நிகழும் பொழுது, தமிழ் மக்கள், மணப் பெண் மீது மலர்களைத் தூவி வாழ்த்தினர். தம் ஊர்க்குப் புதிதாய் வந்த விருந்தினர்க்கு, அவ்வூர் மக்கள் மலர் கொய்து கொடுத்து வரவேற்பர். புலவரும், கூத்தரும், பாணரும், அரசர்பால் செல்லும் பொழுது, அவர்கட்குப் பரிசிலாக நாடும், ஊரும், களிறும் நல்குவதுடன், பொன்னால் செய்த தாமரைப் பூவினை அளிப்பதும் அவர் வழக்கம். சில வேளைகளில், வெள்ளி நாரினால் கட்டிய பொற் பூங்கொத்து நல்குவர். இசை வாணர் யாழ் முதலாய இசைக் கருவிகளுக்கு மலர்மாலை சூட்டி அணி செய்தனர்.

## ( 7 )

அக வொழுக்கத்திற்கு மாலைகளைப் பயன் படுத்தியவாறே, தமிழ் மக்கள் புற வொழுக்கத்திற்கும் அவற்றினைப் பயன்படுத்தினர். போரின் ஒவ்வொரு நிலைக்கும் ஒவ்வொரு பூ அடையாளம் ஆகும். ஆனிரைகளைக் கவர்ந்து கொண்டு வருவதற்குச் செல்லும் வீரர், கொத்துக் கொத்தான வெட்சி மலர் மாலைகளை அணிந்து சென்றனர். பகைவர் நாட்டின் மீது படையெடுத்துச் செல்வோர் வஞ்சிமாலைஅணிந்தனர். கோட்டைகளை, முற்றுகையிடுவோர் உழிஞை மாலை சூடினர். கடும்போர் நிகழ்த்துமிடத்துத் தும்பை மாலை அணிவர். வெற்றி பெற்றோர் வாகை மாலை புனைந்து, அவ்வெற்றியைக் கொண்டாடுவர். ஆனிரை மீட்டற்குச் செல்வோர் கரந்தை மாலை சூடுதலும், கோட்டையைப் பகைவர்க்கு எதிராக நின்று காக்கும் வீரர் நொச்சி மாலை அணிதலும், நிலையில்லாத உடம்பினை நீத்து, நிலையான புகழை நாட்ட விரும்பியோர் காஞ்சி மாலை பூண்டு போர் புரிதலும், பெரு வழக்காக இருந்தது.

தமிழ் மக்கள், அகவொழுக்கத்திற்கு மலர்களையும், மாலைகளையும் பயன்படுத்தினர் என்பது அத்துணை வியப்பன்று. அவற்றைப் புறவொழுக்கத்திற்கு எவ்வாறு பயன்படுத்தினர் என்பதுதான் வியப்பு. இது ``Uniform" போன்றதென்பது போப்பையர் கருத்து. மலர்களாலும் மாலைகளாலும், வீரர் மகிழ்ச்சியும் ஊக்கமும் அடைந்திருப்பர் எனக் கருத இடமுளது. எனினும், போரிலே தானும் அவற்றை வழங்கி வந்த செய்கை, தமிழ் மக்கள் பண்பாட்டின் உயர்ந்த சிறப்பிற்கு என்றும் குன்றாச் சான்றாய் விளங்குகின்றது. வீரர் மலர் மாலை அணிந்து செல்லும் காட்சியின் அழகைப் புலவர் பலவாறு புனைந்து புகழ்வர். வெட்சி மாலை புனைந்து செல்லும் வீரர் "செவ்வானம் செல்வது போல் செல்கின்றார்" என்றார் புலவர் ஒருவர். மதுரையிலிருந்து திருப்பரங் குன்றத்திற்குத் திருச் செலவாகச் செல்லும் மக்கள், மலர்களையும் மாலைகளையும் சூடிக்கொண்டு



சென்றமையால், தெரு அனைத்தும் ஒரே மாலை இட்டது போல் தோன்றியது என ஒருவர் குறிப்பிடுகின்றார்.

மேல் நாடுகளில், உரோசா மலர், இலிலி மலர், எருக்கிலை மலர், அரசர்க்கும் அரசர் மரபினர்க்கும் அடையாளப் பூக்களாக வழங்கியுள்ளன. தமிழ் மக்கட்கும், தமிழ் அரசர்க்கும், அடையாளப் பூக்கள் இருந்தன. சேர மன்னர்க்குப் பனம் பூவும், சோழ மன்னர்க்கு ஆத்திப் பூவும், பாண்டிய மன்னர்க்கு வேப்பம் பூவும் அடையாளம். போருக்குச் செல்லும் வீரர் போர்க்குரிய மாலைகளை அணிந்தனர். போர் நடத்தும் மன்னர் தம் அடையாளப் பூமாலைகளுடன் போர்மாலைகளும் பூண்டனர். நெடுநல் வாடையில், பாண்டியன் நெடுஞ்செழியன், போரிற் புண்பட்டுப் பாசறையில் தங்கியிருக்கும் தன் படை வீரர்களைப் பார்க்கச் சென்றனன் எனக் கூறுமிடத்தே, அவனது படைத் தலைவன், வேப்ப மாலை சூட்டியுள்ள மன்னன் வேலினைத் தன் கையில் எடுத்துக் கொண்டு, அவன் முன்னர்ச் சென்றான் என நக்கீரர் குறிக்கின்றார்.

பண்டைத் தமிழர் எத்துணையாக ஓலைகளைக் கையாண்டு வந்தனர் என்பதற்கு, இன்றும் தமிழர் அணியும் அணிகலன்களின் பெயர்கள் சான்றாகின்றன. தோடு, அரசிலை, குழை, ஓலை, கொந்திளவோலை, தாலிக்கொடி என்று அவ்வணி கலன்களுக்குப் பெயர் சொல்லும் பொழுது, அவை முதலில் ஓலையும் குழையுமாகவே இருந்திருத்தல் வேண்டும் எனக் கருத இடம் உண்டு. அக்காலத்தில் இயற்கையுடன் இசைந்து வாழ்ந்த தமிழ் மக்கள், ஆம்பல் கொடியையும், பனையோலையையும், இன்னும் பல்வகை இலைகளையும் கொண்டே தம்மை அணி செய்திருந்தனர். அவர் தம் கட்டில், நாற்காலி முதலிய பொருட்களும், செடி, கொடி இலைகளின் வடிவங்களைக் காட்டின.

சங்க இலக்கியத்தில், அகத்துறை புறத்துறைகளில் உவமிக்கப்படும் மலர்களை இதுகாறும் நன்கு ஆராய்ந்தார் அல்லர் தமிழ் அறிஞர். அவற்றைத் தக்கவாறு ஆராய்ந்துணர்ந்து, பண்டைத் தமிழ்ச் செய்யுட்களை இன்னும் பலர் பன்மடங்கு சுவை நுகரச் செய்வதே, தமிழ் மொழியும் செடி நூலும் கற்ற அறிஞர் பெருங் கடமை ஆகும்.

*'தமிழ்த் தூது' நூலிலிருந்து*

*வெளியீடு :*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.*







# மழை நீர் சேகரிப்பு

*வீணாக வழிந்தோடும் மழைநீரை பூமியின் மேற்பரப்பிலோ அல்லது நிலத்தடியிலோ சேகரித்து பின்னர் உபயோகப்படுத்துவதே "மழைநீர் சேகரிப்பு" என்பதாகும். மழைநீர் சேகரிப்பு என்பது தொன்று தொட்ட காலத்திலிருந்தே நம் பழக்கத்தில் இருந்து வருகிறது. ஏரிகள், குளங்கள், குட்டைகள், கோயில் தெப்பக்குளங்கள் யாவும் நம் மூதாதையர்கள் தோற்றுவித்த மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகளே. சென்னை போன்ற பெருநகரங்களில் கட்டடங்களின் கூரைகளில் விழும் மழைநீர் பெரும்பாலும் வெள்ளக் கால்வாய்களில் வழிந்தோடி வீணாக கடலில் கலக்கிறது. இப்படி வீணாகும் மழைநீரை அந்தந்த இடங்களிலே கட்டமைப்புகள் அமைத்து பூமியினுள் சேகரிப்பது மிகவும் அவசியமாகிறது.*

*மழைநீர் சேகரிப்பு முறைகளில் இரு பெரும் பகுதிகள் உள்ளன.*

1. *கட்டட கூரைகளில் விழும் மழைநீரை சேகரிக்கும் முறைகள்.*
2. *வீணாக நிலப்பரப்பில் வழிந்தோடும் மழைநீரை சேகரிக்கும் முறைகள்.*

**மழைநீர் சேகரிப்பு திட்டத்தின் பயன்கள்**

1. *நிலத்தடி நீர் மட்டம் உயரும்.*
2. *கடலோரப் பகுதிகளில் நிலத்தடி நீரின் உப்புதன்மை குறையும்.*
3. *வீணாகும் மழைநீரை நிலத்தடியில் சேமித்துப் பயன்படுத்த ஏதுவாகும்.*
4. *பெருநகரங்களில் ஆங்காங்கே மழைநீர் தேங்குவது தவிர்க்கப்படலாம்.*

*தமிழகத்தின் பெருகிவரும் பல்வேறு நீர்த்தேவைகளை பூர்த்தி செய்யவும், அருகி வரும் நிலத்தடி நீர் வளத்தினைப் பாதுகாக்கவும், தமிழக முதலமைச்சரின் சீரிய தலைமையின் கீழ் மழை நீர் சேகரிப்பு குறித்த முக்கியத்துவத்தை உணர்ந்து இதனை ஒரு மக்கள் இயக்கமாக்கிட பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.*

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. சம்பத் அவர்கள், சென்னை சேப்பாக்கத்திலுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள "மழைப்பூங்கா"வை 18.10.02 அன்று தொடக்கி வைத்தார். இந்த மழைப்பூங்காவில், மழைநீர் சேகரிப்பு குறித்த வழிமுறைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. சிறிய குடிசை மூலம் மழைநீர் சேகரிப்பு, ஓடு வீடு மூலம் மழைநீர் சேகரிப்பு, அடுக்குமாடி குடியிருப்புகளின் கூரைமூலம் மழைநீர் சேகரிப்பு ஆகியவன மாதிரிகள் மூலம் செயல்முறை விளக்கங்களுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்த விளக்கங்களில் மழைநீரை நேரடியாக சேமித்தல், நிலத்தடி நீரை செறிவூட்டலுக்கு உபயோகித்தல் ஆகிய வடிவமைப்புகள் செயல்முறை விளக்கத்துடன் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த "மழைப்பூங்காவில்" சுவரொட்டிகள்/விளம்பரப் பலகைகள் மூலம் பல்வேறு மழைநீர் சேகரிப்பு முறைகள் மக்களுக்கு பயன்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இதுதவிர, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு நிறுவப்பட்டுள்ளது. 2000 சதுர மீட்டர் பரப்பளவில் அமையப்பட்டுள்ள இந்த கூரையின் மேல் விழும் மழைநீரானது 3 கூழாங்கல் மற்றும் மணல் படுகைகள் மூலமாகவும் (10 மீட்டர் x 2 மீட்டர் x 1 மீட்டர் அளவு கொண்ட படுகையின் அடிப்பாகத்தில் 3 குழாய் கிணறுகள் ஒவ்வொன்றும் 4 மீட்டர் ஆழத்திற்கு அமைக்கப்பட்டுள்ளன) 1 நீர் உறிஞ்சு கிணறு (1 மீட்டர் விட்டமும் 2 மீட்டர் ஆழமும் கிணற்றின் அடிப்பகுதியில் 3 குழாய்க் கிணறுகளும் அமைக்கப்பட்டுள்ளன) மூலமாகவும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளன. வாரிய கூரையில் இருந்து பெறப்படும் மழைநீரானது 12 குழாய்கள் மூலமாக சேகரிப்பு செய்யப்பட்டு இந்த கட்டமைப்புகளின் வழியாக நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

அமைச்சர் அவர்கள் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலுள்ள தமிழ்நாடு குடிசைமாற்று வாரிய அலுவலகங்கள், நீர் பரிசோதனை கூடங்கள் மற்றும் ஆய்வு மாளிகைகள் ஆகியவற்றில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். மேலும் தனி வீடு உரிமையாளர்கள், கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், திருமண மண்டபங்கள், திரையரங்கு உரிமையாளர்கள், அரிசி ஆலை உரிமையாளர்கள் அனைவரும் மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவும்படி வாரிய களப்பணியாளர்கள் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை மக்கள் உணர மாவட்டந்தோறும் கருத்தரங்குகள்/கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த கருத்துரு கூட்டங்களில், சாதாரண மக்கள், அரசுச் சாரா தொண்டு நிறுவனங்கள், சுயவேலை வாய்ப்புக் குழுக்கள், அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்று வருகின்றனர்.

மழைநீர் சேகரிப்பு முறைகள் மிகவும் எளிதாக மேற்கொள்ளலாம். சிறிய குடிசை மூலம் மழைநீர் சேகரிப்பு, ஓடு வீடு மூலம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவ சராசரியாக ரூ.250 ஆகும். அடுக்குமாடி குடியிருப்புகளின் கூரைமூலம் மழைநீர் சேகரிப்பு மேற்கொள்ள சுமார் ரூ.500லிருந்து ரூ.1000 வரை செலவாகும்.

மழைநீர் சேகரிப்பில் முன்னோடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தமது இல்லத்தில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்களை நிறுவியுள்ளார். நீர் உறிஞ்சு குழிகள் மற்றும் நீர் உறிஞ்சுப் படுகைகள் மூலம் ஆண்டொன்றுக்கு சுமார் 16 இலட்சம் லிட்டர்கள் இந்தக் கட்டமைப்புகளின் மூலம் சேமிக்கப்படுகிறது.

இதுவரை தமிழ்நாடு முழுவதும் 70 இலட்சம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் மட்டும் சுமார் 70,000 வீடுகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற பகுதிகளில் நிலத்தடி நீர் வளம் பெறும் வகையில் 132 தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள் ஆகியன அமைக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 334 கட்டமைப்புகள் ரூ.15 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், அமைச்சர் அவர்கள், கட்டட விதி முறைகள் முறைப்படி மாற்றியமைக்கப்பட உள்ளதாகவும் இதனடிப்படையில் அனைத்து தனியார் வீடுகள், பொது மற்றும் அரசு அலுவலகங்களில் இந்த மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் நிறுவப்படுவது கட்டாயமாக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மேலும், இந்த மழைநீர் சேகரிப்பு பற்றிய விழிப்புணர்வு தமிழகம் முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் மக்கள் அனைவரும் இந்த விழிப்புணர்வு முயற்சிக்கு ஆதரவளிக்கும்படியும் இந்த விழிப்புணர்வை மக்கள் இயக்கமாக மாற்றி வெற்றி பெற செய்ய அனைத்து ஒத்துழைப்பையும் நல்குமாறு கேட்டுக்கொண்டார்.

□ □ □



### இராமநாதபுரம் மாவட்டத்தில் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும்

# மழைநீர் சேமிப்புத் திட்டம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் வருடாந்திர சராசரி மழையளவு (827 மி.மீ) மாநிலத்தின் வருடாந்திர சராசரி மழை அளவைவிட குறைவானதாகும். இம்மாவட்டம் நகர்ப்புற மக்களைவிட கிராமப்புற மக்களை அதிகமாகக் கொண்ட மாவட்டமாகும். இன்னும் 50 ஆண்டுகளில் நாட்டில் குடிநீர் பஞ்சம் ஏற்படும் என்ற எண்ணத்தில் மத்திய மாநில அரசுகள் மழைநீர் சேகரிப்பில் அதிக முனைப்பு காட்டி செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் 15 அம்சத் திட்டத்தில் "குடிநீர் பாதுகாப்பு" குறித்து வலியுறுத்தி உள்ளார். அதிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினை அமுல்படுத்துவது அவசியம் என்றும் கூறியுள்ளதற்கேற்ப, மாவட்ட நிர்வாகம் மாண்புமிகு தமிழக முதல்வரின் கொள்கை முடிவு அடிப்படையில் முயற்சிகள் மேற்கொண்டு வெற்றியும் கண்டுவருகிறது.

"இராமநாதபுரம் மாவட்டத்தில் மழைநீரை சேகரிப்பது குறித்தும், அதன் இன்றியமையாமை குறித்தும் தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு கிராமப்புற மக்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும், பல்வேறு விழிப்புணர்வு மற்றும் பயிற்சி



முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. அதன் பேரில் இம்மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்படவுள்ள புதிய குழும வீடுகளிலும் மேம்படுத்தப்பட்ட குழும வீடுகளிலும், புதிதாக கட்டப்படும் வீட்டுமனைகள், கட்டடங்கள், அரசு அலுவலகங்கள் ஆகியவற்றிலும் மழைநீர் சேகரிப்பு உபகரணங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. இம்முறையில் 30.9.2002 வரை வனத்துறை மூலம் மழைநீர் சேகரிப்பு ஆதாரங்கள் 1,70,843 உருவாக்கப்பட்டு உள்ளன. 2,184 தொகுப்பு வீடுகளிலும், 1,171 மேம்படுத்தப்பட்ட குழும வீடுகளிலும் பாரதப் பிரதமர் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 430 குழும வீடுகளிலும், மகளிர் சுகாதாரக் கழிவறைக் குழுமங்கள் 218-லும், 99 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களிலும், 5,761 தனியார் வீடுகளிலும், 2,151 ஆழ்குழாய் கிணறுகளிலும் மழைநீர் சேகரிப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களை சேர்ந்த 26 கட்டடங்களிலும், 54 ஊராட்சிமன்றக் கட்டடங்களிலும், 16 நகராட்சி, பேரூராட்சி கட்டடங்களிலும், 17 சமூகநலக் கட்டடங்களிலும், 21 பள்ளி கட்டடங்களிலும், 2 மருத்துவமனைக் கட்டடங்களிலும், 356 கோவில் குளங்களிலும், 2 கோவில்களிலும், 2 பொது விநியோகக்கடை கட்டடங்களிலும், 1 திரையரங்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள இரண்டு (2) அலுவலகங்கள், 3 வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 1,83,349 மழை நீர் சேகரிப்பு சாதனங்கள் மாவட்டம் முழுவதும் இதுவரை அமைக்கப்பட்டு உள்ளன.

இராமநாதபுரம் மாவட்டம் ஊரணிகள் நிறைந்த மாவட்டம் என்பதால், ஊரணிகளை தூர்வாரி மழைநீரை சேமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கிராமப்புற மக்கள் தங்களுடைய குடிநீர் மற்றும் இதர தண்ணீர் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இது உதவுகிறது. இப்பயனை உணர்ந்த பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து ஊராட்சி மன்றங்களின் உதவியுடன் புதிதாக ஊரணி அமைத்தும், ஆழப்படுத்தியும், மழைநீரை சேமிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். குறிப்பாக கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் எம். சவேரியர்பட்டிணம் ஊராட்சியிலும், முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் மைக்கேல்பட்டிணம் ஊராட்சியிலும் ஊராட்சி மன்ற ஒத்துழைப்புடன் அனைத்து வீடுகளிலும் மழைநீர் சேமிப்பு சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த கிராமங்களில் ஏற்பட்டுள்ள விழிப்புணர்வின் காரணமாக மழைநீர் சேமிப்பு சாதனங்கள் ஊராட்சியில் உள்ள வீடுகள் அனைத்திலும் அமைக்கப்பட்டதால், தற்போது பெய்துவரும் மழையில் அப்பகுதி மக்கள் குடிநீருக்காகவும், குளிக்கவும், இதர பணிகளுக்கும் மழைநீரை சேமித்து வருகின்றனர்.

குழாயில் வரும் மழைநீர், சேகரிப்பு தொட்டிகளில் வந்து விழுவதையும் மனமகிழ்ச்சியுடன் காணமுடிந்தது. அக்கிராம மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் இத்திட்டத்தின் சிறப்பு குறித்து எடுத்து கூறுகின்றனர்.

மேலும் இம்மாவட்டத்தில் ஊராட்சி, பேரூராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகங்கள், புதிதாக கட்டட வரைபடங்களுக்கு அனுமதி வழங்கும்போது மழைநீரை சேகரிப்பதற்கான திட்டம் வரைபடங்களில் சேர்க்கப்பட்டு இருந்தால் மட்டுமே அனுமதி வழங்கி வருகின்றன. ஏற்கெனவே, கட்டப்பட்டுள்ள கட்டடங்களிலும் இத்திட்டத்தினை செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.


அரசுத்துறை மூலம் கட்டப்பட்டு வரும் கட்டடங்களில் மட்டுமல்லாது தனியார் இல்லங்களிலும் மழைநீர் சேகரிப்பு உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆழ்குழாய் மூலம் உறிஞ்சப்படும் நிலத்தடி நீர் உப்புநீராக மாறாதிருக்க வழிவகுக்கிறது. மழைநீர் மூலம் ஊரணிகள் சேகரிக்கப்பட்ட தண்ணீரை வடிநீர் திட்டத்தின் மூலம் சுத்திகரிப்பது கிராமப்புற மக்களுக்கு வழங்குவதுடன் ஒரே ஊரணியில், ஒரு பகுதி குடிநீருக்காகவும், மற்றொரு பகுதி பிற உபயோகத்திற்காகவும் பயன்படுத்தும் வகையில் ஊரணிகள் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மேலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் வைகை ஆற்றில் புதையுண்ட பகுதிகள் செயற்கைகோள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டு அந்த இடங்களில் மழைநீரை சேமிக்க திட்டமிடப்பட்டு கீழ்க்கண்ட விபரங்களின்படி ரீசார்ஜ் அடிகுழாய்கள் (Recharge Borewells) அமைக்கப்பட்டுள்ளன.

| வ.எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | அமைக்கப்பட்டுள்ள ரீசார்ஜ் அடிகுழாய்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | பரமக்குடி | 12 |
| 2. | போகலூர் | 5 |
| 3. | நயினார்கோயில் | 3 |
| 4. | முதுகுளத்தூர் | 17 |
| 5. | கமுதி | 14 |
| 6. | திருப்புல்லானி | 2 |
| 7. | கடலாடி | 2 |
| | மொத்தம் | 55 |



மாண்புமிகு தமிழக முதல்வர் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு பரிந்துரைத்துள்ள மழைநீர் சேகரிப்பு தொட்டி 2.5 மீட்டர் கேத்தில் 5 மீட்டர் ஆழத்தில் உருவாக்கப்படவேண்டும். இதனை அமைக்க "சிமெண்ட் ஆர்ச்சி மாதிரி" என்றால் ரூபாய் 1.50 இலட்சமும், செங்கற்களால் ஆன அமைப்புடன் கூடிய மாதிரி அமைத்திட ரூபாய் 90 ஆயிரமும் செலவாகும். இத்திட்டம் மற்ற திட்டங்களை விட அதிகப் பயன் உள்ளதால், இத்திட்டம் இம்மாவட்டத்தில் இராமநாதபுரம், திருப்புல்லானி, கடலாடி, ஆர்.எஸ். மங்களம், திருவாடானை ஆகிய ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. மேலும், இராமநாதபுரம் மாதிரித் திட்டம் இம்மாவட்டத்தில் பகுதி புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேலும் விரிவாக அமுல்படுத்தப்பட உள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆர்.எஸ். மங்களம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள "மீண்டும் புதுப்பித்தல் மாடல்" (Recharge Structure) முறை நல்ல பலனை அளித்து உள்ளது.



வளர்ந்து வரும் இராமநாதபுரம் மாவட்டத்தில் வரும் காலத்தில் குடிநீர் பற்றாக்குறையை மழைநீர் சேகரிப்பு மூலமே நிவர்த்தி செய்யமுடியும்; குறிப்பாக இம்மாவட்டத்தில் மாண்புமிகு முதல்வர் வழிகாட்டியுள்ள "இராமநாதபுரம் மாடல் திட்டம்" ஒரு நல்ல திருப்புமுனையை பொதுமக்களின் ஒத்துழைப்பு, விழிப்புணர்வு மூலம் ஏற்படுத்தும் என்று நம்புகிறேன்.

– ரெ. இராவணன்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
இராமநாதபுரம்.

---

## குழந்தைகளை செம்மையாக வளர்க்கவேண்டும்

இந்த நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவரும். நல்ல முறையில் வளர்த்து வரப்படுகிறார்களா என்று கவனித்துக் கொள்வதில் நம் அனைவருக்குமே பொறுப்பு உண்டு என்று நான் கருதுகிறேன். ஏனெனில் குழந்தைகளே இந்த நாட்டின் செல்வம். இந்தச் செல்வத்தை நாம் எவ்வாறு பயன்படுத்திக் கொள்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான், இந்தியாவின் எதிர்காலம் அமைந்திருக்கிறது.

குழந்தைகளின் பெற்றோர் தங்கள் குழந்தைகளுக்கு அறிவு போதித்து அறிவாளிகளாக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னைக் கேட்டால் அவர்கள் குழந்தைகளை அதனதன் போக்கில் வளரவிட்டால், குழந்தைகள் தாங்களாகவே புத்திசாலிகளாக அறிவாளிகளாக விளங்குவார்கள்.

'உலகத்தின் பல விஷயங்களைக் குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியந்தான். ஆனால் அவர்கள் தாங்களாகவே அவற்றைப் புரிந்துகொள்ள நாம் வசதி வாய்ப்புகள் செய்து தரவேண்டும். நாமாக நமது மனப்போக்கின்படி உலக விஷயங்கள் பற்றிய ஞானத்தை அவர்கள் மூளையிலே திணிக்க முயற்சியெடுக்கக்கூடாது.

'குழந்தைகள் செம்மையாக வளருவதற்கு வகை செய்வதுதான் நமது நாட்டின் ஒவ்வொரு அரசியல் கட்சியின் இலட்சியமாகத் திகழவேண்டும். சொல்லப்போனால் இதுதான் முழுமுதற் கொள்கையாக இருக்க வேண்டும்.'

- பண்டித ஜவஹர்லால் நேரு

# திருவண்ணாமலை மாவட்டம் — சுயவேலைவாய்ப்புத் திட்டம்

பொன் விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம் *1.4.1999* முதல் திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு மற்றும் மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 75:25 என்ற சதவீதத்தில் இருக்கும். இத்திட்டத்தின் நோக்கம் 5 ஆண்டுகளில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் கிராமப்புற மக்களில் 30 சதவிகித மக்களை வறுமைக்கோட்டிற்கு மேலே கொண்டு வருவதுடன் ஒவ்வொரு குடும்பமும் மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.2000/– வருமானத்தை ஈட்டுவதுதான் இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 2,732 சுய உதவிக்குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இதில் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்கள் உள்ள சுய உதவிக் குழுக்கள் மட்டும் 1,239, இக்குழுக்களின் மூலம் 14860 மகளிர் பயன் அடைந்து வருகின்றனர். திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் 31.3.2002 வரை 176 சுயஉதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் ரூ.442.17 இலட்சம் வழங்கப்பட்டு 2,728 மகளிர் பயன் அடைந்துள்ளனர். இதில் அரசு மானியம் ரூ.187.78 இலட்சமாகும். 708 சுய உதவிக் குழுக்களுக்கு தலா ரூ.10,000 வீதம் ரூ.70.80 இலட்சம் சுழல்நிதி வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர 1937 தனி நபர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் ரூ.137.26 இலட்சம் மானியத்துடன் ரூ.373.71 இலட்சம் வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

2001–2002ஆம் ஆண்டில் மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள ரூ.169.57 இலட்சத்துடன் முந்தைய ஆண்டு தொகையையும் சேர்த்து 613 சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல்நிதியும் 98 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.105.09 இலட்சம் மானியத்துடன் ரூ.232.88 இலட்சம் வங்கி கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 1,078 தனி நபர்களுக்கு ரூ.76.76 இலட்சம் மானியத்துடன் ரூ.208.24 இலட்சம் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## பயிற்சி

5 இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் மூலமாக 2001–2002ஆம் ஆண்டில் இம்முகமையின் மூலம் 1534 பெண்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதுதவிர இம்மாவட்டத்தில் 300 இளைஞர்களுக்கும் தொழில்முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்களுக்கு பயிற்சி பெறுவோருக்கு பிரத்தியேக திறன் பயிற்சி அளிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## உட்கட்டமைப்பு வசதி

பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து 20 சதவீதம் உட்கட்டமைப்பு வசதிக்காக செலவிடப்பட்டு வருகிறது. இவ்வசதியின் கீழ் 6 கால்நடை மருத்துவமனைகள் (ரூ.34.41 இலட்சம்) 27 கால்நடை கிளை நிலையங்கள் (40.35 இலட்சம்) கட்டப்பட்டுள்ளன. ஆவூர், கலசபாக்கம், சந்தவாசல் மற்றும் கொழப்பலூர் ஊராட்சிகளில் 4 கிராம அங்காடிகள் ரூ.15.35 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளது. இக்கிராம அங்காடிகள் சுயஉதவிக் குழுக்களுக்கும் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள தனிநபர்கள் வங்கிக்கடன் பெற்றவர்களுக்கு குறைந்த வாடகையில் விட முன்னுரிமை வழங்கப்படும்.

மேலும் சுய உதவிக் குழுக்களில் உள்ள நபர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக 6 பயிற்சி நிறுவனங்கள் ரூ.30 இலட்சத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்தில் மன்னார் பாளையம் ஊராட்சியில் ரெக்சின் பை தயாரிக்கும் குழுவிற்கும் மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியத்தில் ஒண்ணுபுரம் ஊராட்சியில் காகித பொம்மை தயாரிக்கும் குழுவிற்கும், வெம்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் கேண்டீன் நடத்தும் குழுவிற்கும் ரூ.12 இலட்சத்தில் கட்டடம் கட்டப்பட்டு முடிவடையும் தருவாயில் உள்ளது.

தூரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் நார்த்தாம்பூண்டி ஊராட்சியில் ரூ.1.62 இலட்சத்தில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

மேலும் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்திற்கு ஜமுனாரத்தூரில் தேன் பதப்படுத்தும் நிலையத்திற்காக ரூ.10 இலட்சமும், ஆவின் நிறுவனத்திற்கு பால் குளிரூட்டும் நிலையத்திற்குத் தேவையான இயந்திரங்கள் வாங்க ரூ.22.30 இலட்சமும் இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

மொத்தத்தில் முந்தைய ஆண்டில் ரூ.64.89 இலட்சமும் 2001–2002ஆம் ஆண்டில் ரூ.112.20 இலட்சமும் சேர்ந்து ரூ.177.09 இலட்சம் உட்கட்டமைப்பு வசதிக்காக இம்மாவட்டத்தில் செலவிடப்பட்டுள்ளது என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீரஜ் குமார், இ.ஆ.ப., தெரிவித்தார்.

★ ★ ★

## ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறை மாவட்ட மறுவாழ்வு மையம்

### மாவட்டந்தோறும் தொண்டு நிறுவனம் மூலம் ஊனமுற்றோர் கணக்கெடுப்பு சிறப்பு ஏற்பாடு

மாவட்ட அளவில் மறுவாழ்வு பணிகளை ஒருங்கிணைத்து சிறப்புற செயல்படுத்திட, மாவட்டத்திலுள்ள அனைத்து ஊனமுற்றவர்களையும் கணக்கெடுக்கும் பணி 1.5.2002 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.



இந்தப் பணியில் நன்கு அனுபவம் பெற்ற 10 தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இத்தொண்டு நிறுவனங்களால் பயிற்சியளிக்கப்பட்ட 200 களப்பணியாளர்கள் 1.5.2002 முதல் 30.6.2002 வரை, ஒரு நாளைக்கு 50 குடும்பங்களுக்கு மேற்படாமல் நேரிடையாக சந்தித்து, ஊனமுற்றோர் கணக்கெடுப்பை நடத்தினர். 20 மேற்பார்வையாளர்களும் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

இதன்படி 27,024 ஊனமுற்றோர் கண்டறியப் பட்டுள்ளனர்.

இக்கணக்கெடுப்பின்போது, ஏதேனும் காரணங்களினால் எவரேனும் விடுபட்டிருந்தால் 15.8.2002க்குள் அவர்கள் மாவட்ட மறுவாழ்வு அலுவலகத்தை அணுகி, தங்களையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளலாம் என பத்திரிக்கைச் செய்திகளும் தரப்பட்டுள்ளன.

## தேசிய ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் (N.P.R.P.D.)

நடப்பு ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் சிறப்பு திட்டமாக தேசிய ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம் (N.P.R.P.D.) செயல்படுத்த அரசு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் திருவண்ணாமலையையும் சேர்த்து தமிழகத்தில் 4 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் படி

- மொத்த மாவட்டம் 10 பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளன. (10 Clusters)
- ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு தொண்டு நிறுவனம் பொறுப்பு தரப்பட்டுள்ளது.
- தொண்டு நிறுவனங்களின் மூலமாக 20 பல்நோக்கு மறுவாழ்வுப் பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்டு, தக்க பயிற்சிகள் அளிக்கப்பட்டு பணியில் அமர்த்தப்படுகின்றனர்.
- கண்டறியப்பட்ட அனைத்து ஊனமுற்றவர் களையும், அவர்கள் வசிக்கும் இடங்களுக்கே சென்று மருத்துவ, பொருளாதார மற்றும் சமூக ஆய்வுகள் செய்யப்படும். மாவட்டம் முழுவதும் இத்தகைய 50 முகாம்கள் நடத்தப்படும். பல்வகை சிறப்பு மருத்துவர்கள் இம்முகாம்களில் பங்கேற்பர்.
- இத்திட்டத்தின்படி முதலாம் ஆண்டில் 40 நபர்களுக்கு ஊனம் நீக்கும் மருத்துவ அறுவை சிகிச்சைகள் செய்யப்படும்.
- ரூ.1.50 இலட்சத்தில் உதவி உபகரணங்கள் வழங்கப்படும்.
- கல்வி வயதில் உள்ள அனைத்து ஊனமுற்ற குழந்தைகளும், ஊனத்தின் தன்மைக் கேற்றவாறு அருகாமையில் உள்ள சாதாரணப் பள்ளிகளில் ஒருங்கிணைப்போ அல்லது சிறப்புப் பள்ளிக் கூடங்களிலோ சேர்க்கப்படுவர்.
- கிராம அளவில், சமுதாயப் பணியாளர் பிற அரசுத்துறைப் பணியாளர்களுடன் இணைந்து ஒட்டு மொத்த மறுவாழ்வுப் பணிகளை திட்டமிட்டுச் செயலாற்றுவார்.
- கடுமையான ஊனமுற்ற குழந்தைகளின் தாய்மார்களுக்கு, குழந்தைகளின் பராமரிப்பு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்படும்.

இதனால் குக்கிராமங்களிலும் உள்ள அனைத்து ஊனமுற்றவர்களுக்கும் மறுவாழ்வு உதவிகள் அவர்களது வீடுகளிலேயே கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது. கண்டறியப்பட்டுள்ள 27,024 ஊனமுற்ற நபர்களும் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவர்.

இவ்வாண்டு திருவண்ணாமலை மாவட்டத்திற்கு மட்டுமென இத்திட்டத்திற்காக ரூ.51,79,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மூளை வளர்ச்சி தொடர்பான ஊனமுள்ளவர்களுக்கு தேசிய அறக்கட்டளை மூலமாக (National Trust for the Welfare of Persons with Autism, Cerebral Palsy, Mental Retardation and Multiple Disabilities) மறுவாழ்வுப் பணிகள்**

மைய அரசின் தேசிய அறக்கட்டளை மூலமாக மூளை வளர்ச்சி தொடர்பான ஊனமுற்றவர்களுக்கு மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கு பராமரிப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

18 வயது பூர்த்தியடைந்த இத்தகைய ஊனமுற்றோர்க்கு சட்ட ரீதியாக பாதுகாவலர் நியமனம் அளிக்கவும் இந்த அறக்கட்டளையின் மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

சட்ட ரீதியாக பாதுகாவலர் நியமனம் கோருவோர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு உடனடியாக விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப படிவங்களும், மேலும் விவரங்களும் மாவட்ட மறுவாழ்வு மையத்தில் கிடைக்கும்.

ஊராட்சி ஒன்றிய அளவில் மனவளர்ச்சி குன்றியோர்க்கான சிறப்புப் பயிற்சி மையங்களை ஏற்படுத்திட தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதற்காக இவர்கள் தேசிய அறக்கட்டளையிலிருந்து நிதியுதவி கோரி விண்ணப்பிக்கலாம் என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. தீரஜ் குமார் இ.ஆ.ப., தெரிவிக்கிறார்.

*– மா. கலைமணி,*
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்*
*திருவண்ணாமலை மாவட்டம்*

• • •

# மிட்டாய்க்காரன்

**கி.வா.ஜகந்நாதன்**

*அவன் ஒரு வியாபாரி. அவனுடைய வியாபாரம், விளம்பரம் எல்லாம் தனி மாதிரி. பிறர் கையை எதிர்பார்த்துப் பிழைக்கிறவன் அல்ல அவன். தானே உழைத்து வியாபாரம் செய்து சம்பாதிப்பவன். அவனுக்கு உதவியாள் தேவையே இல்லை.*

*முனிசாமியைத்தான் சொல்லுகிறேன்; அந்த மிட்டாய்க்கார முனிசாமி உலகத்து எதிர்காலப் பிரஜைகளாகிய குழந்தைகளே அவனுடைய வாடிக்கைக்காரர்கள். மிட்டாய்ப் பாட்டைப் பாடிக்கொண்டு போகும்போது அந்த விளம்பரம் எவ்வளவு குழந்தைகளைக் கவர்ந்து விடுகிறது.*

*பள்ளிக்கூடங்களைப் பற்றிய விஷயங்கள் அவனுக்குத் தெரியும்; படிப்பைப் பற்றி அல்ல 'சங்கரன் செட்டியார் தெருவில் மேற்கே பார்த்து இருக்கும் சிவப்புப் பள்ளிக்கூடத்தில் நூறு பிள்ளைகள் படிக்கிறார்கள்; அவர்களிலே பெண் குழந்தைகளும் உண்டு' என்று அவன் கணக்கு ஒப்பிப்பான். தன் சொந்த அனுபவத்தில் அவன் உணர்ந்தது இந்தச் சமாசாரம்.*

*சரியாக ஒன்பது மணிக்குத் தன்னுடைய மிட்டாய்த் தட்டோடு பள்ளிக்கூடத்து வாசலில் வந்து நிற்பான். பத்தரை பதினொரு மணிவரையில் வியாபாரம் நடக்கும். அப்பால் கொஞ்சம் வெளி வியாபாரத்தைக் கவனிக்கப் புறப்படுவான். வெயில் 108 டிகிரி உறைக்கட்டுமே; அவனுக்கு லக்ஷியமா என்ன ? அவனுடைய மிட்டாய் உருகிவிட்டால் கூட அவனுடைய முயற்சி இளகாது. ஒரு மணி அடிப்பதற்கு ஐந்து நிமிஷத்திற்கு முன் பள்ளிக்கூடத்து வாசலில் மறுபடியும் பிரசன்னமாவான். குழந்தைகளுக்கு அது சாப்பாட்டு நேரம். ஒரு மணி முதல் இரண்டு மணி வரை அவன் வியாபாரம் முடுக்காக நடக்கும். இரண்டரை மணிக்கு மறுபடி நகர்வலம் வருவான். கிடைத்த மட்டும் லாபமென்று தெருத் தெருவாக சந்து சந்தாகச் சுற்றுவான். சரியாக நாலு மணிக்குப் பள்ளிக்கூட வாசலில் ஆஜராகிவிடுவான். பிள்ளைகள் நாலரை மணி அடித்ததும் பள்ளிக்கூட சிறையிலிருந்து வெளிவருவார்கள். போகிற போக்கில் வாயில் அடக்கிக் கொள்ள ஒரு வெங்காய மிட்டாயோ, ஒரு தேங்காய் மிட்டாயோ வாங்குவார்கள்.*

*முனிசாமி ஒருநாள் முழுவதும் ஒரே பள்ளிக்கூடத்திலே வியாபாரம் செய்வதும் உண்டு; ஒவ்வொரு வேளைக்கு ஒவ்வொரு பள்ளிக்கூடமாக முறைவைத்துப் போவதும் உண்டு. எப்படியோ சாயங்காலத்துக்குள் அவனுக்கு எட்டணாக்காசு எல்லாம் காசுதான்; அதிலும் தம்பிடிகளே முக்கால்வாசி கிடைத்துவிடும். அதைக் கொண்டு போவான் வீட்டுக்கு.*

*முனிசாமிக்கு இந்த வியாபாரம் நிரந்தரமாக நடந்து வந்தது.*

*குழந்தைகளுக்கு லீவு நாள் வந்தால் மட்டும் அவனுக்கு வியாபார மந்தம் நேரும். அன்றைக்கு, அலைச்சலும் அதிகமாக இருக்கும் வியாபாரத்திற்கு 'லீவு' விடமுடியுமா ? வயிற்றுக்கு 'லீவு' கொடுத்தால் அது முடியும்.*



பிச்சைச் சோற்றில் சனி புகுந்தாற்போல இந்த வியாபாரத்தில் போட்டி உண்டாகிவிட்டது. முனிசாமி மிட்டாயை மாத்திரம் வியாபாரஞ் செய்வதில் பழைய லாபத்தைக் காணவில்லை. புதிய புதிய சரக்குகளை அவன் விற்கத் தொடங்கினான். கடலை உருண்டை, எள்ளு உருண்டை, மாங்காய்க் கீறு இவையெல்லாம் அவன் தட்டில் இடங்கொண்டன.

ஞாயிற்றுக்கிழமைகளில் தன் வீட்டிலேயே ஒரு வாரத்திற்கு வேண்டிய மிட்டாய்களைச் செய்வான். அவன் மனைவி உதவி செய்வாள். அவள் நாலு வீடுகளில் வாசல் பெருக்கியும் பாத்திரம் தேய்த்தும் மாசம் நாலு ரூபாய் சம்பாதித்தாள். இரண்டு பேரும் ஏதோ கிடைத்ததை வைத்துக் கொண்டு கஞ்சியோ, கூழோ காய்ச்சிக் குடித்து இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். அவர்களுடைய அன்புக்கு அடையாளமாக ஓர் ஆண்குழந்தை பிறந்து வளர்ந்து வந்தது.

பள்ளிக்கூடங்களில் கோடை விடுமுறை தொடங்கிவிட்டது. ஒன்றரை மாதம் அந்தக் கூடுகளில் குழந்தைகளின் சலசலப்புச் சத்தம் கேளாது. அந்த இடத்தில் இருந்த அழகு, ஜீவன் மறைந்து நின்றது.





முனியனுடையத் தோற்றமும் அதன் வாசலில் காணவில்லை.

பள்ளிக்கூடம் இல்லாத இந்த மௌன நிலையை அவன் வெறுத்தான். குழந்தைகளுக்கு விடுமுறை தூக்கத்தைப் போன்று ஓய்வைக் கொடுத்தது. முனிசாமியோ மரணத்தைப் போன்ற ஓய்வாக எண்ணினான். அவன் வாழ்க்கையில் நிச்சயமாக குறிப்பிட்ட காலங்களில் நேரும் கண்டங்கள் அந்த விடுமுறைக் காலங்கள். மற்ற நாட்களெல்லாம் அவனுக்கு வேகமாக ஓடிக்கொண்டிருந்தன. அந்த விடுமுறை நாட்களோ மெல்ல மெல்ல அடிமேல் அடிவைத்து அவனைப் பார்த்துப் பார்த்துப் பயமுறுத்திக் கொண்டே சென்றன.

அந்தக் காலங்களில் வெயில் அதிகம்; அவன் அலைச்சலும் அதிகம். சாயங்காலம் வீட்டுக்கு வரும்போது அவன் உள்ளம் வதங்கி, உடல் வதங்கி வருவான்.

“எப்படியோ இந்த வருஷம் கோடை விடுமுறை கழிந்துவிடும்; இன்னும் ஒரு வாரந்தானே இருக்கிறது ? எங்கேயாவது கடன் வாங்கிச் சர்க்கரையும் எள்ளும் கடலையும் வாங்கி மிட்டாய்களையும் மற்றப் பண்டங்களையும் செய்து வைத்துக் கொள்ள வேண்டும்” என்று அவன் நினைத்தான். பணம் யார் கொடுப்பார்கள் ? அவன் மனைவி தான் வேலை செய்யும் வீடுகளில் ஒரு வீட்டு அம்மாவிடம் இரண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு வந்தாள். சர்க்கரை முதலிய சாமான்களை வாங்கிவந்து புது வருஷ வியாபாரத்துக்காகச் சரக்குகளைத் தயார்செய்யத் தொடங்கினான்.

குழந்தைக்கு இரண்டு வயது ஆகிறது. எதைக் கண்டாலும் வாயில் போட்டு மதிப்பிடும் பருவம். அதற்கு அந்த மிட்டாயில் சிந்தினதைக்கூடக் கொடுக்க அவனுக்கு மனம் வராது. மிட்டாய் தின்னும் அந்தஸ்து அதற்கு இல்லையென்பது ஒரு காரணம்; அதற்குமேல் வேறொரு காரணமும் உண்டு. “ஒருநாள் கொடுத்து பழக்கம் பண்ணிவிட்டால் பிறகு பெரிய தொந்தரவாகி விடும்” என்று அவன் சொல்லுவான். ஆனாலும், குழந்தைக்கு இந்தக் காரணங்களின் நியாய அநியாயங்கள் தெரியுமா ? “அப்பா எனக்கு ஒரு மிட்டாயி” என்று சிணுங்கும் குழந்தை.

“உதைதான்” என்று சீறி விழுவான் முனிசாமி. மற்றக்

குழந்தைகளிடம் இனிமையாகப் பேசி வியாபாரம் செய்யும் அவனுக்குத் தன் குழந்தையிடம் பிரியமாகப் பேசத் தெரியவில்லை. அவனுக்கு அந்தக் குழந்தையோ தன் அதிகாரத்துக்கு அடங்கியிருக்க வேண்டிய குட்டி



அடிமை. அப்படி அவன் நினைத்தானோ இல்லையோ, அவனுடைய அன்றாட காய்ச்சிப் பிழைப்பு அவனை அப்படி ஆக்கிவிட்டது.

"கொளந்தைக்கு என்னா தெரியும் ? அதுங்கிட்டே வள்ளுன்னு உளுறயே" என்று அவன் மனைவி கேட்பாள்.

"போடி கழுதே ! இவனுக்கு மிட்டாயி இல்லாமத்தான் கொறைஞ்சு போச்சோ" என்று உறுமுவான்.

"அடப்பாவி" கொளந்தைக்கு குடுக்காமே என்னத்தைச் சேத்து வைச்சுட்டோம்" என்று அவள் மனத்துக்குள் முனகுவாள்.

குழந்தை இருவருக்கும் இடையே நின்றுகொண்டு அழும். அந்த அழுகை தாயின் வயிற்றைக் கலக்கும். தகப்பன் கண்ணில் தீப்பொறியை உண்டாக்கும். ஆனாலும் குழந்தையை அவன் அடிக்கமாட்டான். அவ்வளவு தூரம் முரடனாகப் போகவில்லை அவன்.

அன்றைக்குப் பள்ளிக்கூடம் திறக்கும் நாள். முனிசாமி காலையில் சீக்கிரமே எழுந்துவிட்டான். புது வருஷப் பிறப்புப்போல அன்று அவனுக்கு இருந்தது. அவன் தன் மிட்டாய்த் தட்டுக்கு வர்ணக் கடுதாசி வாங்கி ஒட்டி அழகு செய்திருந்தான். தான் பண்ணியிருந்த மிட்டாயிலிருந்து அந்தத் தட்டு நிறைய எடுத்து வைத்தான். "சாமீ, கடவுளே, இன்றைக்குத்தான் ஆரம்பம். நல்லா விக்கணும்" என்று திருநீற்றை அள்ளி இட்டுக்கொண்டான். தலையில் சும்மாடு



கட்டிக்கொண்டான். சிறிய இரும்பு மணியை முதல்நாள் எடுத்துவைக்க மறந்திருந்தான். அதை எடுத்து அதற்கும் தட்டுக்கும் குங்குமம் இட்டான்.

கொஞ்சம் கஞ்சியைக் குடித்துவிட்டுக் கை கழுவிக் கொண்டிருந்தான். அந்தச் சில நிமிஷத்தில் குழந்தை மிட்டாய்த் தட்டுக்குப் போய்விட்டது. அதிலிருந்து ஒரு மிட்டாயை எடுத்து வாயில் வைத்து ருசி பார்த்துக் கொண்டிருந்தது.

முனிசாமி வந்து பார்த்தான்; "அட பாவி மகனே" என்று சொல்லிக் கொண்டு அந்த இளங் குழந்தையின் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை அறைந்தான். அந்தத் தட்டை எடுத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான்.



குழந்தை அங்கேயே சுருண்டு விழுந்து வீரிட்டுக் கத்தத் தொடங்கியது. வாயில் பாதியும் கையில் பாதியும் இருந்த மிட்டாய் அவன் அறைந்த அறையில் கீழே விழுந்து விட்டது. உயிர் துடிக்க அது கத்திக் கொண்டிருந்தது.

அவன் தாய் ஓடி வந்தாள்; குழந்தையை வாரி எடுத்தாள். "ஐயோ படுபாவி, கொளந்தையைக் கொன்னுட்டானே" என்று புலம்பினாள். "என் கண்ணே; சாமிக்குக் கண் இல்லையா ? உன்னை என் பாழும் வயிற்றிலே ஏன் பொறப்பிச்சார் ? எங்கேயாவது தோட்டி வீட்டிலே பொறந்திருந்தாலும் சௌக்கியமாக இருக்கலாமே. இந்த மனித மிருகத்தினிடம் வந்து சிக்கிக் கொண்டாயே. எல்லாம் நான் பண்ணின பாவம் ! ஐயோ ! முதலியார் வீட்டுக்குக் கொண்டுபோன போது 'ராசாவாட்டம் இருக்குது கொளந்தை; சாக்கிரதையாய்ப் பாத்துக்கோ'ன்னு நேத்துத் தானே அந்த அம்மா சொன்னாள் ? என் ராசா, உன்னை அடிக்க எப்படித்தான் அந்தப் பாவிக்கு மனசு வந்ததோ" என்று அழுது நைந்து உருகினாள். அவள் உள்ளம் படபடத்தது; தேகம் பதறியது. அவள் ஏழையாயிருந்தால் என்ன ? தாயின் இருதயத்தில் ஏழையென்றும் பணக்காரரென்றும் வித்தியாசம் இருக்கிறதா என்ன ?


முனிசாமி வெகு வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறான், 'இன்று காலையில் அபசகுணம் மாதிரி அந்தப் பாவி மகன் இதிலே கை வைத்தானே ! தரித்திரக் கை பட்டுவிட்டதே ! இன்றைக்கு வியாபாரம் ஆகுமோ, ஆகாதோ ?' என்று அவன் உள்ளம் சிந்தித்தது. அடுத்தபடி, 'என்ன இருந்தாலும், குழந்தையை அப்படி அடித்துவிட்டுத் திரும்பிப் பாராமல் வந்திருக்கக்கூடாது பாவம் ! அது என்ன பண்ணும் ? அதற்கு ஒன்று கொடுத்தால் குறைந்துவிடுமா ?' என்று ஒரு நினைவு எழுந்தது. 'குழந்தைகளுக்கு இடம் கொடுக்கக்கூடாது, மகாராஜா வீட்டுக் குழந்தையானாலும் அடங்கி நடக்க வேண்டும்' என்றது ஒரு நினைப்பு. 'இந்த வயசில் அதற்கு என்ன தெரியும் ? என்ன அடங்காமல் நடந்துவிட்டது ? ஐயோ அந்தச் சிறு குழந்தையிடம் அன்பு காட்டாமல் ஆயிரம் ஆயிரம் குழந்தைகளுக்கு மிட்டாய் தருகிறோமே என்றது ஓர் எண்ணம்.

இப்படி எண்ண அலைகள் அவன் உள்ளக் கடலில் மோதிக் கொண்டிருந்தன. ஒரு சந்து வழியே நடந்து போய்க்கொண்டிருந்த அவனுக்கு எதிரில் திடீரென்று ஒரு

மோட்டார் வெகு வேகமாக வந்தது. சட்டென்று அவன் ஓரமாக ஒதுங்கினான். அங்கே இருந்த ஒரு பெரிய கல் ஒன்று தடுக்கியது. படாரென்று கீழே விழுந்தான். கார் அவனைத் தாண்டிப் போய்விட்டது. அவன் தலையிலிருந்த மிட்டாய்த் தட்டு, பக்கத்திலிருந்த சாக்கடையில் விழுந்தது. முண்டாசு ஒரு புறமும் மணி ஒரு புறமும் விழுந்தன.

முனிசாமி எழுந்தான். கார்க்காரனை வாயில் வந்தபடி திட்டினான். முண்டாசையும் மணியையும் எடுத்தான். மிட்டாய்த் தட்டைப் பார்த்தான். மிட்டாய் அவ்வளவும் சாக்கடையில் விழுந்துகிடந்தன. தட்டை மாத்திரம் எடுத்தான். எந்தக் கல் தன்னைத் தடுக்கிவிட்டதோ அந்த கல்லின்மேல் உட்கார்ந்தான். நல்ல வேளையாக உடம்பில் காயம் படவில்லை. ஆனால் அந்த உள்ளத்தில் காயம் பட்டது.

தன் குழந்தைக்கு ஒரு துணுக்குக்கூட கொடுக்காமல் காப்பாற்ற எண்ணிய மிட்டாய் இவ்வளவும் அவன் கண் முன் சாக்கடையில் கிடந்தன. அவற்றில் ஒரு துணுக்குக் கூடப் பிரயோசனப்படாது. பேயறையாக அறைந்து குழந்தையை வீழ்த்திவிட்டு வந்தான் அவன்; இங்கே கடவுள் அவனையே வீழ்த்திவிட்டார்; அவன் பாதுகாத்து வந்த மிட்டாய் முழுவதும் சாக்கடைக்கு உணவாயிற்று. அவன் முழு மிருகமாயிருந்தால், 'படுபாவி தொட்டான்; இப்படி ஆயிற்று' என்றுதான் எண்ணியிருப்பான். அவனிடமும் மனிதத்தன்மையிருந்தது. பச்சாத்தாபம் ஒரு மூலையில் பதுங்கிக் கிடந்தது; தந்தைக்குரிய அன்பு எங்கோ இடந்தெரியாமல் அழுக்கேறி இருந்தது.



அந்தச் சாக்கடைத் தீர்த்தக் கரையில் தன்னைத் தண்டித்த கல்லாகிய ஆசனத்தில் உட்கார்ந்து உள்ளத்தைத் திறந்து பார்த்தபோது அவனுக்கு ஞானோதயமாயிற்று; மங்கிப் புதைந்திருந்த இயல்புகள் மலர்ந்தன. மனிதத் தன்மை, பச்சாத்தாபம், அன்பு எல்லாம் புறப்பட்டன.

"ஐயோ, நான் எத்தனை பாவி! அந்த இளங் குழந்தையை அறைந்துவிட்டு வந்தேனே; நான் கொண்டுவந்த மிட்டாய் அவ்வளவும் இந்தச் சாக்கடையில் விழுந்துவிட்டதே; இப்போது யாருக்கு என்ன பிரயோசனம் ? அந்தக் குழந்தைக்குக் கொடுத்திருந்தால் அந்த ஒன்றாவது உபயோகப்பட்டிருக்குமே. குழந்தை உயிரோடு இருக்கிறதோ இல்லையோ; நான் ஆத்திரத்துடன் அறைந்தேன். படாத இடத்தில் பட்டிருந்தால்...."

இப்படி நினைத்துப் பார்க்கும்போது அவன் உள்ளம் துக்கத்தால் குமுறியது. கண்களில் நீர் ததும்பியது. தலையில் அடித்துக் கொண்டான். "சாமி கும்பிட்டுத் திருநீறு இட்டுக் கொண்டேன்; குழந்தை தெய்வத்துக்குச் சமானம் அல்லவா ? அதை அறைந்து போட்டுவிட்டு வரலாமா ? சாமிக்குத்தான் பொறுக்குமா! பொறுக்கவில்லை. அதனால்தான் அவ்வளவையும் சாக்கடையில் சாய்த்துவிட்டார். எனக்கு நன்றாக வேண்டும்" என்று இரங்கினான்.

"முதலில் குழந்தை என்ன ஆயிற்று என்று பார்க்க வேண்டும்" என்ற வேகம் ஏற்பட்டது. முண்டாசுத் துணியை உதறித் தோளில் போட்டுக் கொண்டு மணியையும் வெறுந்தட்டையும் எடுத்துக்கொண்டு வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

"ஏன், அதுக்குள்ளாற வந்துட்டே ? வியாபாரம் ஆயிடுத்தா" என்று வினவினாள் தாய். அழுது அழுது சோர்ந்து போன குழந்தை அவள் மடியில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அந்தக் கன்னத்தில் விரல்களின் சுவடும் அதன்மேல் ஓடிய கண்ணீரின் சுவடும் முனிசாமியின் கண்ணில் பட்டன.

"மிட்டாயெல்லாம் கொட்டிப் போச்சு" என்று சோர்ந்த தொனியோடு அவன் சொன்னான்.

"ஐயோ! இந்தக் குழந்தை தொட்டதனால் வந்ததென்று, இருக்கிற உயிரையும் வாங்கிவிட்டால் என்ன பண்ணுகிறது' என்ற பயம் அவளைப் பிடித்துக்கொண்டது. அதனால் அவன் குழந்தையை அடித்ததைப் பற்றிச் சொல்லி அவன் கோபத்தைக் கிளப்பக்கூடாது என்று எண்ணிப் பேசாமல் இருந்துவிட்டாள். அவளுடைய மௌனம் அவன் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தது. பேசாமல் தட்டைக் கீழே வைத்துவிட்டுச் சோர்ந்துபோய் மூலையில் உட்கார்ந்து கொண்டான். அவனுக்கு ஒன்றும் பேசத் தோன்றவில்லை; அவளும் பேசத் துணியவில்லை.

சிறிது நேரம் இந்த மௌனம் நிலவியது. வெளியில் மௌனம் சாதித்தாலும் உள்ளத்தில் புயலும் இடியும் எழுந்தன. ஏதாவது பேசிச் சமாதானம் செய்து கொள்ளாவிட்டால் அவன் இதயமே வெடித்து விடும்போல் இருந்தது.

"தூங்குதா ?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"ரொம்ப அளுதானா ?"

"அதெல்லாம் ஏன் விசாரிக்கிறே ?"

"அடி பலமாப்பட்டுதோ ?"

"பலமா இருந்தா என்ன, இல்லாட்டிப் போனா என்ன ?"

"காயம் கீயம் பட்டிருக்குதோ ?"

கேள்வி மேல் கேள்வி வரவே, அவள் அடக்கி வைத்திருந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்பியது; "சீ, நீயும் ஒரு மனிசனாட்டம் பேச வந்துட்டாயே; கொளந்தையை ஒரே அடியாகக் கொன்னு போட்டுடறதுதானே ? இப்ப விசாரிக்க வந்துட்டயே! சாமி உனக்குக் கூலி கொடுக்காமல் போவாது". அவளுக்குப் பேச்சு வரவில்லை; துக்கம் தொண்டையை அடைத்தது. கோவென்று அழத் தொடங்கினாள்.


அவனுக்கும் அழுகை வந்துவிட்டது; அடக்கிக் கொண்டான்; "இந்தா, இந்தப்பாரு; நான் சொல்றதைக் கேளு; என்ன! ஒன்னெத்தான். இனிமே, சாமி சத்தியமா அந்தக் கொளந்தையை நான் தொடறதே இல்லை. நான் படுபாவி. சாமி எனக்குக் கூலி கொடுத்துட்டார். இந்தா அளாதே, எனக்குக்கூட அளுகை வறது. என்னை அந்தச் செருப்பாலே அடி பட்டுக்கறேன். இனிமே இந்த புத்தி வேண்டாமின்னு சொல்லி அடி" என்று அவனும் விம்மலானான். இந்த ஆரவாரத்தினிடையே குழந்தை கண்ணைத் திறந்து பார்த்தது.

அவன் எழுந்தான். மிட்டாய் வைத்திருக்கும் கூடையைத் திறந்தான். கைநிறைய எடுத்துக் கொண்டுவந்து அந்தக் குழந்தையின் கையில் கொடுத்தான்; "என் கண்ணு, இனிமே தினம் உனக்குத்தான் முதல் மிட்டாய்" என்று சொல்லி அதன் கன்னத்தில் ஒரு முத்தமிட்டான். எந்தக் கன்னத்தில் அவன் கையினால் காலையில் அறைந்தானோ, அதே கன்னத்தில் அவன் இதழ் முத்தமிட்டது. அடுத்தபடி அவளும் முத்தமிட்டாள். அந்த இரண்டு முத்தங்களும் மருந்து போல உதவின. குழந்தையின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. கையில் இருந்த மிட்டாயைக் கடித்துக் கொண்டே தந்தையையும் தாயையும் மாறி மாறிப் பார்த்தது; என்ன தோன்றிற்றோ தெரியவில்லை; களுக்கென்று சிரித்தது; "சிரிக்கிறதைப் பார், போக்கிரி; என்று சொல்லிக்கொண்டே அவன் பெருமூச்சு விட்டான். அப்பாடி! இப்போது என்ன ஆறுதல்!! என்ன ஆனந்தம்!!!

– சிறுகதைக் களஞ்சியம்
தொகுதி–I நூலிலிருந்து
வெளியீடு :
சாகித்திய அகாதெமி

• • •

## தூத்துக்குடியில் முதன்முறையாக புள்ளிக்கலவா மீன்வளர்ப்பு



தூத்துக்குடி மீன்துறை உதவி இயக்குநர் (நீர் உயிரின வளர்ப்பு) அவர்களின் கட்டுப்பாட்டில், தூத்துக்குடியிலிருந்து 31 கிலோ மீட்டர் தூரத்தில் தாமிரபரணி ஆறும், வங்காளவிரிகுடா கடலும் சங்கமிக்கும் கழிமுகக் கரையில் அமைந்துள்ள புன்னக்காயல் எனும் கடற்கரை கிராமத்தில் 1 எக்டேர் நீர்ப்பரப்பில் இப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் இறால் வளர்ப்பை ஊக்குவிப்பதற்காகவே இப்பண்ணை அமைக்கப்பட்டது. தற்போது உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி இந்திய நீர்வாழ் உயிரின வளர்ப்பு ஆணையத்திடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டு இப்பண்ணை செயல்பட்டு வருகிறது.

இறால் வளர்ப்பில் நோய் தாக்குதலின் காரணமாக தனியார் இறால் பண்ணையாளர்கள் நஷ்டத்தில் வாடியும், பண்ணைகள் செயல் இழக்கும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளார்கள். இதனைத் தவிர்க்க மாற்று மீன் இன வளர்ப்பு தொழில்நுட்ப முறைகளை அரசு இப்பண்ணையின் மூலம் இறால் வளர்ப்பிற்கு அளித்து வருகிறது. மேலும் இப்பண்ணை சுற்றுப்புற சூழலுக்கு உகந்த முறையில் மீன்வளர்ப்பை மேற்கொள்வது (Eco-friendly fish culture) மற்றும் ஏற்றுமதி வாய்ப்புகளும், உள்நாட்டு மீன்விற்பனையில் அதிகவிலை பெறக்கூடிய மீன்வகைகள் இங்கு சோதனை மூலம் வளர்க்கப்பட்டு உவர்நீர் மீன்வளர்ப்போருக்கு அறிவிக்கப்படுவதும் இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்தியாவிலேயே முதன்முறையாக புள்ளிக்கலவா (Epinephelus tauvina) என்னும் கடல் மீன் இப்பண்ணையில் வெற்றிகரமாக வளர்க்கப்பட்டுள்ளது. கடலிலிருந்து புள்ளிக்கலவா மீன்குஞ்சுகள் (5 முதல் 10 கிராம் எடை, 10 முதல் 15 செ.மீ. வரை நீளம்) சேகரிக்கப்பட்டு 8லிருந்து 10 மாதங்கள் இப்பண்ணையில் வளர்க்கப்பட்டு 800 கிராம் முதல் 1¼ கிலோ கிராம் வரை எடை, 40 முதல் 45 செ.மீ. நீளம் வரை வளர்ந்துள்ளது. இது கடல் மீன்வளர்ப்பில் பெரிய சாதனையாகும். பொதுவாக கடலில் பவளப்பாறைகள் நிறைந்துள்ள இடங்களில் வளரும் இம்மீன்களை கடலிலிருந்து சேகரம் செய்து புன்னக்காயல் சமவெளியில் உள்ள உவர்நீர் மீன்பண்ணையில் வளர்த்தெடுப்பது மிகப்பெரிய சாதனையாகும். மேலும், இம்மீன்களுக்கு தென்கிழக்கு ஆசிய நாடுகளில் ஏற்றுமதி வாய்ப்பு அதிகம் உள்ளது. இப்பண்ணையில் வளர்க்கப்பட்ட புள்ளிக்கலவா மீன்கள் தாய்லாந்து நாட்டிற்கு ஏற்றுமதி செய்வதற்கு மாதிரி மீன்கள் அனுப்பப்பட்டுள்ளது. (Sample)

இது, தவிர, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிக வருவாய் ஈட்டித்தரும் கொடுவா மீன்கள் (Lates Calcarifer) இப்பண்ணையில் வளர்க்கப்படுகிறது. இதற்காக மீன்குஞ்சுகள் மத்திய உவர்நீர் மீன்வளர்ப்பு நிலையம் முட்டுக்காடுகளிலிருந்து பெறப்பட்டு புன்னக்காயல் மீன்பண்ணையில் வளர்க்கப்படுகிறது.

இக்குளத்திலிருந்து வெளியேறும் கழிவுநீரை நேரடியாக வெளியேற்றி மாசுபடுத்தாமல் மற்றொரு குளத்தில் இருப்பு செய்து அதில் பால்கெண்டை மீன்கள் வளர்க்கப்பட்டு பின்பு சுற்றுப்புற சூழலுக்குத் தகுதியான நீர் அக்குளத்திலிருந்து வெளியேற்றப்படுகிறது. இம்மீன் வளர்ப்பு தொழில் நுட்பத்தை உவர் நீர் மீன்வளர்ப்போருக்கு பயிற்சியாக அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் இதுபோன்ற அரசு மாதிரி உவர்நீர் மீன்வளர்ப்பு பண்ணை செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது.

**துரை ராஜ்குமார்,**
– செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி மாவட்டம்.



# தமிழக அமைச்சரவை

மாண்புமிகு முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் தனது அமைச்சரவையை 9–11–2002 அன்று மாற்றியமைத்தார். அதன் விவரம் பின்வருமாறு :

## தமிழக அமைச்சர்கள் ஏற்றுள்ள துறைகள்



முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா**

*பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப்பணி,*
*இந்தியக் காவல்பணி,*
*பிற அகில இந்திய பணிகள்,*
*மாவட்ட வருவாய் அலுவலர்கள்,*
*உள்துறை காவல், சிறுபான்மையினர்.*

திரு. **ஓ. பன்னீர்செல்வம்**

*பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள்,*
*பாசனவசதி, கலால், மொலாசஸ், லஞ்ச ஒழிப்பு*
*மற்றும் சிறை.*

திரு.**சி.பொன்னையன்**

*நிதி, திட்டம், தேர்தல் மற்றும் சட்டப்பேரவை,*
*எடை மற்றும் அளவை, கடன் நிவாரணம்,*
*சீட்டு கம்பெனிகள் பதிவு.*

டாக்டர் **எம்.தம்பிதுரை**

*கல்வி, தொழில்நுட்பக்கல்வி, அறிவியல் மற்றும்*
*தொழில்நுட்பம், விளையாட்டு மற்றும்*
*இளைஞர் நலன், தொல் பொருள் ஆய்வுத்துறை,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழர் பண்பாடு, அகதிகள்*
*நலன்.*

திரு. **டி.ஜெயக்குமார்**

*சட்டம் மற்றும் நீதிமன்றம், தகவல் தொழில்நுட்பம்.*

திரு.**பி.சி. ராமசாமி**

*இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை.*

திரு.**எஸ்.செம்மலை**

*சுகாதாரம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.*

திரு. **என்.தளவாய் சுந்தரம்**

*வருவாய், மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை ஆட்சியர்கள், பதிவுத்துறை, முத்திரைத்தாள், அச்சு எழுதுபொருள், அரசு அச்சகம், பாஸ்போர்ட், பூதான் மற்றும் கிராமதான்.*

திரு.**ஆர்.ஜீவானந்தம்**

*வேளாண்மை, வேளாண் பொறியியல், வேளாண் சேவைக் கூட்டுறவு, தோட்டவியல், கரும்பு மற்றும் கரும்பு வளர்ச்சி.*

திருமதி **பா.வளர்மதி**

*சமூக நலன், மகளிர் மற்றும் குழந்தைகள் நலன், சத்துணவு, ஆதரவற்றோர் இல்லங்கள், ஊனமுற்றோர் நலன்.*

திரு.**எஸ்.கருப்பசாமி**

*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் மக்கள், கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன், முன்னாள் படைவீரர் நலன்.*

திரு.**நத்தம் ஆர்.விஸ்வநாதன்**

*போக்குவரத்து, தேசியமயமாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் துறைமுகம்.*

திரு. **நயினார் நாகேந்திரன்**

*மின்துறை மற்றும் மரபு சாரா எரிசக்தி வளம், தொழில்துறை*

திரு.**செ.ம.வேலுசாமி**

*வணிகவரி*

திரு.**எம்.சி.சம்பத்**

*உள்ளாட்சி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மற்றும் நகர்புற குடிநீர் வினியோகம்.*

திரு. **பி.மோகன்**

*கூட்டுறவு, உணவு, சிவில் சப்ளை*

திரு. **அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்**

*வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை*

திரு. **எஸ்.ராமச்சந்திரன்**

*பால் மற்றும் பண்ணை வளர்ச்சி*

திரு.**கே.கே.பாலசுப்ரமணியன்**

*செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பம், திரைப்பட்ச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு.*

திரு.**வி.சோமசுந்தரம்**

*கைத்தறி மற்றும் ஜவுளி*

திரு.**எம்.ராதாகிருஷ்ணன்**

*மீன்வளம்*

திரு.**ஏ.மில்லர்**

*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக்கழகம்*

திரு.**ஏ.பாப்பா சுந்தரம்**

*பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர்.*

திரு. **ஏ.அன்வர் ராஜா**

*தொழிலாளர் நலம், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி நகர்புறம் மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*

திரு.**பி.வி.தாமோதரன்**

*கால்நடைப் பராமரிப்பு.*


திரு.**ஆர்.வடிவேலு**

*ஊரகத்தொழில்துறை*

திரு.**ஆர்.வைத்தியலிங்கம்**

*வனம் மற்றும் சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாடு*





புதுக்கோட்டை மாவட்டத்தில்

# சாண எரிவாயுத் திட்டம்

அரசின் சாண எரிவாயுத் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பாக செயல்முறைப்படுத்தப்பட்டு வருகிறது.

2001–2002 நிதியாண்டில் பல்வேறு பகுதிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்ட முகமையின் மூலம் 80 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டிருந்தன. மாவட்டத்திற்கு சாண எரிவாயு அமைப்பதற்கான குறியீட்டளவை மாவட்டம் முழுவதும் செயல்படுத்தாமல் குறிப்பிட்ட பகுதியில் மொத்தமாகச் செயல்படுத்தி பின்னர் படிப்படியாக மற்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது. அதன்படி 2002–03ஆம் நிதியாண்டில் 7 குடியிருப்புப் பகுதிகளில் 105 சாண எரிவாயு கலன்கள் 4 மாதகாலத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் தண்ணீர் தட்டுப்பாடு உள்ள வறட்சிப் பகுதியாகவும் அதே சமயத்தில் கால்நடைகள் போதிய அளவில் உள்ளதாகவும் இருப்பதால் இத்திட்டம் மிகவும் ஏற்புடையதாக உள்ளது. எனவே அரசின் மரபு சாரா எரிசக்தி திட்டத்தின் கீழ் முன்னுரிமை அளித்து சாண எரிவாயுத் திட்டத்திற்கு மாவட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் பல குடும்பங்களுக்குச் சொந்தமாகக் கால்நடைகள் உள்ளதால் இந்திரா ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் கச்சா வீடுகளை மேம்படுத்துதல் மற்றும் கடன் மற்றும் மானியத் திட்டத்தின் கீழ் ஊரக வீட்டுவசதிகளைச் செயல்படுத்தும் போது மாவட்ட நிர்வாகம் சாண எரிவாயுத் திட்டத்தையும் இணைத்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. வீடுகள் கட்டுதல் மற்றும் எரிவாயு அமைத்தல் ஆகிய இரு திட்டங்கள் இணைந்து செயல்படுவதன் மூலம் மக்களுக்கு அதிக மானியம் கிடைக்க வாய்ப்புள்ளது.



புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் செம்பாட்டூர் ஊராட்சியில் மட்டும் 29 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் மேலாத்தூர் ஊராட்சியில் மட்டும் 24 சாண எரிவாயு கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. வேலையற்ற கிராமப்புற இளைஞர்களுக்கு இத்திட்டம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. 30 இளைஞர்கள் கொத்தனார்களாக பணியாற்ற தேர்வு செய்யப்பட்டு அவர்களில் 15 நபர்கள் பயிற்சியினை நிறைவு செய்து பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

சாண எரிவாயுத் திட்டத்தின் மூலம் விவசாயம் மற்றும் வீட்டு உபயோகத்திற்காக இறைப்பான்களை இயக்க முடிவதால் விவசாயிகள் பெரும் செலவு ஏற்படக்கூடிய மின் கட்டணத்தை சேமிக்க இயலும். குண்ணாண்டார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மேலப்புதுவயல் கிராமத்தை சார்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் திரு. திருநாவுக்கரசு ஓராண்டில் ரூ.5,000 வரை மின் கட்டணத்தை சாண எரிவாயுவின் மூலம் குறைத்திருப்பதாக கூறுகிறார். இத்திட்டம் செயல்படுத்தப்படும் இடங்களில் எல்லாம் மின் கட்டணம் குறைந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இன்னும் பல கிராமங்களில் விளக்குகள் எரிக்கவும், சமையலுக்கும் சாண எரிவாயு பயன்படுத்தப்படுகிறது. இதன் மூலம் கிராமப்புறங்களில் இத்திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என அறிய முடிகிறது. மேலும் எரிவாயு கலன்களில் கிடைக்கும் கழிவுப் பொருட்கள் விவசாய நிலத்திற்கு நல்ல உரமாகவும் அமைகின்றது. தற்போது அடுப்பு எரிக்க விறகு கிடைப்பது அரிதாகி வருவதால் இருக்கின்ற மரங்களைக் காக்க சாண எரிவாயு மிகச் சிறந்த மாற்று எரிபொருளாக பயன்பட்டு வருகிறது.

*– துரை.தாமரைச்செல்வம்,*
*செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,*
*புதுக்கோட்டை*

★ ★ ★

# மூலிகையில் சிறந்த கரிசலாங்கண்ணி

❑ ஏ. ஆர். என். துரைராஜ்

நமது இந்திய நாடெங்கும் பரந்து காணப்படுகின்ற மூலிகைகளில் சிறந்தது கரிசலாங்கண்ணிக் கீரை. இது இமயமலைச் சரிவுகளிலும் அமோகமாக வளர்ந்து காணப்படுவதைப் பயிரியல் வல்லுநர்கள் கண்டு பிடித்துள்ளனர்.

மூலிகை உலகத்திலே இக் கீரைக்குப் பெருமை அதிகம், சித்தர் வடிவத்தில் வந்த இராமலிங்க அடிகளார்கூட இதைப் பற்றிச் சிறப்பித்திருக்கிறார். சங்க இலக்கியங்களில் ஒன்றாகிய மலைபடுகடாம் கையாந்தகரை என்று கூறும்.

தமிழ் மூலிகை சாத்திரத்தில் இதற்குப் பல பெயர்களுண்டு. அவையாவன: கரிசலாங்கண்ணி, கரிசணாங்கண்ணி, கையார்ந்த கீரை, கரிப்பான், பிருங்கராஜம், பொற்கொடி, பொற்பாவை, பொற்றிலைப்பாவை, கரிசாலை, கைகேசி.

கரிப்பான் என்ற கரிசலாங்கண்ணிக் கீரை காயசித்தி நல்கும் உயர்ந்த மூலிகையாகும். இது உடலுக்குப் பொன் வடிவத்தையும், யானையை ஒத்த வலிமையையும் அளிக்கக் கூடியது; மருத்துவ மகிமை அதிகமாக உள்ளது எனச் சித்த வைத்திய மூதாதையர்கள் தெளிவுபடுத்தி இருக்கிறார்கள். என்றாலும், பெருமை மிகுந்த இது, மருந்தாகப் பயன்படுகிறது. இதன் இலை, தண்டு, வேர் அனைத்துமே மருத்துவத்திற்கு உரியது.

### பொற்றலை கையாந்த கரை

*திருவுண்டாம் ஞானத்*
*தெளிவுண்டா மேலை*
*யுருவுண்டா முள்ளதெல்லா*
*முண்டாங்–குருவுண்டாம்*
*பொன்னாகத் தன்னாகம்*
*பொற்றலைக்கை யாந்தகரை*
*தன்னாகத் தின்றாகத் தான்*

பொருள்: பொற்றலைக் கையாணை (மஞ்சள் கரிசாலை) கறியாகச் செய்து உண்ண, அறிவும் தெளிவும் திருவும் சேரும்.

### தீரும் வியாதி

மூலநோய், தேள்கடி, மயக்கம், பித்த எரிச்சல், நீர்க்கட்டு, மலக்கட்டு, காசம், இளைப்பு, பாண்டு, சோகை, கல்லீரல் நோய், யானைக்கால் நோய், காய்ச்சல், வீக்கம், கட்டி, தொழுநோய், காதுவலி, ஜலதோஷம், விஷப் பூச்சிக்கடி, கண்காசம், இருமல், காமாலை, தலைப்பொடுகு, இரத்தப்போக்கு, கடுப்பு, உடல் கனம் ஆகிய நோய்கள் இதனால் நீங்குவதுடன் இரத்தமும் சுத்தியாகும்.

### சோகை, மயக்கம், பித்த எரிச்சல், நீர்க்கட்டு, மலக்கட்டு இவை நீங்குவதற்கு....

தேவையான கரிசலாங்கண்ணி, குப்பைமேனி, செருப்படை இலை ஆகிய இம் மூன்று வகையான இலைகளையும் ஒரே சமமாக எடுத்து வெயிலில் நன்கு காய வைத்தால் சருகுபோல் ஆகிவிடும். இதை எடுத்து அம்மியில் வைத்துத் தட்டித் தூள் செய்து மெல்லிய துணியில் சலித்து (வடிகட்டி) வைத்துக்கொண்டு, அத்தூளில் இரண்டு கிராம் அளவு எடுத்து அதே அளவு சர்க்கரையைச் சேர்த்துக் கலந்து, வாயில் போட்டு வெந்நீர் அருந்தவும். தொடர்ந்து அரைமண்டலம் (24 நாள்) அருந்திவர, சோகை சம்பந்தமான மேற்கண்ட பிணிகள் நீங்கி நலம் பெறும்.

### காசம் - இளைப்பு நீங்க.....

தேவையான கரிசலாங்கண்ணி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து, வெயிலில் காயவைத்து, நன்கு சருகு போல் காய்ந்த பிறகு அதை எடுத்து, அம்மியில் வைத்துத் தட்டி, தூள் செய்து, 140 கிராம் அளவு எடுத்துக் கொள்ள வேண்டும். பின், மெல்லிய துணியில் சலித்து வைத்துக் கொள்ளவும். பிறகு அரிசி, திப்பிலி 35 கிராம் எடுத்து இடித்துத் தூள் செய்து அதையும் மெல்லிய துணியில் போட்டுச் சலித்து, இந்த இரண்டையும் கலந்து சேமித்து வைத்துக்கொண்டு, தேவையானபோது 5 கிராம் சூரணம் வீதம் இரு வேளை, தேனில் கலந்து சாப்பிட்டு வரவும். 20 நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வரும் பட்சத்தில் காசம், இளைப்பு ஆகியவை நீங்கி நலம் விளையும்.

*குறிப்பு :* புளி சேர்க்கக்கூடாது; மீன், கருவாடு நீக்க வேண்டும்.

### பாண்டு-சோகை நீங்க...

தேவையான கரிசலாங்கண்ணி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து வெயிலில் நன்கு காயவைத்து, சருகுபோல் ஆன பிறகு எடுத்து அம்மியில் வைத்துத் தட்டிச் சூரணம் செய்து இச் சூரணத்தை அயச்செந்தூரத்திற்கு அனுபானமாகக் கொள்ள மேற்கண்ட பிணிகள் நீங்கும்.

### காமாலை நீங்க...

தேவைப்பட்ட கரிசலாங்கண்ணி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து, நீர்விட்டு, இடித்து, சுமார் 25 கிராம் சாறெடுத்து, காலையில் மட்டும் அருந்தி வரும் பட்சத்தில் காமாலை நீங்கிச் சுகம் பெறலாம்.

குறிப்பு : அவ்வப்போது புதிதாகச் சாறெடுத்துப் பயன்படுத்த வேண்டும்.

### யானைக்கால் நீங்க...

தேவைப்பட்ட கரிசாலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து, அம்மியில் வைத்து, நல்லெண்ணெய் விட்டு அரைத்து, அவ்விழுதை மேலுக்குப் பூசலாம். மூத்திரத்தில் ரத்தம் வர நேர்ந்தால் இதனுடைய இலைச்சாறு 100 மி.லி. வீதம் தினம் 2 வேளை கொடுக்க, சுகம் காணும்.

### உடல் தோல் பொன் நிறம் காண...

தேவைப்பட்ட கரிசாலை இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்து அம்மியில் வைத்து, நீர் விட்டு அரைத்து, அவ்விழுதை உடலில் தேய்த்துக் குளிக்க, நாளடைவில் தோல் பொன்னிறமாகமாகும்.


### கல்லீரலில் சுருக்கம் ஏற்படுவது நீங்கவும் பசி இல்லாமை குணமாகவும்...

மஞ்சள் கரிசலாங்கண்ணி கீரையைச் சுத்தம் பார்த்து, பிறகு, சமையலில் பருப்புடன் சேர்த்துப் பொரியல் செய்து அல்லது கடைந்து, முதல் சாதத்தில் போட்டுச் சிறிது நெய்விட்டுப் பகல் உணவில் சாப்பிட வேண்டும். 2 வாரத்திற்கு இது மாதிரி அனுதினமும் சாப்பிட, மேற்கண்ட பிணி நீங்கி, பசி நன்கு எடுக்கும்.

*குறிப்பு :* இக்கீரையை இரவில் சாப்பிடக்கூடாது.

### காய்ச்சல்-வீக்கம்-கட்டி-தொழுநோய் இவை நீங்க...

தேவைப்பட்ட, கரிசலாங்கண்ணி இலையினுடைய சாறு ஒரு பங்கும், ஆமணக்கு நெய் ஒரு பங்கும் கலந்து, கெடாயில் ஊற்றி, அதில் கொஞ்சம் வெள்ளைப் பூண்டு சேர்த்து, அடுப்பில் வைத்து எரித்து, பதத்தில் வந்த பிறகு இறக்கி, வடிகட்டி, பாட்டிலில் சேமித்து வைத்துக்கொண்டு, வேளை ஒன்றிற்கு 35 கிராம் வீதம் அருந்த, மேற்கண்ட பிணிகள் நீங்கி நலம் பெருகும்.



### மாலையில் கண் பார்வை மங்கலாக காண்பவர்கள் நலம் பெற...

தேவையான, மஞ்சள் கரிசாலை இலையையும் முசுமுசுக்கை இலையையும் சமமாக எடுத்துச் சுத்தம் பார்த்து அம்மியில் வைத்துச் சிறிது நீர் விட்டு அரைத்து, எலுமிச்சை அளவு எடுத்து, உருட்டி, அதிகாலையில் பல் துலக்கிய பிறகு உள்ளுக்குச் சாப்பிட்டு 200 மி.லி. பால் அருந்தவும், இந்த விதமாக அருந்தி வரும் பட்சத்தில் சுமார் 3 வாரத்தில் கண்பார்வை சீர்பெறும்.

### காதுவலி ஜலதோஷம் நீங்க...

கரிசாலைச் சாறு இரண்டு துளி எடுத்துக் கொண்டு இரண்டு கிராம் தேனில் கலந்து கொடுக்க, கைக் குழந்தைகளுக்கு உண்டாகும் ஜலதோஷம் (அதாவது நீர்க்கோவை) நீங்கும். மற்றும் வலிக்கும் காதுகளில் இரண்டு சொட்டு இலைச் சாற்றை விட, காதுவலி நீங்கும்.

### சேத்தும் பாண்டு குணமாக...

தேவைப்பட்ட கரிசலாங்கண்ணி இலையும், மிளகும் சேர்த்து அம்மியில் வைத்து அரைத்து, புன்னைக்காயளவு எடுத்து, ஐந்து நாட்கள் காலை–மாலை உட்கொண்டு வந்தால் சேத்தும் பாண்டு நீங்கும்.

பத்தியம்: கருவாடு, மீன், அகத்திக்கீரை, சிறுகீரை, பரங்கிக் காய் நீக்கவும்.

### பற்களின் மஞ்சள் நிறம் நீங்க...

தினமும் அதிகாலையில் கரிசலாங்கண்ணியின் வேரால் பல் துலக்கவும். பல் துலக்கிய பிறகு, இக்கீரையை 2 பிடி எடுத்து மென்று தின்று ஒரு டம்ளர் தண்ணீர் அருந்தவும். நாளடையில் பற்களில் மஞ்சள் நிறக்கறை படிவது மறைந்தே போகும்.

### விஷப் பூச்சிகள் தீண்டினால்...

தேவைப்பட்ட, கரிசலாங்கண்ணி இலையைக் கொண்டு வந்து சுத்தம் பார்த்தபின், அம்மியில் வைத்து அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து, 200 மி.லி. வெள்ளாட்டுப் பாலில் கலந்து 3 நாள் கொடுக்க, மேற்படி விஷம் மாறி நலமாகும்.

### கண், காசம், காது நோய் நீங்க...

கரிசலாங்கண்ணிச் சாறு 400 மி.லி., நெல்லிக்காய்ச் சாறு 400 மி.லி., நல்லெண்ணெய் 400 மி.லி. இவை அனைத்தும் கலந்து ஒரு கெடாயில் ஊற்றி, பிறகு அதிமதுரம் 7 கிராம் எடுத்து அரைத்து, இதையும் கெடாயில் போட்டு அடுப்பில் வைத்துக் காய்ச்சிப் பதமாய் வந்த பிறகு வடிகட்டித் தலை முழுக, நாளடைவில் மேற்படி பிணிகள் நீங்கும்.

### இருமல் விலக...

இலையின் சாறு 100 மி.லி., நல்லெண்ணெய் 100 மி.லி. இந்த இரண்டையும் கலந்து கெடாயில் ஊற்றி அடுப்பில் வைத்துச் சிறு தீயாக எரித்து, பக்குவத்துடன் எடுத்து வடித்து, 2 கிராம் அளவு காலை – மாலை இருவேளை அருந்திவர, இருமல் நோய் நீங்கும்.

### நரைமுடி கறுக்க...

கரிசலாங்கண்ணி இலை 50 கிராம், கொட்டைக் கரந்தையின் இலை 50 கிராம் இவை இரண்டையும் வெயிலில் காய வைத்துச் சருகுபோல் ஆகிய பிறகு எடுத்து, அம்மியில் வைத்துத் தட்டி, சூரணம் செய்து மெல்லிய துணியில் சலித்து (அல்லது) வடிகட்டி ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு 2 கிராம் சூரணத்துடன் தேக்கரண்டி அளவு தேனைக் கலந்து சாப்பிட வேண்டும். தொடர்ந்து ஒரு மண்டலம் (40 நாள்) சாப்பிட்டு வர நரைமுடி படிப்படியாகக் கருநிறம் அடையும்.

### தலைப் பொடுகு நீங்க.... (தைல முறை)

கரிசலாங்கண்ணி இலை, அருகம்புல் இவைகளைத் தனித்தனியாக எடுத்து இடித்து ஒவ்வொன்றும் 200 மி.லி. வீதம் சாறு எடுத்துக் கொள்ள வேண்டும். பின், தேங்காயெண்ணெய் 200 மி.லி. எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு முற்றிய தேங்காயாகப் பார்த்து எடுத்து, நன்கு திருகி அதன் பால் 200 மி.லி. எடுத்துக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு கெடாயில் (1) சாறு வகைகள் (2) எண்ணெய் (3) தேங்காய்ப்பால் ஆகிய இம் மூன்றையும் ஊற்றிக் கலந்து அடுப்பில் வைத்துக் காய்ச்ச வேண்டும். சாறு சுண்டி, நீர் சத்தம் அடங்கி, மருந்துகள் சிவந்து வரும் சமயம் கெடாயை அடுப்பிலிருந்து இறக்கிக் கீழே வைத்து எண்ணெய்யை ஆறவிட வேண்டும். ஆறிய பின் வடிகட்டி ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் தலைக்குத் தடவலாம். தலை முழுகித் தலையைச் சுத்தமாக வைத்திருக்கும் பட்சத்தில் பொடுகு மறைந்து விடும்.

### இரத்தப் போக்கு, கடுப்பு, அதிக வயிற்றுப் போக்கு நீங்குதற்கு...

தேவையான, கரிசலாங்கண்ணி இலை, கறிவேப்பிலை இலை இவற்றைக் கொண்டுவந்து தனித்தனியே காய வைத்துச் சூரணம் செய்து மெல்லிய துணியில் சலித்து, ஒரு பாட்டிலில் சேமித்து வைத்துக் கொண்டு, காலை, இரவு இருவேளை (25 கிராம் வீதம்) தேனில் கலந்து சாப்பிட்டு வரும் பட்சம் மேற்கண்ட நோய்கள் நீங்கும். மற்றும் கொஞ்சம் கொஞ்சமாக இரத்தம் வெளியேறும் மூலநோய், பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய்க் கஷ்டங்கள், இரத்த சோகை நோய்கள் ஆகியவை நீங்கிப் பூரண குணம் கிடைக்கும்.

### பாம்பின் நஞ்சு நீங்க...

கரிசலாங்கண்ணி இலையின் சாற்றை 5 கிராம் எடுத்து அதனுடன் மோர் கலந்து அருந்த பாம்பின் நஞ்சு நீங்கும்.

### மயக்கம், பித்தம் குணமாக... (தைல முறை)

கரிப்பான் சாறு, நெல்லிக் காய்ச் சாறு வகைக்கு 200 மி.லி. எடுத்துக் கொண்டு பசுவின்பால் 400 மி.லி. அதிமதுரம் 9 கிராம் எடுத்து அரைத்துப் போட்டுக் காய்ச்சி, மெழுகுப் பதத்தில் இறக்கி முழுகி வந்தால் சகல பித்தமும் மயக்கமும் நீங்கும்.

### தேள்கடி, மூலநோய் போக...

தேவைப்பட்ட இலையை எடுத்து அரைத்து, அவ்விழுதைத் தேள்கடித்த இடத்தில் நன்றாய்த் தேய்த்து அதையே அவ்விடத்தில் வைத்துக் கட்டினால் நஞ்சு நீங்கும்.

இலையை வேக வைப்பதாலுண்டான ஆவியை மூல நோய்களுக்குப் பிடிக்க அந்நோய் தீரும்.



### வேர்

இச்செடியின் வேரும் ஒரு சிறந்த மருந்துப் பொருளாகப் பயன்படுகிறது. இச்செடியின் வேரிலிருந்து எடுக்கப்படும் சாறு, வாந்தி எடுக்கச் செய்யும். இது வாந்தி மருந்தாகப் பயன்படுகிறது. அத்துடன் பேதி மருந்தாகவும் பயன்படுகிறது. கால்நடைகளுக்கு, கால் இடுக்குகளிலும் கழுத்துப் பகுதிகளிலும் ஏற்படும் ரணங்களுக்கு வேரை மருந்தாக உபயோகப்படுத்துகிறார்கள்.

### பொதுப் பண்பு

மிகப் பழங்காலத்திலிருந்தே கரிசலாங்கண்ணிக் கீரை இந்திய மருத்துவத்தில் இடம் பெற்றிருக்கிறது. இக்கீரை, இரத்தத்தைச் சுத்தம் செய்வதில் இணையற்றது. மற்றும் கண் ஒளியைக் கூர்மையாக்குவதிலும் இக்கீரை சாலச் சிறந்தது.

இக்கீரை உடலுக்கு உரம் ஊட்ட வல்லது. மண்ணீரலில் ஏற்படும் வீக்கம், தோல் வியாதி மற்றும் உடலில் ஏற்படும் வீக்கங்களுக்கு இக்கீரையை வதக்கி ஒத்தடம் கொடுக்கலாம்.

இலையும் தண்டும் கொண்டு பல் துலக்கலாம். இவ்வாறு பல் துலக்குவதால் பல்லில் ஏற்படும் ஈறு வீக்கம், பல் வலி, எனாமல் தேய்தல் போன்ற குறைகள் நீங்கும்.

இக்கீரையை உண்பதனாலும், இதனை மேலுக்குத் தேய்த்துக் கொள்வதாலும் உடலிலும் தலையிலுமுள்ள முடி நன்கு கறுத்து வளரும். அவ்வாறு வளர்ந்த முடிகள் பளபளப்போடு மிளிரும் தன்மை உடையவை. அன்றியும் இக்கீரை, உடலைப் பொன்னிறமாக்கும்.

உடலில் சப்த தாதுக்களை உரமாக்கி, வலுவைத் தந்து, உயிர் அணுக்களைப் பெருக்கித் தங்க நிறம் போன்ற சருமத்தை உண்டாக்கும் குணமுடையது.

இக்கீரையை உணவோடு சேர்த்து உண்பதனால் உடம்பில் தங்கிய கெட்ட நீர் வெளியேறுகின்றது; உடல் வளம் பெறுகிறது; மலச்சிக்கல் நீங்கப் பெற்று உடல் நலம் பெறுகிறது. எனவே, இக்கீரையை வீட்டுத் தோட்டத்தில் வளர்ப்பதால் நமக்கு இக்கீரை உணவாகப் பயன்படுவதோடு நல்ல மருந்தாகவும் பயன்படுகிறது.

## தொண்டையைக் காக்க....

*தொண்டை, சிவப்பான நுட்பமானதொரு சதைக் குழி, உணவுக் குழாய்க்கும் குரல்வளைக்கும் மேலாக இருப்பது. இந்தத் தொண்டையை மனிதர்கள் பல நேரங்களில் தவறாகப் பயன்படுத்துவதால் குரல்வளை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் எரிச்சலும் வலியும் ஏற்படுகின்றன. சிலருக்கு இலேசாகவும், சிலருக்குக் கடுமையாகவும் இருக்கும்.*

### தொண்டை வலி, தொண்டைப் புண்ணுக்குக் காரணங்கள்:

- *கத்திப் பேசுவது, நெடுநேரம் பேசுவது, பாடுவது.*
- *எரிச்சலை உண்டாக்கும் தூள்கள் புகைகள் இவற்றைச் சுவாசிக்க நேரிடுவது.*
- *அதிகச் சூடான திரவங்களை, கார–மசாலா வகைகளைச் சாப்பிடுவது.*
- *வரம்பின்றிப் புகைப்பது, குடிப்பது, குளிர்ச்சியான பண்டங்களைச் சாப்பிடுவது. இதனால், தொண்டை கட்டும்; கிருமிகள் பெருகும்.*

### அறிகுறிகள்

- *தொண்டைப் புண்ணுக்கு அறிகுறி தொண்டை சிவந்து, திசுக்கள் தடித்துப் போவது. தாகம் எடுத்தபடி இருக்கும். எதையாவது விழுங்கத் தோன்றும்.*
- *இருமல் அடிக்கடி வரும். சில நேரங்களில் தொண்டை கம்மிப் போகும். ஆரம்பத்தில் வறட்சியும் பிறகு சளியும் பிடித்துத் தொல்லைப்படுத்தும். எரிச்சலும் வலியும் மிகும். எதையும் விழுங்குவது கஷ்டமாக இருக்கும். மருத்துவரை அணுகி தகுந்த சிகிச்சை உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.*

### தடுப்பு நடவடிக்கைகள்:

- *தொண்டைக்கு எரிச்சலை உண்டாக்காத பால், தயிர், மோர் போன்ற பொருள்களை அதிகமாகவும், கார வகைகள், மசாலாக்கள், ஊறுகாய்கள் போன்றவற்றைக் குறைவாகவும் பயன்படுத்துவதன் மூலம், தொண்டைப் புண் வராமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.*
- *வெந்நீரில் உப்புப் போட்டு, ஒரு நாளைக்கு மூன்று தடவை வாய் கொப்பளிக்கவும்.*
- *புகை பிடிப்பதையும், குடிப்பதையும் விட்டு விடுக.*
- *நீண்ட நேரம் பேசுவதையும் பாடுவதையும் தவிர்க்கவும்.*

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு தீபாவளி பரிசுப் பை

நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2 இலட்சத்து 4 ஆயிரத்து 670 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு தீபாவளி பரிசுப் பைகளை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா.ஜீவானந்தம் அவர்கள் வழங்கினார்.

காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டதாலும், காவிரியில் தண்ணீர் வராத காரணத்தால் ஏற்பட்ட வறட்சி நிலையினாலும், பாதிக்கப்பட்ட நிலமற்ற விவசாய கூலி தொழிலாளர்கள் 10 இலட்சம் பேருக்கு தலா ரூ.210 மதிப்பில் மொத்தம் ரூ.21 கோடி செலவில் தீபாவளி பரிசு வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதன்படி நாகப்பட்டினம் மாவட்டத்தில் நியாய விலைக் கடைகளின் மூலம் 2 இலட்சத்து 4 ஆயிரத்து 670 நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு ரூ.4.30 கோடி மதிப்பிலான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

நாகப்பட்டினம் தாலுகாவில் 33,966 பேருக்கும், வேதாரண்யம் தாலுகாவில் 33,477 பேருக்கும், திருக்குவளை தாலுக்காவில் 12,644 பேருக்கும், கீழ்வேளூர் வட்டாரத்தில் 22,653 பேருக்கும், மயிலாடுதுறை வட்டாரத்தில் 41,759 பேருக்கும், சீர்காழி வட்டாரத்தில் 35,040 பேருக்கும், தரங்கம்பாடி வட்டாரத்தில் 25,131 பேருக்கும் தீபாவளி பரிசுப் பைகள் வழங்கப்பட்டது.

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு.இரா.ஜீவானந்தம் அவர்கள் சீர்காழி பகுதிகளில் 2.11.2002 அன்று சுற்றுப்பயணம் மேற்கொண்டு நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு தீபாவளி பரிசுப் பைகளை வழங்கினார்கள். முதலாவதாக சட்டநாதபுரம், பின்னர் அகனி ஆகிய கிராமங்களில் தீபாவளி பரிசுப் பைகளை வழங்கினார். பரிசுப் பொருட்களைப் பெற்றுக் கொண்ட விவசாயத் தொழிலாளர்கள் மிக்க மகிழ்ச்சியுடன் சென்றதை காண முடிந்தது.

பின்னர் அமைச்சர் பேசும் போது கூறியதாவது :

*தீபாவளிப் பண்டிகையினை எவ்வாறு கொண்டாடப் போகிறோம் என எண்ணி ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு ரூ.21 கோடி நிதி ஒதுக்கி, அதன் மூலம் 10 இலட்சம் நிலமற்ற விவசாய கூலித் தொழிலாளர்களுக்கு தலா ரூ.210 மதிப்பிலான தீபாவளி பரிசுப் பைகளை வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். இதன் மூலம் ஒவ்வொரு விவசாயத் தொழிலாளர்களுக்கும் ரூ.50 ரொக்கப் பணம், 10 கிலோ அரிசி, 250 கிராம் இனிப்பு, 1 கிலோ சர்க்கரை, 100 கிராம் பாசிப்பருப்பு, நெய் 100 கிராம், தேங்காய் 1, காய்கறிகள், மிளகாய், மஞ்சள் போன்ற பொருட்கள் வழங்கப்படும்.*

*தமிழக அரசுக்கு தற்போது உள்ள நிதி நெருக்கடி நிலையிலும், ஏழை எளிய மக்கள் மட்டுமின்றி விவசாயிகளின் நலனில் அக்கறை கொண்டு பல்வேறு திட்டங்களை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து செயலாற்றி வருகிறார்கள். ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகளுக்கு ரூ.311 கோடி கடன் தள்ளுபடி செய்தும், பின்னர் காவிரி டெல்டா பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்ட போது ரூ.49 கோடியில் வெள்ள நிவாரண நிதி உதவிகள், குறுவை சாகுபடி பாதிக்கப்பட்டு வறட்சி நிலை ஏற்பட்ட போது, காவிரி டெல்டா பகுதி நிலமற்ற விவசாயக் கூலி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கிடும் வகையில் ரூ.164 கோடியில் நிவாரணப் பணிகள் நிறைவேற்றிட உத்தரவிட்டார்கள். எனவே தமிழக அரசு,*



*மக்கள் நலனில் அக்கறை கொண்டு செயலாற்றி வரும் இது போன்ற சீரிய திட்டங்களுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும். இவ்வாறு அமைச்சர் பேசினார்.*

*அமைச்சர் அவர்களுடன் தகவல் தொழில்நுட்பச் செயலாளரும், மண்டல ஆணையருமான திரு.விவேக் ஹரி நாராயணன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சதீப் ஜெயின்,இ.ஆ.ப., பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் திரு.ரெங்கநாதன், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்திரமோகன், குத்தாலம் சட்டமன்ற உறுப்பினர் திரு.நடராசன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் திரளாக கலந்து கொண்டனர்.*

– கா. பேரின்பநாயகம்
*செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,*
*நாகப்பட்டினம் மாவட்டம்*

ஆசிரியரும் வெளியிடுபவரும் : எஸ். நடராஜன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 5368926/5364906 தொலையச்சு : 5368926

தமிழ்நாடு ... கப்பகம்
224073
சென்னை-600 0[illegible]

## பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்

**உ**ங்கள் மனங்கவர்ந்த பட்டுப்புடவை ஒன்றை வாங்கவேண்டும் என்று நீண்டநாட்களாக நினைத்திருப்பீர்கள். ஆனால் அதன் விலையை நினைத்து வாங்காமல் இருந்திருப்பீர்கள். அப்படிப்பட்ட உங்களின் ஆசையை நிறைவேற்றவே, கோ-ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்துகிறது, "**பட்டுப்புடவை சேமிப்புத் திட்டம்**".

மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை முதல் 9 மாதங்களுக்குச் செலுத்தினால் 10-வது தவணையை கோ-ஆப்டெக்ஸ் ஏற்று மொத்தத் தொகையின் மதிப்பில், அரசு தள்ளுபடியுடன் பட்டுப்புடவையை பெற்றுக்கொள்ளலாம்.

குறைந்த செலவில் தங்களின் நீண்டநாள் கனவு நனவாகும் ஓர் அரிய வாய்ப்பு!

| வ.எண் | மாதச் சந்தா | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்தத் தொகை | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா | கூடுதல் தொகை (3 + 4) | அரசு தள்ளுபடி * | அங்கத்தினர்களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 1. | 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 2. | 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 3. | 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 4. | 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 5 | 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 6. | 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |


* அரசு தள்ளுபடியானது தற்பொழுது நடைமுறையில் உள்ள [illegible] ஏற்றவாறு கணக்கிடப்பட்டுள்ளது. திட்டத்தின் முதிர்வு காலத்தில் அரசால் வழங்கப்படும் தள்ளுபடி சதவீதம் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த மாதம் தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, பட்டர்[illegible], குறளகம், வானவில் - சென்னை, கோ-ஆப்டெக்ஸ் மகாராணி - கோயம்புத்தூர், கோ-ஆப்டெக்ஸ் அங்கயற்கண்ணி - மதுரை, கோ-ஆப்டெக்ஸ் பவளம் - ஈரோடு, கோ-ஆப்டெக்ஸ் அமுதசுரபி - திருச்சி, கோ-ஆப்டெக்ஸ் பட்டு மாளிகை - தஞ்சாவூர், தங்கம் பட்டு மாளிகை - சேலம் மற்றும் இதர பெருவிற்பனை நிலையங்களில் மட்டுமே கிடைக்கும்



**பாரம்பரியத்தின் பெருமை. காலத்திற்கேற்ற ரசனை.**


MEETING ON TAMILNADU - SINGAPORE
INFRASTRUCTURE AND ECONOMIC PARTNERSHIP
11-10-2002
In the Presence of
SELVI J JAYALALITHAA
HONOURABLE CHIEF MINISTER OF TAMIL NADU
AND
SINGAPORE DELEGATION LED BY
DR.VIVIAN BALAKRISHNAN
HONOURABLE MINISTER OF STATE FOR NATIONAL DEVELOPMENT
SINGAPORE












MEETING ON TAMILNADU - SINGAPORE
INFRASTRUCTURE AND ECONOMIC PARTNERSHIP
11-10-2002
In the Presence of
SELVI J JAYALALITHAA
HONOURABLE CHIEF MINISTER OF TAMIL NADU
AND
SINGAPORE DELEGATION LED BY
DR.VIVIAN BALAKRISHNAN
HONOURABLE MINISTER OF STATE FOR NATIONAL DEVELOPMENT
SINGAPORE









